# B. A. HISTORY

## SEMESTER – V

## CORE VIII - HISTORY OF TAMIL NADU UPTO 1565 A.D.

**Objectives:**

1. To know about the History of Tamilnadu
2. To understand the Tamil culture and Civilization
3. To know the tamil rulers' ability in worldwide trade contacts
4. To know the administration and Irrigation methodology of Cholas
5. To know the contributions of tamil kings to the Art and Architecture

**UNIT- I**

Geographical features of Tamilnadu – Tamil Culture and Civilization - Age of the Sangam- Sources - Political, Social, Economic and cultural conditions – Post Sangam Kalabras.

**UNIT-II**

Tamil Nadu between 600 A.D and 900 A.D.: Origin of Pallavas; Mahendra Varman –Narsimhavarman – Pallava – Chalukya conflict – contribution of Pallavas to art, architecture and literature – Bhakthi movement.

**UNIT III**

The age of Imperial Cholas – Rajaraja I, Rajendra I, Kulottunga I – Chola administration – Literature, art, architecture and religion.

**UNIT IV**

Pandias: Early, Medieval and Later Pandyas – Their relationship with the Cholas and Sri Lanka.

**UNITV**

Advent of Islam in Tamilnadu – Sultanate of Madurai – Tamil country under Vijayanagar rule – Kumara Kampana – Nayaks of Madura - Marathas of Tanjore.

**References**

1. K.A. Nilakanta Sastri, AHistory of South India Oxford University Press, Chennai, 1990.
2. ….., The Colas, University of Madras, 1975.
3. ….., History of south India from prehistoric times to the fall of Vijayanagar, Oxford University Press, Madras, 1967.

4….,The Pandyan Kingdom, from the Earliest Times to the Sixteenth Century, Luzac, 1929

பகுதி – III

# 3. சங்க காலம்

*தமிழ் நாட்டின் பழம்பெரும் பண்பாட்டைப் பற்றியோ, இலக்கிய வளத்தைப் பற்றியோ, இவ்விரண்டையும் உருவாக்கிய தமிழினத்தவரைப் பற்றியோ, அவர்களது சமூக வாழ்க்கையில் நூற்றாண்டு, நூற்றாண்டுகளாக ஏற்பட்டு வந்த மாறுதல்கள் பற்றியோ, வரலாற்று நூல்கள் எதுவும் கூறுவதில்லை.*

*– நா.வானமாமலை.*

## 3.1 முச்சங்கம்

### 3.1.1 மூத்த குடி

தமிழர்கள் உணர்ச்சி மிக்கவர்கள். கவிதை உள்ளம் படைத்தவர்கள். எதையும் மிகைப்படுத்திக் கூறுவதில் வல்லவர்கள். இனப்பெருமை பேசுபவர்கள். மொழிச் செறுக்கு மிக்கவர்கள். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடி என்பர்! அதேபோன்று திங்களொடும், சூரியனோடும் பிறந்தது தமிழ் எனப் பெருமைப்படுவர்!! முச்சங்கத் தொன்மை பேசி, முதல் சங்கம் 4440 ஆண்டுகள் தொடர்ந்து செயல்பட்டது என்பர்!!!

### 3.1.2 சங்கம்

**சங்கம்** என்பது சமஸ்கிருதச் சொல். இச்சொல்லுக்குச் **சேர்க்கை** என்று பொருள். **சங்க இலக்கியத்தில் சங்கம் என்ற சொல்லாட்சியில்லை.** கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் சிலப்பதிகாரத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்படும் **சங்கம்** என்ற சொல் புத்த சங்கத்தைக் குறிப்பதாகவே உள்ளது.[1] சங்க இலக்கியத்தில் **புலனாவழுவர், சூழ்புளனூர் கூடலார்** போன்ற சொற்களே பயன்படுத்தப் பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பௌத்த–சமணத் துறவிகள் **சங்கம்** அமைத்துப் பிரச்சாரம் செய்தமையால் சங்கம் என்ற சொல்லைப் பின்னர் வந்த உரையாசிரியர்கள் கடன் வாங்கிக் கையாண்டனர்! அதன் பின்னர் **சங்கம்** என்ற சொல் புலவர்களிடையேயும், அவர்கள் மூலம் மக்களிடையேயும் மிகுந்த செல்வாக்கைப் பெற்றது!

### 3.1.3 புலவர் பேரவை

கி.பி.7 ஆம் நூற்றாண்டு வரை தமிழ் இலக்கியத்தில் புலவர் பேரவையைக் குறிப்பதற்காக சங்கம் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. இந்நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் அப்பர் என்ற **திருநாவுக்கரசர்தான்** முதன் முதலில் சங்கம் என்ற சொல்லைக் குறிப்பிட்டார். அதன்பின் கி.பி.எட்டாம் நூற்றாண்டில் **இறையனார் அகப்பொருளுக்கு** உரை எழுதிய **நக்கீரர்** புராணக் கதைக்கு வரலாற்று வடிவம் கொடுத்தார். கட்டுக் கதை வரலாற்று உடை அணிந்து கொண்டது!



### 3.1.4 கட்டுக்கதை

இறையனார் அகப்பொருள் உரையில் இடம் பெற்றுள்ள கதை: பாண்டிய நாட்டில் 12 ஆண்டுகள் பஞ்சம் நீடித்ததால், வறுமையில் வாடிய புலவர்களை வளமிக்க நாட்டுக்குச் சென்றுவிட்டு, மீண்டும் பாண்டிய நாடு வளம் பெற்றபின் திரும்பி வருமாறு மன்னர் பணித்தார். அவ்வாறே சென்று திரும்பிய புலவர்கள் எழுதிய இலக்கணத்தில் **'பொருள்'** பற்றி எதுவும் இன்மையால் மன்னன் மிகவும் வருந்த சொக்கநாதப் பெருமான் 60 சூத்திரங்களைக் கொண்ட அகப்பொருளைப் பாண்டியனுக்குக் கிடைக்குமாறு செய்தார். மிக்க மகிழ்ச்சியடைந்த மன்னன் புலவர்களைக் கூட்டி அதற்கு உரை எழுதுமாறு கூற 49 புலவர்களும் உரை எழுதிக் கொடுத்தனர். அவற்றுள் நக்கீரர் உரையே சிறந்தது என்று சங்கமும் ஏற்றுக் கொண்டது! அன்றிலிருந்து இன்றுவரை முச்சங்கம் பற்றிய மரபு முற்கால தமிழ்நாட்டு வரலாற்றில் அழியா இடம் பெற்றுவிட்டது.

### 3.1.5 முச்சங்க மரபு

பண்டைத் தமிழ்நாட்டில் **தென் மதுரை, கபாடபுரம், உத்தரமதுரை** ஆகிய இடங்களில் முறையே **முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்** அமைந்திருந்தன. முதற்சங்கம் தென்மதுரையில் 4440 ஆண்டுகள் இயங்கியது. இச்சங்கத்துக்குப் பாண்டிய மன்னர்கள் தலைமை தாங்கினர். இதில் **சிவபெருமான், முருகப்பெருமான், அகத்தியர்** உட்பட 549 புலவர்கள் பங்கேற்றனர். இச்சங்கத்துக்கு 89 பாண்டிய மன்னர்கள் புரவலர்களாக இருந்தனர். **அகத்தியரின் அகத்தியம்** இச்சங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது.

**கபாடபுரத்தில்** கூடிய **இடைச்சங்கத்தில்** 3700 புலவர்கள் பங்கேற்றுத் தமிழ் ஆய்வில் ஈடுபட்டனர்! தொல்காப்பியரும் அகத்தியரோடு இவ்வவையில் வீற்றிருந்தார். 59 பாண்டிய மன்னர்கள் இடைச்சங்கத்துக்குப் புரவலர்களாக இருந்தனர்.

வடமதுரையில் கூடிய கடைச்சங்கம் 1850 ஆண்டுகள் நிலைப்பெற்றது. இதில் 449 புலவர்கள் தமிழாய்வு செய்தனர். இச்சங்கத்தில்தான் **அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல்** போன்ற இலக்கியங்களும், இசை நூல்களும் தோன்றின. 49 பாண்டிய மன்னர்கள் கடைச்சங்கத்துக்குத் தலைமையேற்று, பொருளுதவி செய்து, புலவர்களை ஊக்குவித்தனர். **முச்சங்க மரபு** பண்டைக்கால தமிழ்நாட்டில் புலவர்களும் புலவர் அவையும் இருந்ததைக் குறிப்பிடுவதற்காகப் புனையப்பட்ட கற்பனைப் படைப்புகளாகும். இம்மரபுக்கு ஊற்றுக்கண் **நக்கீரர்** எழுதிய **இறையனார் அகப்பொருள் உரையாகும்.**

இந்த இலக்கிய மரபைப் பின்பற்றி கி.பி.10ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட **சின்னமனூர்ச் செப்பேட்டிலும்** தமிழ் நாட்டில் சங்கம் இருந்ததாகப் பதிவு செய்யப் பட்டுள்ளது. இவையாவும் **மரபேயன்றி வரலாறு அல்ல.** எனினும், இம்மரபால் மதுரையில் புலவர் அவை இருந்து தமிழ் வளர்த்தது என்பதை ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். அவ்வளவே. **சங்க காலம்** என்ற சொற்றொடர் **தவறான சொல் வழக்கு** (Misnomer) ஆகும். **புலவர் பேரவை** என்பதே பொருத்தமான சொல்லாட்சியாகும்.

## 3.2 சங்க காலச் சான்றுகள் : இலக்கியச் சான்றுகள்

### 3.2.1 சான்றுகள் பலவகை

சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படும் வரலாற்று மூலங்களாவன: 1) **இலக்கியச் சான்றுகள்;** 2) **கல்வெட்டுகள், செப்பேடுகள்;** 3) **தொல்பொருளியல்;** 4) **காசியல்;** 5) **மரபுச் செய்திகள்.** இவற்றுள் சங்க காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள **இலக்கிய மூலங்களே பிரதான சான்றுகளாக** உள்ளன. ஏனெனில் பிற சான்றுகள் அனைத்தும் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன; பல கல்வெட்டுகள் தமிழ்நாட்டுக்கு வெளியே உள்ளவை; இவை சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் போதுமானவை அல்ல. இலக்கிய மூலங்கள் மட்டுமே சங்க காலத்தின் பல பரிமாணங்களையும் படம்பிடித்துக் காட்டுவனவாக உள்ளன. பிறச்சான்றுகள் இலக்கியத் தகவல்களை உறுதிப்படுத்துவதற்காகப் பயன்படக் கூடியவை.

### 3.2.2 இலக்கியச் சான்றுகள்

ஐவகைச் சான்றுகள்

தமிழ்நாட்டு வரலாற்றுச் சான்றுகளில் **இலக்கியம் மட்டுமே வீச்சிலும், அளவிலும், பயனிலும் முதன்மையாக** உள்ளது. தமிழல்லாத இலக்கிய மூலங்களைவிட தமிழ் இலக்கியமே **'பெருமையிலும் பயன்பாட்டிலும் சிறந்தது'.**[2] சங்க இலக்கியத்தை 1) **தொல்காப்பியம்;** 2) **எட்டுத்தொகை;** 3) **பதிற்றுப்பத்து;** 4) **பத்துப்பாட்டு;** 5) **பதினெண் கீழ்க்கணக்கு;** 6) **சிலப்பதிகாரம், மணிமேகலை** போன்ற காப்பியங்கள் எனப் பிரிக்கலாம். இவையாவும் ஒரு காலத்தைச் சேர்ந்தவை ஆகையால் இவற்றில் காணப்படும் தகவல்கள் வரலாற்று முக்கியத்துவமிக்கவை.

### 1. தொல்காப்பியம்

தொல்காப்பியம் தமிழ் இலக்கியத்தில் **தொன்மையானதும், முதல் முக்கியத்துவம்** வாய்ந்ததுமான நூலாகும். இது ஒரு **இலக்கண நூல்.** இந்நூல் **எழுத்து, சொல், பொருள்** என்ற மூன்று அதிகாரங்களையும் உள்ளடக்கியது. ஒவ்வொரு அதிகாரத்துக்கும் 9 இயல்கள் என்ற முறையில் 27 இயல்களையும், 1602 நூற்பாக்களையும் கொண்டுள்ளது. தொல்காப்பியத்துக்கு **இளம்பூரணர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், கல்லாடர், தெய்வச் சிலையார்** ஆகியோர் உரை எழுதியுள்ளனர்.[3]

தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரத்தில் 483 நூற்பாக்கள் உள்ளன. இவற்றில் எழுத்துக்களின் வகை, பெயர், மொழி முதல், இறுதி எழுத்துக்கள், எந்த எழுத்துக்குமுன் எந்த எழுத்து வரவேண்டும் போன்ற விதிகள் வகுக்கப்பட்டுள்ளன. 463 நூற்பாக்களைக் கொண்ட **சொல்லதிகாரத்தில்** சொற்களின் இலக்கணம் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. **திணை, பால், எண், இடம்** ஆகிய வகைகள் விளக்கப்பட்டுள்ளன. அதேபோன்று சொற்றொடர்களின் அமைப்பும், சொற்களின் பொருட்களும் இடத்துக்கேற்ப எவ்வாறு மாற்றமடைகின்றன என்பதும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. **பொருளதிகாரத்தில்** 656 நூற்பாக்கள் இடம் பெற்றுள்ளன. இவற்றில் **அகத்திணையியல், புறத்திணையியல்,**



**களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல், மரபியல்** ஆகிய 9 இயல்கள் அமைந்துள்ளன. தொல்காப்பியம் தமிழ் இலக்கணத்தைப் பற்றிக் கூறுவதோடு தமிழர் வாழ்வியலைப் பற்றி விவரிப்பதும் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் **தமிழின் தனித்துவத்தை** அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

### 2. எட்டுத்தொகை

**எட்டுத்தொகை** பாட்டுத் தொகுப்பு நூல். இத்தொகைப் பாடல்கள் பல புலவர்களால் பல்வேறு காலங்களில் பாடப்பட்டவை. **எட்டுத்தொகை நூல்களாவன: 1) நற்றினை.** சங்க காலத் தமிழர்களின் பழக்கவழக்கங்கள் பற்றிய வரலாற்று விவரங்கள் இதில் உள்ளன. 2) **குறுந்தொகை.** அகப்பொருள் பற்றிய இந்நூலில் **காதல், ஆண்–பெண் உறவு, காதல் பிரிவு, பரத்தையர் நிலை** போன்றவை பற்றிய தகவல்கள் உள்ளன.

3) **ஐங்குறுநூறு.** திணைக்கு நூறு பாடல்கள் வீதம் **ஐந்து திணைகளுக்கும்** 500 பாடல்களைக் கொண்டது. **குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை** ஆகிய ஐந்திணை மக்களைப் பற்றி அறிந்து கொள்ள உதவியாக உள்ளன. **ஒன்றுபட்டால் உண்டு இன்பம், இனிக்கும் மனமெல்லாம் இனிக்கும்** போன்ற வாழ்வியல் உண்மைகள் இவற்றில் புதைந்து கிடக்கின்றன. 4) **அகநானூறு.** 400 பாடல்களைக் கொண்ட இந்நூலில் **தமிழரின் திருமண முறை, சங்ககால மன்னர்கள், யவன நாட்டுடன் தமிழ்நாட்டுக்கு இருந்த தொடர்பு** பற்றிய தகவல்கள் காணக்கிடக்கின்றன.

5) **புறநானூறு.** சங்க காலத்தின் புறப்பொருள் பற்றி 400 பாடல்கள் உள்ளன. இவற்றில் அக்கால **அரசியல் கருத்துக்கள், வாழ்க்கை நெறிமுறைகள், மரபுகள், போர் முறைகள்** பற்றிய விவரங்கள் காணக்கிடக்கின்றன. சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கான அரிய வரலாற்று வளாகமாக விளங்குகிறது புறநானூறு. 6) **பதிற்றுப்பத்து.** இதுவும் புறப்பொருள் பற்றியதாகும். **சேர மன்னர்களை முறையாகப் பட்டியலிட்டுக் காட்டும் ஒரே சங்க நூல் பதிற்றுப்பத்தாகும்.** இதை ஓரளவுக்குக் காஷ்மீர் மன்னர்களைப் பற்றிக் **கல்ஹணர்** எழுதிய **ராஜதரங்கினியுடன்** ஒப்பிட்டுக் கூறலாம். சேர மன்னர்கள் தவிர **வஞ்சி மாநகரின் சிறப்பும்** இதில் விவரிக்கப் பட்டுள்ளது.

7) **பரிபாடல்.** 70 பாடல்களைக் கொண்ட இத்தொகுப்பு நூலில் **திருமால், முருகன், காளி, வையை, மதுரை** பற்றிய விவரங்கள் உள்ளன. இறை வழிபாட்டுக்கு ஏற்ற வகையில் பாடல்கள் அமைந்துள்ளன. 8) **கலித்தொகை.** இத்தொகை நூலில் ஐந்திணையோடு **கைக்கிளை, பெருந்திணை, மடலேறுதல்** பற்றியும் கூறப்படுகிறது. இதில் **மகாபாரத நிகழ்வுகளும்** இடம் பெற்றுள்ளன. பதிற்றுப்பத்து சேர மன்னர்களைப் பற்றி மட்டுமே கூறுவதைப் போன்று, கலித்தொகை **பாண்டிய மன்னர்கள் பற்றி** மட்டுமே குறிப்பிடுகின்றது. மேலும் மனதைக் குளிர்விக்கும் பல **உவமைகள்** கலித்தொகையில் சிதறிக்கிடக்கின்றன.

### 3. பதிற்றுப்பத்து

முதலாம் பத்திலிருந்து பத்தாம் பத்துவரை முறையே குமட்டூர்க் கண்ணனார், பாலைக் கௌதமனார், காப்பியாற்றுக் காப்பியனார், பரணர், காக்கைப் பாடினியார்,

நச்செள்ளையார், கபிலர், அரிசில்கிழார், பெருங்குன்றூர் கிழார் ஆகிய 10 புலவர்கள் பாடியுள்ளனர். (பத்தாம் பத்து பாடிய புலவர் பெயர் தெரியவில்லை). இப்பாடல்களுக்குரிய மன்னர்கள்: இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழுகுட்டுவன், களங்காய்க்கண்ணி, நார்முடிச்சேரல், கடல்பிறகோட்டிய செங்குட்டுவன், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், செல்வக்கடுங்கோ, வாழியாதன், தகடூர் எறிந்த பெருஞ்சேரல், இரும்பொறை ஆகியோர்.

## 4. பத்துப்பாட்டு

எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் சேர்ந்து **பதினென் மேல்கணக்கு** என்று அறியப்படுகிறது.[4] பத்துப்பாட்டுக்கள் வருமாறு: 1) **திருமுருகாற்றுப்படை. நக்கீரர்** இயற்றிய இந்நூல் 317 அடிகளைக் கொண்டது. இது **புலவராற்றுப்படை** என்றும் அழைக்கப்படுகிறது. முருகனின் அறுபடை வீடுகளைப் பற்றி இந்நூல் விவரிக்கின்றது.[5] 2) **பெருநர் ஆற்றுப்படை. முடத்தாமக் கண்ணியார்** என்ற **பெண்பாற்** புலவர் பாடிய இதில் பரிசில் பெற விழைந்த **பொருநனை** பொருள் பெறுவதற்காக **கரிகால் பெருவளத்தானிடம்** ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது.

3) **சிறுபாணாற்றுப்படை.** இந்நூலில் சேர, சோழ, பாண்டிய நாடுகளின் தலைநகர்களாகிய **வஞ்சி, உறையூர், மதுரை** ஆகிய நகர்களின் சிறப்புகள்; ஆமூர், வேலூர், மாவிலங்கை, ஏழு வள்ளல்களின் கொடைத்திறம்; விறலியரின் அழகு; பாணனின் வறுமை போன்ற காட்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. 4) **பெரும்பாணாற்றுப் படை.** இதில் **தொண்டைமான் இளந்திரையனிடம்** பாணன் ஆற்றுப்படுத்தப்படுவதாக அமைந்துள்ளது. **பேரியாழ்** கொண்ட பாணனைப் பாடியதால் பெரும்பாணாற்றுப்படை என்று அழைக்கப்படுகிறது. ஐந்து நிலங்களில் வாழ்ந்த மக்களின் இயல்பு வர்ணிக்கப் படுகிறது. மேலும் யாழின் இயல்பு, விருந்தோம்பல், போகுமிடங்களின் சிறப்பு, அங்கு கிடைக்கும் பல்வேறு பொருட்கள் போன்றவற்றைப் பற்றி சுவையான தகவல்கள் உள்ளன. வீரக்குடி மக்களின் வீரம் உரைக்கப்படுகிறது. ஆடையின் மேன்மை சிறப்பிக்கப்படுகிறது. திருவெக்கா திருமாலின் பள்ளி கொண்ட தோற்றம் விளக்கப்பட்டுள்ளது.

5) **முல்லைப் பாட்டு.** காவிரிப்பூம்பட்டினத்து பொன் வணிகனார் **நம்பூதனாரால்** பாடப்பெற்ற இப்பாட்டில் **முல்லைத் திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உயிர்ப்பொருள்** ஆகியவை அழகுற இணைத்துப் பாடப்பட்டுள்ளது. தலைவனைப் பிரிந்து வாழும் தலைவியின் நிலை சித்தரிக்கப்பட்டுள்ளது. திருமால் அவதாரம் உவமையால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. கார்கால விலங்கின் நிலை வர்ணிக்கப்பட்டுள்ளது. 6) **மதுரைக்காஞ்சி. மாங்குடி மருதனாரால்** பாடப்பட்ட இதில் மதுரை மாநகரின் சிறப்பு விரிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மதுரைக் காஞ்சியின் பாட்டுடைத் தலைவன் நெடுஞ்செழியன்.

7) **நெடுநெல்வாடை.** இதுவும் **நக்கீரரால்** பாடப்பட்டதாகும். பாட்டுடைத் **தலைவன் நெடுஞ்செழியன்** தலைவி **பாண்டிமாதேவி** பிரிவாற்றாமையால் வருந்துவது போன்றும், அவருக்கு நல்வார்த்தை கூறி அற்றுவிப்பது போன்றும் இப்பாடல் அமைந்துள்ளது. மேலும், கூதிர் காலத்தின் கொடுமை வர்ணிக்கப்படுகிறது.



8) **குறிஞ்சிப் பாட்டு. கபிலரால்** பாடப்பட்டதாகக் கருதப்படும் இப்பாடலில் **குறிஞ்சி நிலப் பெருமை** பேசப்படுகிறது. **களவொழுக்கம்** கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளது.

9) பட்டினப்பாலை. **கடியலூர் உருத்திரங்கண்ணனாரால்** பாடப்பட்ட இப்பாலைப் பாட்டில் **காவிரிப்பூம்பட்டினத்தின்** வணிகச் சிறப்பு சித்தரிக்கப்பட்டுள்ளது. தலைவியின் பிரிவாற்றாமை பேசப்படுகிறது. **கரிகாலனின்** வீரம் எடுத்துரைக்கப் பட்டுள்ளது. 10) மலைபடுகடாம். **இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனாரால்** பாடப்பெற்ற இதில் மன்னன் **செங்கண் மாத்துவேள் நன்னன்சேய் நன்னனின்** வள்ளல் குணம் உயர்த்திக் கூறப்பட்டுள்ளது. அதேபோன்று நன்னனின் காட்டு வளம் உவமைகளோடு விவரிக்கப்பட்டுள்ளது.

## 5. பதினெண் கீழ்க்கணக்கு

**திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, திரிகடுகம், ஏலாதி, ஆசாரக்கோவை, முதுமொழிக் காஞ்சி, பழமொழி, சிறுபஞ்சமூலம், ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, கார் நாற்பது, களவழி நாற்பது** ஆகிய 18 நூல்களும் பதினெண் கீழ்க்கணக்காகும்.

## 6. காப்பியங்கள் : சிலப்பதிகாரம்

**சிலப்பதிகாரமும், மணிமேகலையும்** இரட்டைக் காப்பியங்களாகும். **சிலப்பதிகாரம்** முப்பெரும் அரசுகளையும்–சேர, சோழ, பாண்டியர்–முப்பெரும் நகரங்களையும்–வஞ்சி, புகார், மதுரை–முப்பெரும் ஆறுகளையும்–பேரியாறு, காவிரி, வைகை–முப்பெரும் உண்மைகளையும்–வைதிகம், பௌத்தம், சமணம்–விளக்குவதால் சிலப்பதிகாரம் **முத்தமிழ் காப்பியம்** என்று அழைக்கப்படுகிறது. இக்காப்பியத்தின் மூலம் தமிழ் நாட்டில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமுதாய **மாற்றங்களைத்** தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிகிறது.

### மணிமேகலை

சிலப்பதிகாரத்தைப் போன்றே **மணிமேகலையும்** தமிழ்நாட்டை களமாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியே இக்காப்பியமாகும். **பெண்ணின் பெயரில்** அமைந்த இக்காப்பியம் **பௌத்த நூல்** என்று கருதப்படுகிறது. **புகார், காஞ்சி, வஞ்சி, சாவகம், சுவர்ண தீவம், மணி பல்லவம்** பற்றிய தகவல்கள் பல உள்ளன. மனிதனின் **அடிப்படைத் தேவைகளான** உணவு, உடை, வீடு பற்றிப் பேசுகிறது. **மது, பொய், பரத்தமை, கொலை, களவு ஆகியவற்றை அடியோடு ஒழிக்க வேண்டியதன் இன்றியமையாமையை வலியுறுத்துகின்றது.** இரட்டைக் காப்பியங்களும் தமிழ்நாடு முழுவதற்கும் பொதுவான ஒழுக்கத்தையும், பண்பாட்டையும் **'மலையைக் கண்ணாடியில் காட்டுவது போல்'** படம் பிடித்துக் காட்டுகின்றன.[6]

## சங்க இலக்கியச் சான்றுகள்

| தொல்காப்பியம் | எட்டுத்தொகை | பதிற்றுப்பத்து | பத்துப்பாட்டு | பதினெண்கீழ்க்கணக்கு | காப்பியங்கள் |
|---|---|---|---|---|---|
| **புறத்திணை** | 1. நற்றிணை | 1. முதல் பத்து | 1. திருமுருகாற்றுப்படை | 1. திருக்குறள் | 1. சிலப்பதிகாரம் |
| வெட்சி | 2. குறுந்தொகை | 2. இரண்டாம் பத்து | 2. பொருநாற்றுப்படை | 2. நாலடியார் | 2. மணிமேகலை |
| வஞ்சி | 3. ஐங்குறுநூறு | 3. மூன்றாம் பத்து | 3. சிறுபாணாற்றுப்படை | 3. நான்மணிக்கடிகை | |
| உழிஞை | 4. கலித்தொகை | 4. நான்காம் பத்து | 4. பெரும்பாணாற்றுப்படை | 4. இன்னா நாற்பது | |
| தும்பை | 5. அகநானூறு | 5. ஐந்தாம் பத்து | 5. மலைபடுகடாம் | 5. இனியவை நாற்பது | |
| வாகை | 6. பதிற்றுப்பத்து | 6. ஆறாம் பத்து | 6. மதுரைக்காஞ்சி | 6. திரிகடுகம் | |
| காஞ்சி | 7. புறநானூறு | 7. ஏழாம் பத்து | 7. முல்லைப்பாட்டு | 7. ஏலாதி | |
| பாடாண் | 8. பரிபாடல் | 8. எட்டாம் பத்து | 8. குறிஞ்சிப்பாட்டு | 8. ஆசாரக்கோவை | |
| **அகத்திணை** | | 9. ஒன்பதாம் பத்து | 9. பட்டினப்பாலை | 9. முதுமொழிக்காஞ்சி | |
| குறிஞ்சி | | 10. பத்தாம் பத்து | 10. நெடுநல்வாடை | 10. பழமொழி | |
| முல்லை | | | | 11. சிறுபஞ்சமூலம் | |
| மருதம் | | | | 12. ஐந்திணை ஐம்பது | |
| நெய்தல் | | | | 13. ஐந்திணை எழுபது | |
| பாலை | | | | 14. திணை மொழி ஐம்பது | |
| | | | | 15. திணை மாலை நூற்றைம்பது | |
| | | | | 16. கைந்நிலை | |
| | | | | 17. கார் நாற்பது | |
| | | | | 18. களவழி நாற்பது | |



### 3.2.3 கல்வெட்டுச் சான்றுகள்

பொதுவாகப் பண்டைய வரலாற்றை வடிப்பதற்குக் **கல்வெட்டுகள்** நம்பத்தக்க சான்றுகள் என்று கருதப்படுகிறது. எழுத்துப் பொறிகள் நிலையானவை, சிறப்பானவை, சரிபார்த்து அறியக்கூடியவை. 1) இத்தகைய கல்வெட்டுகள் தமிழ் மாவட்டங்களில் சில **பாறைப் படுகைகளில், குகைகளில்** காணப்படுகின்றன. இவை இறந்தோரின் பெயர்களையோ, ஆக்கியோரின் பெயர்களையோ குறிப்பிடுபவனாக உள்ளன.[7] இவ்வெழுத்துப் பொறிகள் **பிராமி எழுத்தில்** தமிழ் மொழியில் அமைந்தவை.

2) **அசோகர் காலத்துக் கல்வெட்டுகள்.** அசோகரது பாறைக் கட்டளைக் கல்வெட்டு ஒன்று அவரது பேரரசின் தென் எல்லைக்கு அப்பாற்பட்ட **சோழர், பாண்டியர், சேரர் சுதந்திர நாடுகள்** பற்றிப் பதிவு செய்துள்ளது. **"தெற்கிலுள்ள இம்மூன்று அரசுகள் பற்றியும் முதன் முதல் கல்வெட்டுகளில் குறிப்பிட்டிருக்கக் காண்பது அசோகரது கல்வெட்டுகளே ஆகும்".**[8]

3) **காரவேலரின் ஹரிகும்பா கல்வெட்டு** வரலாற்று முக்கியத்துவமுடையது. இக்கல்வெட்டு கலிங்கத்தை எதிர்த்த **தமிழ்நாட்டு அரசுகளின் கூட்டமைப்பு** பற்றிக் குறிப்பிடுகின்றது. இக்கூட்டமைப்பு "கலிங்க மன்னரின் மன அமைதியைக் கெடுத்து, தமிழ் அரசுகளின் நெடுநோக்கை வெளிப்படுத்தி பொதுப்பகையை எதிர்க்க ஒன்று திரண்டு பிற்காலத்தில் பல நூற்றாண்டுகளுக்குத் தமிழகம் அரசியல் சுதந்திரத்தோடு வாழ்ந்தமையை விளக்குகின்றது".[9]

4) **வேள்விக்குடி சாசனம்.** இச்சாசனத்தை பராந்தக நெடுஞ்சடையன் (கி.பி.765–815) அளித்தார். இதில் சங்க காலப் பண்டைய மன்னரான **பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி** சில பிராமணர்களுக்கு ஒரு கிராமத்தைத் தானமாக வழங்கியதாகவும், அந்த கிராமத்தை மீண்டும் பிராமணர்களின் வழிவந்தோருக்கே வழங்கிவிட்டதாகவும் கூறுகிறது.

5) **திருக்கோவிலூர் கல்வெட்டு.** இக்கல்வெட்டு சங்கப் புலவரான **கபிலர்** பாரியின் பெண்களைக் கோவலூர் மன்னரான **மலையமானுக்கு** மணமுடித்தபின் உயிர் நீத்தத் தகவலைப் பதிவு செய்துள்ளது. 6) **சின்னமனூர்ச் செப்பேடுகள்** தலையாலங்கானத்துப் **பாண்டியன் நெடுஞ்செழியன்** பற்றிக் குறிப்பிட்டது. இக்கல்வெட்டுகளும், செப்பேடும் இலக்கியச் சான்றுகளுக்கு வலிமை சேர்க்க வல்லவை.

### 3.2.4 தொல்பொருள் சான்றுகள்

பாண்டிச்சேரிக்கு அருகில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருளியல் சான்றுகள் **தமிழ் நாட்டுக்கும் ரோமானியப் பேரரசுக்குமிடையே இருந்த வாணிபத் தொடர்பை** உறுதி செய்கின்றன. இங்கு கிடைக்கப்பெற்ற வாணிபக் கேந்திரம் ரோமானியர் இங்கு தந்தியிருந்ததைக் காட்டுவதாக உள்ளது. இக்கண்டுபிடிப்புகளின் வரலாற்றுச் **சிறப்புகள் இரண்டு:** 1) சங்க இலக்கிய காலத்தை நிர்ணயிக்க உதவுகின்றன; 2) இவ்விலக்கியத்தில் காணப்படும் நிகழ்வுகளைக் காலவரன்முறைப்படுத்தப் பயன்படுகின்றன.

### 3.2.5 காசியல் சான்றுகள்

காசியல் சான்றுகள் மன்னர்களின் ஆட்சிக் காலம் பற்றிய தகவல்களைக் கொடுக்கக்கூடியவை. சங்க காலத் தமிழ்நாட்டைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மிகச் சில தாமிரக் காசுகளும், சதுர செப்புக் காசுகளும் கிடைத்துள்ளன. ஆனால் இவை உருக்குலைந்த நிலையில் உள்ளன. இக்காசுகளில் காணப்படும் உருவங்கள் மிகவும் மங்கிப் போய் உள்ளன. தெளிவின்றி காணப்படுகின்றன. எனவே, இன்றைய நிலையில் காசியல் சான்றுகள் சங்க காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படக்கூடிய நிலையில் இல்லை.

### 3.2.6 மரபுச் சான்றுகள்

பண்டைத் தமிழ்நாட்டு வரலாற்றை எழுதுவதற்கு மரபுச் சான்றுகள் ஓரளவு பயன்படக்கூடியவையே. எனினும் இவை பெரும்பாலும் புராணக் கட்டுக் கதைகளைச் சேர்ந்தவைகளாகவே உள்ளன. எடுத்துக்காட்டாக அர்ச்சுனன் ஒரு பாண்டிய இராசகுமாரியை மணந்ததாகக் கூறும் தகவல் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை. இதேபோன்று தமிழ்நாட்டு வேளிர்கள் அகத்தியரால் கொண்டுவரப்பட்டவர்கள் என்ற செய்தி. முச்சங்கங்கள் பற்றிய விவரங்களும் இவ்வாரே. மரபுச் சான்றுகளை வரலாற்று ஆதாரங்களாகக் கொண்டால் வெவ்வேறு முடிவுகளுக்குத்தான் வரமுடியுமேயன்றி நம்பத்தக்க வரலாற்றை எழுத இயலாது. மரபுச் சான்றுகள் வரலாற்று உருவத்தில் வரக்கூடும். எனவே இவற்றைக் கவனமாகக் கையாள வேண்டும்.

## 3.3 காலக் கணிப்பு

### 3.3.1 மூன்று சான்றுகள்

சங்கம் வைத்துத் தமிழை வளர்த்த காலத்தைச் சங்க காலம் எனப் பொதுவாகக் கூறப்படுகிறது. **சங்க காலம் என்பது சங்க இலக்கியம் இயற்றப்பட்ட காலம் என்று குறிப்பாக வரையறுக்கப்படுகிறது.**[10] எனினும் தற்போது கிடைக்கின்ற சான்றுகளைக் கொண்டு அறிவியல் ரீதியாக சங்க காலத்தைக் கணிப்பது இயலாத காரியமாகும். சங்க காலத்தைத் தீர்மானிப்பதற்கு **மூன்று சான்றுகள்** முன்வைக்கப் படுகின்றன: 1) சங்க இலக்கியத்தில் சிதறிக் கிடக்கும் வானவியல் குறிப்புகள்; 2) சந்திரகுப்தருடைய அலகாபாத் தூண் கல்வெட்டு மற்றும் அசோகரது கல்வெட்டு; 3) சேர மன்னன் செங்குட்டுவனும், இலங்கை அரசன் கயவாகுவும் சமகாலத்தவர் என்ற அனுமானம். எனினும் இச்சான்றுகள் ஒன்றுக்கொன்று முரணான, மாறுபட்ட காலக் கணிப்புகளில் முடிகின்றன. இவற்றை ஆய்வு செய்த **இராஜு காளிதாஸ்** பின்வரும் முடிவுக்கு வருகிறார்: "சங்க காலத்தில் இறுதி கி.பி.250 என்பது அனேகமாக உறுதியாகிவிட்டது. ஆனால், அதன் தொடக்கம் தெளிவில்லாமலேயே உள்ளது. எனினும், சங்க காலத்தின் தொடக்ககால எல்லையாகத் தற்போதைக்கு கி.மு.750 கொள்ளப் படுகிறது".[11]



### 3.3.2 உச்சகட்ட ஊகம்

சங்க காலத்தைக் கணிக்க ஆய்வாளர்கள் மேற்கொண்ட முயற்சிகள் இக்காலத்தின் தொடக்கம் மற்றும் முடிவு பற்றி உச்ச உயர்நிலை ஊகங்களைத் தொட்டன. அது கி.மு.10,000லிருந்து கி.பி.400 வரை செல்கின்றன! இலக்கிய வானியல் குறிப்புகளைக் கொண்டு கணக்கிட்ட ஒரு ஆய்வாளர் கி.பி.8ம், 9ம், 10ம் நூற்றாண்டுகளைத் தமிழக வரலாற்றில் சங்ககாலம் எனக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையை வகுத்தார்![12] பலர் கி.மு.500 முதல் கி.பி.500 வரையிலான காலத்தைச் சங்க காலம் என்று ஏற்றுக் கொண்டுள்ளனர்.[13] இந்நூலாசிரியர் கி.மு.250க்கும் கி.பி.250க்கும் இடைப்பட்ட காலத்தை சங்க காலம் என்று கருதுகிறார்.

## 3.4 சங்க கால மன்னர்கள்

### 3.4.1 சேர மன்னர்கள்

#### சேர நாடு

சங்க காலத்துத் தமிழகம் சேர, சோழ, பாண்டிய நாடுகளாகப் பிரிந்திருந்தது. இந்நாடுகளை முறையே முடிமன்னர்கள் மூவர்–சேரர், சோழர், பாண்டியர்–ஆட்சி செய்தனர். தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக இருந்த **சேர நாட்டை** அந்நாட்டு அரசர்கள் **வஞ்சியையும், தகடூரையும்** தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். **தொண்டி** அவர்களது துறைமுகப்பட்டினம். **சோழர்கள்** தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, தென்னார்க்காடு மாவட்டங்களை உள்ளடக்கிய சோழ நாட்டை ஆண்டனர். **உறையூர்** சோழர்களின் தலைநகரமாகவும், **பூம்புகார்** துறைமுகப்பட்டினமாகவும் திகழ்ந்தன. **பாண்டியர்** மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய நாட்டை ஆட்சி செய்தனர். **மதுரை** இவர்களது தலைநகரமாகும்.

#### சங்க சேரர்கள்

#### சேரன் செங்குட்டுவன்

மூவேந்தர்களுள் முதலிடம் பெற்றிருந்தவர்கள் சேரர்கள் என்பது மரபு. சேரல் அல்லது மலை நாட்டை ஆண்டதால் அவர்கள் சேரர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களது அடையாளம் **பனம்பூ** ஆகும். **பதிற்றுப்பத்து** 10 சேர மன்னர்களைப் பற்றி வரிசைப்படுத்திப் பேசுகிறது.[14] இலக்கியம் குறிப்பிடும் பத்து சேர மன்னர்களுக்குப் பிறகு பல அரசர்கள் ஆட்சி செய்துள்ளனர். அவர்களுள் சேர மன்னன் சேரலாதனுக்கும், ஞாயிற்றுச் சோழனின் மகள் நற்சோணைக்கும் பிறந்த சேரன் செங்குட்டுவனே முடியுடை வேந்தர்களுள் தலைசிறந்தவராகக் கருதப்படுகிறார்.[15]

சேரன் செங்குட்டுவன் போர்ப் பிரியர். பல போர்களை முன்னின்று நடத்தியுள்ளார். அவற்றுள் முக்கியமாகக் கருதப்படுபவை: 1) **நேரிவாயில் போர்.** சோழன் கிள்ளிவளவனுக்கு அரசுரிமையைப் பெற்றுத்தருவதற்காக மேற்கொள்ளப்பட்ட இப்போர் நெரிவாயில் என்ற இடத்தில் நடைபெற்றது. 2) **கடம்பருக்கு எதிரான** கடற்போர். சேரர்களின் கடல் வாணிபத்துக்குக் குறுக்கே இருந்த கடம்பர்

கடற்கொள்ளைக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட போர். 3) **மோகூர் போர்.** தென்பாண்டி நாட்டை ஆட்சி செய்த **பழயன்** என்ற மன்னனுக்கு எதிராக **அறுகை** என்ற குறுநில மன்னன் கிளர்ச்சி செய்தான். அவனது சுதந்திரத்துக்காகப் பாண்டிய மன்னரை எதிர்த்து மேற்கொள்ளப்பட்ட போர் இதுவாகும்!

4) **வடதிசைப் போர்.** சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டுவதற்காக இமயத்தில் கல் எடுத்து, கங்கையில் நீராட்டிக் கொண்டு வரத் திட்டமிட்டார். வடநாட்டு வேந்தர்களான **கனக, விஜயர்** தமிழ்நாட்டு மன்னர்களைப் பற்றி இழிவாகப் பேசியதாகக் கூறி சேரன் செங்குட்டுவன் இமயம் வரை படையெடுத்துச் சென்று இழித்துப் பேசிய ஆரிய மன்னர்களை வென்று அவர்கள் அளித்த பொன்னையும், பொருளையும் பெற்றுத் திரும்பினார்.[16] சேரன் செங்குட்டுவனின் இமாலய வெற்றி தமிழ் மக்களின் கற்பனையையும், கருத்தையும், கவனத்தையும் ஒருங்கே கவர்ந்துவிட்டது. அதற்குக் காரணம் சேர மன்னன் ஆரியரின் செருக்கை அடக்கி, அவர்தம் தலையில் கல்லேற்றித் தமிழ் நாட்டுக்குக் கொண்டு வந்து கண்ணகிக்குக் கோயில் கட்டி, '**வடதிசை வணங்கிய மன்னவன்**' என்று புகழப்பட்டது தமிழரின் தற்பெருமைக்கு ஏற்றதாக இருந்ததேயாகும்.

எனினும், சேரன் செங்குட்டுவனது வடநாட்டுப் படையெடுப்பை உறுதி செய்வதற்கான சமகாலச் சான்று வேறு எதுவுமில்லை. இப்பொருள் பற்றி ஆய்வு செய்த கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி சேரன் செங்குட்டுவனின் வடநாட்டுப் படையெடுப்பு இயற்கை மீறிய செலவாயினும், அவர் கண்ணகிக்குக் கோயில் கட்டிய கதை கவர்ச்சிகரமாகக் கூறப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.[17] ஆர்.சத்தியநாதய்யர் இப்படையெடுப்பைக் **கட்டுக்கதை** என்று ஒதுக்கிவிடுகிறார்.[18] சேரன் செங்குட்டுவனின் இமயமலைப் படையெடுப்பு பற்றிய குறிப்புகள் அவர் ஒரு **மாவீரர்** என்பதைக் காட்டுவனவாக உள்ளன.

## மதிப்பீடு

சேரன் செங்குட்டுவன் மாமன்னன். போர் வீரர். பல மன்னர்களைப் புறங்கண்டவர். பல கடற்போர்களில் வெற்றி பெற்றவர். கடம்பரின் கடற்கொள்ளைக்கு முடிவு கட்டி முசிறித் துறைமுகத்துக்குப் பாதுகாப்பு அளித்தவர். சோழரது வாரிசுரிமையைப் போரில் தலையிட்டு சோழ நாட்டின் அமைதிக்கும், நிலைத் தன்மைக்கும் உதவியவர். பாண்டியரை எல்லை தாண்டாமல் நிறுத்தியவர். ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தவர். இலக்கிய வளர்ச்சிக்குப் புரவலராக இருந்தவர். சிவபக்தராயினும் வைணவத்தையும் பாதுகாத்தவர். அவரது சமய, சமத்துவ, சமரச மனப்போக்கு பாராட்டுக்குரியது. அவரது பத்தினிக் கோயில் விழா இலங்கை முதலாம் கஜபாகு உள்ளிட்ட பல மன்னர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியாகும். வஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சேர நாட்டின் பேச்சு மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இருந்தது தமிழ்.[19] எனவே, சேரன் செங்குட்டுவன் சேர மன்னர்களில் மிகச் சிறப்பானவர் என்றே போற்றப்படுகிறார்.



## 3.4.2 சோழ மன்னர்கள்

### சோழ நாடு

சோழ நாட்டு வரலாற்றின் வேர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துக்குள் செல்கின்றன. சோழர்கள் தங்களைச் சூரிய குலத்தவர் என்று கூறிக் கொண்டனர்! சோழ நாடும், சோழ மன்னர்களும் கட்டுக் கதைகளிலும், புராணங்களிலும் புதைந்து கிடக்கின்றனர். இக்கதைகளும், புராணங்களும் சோழர்களின் பெருமையை மிகைப்படுத்திக் கூறுவதற்காக எழுதப்பட்டிருக்கக் கூடும்! ஆதிகாலச் சோழர்களான செம்பியன், மனுநீதிச் சோழன், சமுத்திர ஜித்து, காற்றை ஆடல் கொண்டன், சிபி சக்கரவர்த்தி, காகந்தன் ஆகியோர் கட்டுக் கதை கதாநாயகர்கள்![20]

**சோழர்** என்ற சொல்லே சர்ச்சைக்குரியது. சோழன் என்பது மரபுப் பெயர். சோழர் என்ற பெயர் கோலா அல்லது காலா (கருப்பு) என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டதாகக் கூறப்படுகிறது. **சோளம்** பயிரிட்ட நாட்டார் என்போர் **சோழர்** என்று அழைக்கப்பட்டனர்! இவையாவும் ஊகங்களேயாகும். இன்றும் இச்சொல்லின் தோற்றம் பற்றிய முடிச்சு அவிழ்க்கப்படவில்லை!! அசோகரின் 13வது பாறைக் கட்டளைக் கல்வெட்டில் தான் முதன் முதலாக சோழர் நாடு பற்றிய குறிப்பு காணப்படுகிறது. **மிளந்த பின்ஹா** என்ற பாலி மொழியில் எழுதப்பட்ட புத்த நூலில் சோழரின் காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய தகவல் பதிவு செய்யப்பட்டுள்ளது.[21] சோழர்கள் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தனர். இவர்களது ஆட்சிக் காலத்தில் காவிரிப்பூம்பட்டினம் துறைமுகமாகத் திகழ்ந்தது.

### சோழ மன்னர்கள்

### கரிகாலன்

உறையூரிலிருந்து சோழ நாட்டை ஆட்சி செய்த **உருவப்பஃறேரிளஞ்சேட் சென்னியின்** மகன் கரிகாலன். கரிகாலனின் மனைவி நாங்கூர் வேளிர் குலப் பெண். கரிகாலன் கருவில் இருக்கும் போதே தந்தையை இழந்தான். பிறந்த குழந்தை தாய் மாமன் **இரும்பிடர்த் தலையார்** பொறுப்பிலும், பராமரிப்பிலும் வளர்ந்தான். கருவில் திருவுடைய கரிகாலன் இளம் வயதிலேயே உறவினர்களின் பகைமையையும், விரோதத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கரிகாலன் மாளிகைக்குத் தீ வைக்கப்பட்டது. தீயிலிருந்து தப்பிய கரிகாலனின் கால்கள் கருகிவிட்டன! மக்களிடையே செல்வாக்கு பெற்றிருந்த கரிகாலன் தாய்மாமனின் துணை கொண்டு ஆட்சியைப் பிடித்து அரசு கட்டிலேறினான்.[22] இளம் வயதிலேயே ஆட்சிப் பொறுப்பேற்று சாதனைகள் பல படைத்தவர் கரிகாலன்.

### போர்ப் பெருமை

### வெண்ணிப்பறந்தலைப் போர்

இளம் வயதினரான கரிகாலனை எளிதில் வென்று விடலாம் என்று எண்ணிய சேர, பாண்டிய மன்னர்கள் 11 வேளிர்குலத் தலைவர்களுடன் ராணுவக் கூட்டமைப்பை

ஏற்படுத்திக் கொண்டு கரிகாலனை எதிர்த்தனர். தஞ்சாவூருக்கு அருகே **வெண்ணிப் பறந்தலை** என்ற இடத்தில் இரு படைகளும் மோதின. எதிரிகளின் கூட்டுப்படை தோற்கடிக்கப்பட்டது. கரிகாலனின் வெண்ணிப் போர் வெற்றி அவரது அரச வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது.[23] இவ்வெற்றி கரிகாலனின் செயற்கரிய செயலாகக் கருதப்பட்டது. இப்புதிய தொடக்கத்தால் அவரது அரியணை வலுப்பெற்றது. கரிகாலன் பிற மன்னர்களின் மதிப்பைப் பெற்றார். வெண்ணிப் போரிலிருந்து கரிகாலனின் மேலாதிக்கம் துவங்கியது எனலாம். இதைப் பெரும் புகழ் வாய்ந்த சாதனையாகக் கருதுகிறார் ஆர்.சத்தியநாதய்யர்.[24]

## வாகைப் பறந்தலைப் போர்

வெண்ணிப் போரால் வெகுவாக ஊக்குவிக்கப்பட்ட கரிகாலன் தனது மேலாதிக்கத்தை விரிவுபடுத்தினார். தன்னை எதிர்த்த 9 வேளிர் குறுநில மன்னர்களை **வாகைப் பறந்தலை** என்ற இடத்தில் தோற்கடித்தார். தோற்றுப்போன கூட்டுப்படைக் குறுநில மன்னர்கள் கரிகாலனின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டனர்.[25] இப்போரின் வெற்றியையும், கரிகாலனின் வலிமைமிக்க படையையும் கண்டு அஞ்சிய பிற குறுநில மன்னர்களும், சிற்றரசர்களும் சோழ மன்னனின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டனர். பிற முடி மன்னர்களின் புகழும் குறைந்தது. **இருங்கோவேளின்** பரம்பரை இருந்த இடம் தெரியாமல் போயிற்று. இப்போர்களின் விளைவாக கரிகாலனின் ஆள்நிலப் பகுதி மேலும் விரிவடைந்தது. காவிரி டெல்டா பகுதி முழுவதும் கரிகாலனின் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.

## இமாலயப் படையெடுப்பு

கரிகாலனின் ஆதிக்க ஆசை தமிழ் நாட்டுடன் நிற்கவில்லை. இமயம் வரை விரிவாக்கும் முயற்சியை மேற்கொண்டார். அதன் விளைவே வடநாட்டுப் படையெடுப்பு. சோழர் படை கிழக்குக் கரையோரமாகச் சென்று வச்சர, மகத, அவந்தி மன்னர்களைத் தோற்கடித்தது. இமயமலையில் புலிக்கொடி பறக்கவிடப்பட்டது! வச்சிர, மகத, அவந்தி மன்னர்கள் கரிகாலனின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டு முறையே முத்துப் பந்தல், பட்டிமண்டபம், தோரணவாயில் ஆகியவற்றைப் பரிசாகக் கொடுத்துப் பெருமைப்படுத்தினர்!! கரிகாலனின் இமாலயப் படையெடுப்பு சிலப்பதிகாரத்தில் மட்டுமே விரிவாக விவரிக்கப் பட்டுள்ளது. இப்படையெடுப்பை உறுதி செய்வதற்கான வேறு எந்த வட இந்திய ஆவண ஆதாரம் எதுவுமில்லை. கரிகாலனின் வட இந்தியப் படையெடுப்பு புலவரின் இலக்கியக் கற்பனையாகும்.

## இலங்கைப் படையெடுப்பு

கரிகாலன் வலிமைமிக்க தரைப்படை வைத்திருந்ததோடு, பலமிக்க கடற்படையையும் கொண்டிருந்தார். நிலவாதிக்கத்தோடு கடலாதிக்கத்தையும் நிலைநாட்ட விரும்பிய கரிகாலன் இலங்கை மீது படையெடுத்தார். ஆயிரக் கணக்கானோர் சிறைபிடிக்கப்பட்டனர். இப்போர்க் கைதிகள் காவிரிப் பள்ளத்தாக்குத் திட்டத்தை நிறைவேற்றப் பயன்படுத்தப்பட்டனர்.[26] கரிகாலனின் இலங்கைப் படையெடுப்பு



இலக்கிய நயத்தோடு மிகைப்படுத்திக் கூறப்பட்டாலும் இந்நிகழ்வு சோழ மன்னனின் வீர வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனை என்பதில் ஐயமில்லை.

## சாதனையாளர்

### கல்லணை கட்டிய கரிகாலன்

கரிகால சோழன் இளமையிலேயே பல சவால்களை எதிர்க்கொண்டு, ஆட்சியைக் கைப்பற்றி, எதிரிகளை முறியடித்து, அரசைப் பேரரசாக விரிவுபடுத்தினார். வீரத்தாலும், விவேகத்தாலும் சிறப்புற்ற கரிகாலன் விரோதிகளுக்குக் காலனாக இருந்தாலும் மக்களுக்கு நண்பனாக இருந்தார். சோழ நாட்டின் அமைதியான முன்னேற்றத்தில் அக்கறை கொண்டார். வலிமையான பொருளாதார அடித்தளத்தின் மீது தான் வளமையான சமூகத்தை உருவாக்க முடியும் என்பதை உணர்ந்து கரிகாலன் விவசாயப் பொருளாதாரத்தில் தன் முழு கவனத்தையும் செலுத்தினார். அதன் விளைவே உலகோர் வியக்கும் கல்லணை ஆகும்.

கரிகாலன் கட்டிய கல்லணை உலகிலேயே மிகப் பழைய நீரை நெறிப்படுத்தும் கற்கட்டுமானமாகும். இதன் நோக்கம் தஞ்சை டெல்டா நிலப்பகுதி முழுவதுக்கும் நீர்ப்பாசன வசதியை நிரந்தரமாகக் கொடுக்க வேண்டும் என்பதே. இது ஒரு மிகப் பெரிய நீர்த்தேக்க அணை. நன்கு செதுக்கப்படாத கற்களால் கட்டப்பட்டது. ஒவ்வொரு கல்லும் 329 மீட்டர் நீளமும், 20 மீட்டர் அகலமும் உடையது. டெல்டா பகுதியில் கட்டப்பட்ட இந்த அணை வாய்க்கால்களால் இணைக்கப்பட்டது. கரிகாலன் **பொன்னிக்குக் கரைகண்ட பூபதி** என்று போற்றப்பட்டார்.[27] இன்றைக்கும் நிலைகுலையாமல் நிற்கிறது.[28] கரிகாலன் கட்டிய கல்லணை மூலம் புன்செய் நிலங்களும் மீட்கப்பட்டு பாசனப் பகுதியாக்கப்பட்டன. தமிழ் நாட்டின் வளமிக்க விவசாயப் பொருளாதாரத்துக்கு வித்திட்டவர் கரிகாலன் என்றால் மிகையாகாது.

### பிற சாதனைகள்

கரிகாலன் திருச்சிக்கு அருகாமையில் உள்ள உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் புகார் என்ற காவிரிப்பூம்பட்டினம் மாற்றுத் தலைநகராகவும் துறைமுக நகரமாகவும் திகழ்ந்தது. கரிகாலன் உழவுத் தொழிலை ஊக்குவித்ததைப் போன்று கைத்தொழில்களையும் ஆதரித்தார். அறநெறி வழுவாது ஆட்சி செய்தார். நீதியை நிலை நாட்டினார். நடனக் கலையைப் போற்றினார். இவரது ஆட்சிக் காலத்தில் கிராமப் பொருளாதாரம் நகர்ப் பொருளாதாரமாக மாறத் துவங்கியது. தமிழ்நாடு நகர் நாகரிகத்தை நோக்கி நடைபோடத் துவங்கியது. கரிகாலன் வேத சமயத்தைப் பின்பற்றி வேள்விகளை நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி.[29] பிராமண சமயத்தைப் போற்றியதாகக் கூறுகிறார் ஆர்.சத்தியநாதய்யர்.[30] சுருங்கக் கூறின், கரிகாலன் வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்தவர். சோழர்களில் ஒப்புயர்வற்ற பேரரசர். நிலவுலகில் வாழ்ந்த நிகரற்ற பெருமன்னர்.[31]

## 3.4.3 பாண்டிய மன்னர்கள்

### தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

### பாண்டிய நாடு

மதுரையைத் தலைநகராகக் கொண்ட பாண்டிய நாடு புராணப் பெருமையும், இலக்கியப் பெருமையும், வரலாற்றுப் பெருமையும் ஒருங்கே அமையப் பெற்றது. மதுரைக்கு மதுரையம்பதி, கூடல்நகர், கடம்பவனம், திருவாலவாய், கோயில் நகரம் என்ற பல பெயர்கள் உண்டு. மதுரையில் மூன்று சங்கங்கள் இருந்து தமிழாய்வு செய்தன என்பது மரபு. பாண்டிய நாடு வீரத்தின் விளைநிலம்; கோயில்களின் கோட்டம்; கலைகளின் நந்தவனம்.

தென் மதுரையும், கபாடபுரமும் கடல்கோளுக்கு இரையாயிற்று என்பது இலக்கிய மரபு. சங்க காலப் பாண்டிய நாடு வைகையையும், தாமிரபரணியையும் நீர் வளமாகக் கொண்டு, தென் வெள்ளாற்றை வடக்கெல்லையாக்கி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியதாக இருந்தது.

### பாண்டிய மன்னர்கள்

பாண்டிய மன்னர்கள் பலர். இவர்களைப் பற்றிய இலக்கியக் கல்வெட்டுக் குறிப்புகள் ஏராளமாக உள்ளன. எனினும் இவையாவும் இம்மன்னர்களைக் கால வரிசைப்படுத்தி எழுதுவதற்கு ஏற்றதாயில்லை. ஊகங்களின் அடிப்படையிலேயே வரிசைப்படுத்த வேண்டியுள்ளது. இதன்படி **பெருவழுதி, ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்** ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

1) **பெருவழுதி** பல வேள்விகளை நடத்தியமையால் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்று அழைக்கப்பட்டார். இவர் வேள்விக்குடியைப் பிராமணர்களுக்குப் பிரம்மதேயமாகக் கொடுத்தார். புலவர்களைப் போற்றினார். 2) **முதலாம் நெடுஞ்செழியன்.** வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று ஆரியரை வெற்றி கொண்டதால் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்று அறியப்பட்டார். இவர்தான் நீதி பிறழ்ந்து கோவலனைக் கொன்றதை அறிந்து உயிர் விட்டு நீதியை நிலைநாட்டியதாகக் கூறப்படுபவர்! இம்மன்னன் இறந்தபின் இவரது வழித்தோன்றலான **வெற்றிவேற்செழியன்** ஆட்சிப் பொறுப்பேற்று, அமைதியை ஏற்படுத்தி, பொய் சாட்சி கூறிய பொற்கொல்லர் குடும்பத்தினரைத் தண்டித்து, கண்ணகிக்கு விழா எடுத்ததாகக் கூறப்படுகிறது. ஓவியக் கலையில் ஈடுபாடு கொண்ட வெற்றிவேற்செழியன் ஓவியக்கூட மாளிகையில் இறந்தமையால் இவர் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன் என்று அழைக்கப்பட்டார்.

3) **தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்.** சங்க காலப் பாண்டிய மன்னர்களுக்குள் பெரும் பெயரும், புகழும் பெற்றுப் போற்றுதலுக்குரியவர் **தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன்** ஆவார். இளம் வயதிலேயே அரியணையேறிய இரண்டாம் நெடுஞ்செழியன் போர்த்திறன் மிக்க வீரர். இவரது வீரத்தையும் விவேகத்தையும் குறைத்து மதிப்பிட்ட சேர மன்னன் மாந்தரஞ்சேரல்



இரும்பொறையும், சோழ மன்னர் பெருநற்கிள்ளியும் ஐந்து வேளிர் தலைவர்களுடன் ராணுவக் கூட்டமைத்து எதிர்த்தனர். நெடுஞ்செழியன் எதிரிகளின் கூட்டுப் படையை **தலையாலங்கானம்** என்ற இடத்தில் எளிதில் தோற்கடித்தார். கூட்டணிப் படை நிலைகுலைந்து அழிந்தது! தலையாலங்கானப் போர் வெற்றி சங்க காலப் பாண்டியர் வரலாற்றில் புதிய சாதனை படைத்தது. பாண்டியர் புகழ் பன்மடங்கு உயர்ந்தது. இரண்டாம் நெடுஞ்செழியன் மேலும் பல வெற்றிகளைப் பெற்றாலும் தலையாலங்கானத்துப் பாண்டியர் என்ற பெயரே நிலைத்து நின்றது.[32]

### புரவலர், சாதனையாளர்

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் மாவீரன் மட்டுமின்றிப் பல புலவர்களின் புரவலராகவும் இருந்துள்ளார். மாங்குடி மருதன் என்ற மாபெரும் புலவரது தலைமையின் கீழ் ஒரு புலவர் பேரவை இம்மன்னரது அரசவையில் இடம் பெற்றிருந்தது. இப்பாண்டிய மன்னரும் பிராமணர்களை ஆதரித்தார்; பலியாகம் செய்தார். கடைச் சங்கம் சிறப்பாகச் செயல்படுவதற்குக் காரணமாக இருந்தார். இவரது ஆட்சிக் காலத்தில் மதுரை அரசியல் மற்றும் இலக்கியத் தலைநகராகத் திகழ்ந்தது. கொற்கை தலைமைத் துறைமுகமாக சிறப்புற்றிருந்தது. **இப்பாண்டிய மன்னன் உருவாக்கிய பாண்டியர் மேலாதிக்கம் தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சி ஏற்படும் வரை நிலைகெடாமல் நீடித்ததாகக்** குறிப்பிடுகிறார் **ஆர்.சத்தியநாதய்யர்.**[33]

## 3.5 குறுநில மன்னர்கள்

### 3.5.1 கடையெழு வள்ளல்கள்

முடியுடை மூவேந்தர் அல்லாமல் தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளில் குறுநில மன்னர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் **வேளிர்** என்று அழைக்கப்பட்டனர். குறுநில மன்னர்களில் பலர் மலைப் பகுதிகளில் கோட்டைகளைக் கட்டிக் கொண்டு, வளமுடன், சுதந்திரமாகச் செயல்பட்டனர். வறியோருக்கு வாரி வழங்கினர். கற்றோரைப் போற்றிப் பாராட்டினர். இவர்களே இலக்கியச் சிறப்புமிக்க கடையெழு வள்ளல்கள் ஆவர்.

1) **பொதிகை ஆய்.** ஆய் அண்டிரன் புகழ்மிக்க வேளிர் தலைவன். வேள்விக் குடியிலிருந்து தோன்றியதாக நம்பப்பட்டவர். வீரத்தில் வல்லோன். பண்பில் சிறந்தோன். புலவர் நலம் பேணிய புரவலர். தான் அணிந்த விலைமதிப்பற்ற நாதர் தலைவன் வழங்கிய நீஜ ஆடையைப் புலவருக்குப் போர்த்தி மகிழ்ந்தவர்! யானைகளைப் பரிசாக வழங்கியவர்!! 2) **பரம்பு பாரி.** குறுநில மன்னர்களில் பெரும் புகழ் பெற்றவர் **பாரி.** பலமிக்க கோட்டையைக் கொண்ட பரம்பு மலைத் தலைவன். இவரது ஆதிக்கத்தின் கீழ் பல சிற்றரசர்கள் இருந்தனர். இவர்தான் பிடிப்பின்றிக் காற்றில் ஆடிய முல்லைக் கொடிக்குத் தன் தேரையே கொடுகொம்பாகக் கொடுத்தவர். கொடுத்துச் சிவந்த கரங்களுடைய பெருவள்ளல். இவரது அணுக்க நண்பர் பெரும் புகழ் பெற்ற **கபிலர்.** பாரியின் மீது பொறாமை கொண்ட மூவேந்தர்களும் பரம்பு மலையைக் கைப்பற்றிப் பாரியைக் கொன்றுவிட்டனர்! ஆதரவற்ற பாரி மகள்கள் இருவரையும் புலவர் காப்பாற்றி மணமுடித்து வைத்தார். ஆய் ஆதரித்த உறையூர் புலவரும், பாரியின் ஆருயிர் நண்பர் கபிலரும் பிராமணர்கள் என்று கூறுகிறார் கே.எ.நீலகண்ட சாஸ்திரி.[34]

**3) தகடூர் அதியமான்.** அதியமான் என்று அழைக்கப்பட்ட அதியமான் தகடூரை (தர்மபுரி) ஆட்சி செய்த ஆற்றல்மிக்க அரசன். புலவர் அவ்வையாரின் புரவலர். இறப்பற்ற ஆற்றல்தரும் அரிய நெல்லிக்கனியை அவருக்கு அளித்து பெருமைப்படுத்தியவர். அதியமானுக்கு எதிராகக் கோவலூர் மலையமான் எழுவர் அடங்கிய கூட்டுப் படை அமைத்துப் போர் தொடுத்தார். இப்போரில் வெற்றி பெற்றார் அதியமான். சேர மன்னன் அதியமானுக்கு எதிராகப் படை யெடுத்த போது பாண்டிய மன்னனும், சோழ மன்னனும் அதியமானுக்கு ஆதரவளித்தனர்! பின்னர் **பாலியைத்** தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த **நன்னன்** மீது படை யெடுத்த போது அதியமான் கொல்லப்பட்டார்.[35]

**4) கோவலூர் காரி.** கோவலூரை ஆட்சி செய்த **திருமுடிக்காரி** கொடை கொடுத்துச் சிறப்புற்ற மலையமான்கள் பரம்பரையில் வந்தவர். **காரி** என்ற கருப்புக் குதிரை மீதமர்ந்து போர்க்களம் சென்றவர். கொல்லிமலை ஓரியைப் போரில் புறங்கண்டவர். சோழர் படையின் தளபதியாக இருந்து மந்தரஞ்சேரல் இரும்பொறையைத் தோற்கடித்தவர். இவர் இறந்த பின்னர் சோழன் கிள்ளிவளவனது சீற்றத்திலிருந்து இவரது பிள்ளைகளைக் காப்பாற்றினார் புலவர் கோவூர்க்கிழார்.[36] **5) கொல்லிமலை ஓரி.** இவர் வில்வித்தையில் வித்தகர். அதன் காரணமாக இம்மன்னர் **வல்வின்ஓரி** என்று அழைக்கப்பட்டார். இவரிடம் வீரமும் கொடைக் குணமும் ஒருங்கே அமையப்பெற்றிருந்தன. திருமுடிக்காரிக்கு எதிரான போரில் காரி வீரமரணமடைந்தார்.[37] **6) தொட்டிமலை நல்லி.** சிறந்த கொடை வள்ளலான நல்லியை அவரது அவைக்களப் புலவர் **வன்பரணர்** புகழ்ந்து பாராட்டியுள்ளார். **7) நல்லூர் பேகன்.** நல்லூரை ஆட்சி செய்த வையாவிக் கோப்பெரும் பேகன் பிறவிப் புரவலர். இவர்தான் குளிரில் நடுங்கிக் கொண்டிந்த மயிலுக்குப் போர்வை போத்திக் காப்பாற்றியவர்! இந்த எழு வள்ளல்களன்றி, மேலும் பல குறுநில மன்னர்கள் இருந்தனர்.

## மேற்கோள் நூற்பட்டியல்

1. ந.சுப்பிரமணியன், சங்ககால வாழ்வியல், சென்னை, 2010, பக்.4.
2. ந.சுப்பிரமணியன், பக்.23.
3. வை.தாமோதரன் பிள்ளை, 1892 ஆம் ஆண்டு தொல்காப்பியத்தை அச்சிட்டு, வெளியிட்டு, தமிழ் நாட்டுக்கு அறிமுகம் செய்து வைத்தார்.
4. பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்: 1) திருக்குறள்; 2) நாலடியார்; 3) நான்மணிக் கடிகை; 4) இன்னா நாற்பது; 5) இனியவை நாற்பது; 6) திரிகடுகம்; 7) ஏலாதி; 8) ஆசாரக்கோவை; 9) முதுமொழிக்காஞ்சி; 10) பழமொழி; 11) சிறுபஞ்சமூலம்; 12) ஐந்திணை ஐம்பது; 13) ஐந்திணை எழுபது; 14) திணைமொழி ஐம்பது; 15) திணைமாலை நூற்றைம்பது; 16) கைந்நிலை; 17) கார் நாற்பது; 18) களவழி நாற்பது.
5. அறுபடை வீடுகள்: 1) திருப்பரங்குன்றம்; 2) திருச்செந்தூர்; 3) பழனி; 4) சுவாமி மலை; 5) குன்று தோறாடல்; 6) பழமுதிர்சோலை.
6. நா.வானமாமலை, தமிழர் வரலாறும், பண்பாடும், சென்னை, ஆறாம் பதிப்பு, 2007, பக்.52.
7. K.A.Nilakanda Sastri, A History of South India, 1958, p.14.
8. கே.கே.பிள்ளை, தென் இந்திய வரலாறு I, ஏழாம் பதிப்பு, பக்.46.
9. ந.சுப்பிரமணியன், பக்.19–20.

பகுதி – V

# 6. பல்லவர் காலம்

*சீர்மிகு பல்லவப் பேரரசு சிறப்பிழந்து மறைந்தது.*

*– இராஜு காளிதாஸ்.*

## 6.1 வரலாற்றுச் சான்றுகள்

### 6.1.1 சர்ச்சைக்குரிய சான்றுகள்

சங்க காலத்தின் வீழ்ச்சி களப்பிரர்கால எழுச்சிக்கு வழிவகுத்ததைப் போன்று களப்பிரரது வீழ்ச்சி பல்லவ மற்றும் பாண்டியரது எழுச்சிக்கு வழிகோலியது. களப்பிரர் போன்றே பல்லவர் பற்றிய சான்றுகளும் சர்க்சைக்குரியனவாகவே உள்ளன. பல்லவர் பற்றிய வரலாற்றுச் சான்றுகளை நான்கு வகையாகப் பிரிக்கலாம்: 1) **பட்டயச் சான்றுகள்; 2) கல்வெட்டுச் சான்றுகள்; 3) சிற்பச் சான்றுகள்; 4) இலக்கியச் சான்றுகள்.** இச்சான்றுகளும் போதிய அளவில் ஒப்பிட்டு சரிபார்த்து உறுதி செய்யத் தக்கதாகவுமில்லை. இச்சான்றுகளைக் கொண்டு பல்லவர் யார்? என்ற வினாவுக்கு விடை காண்பது கடினம்.

### 6.1.2 பட்டயச் சான்றுகள்

தமிழ் நாட்டில் முதன் முதலில் செப்புப் பட்டயங்களைக் கொடுத்தவர்கள் பல்லவர்களேயாவர். இப்பட்டயங்கள் மூன்று வகைப்படும்: 1) **பிராகிருதப் பட்டயங்கள்; 2) சமஸ்கிருத பட்டயங்கள்; 3) சமஸ்கிருத–தமிழ் பட்டயங்கள். பிராகிருதப் பட்டயச் சான்றுகளில் பிரதானமானவை:** சிவஸ்கந்தவர்மனின் மாயிதவோலு, ஹிரகடகல்லிய பட்டயங்கள்; சாருதேவியின் பிரிட்டிஷ் அருங்காட்சியகப் பட்டயங்கள்; குமாரவிஷ்ணுவின் சேந்தலூர்ப் பட்டயங்கள். **சமஸ்கிருதப் பட்டயங்களில் குறிப்பிடத்தக்கவை:** விஜயஸ்கந்தவர்மனின் ஓங்கோடு பட்டயங்கள்; யுவமகாராஜன் விஷ்ணுகோபனின் உருபல்லே பட்டயங்கள்; சிங்கராய கொண்டான் பட்டயங்கள்; விஷ்ணுகோபவர்மனின் கூரம் பட்டயங்கள்; முதலாம் நந்திவர்மனின் உதயேந்திரம் பட்டயம்; வேசந்தா பட்டயங்கள்; ஓங்கோடு பட்டயங்கள்; மங்கதூரா பட்டயங்கள்; பிகிரா பட்டயங்கள்; விலவத்தி பட்டயங்கள்; பல்லவன் கோயில் பட்டயங்கள். **சமஸ்கிருத–தமிழ் பட்டயங்களில் பிரபலமானவை:** முதலாம் பரமேஸ்வரவர்மனின் கூரம் பட்டயங்கள்; இரண்டாம் நந்திவர்மனின் காசிக்குடி, கொற்றங்குடி, உதயேந்திரம் பட்டயங்கள்; மூன்றாம் நந்திவர்மனின் வேலூர்பாளையம் பட்டயங்கள்; நிருபதுங்கவர்மனின் பாகூர் பட்டயங்கள். இப்பட்டயங்கள் சமஸ்கிருதம், தமிழ் கலந்த **கிரந்தப் பட்டயங்களாகும்.** ஸ்கந்த வர்மனின் மூன்று செப்புப் பட்டயங்களோடு பல்லவர் வரலாறு துவங்குகிறது எனக் குறிப்பிட்டுள்ளார் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி.[1]

### 6.1.3 கல்வெட்டுச் சான்றுகள்

பட்டயச் சான்றுகளைப் போன்றே **கல்வெட்டுப் பொறிப்புகளும்** (Inscriptions) பல்லவரது தோற்றம் மற்றும் பல்லவ மன்னர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளப் பயன்படுகின்றன. கல்வெட்டுச் சான்றுகளில் குறிப்பிடத்தக்கவை: அமராவதி சமஸ்கிருத கல்வெட்டு; ராஜசிம்மனது வயலூர் தூண் கல்வெட்டுகள்; கங்கர், சாளுக்கியர், பாண்டியர், ராஷ்டிரகூடர் கல்வெட்டுகள்; சந்திரகுப்தரது அலகாபாத் தூண் கல்வெட்டு, ஜுனாகத் கல்வெட்டு; இரண்டாம் புலிகேசியின் ஐஹோல் கல்வெட்டு; சிம்மவர்மனின் மஞ்சிகல்லுக் கல்வெட்டு; சயாம் கல்வெட்டு. தமிழ் நாட்டுக் கல்வெட்டுகள் மாமல்லபுரம், மாமண்டூர், மகேந்திரவாடி, மண்டகப்பட்டு, பல்லாவரம், திருக்கழுக்குன்றம், திருச்சி, சித்தன்னவாசல், தளவானூர் ஆகிய இடங்களில் காணப்படுகின்றன.

### 6.1.4 சிற்பச் சான்றுகள்

சிற்பச் சான்றுகள் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோயில்; மாமல்லபுரம் குகைக் கோயில்கள், தேர்கள், கற்சிலைகள் ஆகியவற்றில் காணப்படுகின்றன. இவையன்றி, புதுக்கோட்டை, சிதம்பரம், திருவள்ளாரை, நாமக்கல், திருச்சி ஆகிய ஊர்களில் குகைக் கோயில்கள், குடவரைக் கோயில்கள் போன்றவற்றிலும் சிற்பச் சான்றுகள் கலைப் படைப்புகளாக உள்ளன.

### 6.1.5 இலக்கியச் சான்றுகள்

இலக்கியச் சான்றுகள் தமிழ் மற்றும் சமஸ்கிருத நூல்களில் சிதறிக் கிடக்கின்றன. இவை பல்லவர்களின் பல பரிமாணங்களைப் பற்றி அறிந்து கொள்ளப் பெரிதும் பயன்படுபவையாகும். இவற்றுள் முக்கியமானவை: **பெரியபுராணம்; பன்னிரு திருமுறைகள்; நாலாயிர திவ்ய பிரபந்தம்;** திருமங்கை ஆழ்வாரின் **பரமேஸ்வர விண்ணகரப் பதிகம்; நந்திக் கலம்பகம்;** மகேந்திரவர்மனின் **லோகவியாபாகம்;** திங்நகரின் **நியாயப் பிரவேசம்;** பாரவியின் **கிரதார் ஜுனியம்;** தண்டியின் **அவந்தி சுந்தரி சதாசாரம்;** **மகாவம்சம்;** **யுவான் சுவாங்கின் பயணக் குறிப்புகள்.** இவையன்றி வெளிநாட்டவரும், உள்நாட்டவரும் வெளியிட்டுள்ள ஆராய்ச்சி நூல்கள் இரண்டாம் நிலை இலக்கியச் சான்றுகளாகும். பல்லவர் காலம் பற்றி ஆய்வு செய்ய விரும்புவோர் சமஸ்கிருதம், பிராகிருதம், கிரந்தம் ஆகிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

## 6.2 பல்லவர் பற்றிய கோட்பாடுகள்

### 6.2.1 புராணப் பல்லவர்

அமராவதி சமஸ்கிருத கல்வெட்டில் காணப்படும் புராணக் கதைப்படி அசுவத்ராமன் துரோணரின் மகன். துரோணர் பரத்வாஜர் குலவழி வந்தவர். பரத்வாஜர் ரிக் வேதத்தைத் தொகுத்து ஆவணப்படுத்தியவர். அசுவத்ராமன் கானகத்தில் தவம் செய்து கொண்டிருந்தபோது **மாதனி** என்ற தேவகன்னிகையைக் கடிமணம் செய்து கொண்டான். இவர்களுக்குப் பிறந்த குழந்தையே **பல்லவன்.** இக்குழந்தைக்குப் பல்லவன்



என்று பெயர் வைப்பதற்கான காரணமும் கூறப்பட்டுள்ளது. மாதனி கலப்புக் காதலால் பிறந்த குழந்தையை பல்லவப் புல்லிதழ்கள் நிறைந்த கூடையில் விட்டுச் சென்றுவிட்டாள்! சமஸ்கிருதத்தில் பல்லவா என்றால் இளந்தளிர் என்று பொருள். பல்லவரின் தோற்றத்தைப் பற்றிக் கூறும் இச்சுவையான புராணக்கதை வரலாறல்ல.

### 6.2.2 பாரசீகப் பஹ்லவர்

**பஹ்லவர்கள்** (Pahlavas) பாரசீகத்தைச் (Persia) சேர்ந்தவர்கள். இவர்கள் கி.பி.முதலாம் நூற்றாண்டில் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தனர். அவர்களில் ஒரு பிரிவினர் மராட்டிய நாட்டின் வழியாகத் தென்னிந்தியாவுக்கு வந்து ஆந்திர சாதவாகனர்களின்கீழ் மாநில ஆட்சியாளர்களாகப் பணியாற்றினர். சாதவாகணர்களின் வீழ்ச்சிக்குப் பின்னர் இவர்கள் தொண்டை மண்டலம் வந்து குடியேறினர். இவர்களே பின்னர் தொண்டை மண்டலத்தின் பல்லவ அரசரானார்கள்! பஹ்லவர்–பல்லவர் என்ற சொல் ஒற்றுமையைக் கொண்டு புனையப்பட்ட கோட்பாடு இது.[2] வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு வந்த பஹ்லவர்கள் இந்தியரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றினர் என்பது **நம்பக்கூடியதாக இல்லை** என்று கூறுகிறார் ஆர்.சத்தியநாதய்யர்.[3]

### 6.2.3 சோழர் வழி வந்தோர்

சங்ககாலத்து சோழ மன்னன் கிள்ளிவளவன் நாகர் குலப் பெண் **பீலிவளை** என்ற மணிபல்லவ நாகர் பெண்ணை மணந்தார். இவர்களுக்குப் பிறந்தவனே **இளந்திரையன்.** இளந்திரையன் மணிபல்லவத்தில் பிறந்து பின்னர் தொண்டை மண்டலம் வந்து அரசனானான். எனவே, **தொண்டைமான்** என்று அறியப்பட்டான்! இதுவும் கற்பனையேயாகும்.[4]

### 6.2.4 புலிந்தர்களே பல்லவர்கள்

அசோகரது 13 ஆம் பாறைக் கல்வெட்டில் புலிந்தர் என்ற சொல் காணப்படுகிறது. **புலிந்தர்** என்ற சொல் பாலாடையைக் குறிக்கும். தொண்டை மண்டலத்தில் வாழ்ந்த **தொண்டையர்** ஆடு மாடு மேய்த்தவர்கள். இவர்கள் **குறும்பர்கள்** என்றும் அழைக்கப் பட்டனர். எனவே தொண்டையர் என்ற தமிழ்ச் சொல்லின் சமஸ்கிருத மொழிமாற்றமே பல்லவர் ஆகும். இதன் அடிப்படையில் பால் + அவர் = பல்லவர் (பால்கறப்போர்) ஆயிற்று. தொண்டை மண்டலத்து பலாடர்களே (Paladas) அசோகர் கல்வெட்டில் காணப்படும் புலிந்தர் என்றும், அவர்களே சாதவாகனர்களின் வீழ்ச்சிக்குப் பிறகு தொண்டை மண்டலத்தில் பல்லவர்களாகி ஆட்சி செய்தனர் என்றும் கூறுகிறார் ஆர்.சத்தியநாதய்யர். மேற்கண்ட கோட்பாடுகள் அனைத்தும் ஊக வரலாற்று விளக்கங்களேயாகும்.

### 6.2.5 சொற்சித்து விளையாட்டு

பல்லவரது தோற்றம், வாழ்விடம், குலம், கோத்திரம் பற்றிய கோட்பாடுகள் அனைத்தும் கதையும், கற்பனையும் சேர்ந்த கலவையாக உள்ளன. சொல் ஒற்றுமையை வைத்துக் கொண்டு ஒரு கோட்பாட்டை உருவாக்கும் முயற்சி **சொற்சித்து விளையாட்டே** (Semantics)யன்றி வரலாறு ஆகாது. மேற்கண்ட கோட்பாடுகள் அனைத்தும் துணிக்கேற்ப உடலை வெட்டும் கலையாகும்! சரிபார்த்து ஒப்பிட்டு

அறியக்கூடிய ஆவணச் சான்றுகள் இல்லாதபோது கற்பனை கொடி கட்டிப் பறக்கிறது! பல்லவர்களை வெளிநாட்டவராகக் காட்ட வேண்டும் அல்லது அவர்களைத் தமிழர்களாக சித்தரிக்க வேண்டும் என்று முன்கூட்டியே தீர்மானித்துக் கொண்டு அதற்கேற்பக் கோட்பாடுகள் புனையப்படுகின்றன!

### 6.2.6 தமிழர்களல்லர்

பல்லவர்களைப் பற்றிய கோட்பாடுகளைத் திறனாய்வு செய்யும்போது ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது: அவர்கள் தமிழர்கள் அல்ல என்பதாகும். அதற்கான காரணங்கள்: 1) பல்லவ மன்னர்களின் பெயர்கள்; 2) அவர்களது பட்டயங்கள் சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் இருப்பது; 3) தமிழர் மரபுக்கு எதிரான கோத்திரை முறையைப் பின்பற்றியது; 4) துவக்ககாலப் பல்லவ அரசர்கள் தமிழ்ப் புலவர்களை ஆதரிக்காமை; 5) சங்க இலக்கியத்தில் இவர்களைப் பற்றிய தகவல் எதுவும் இல்லாமை; 6) பட்டயங்கள் எதிலும் இவர்களைப் பற்றிய தகவல்கள் இல்லாதது. சுருங்கக்கூறின், பல்லவர்களும், களப்பிரர்களைப் போன்று வெளியிலிருந்து தமிழ்நாட்டுக்கு வந்து குடியேறி ஆட்சியைக் கைப்பற்றியவர்கள் ஆவர்.

## 6.3 பல்லவர் காலம்

### 6.3.1 காலப் பாகுபாடு

வழக்கமாகப் பல்லவர் காலத்தை 1) முற்காலப் பல்லவர் காலம்; 2) இடைக்காலப் பல்லவர் காலம்; 3) பிற்காலப் பல்லவர் காலம் என்று பிரிப்பதுண்டு. அல்லது இக்காலத்தை 1) கி.பி.600க்கு **முற்பட்ட பல்லவர் காலம்;** 2) கி.பி.600க்குப் **பிற்பட்ட பல்லவர் காலம்** என்றும் பிரிக்கலாம். சிலர் பல்லவர் காலத்தை முற்காலப் பல்லவர் காலம்; பிற்காலப் பல்லவர் காலம் என்று இரண்டாகப் பிரித்து, முற்காலப் பல்லவர் காலத்தைப் **பிராகிருத பட்டயக் காலம், சமஸ்கிருதப் பட்டயக்காலம்** என்றும் பிரித்துக் கூறுவதுண்டு.

### 6.3.2 இரு பிரிவுகள்

இந்நூலில் பல்லவர் காலம் 1) **பட்டயப் பல்லவர்கள்;** 2) **பேரரசுப் பல்லவர்கள்** என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. **குமார விஷ்ணு** (கி.பி.325–350) முதல் **விஷ்ணுவர்த்தன் II** (கி.பி.500–525) வரை ஆட்சி செய்த பல்லவ மன்னர்களின் ஆட்சிக் காலத்தை பட்டயப் பல்லவர் காலம் என்று கூறலாம். இதேபோன்று **நந்திவர்மன் II** (கி.பி.731–795) ஆட்சிக் காலம் முதல் **அபராஜிதன்** (கி.பி.896–914) காலம் வரை பேரரசுப் பல்லவர்கள் காலம் என அழைக்கலாம். பல்லவர் பட்டயங்களை மொழியினடிப்படையில் மூன்றாகப் பிரித்து அதன்படி பல்லவர் வம்சாவளியை மூன்றாகப் பிரித்தாலும் பல்லவர்கள் அனைவரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களே![6]

## 6.4 பட்டயப் பல்லவர்கள், கி.பி.325–525

### 6.4.1 பட்டயப் பல்லவ மன்னர்கள்

துவக்க காலப் பல்லவர்களின் பிராகிருத, சமஸ்கிருத **பட்டயங்கள்** (Charters) **செப்பேடுகள்** (Copper Plates), **அறக்கொடைகள்** (Grants) ஆகியவற்றின்



அடிப்படையில் இப்பல்லவர்களின் வம்சாவளி பற்றி ஓரளவுக்கு ஊகக்கணிப்பு செய்ய முடிகின்றது. இக்கணக்கின்படி **குமாரவிஷ்ணு** (கி.பி.325–350); **ஸ்கந்தவர்மன் I** (350–375); **வீரவர்மன்** (375–400); **ஸ்கந்தவர்மன் II** (400–436); **சிம்மவர்மன்** (436–460); **ஸ்கந்தவர்மன் III** (460–480); **சிம்மவர்மன் II** (480–500); **விஷ்ணு கோபவர்மன் II** (500–525) ஆகிய எட்டு மன்னர்களும் முற்காலப் பல்லவர்கள் என்று அறியப்படுகிறார்கள்.

### 6.4.2 ஆட்சிக் காலம்

இரண்டாம் விஷ்ணுகோபவர்மன் காலத்திலிருந்து நீண்ட இடைவெளி உள்ளது. மேலும் இப்பல்லவ அரசர்களைப் பற்றிய வரலாற்று முக்கியத்துவமிக்க தகவல்கள் எதுவுமில்லை. எனவே, இவர்களது ஆட்சிக்கால நடவடிக்கைகள் மற்றும் மக்களின் வாழ்வியல் பற்றி வரைவது கடினம். எனினும், இப்பல்லவ மன்னர்களின் பிராகிருத மற்றும் சமஸ்கிருதப் பட்டயங்களிலிருந்து இவர்களது வம்சாவளியும், காலவரன்முறையும் கணிக்கப்படுவதால் இம்மன்னர்களைப் பட்டயப் பல்லவர்கள் என்று கூறலாம். பட்டயப் பல்லவர்கள் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு தொண்டை மண்டலத்தை 200 ஆண்டுகள் ஆட்சி செய்துள்ளனர். இவர்களது இருநூறு ஆண்டுகால ஆட்சிக் காலத்தில் தமிழ்நாட்டில் பல்லவப் பேரரசு அழுத்தமான அடிப்படையில் அமைவதற்கான வழி வகுக்கப் பட்டது.

## 6.5 பேரரசுப் பல்லவர்கள், கி.பி.575–920

### 6.5.1 சிம்ம விஷ்ணு, கி.பி.575–600

பேரரசுப் பல்லவர்களின் தலைமகனாகத் திகழ்பவர் சிம்மவர்மனின் மகன் சிம்ம விஷ்ணு. இவர் சிம்ம விஷ்ணு வம்சாவளியை (Simhavishnu Dynasty)த் தோற்றுவித்தவர். வீரர், விரிவாக்கவாதி, விவேகி. இவர் பல்லவப் பேரரசின் அடித்தளத்தை அமைத்தவர். சிம்மவிஷ்ணு தமிழ் நாட்டில் பல்லவ வல்லாட்சியை உருவாக்கிப் பிற பல்லவ மன்னர்களுக்கு முன்னோடியாகவும், முன்னுதாரணமாகவும் திகழ்ந்தவர். தமிழ்நாடு முழுவதையும் பல்லவப் பேரரசுக் குடையின்கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற தொலை நோக்குடையவர். இவரது சாதனைகள் அசாதாரணமானவை.

#### களப்பிரர் ஆட்சிக்கு முடிவுகட்டல்

சிம்மவிஷ்ணுவின் முதல் முக்கிய சாதனை சங்க காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்த களப்பிரர் ஆட்சிக்கு முடிவு கட்டியதாகும். களப்பிரர் தொண்டை மண்டலத்திலிருந்து களையெடுக்கப்பட்டனர். இதன்மூலம் களப்பிரரின் வடத் தமிழ்நாட்டு ஆதிக்கம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

#### பேரரசுப் பெருக்கம்

சிம்மவிஷ்ணு மன உறுதிமிக்க **விரிவாக்கவாதி** (Expansionist). இவர் தமிழ்நாடு முழுவதையும் பல்லவர் ஆட்சியின் கீழ்க் கொண்டு வரத் தீர்மானித்தார். அதன் முதல் கட்டமாக தனது ஆட்சியை காவிரிக்கரை வரை விரிவுபடுத்தினார். மேலும் தெற்கே

சென்று பாண்டிய மண்டலத்தையும் தனது ஆள்நிலப் பகுதியாக்கிவிட வேண்டும் என விரும்பினார். அதன் விளைவாக அவர் பாண்டியரது எதிர்ப்பையும் எதிர்கொள்ளத் தயாராக இருந்தார்![7]

## பாண்டியருடன் பகைமை

காஞ்சியில் பல்லவரும், மதுரையில் பாண்டியரும் கிட்டத்தட்ட ஒரே சமயத்தில் தங்களது ஆட்சியையும், ஆதிக்கத்தையும் நிலைநாட்டினர். காஞ்சிப் பல்லவன் சிம்மவிஷ்ணுவும், மதுரைப் பாண்டியன் கடுங்கோனும் (கி.பி.576–600) சமகாலத்தவர்கள். சிம்மவிஷ்ணு தொண்டை மண்டலத்தில் களப்பிரர் ஆதிக்கத்துக்கு முடிவு கட்டியதைப் போன்று, மதுரை மண்டலத்தில் களப்பிரர் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தவர் கடுங்கோன். எனினும் சிம்மவிஷ்ணுவின் நிலவிரிவாக்கக் கொள்கை பல்லவர்–பாண்டியர் பகைக்கு வழி வகுத்துவிட்டது.

## பல்லவ–சாளுக்கிய மோதல்

சிம்மவிஷ்ணு தனது மேலாதிக்கக் கொடியை ஆந்திர மண்ணிலும் பதிக்கத் திட்டமிட்டார். அதன் விளைவே பல்லவ–சாளுக்கிய மோதல். இவரது ஆட்சிக் காலத்தில் இவரது தமிழ்நாட்டு எல்லை காவிரிக்கரை வரை சென்றதைப் போன்று ஆந்திராவில் கிருஷ்ணா நதிவரை விரிவுபடுத்த விரும்பினார். இவரது மண்ணாசை பல்லவருக்கும் ஆந்திர சாளுக்கியருக்குமிடையே நிரந்தர விரோதத்தை வளர்த்துவிட்டது. சிம்மவிஷ்ணு விதைத்த ஏகாதிபத்திய விதை அவருக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்றவர்களது காலத்தில் செடியாகி, மரமாகி, விருட்சமாயிற்று!

## கடல் கடந்த ஆதிக்கம்

உள்நாட்டு விரிவாக்கத்தில் திருப்தியடையாத சிம்மவிஷ்ணு தனது செல்வாக்கை அண்டை நாடான இலங்கைக்கும், தென்கிழக்கு நாடுகளுக்கும் விரிவுபடுத்த விரும்பினார். இந்த விருப்பத்தின் விளைவாகப் பல்லவருக்கும் சிங்களவருக்குமிடையே முரண்பாடும் மோதலும் ஏற்பட்டது[8]; தென் கிழக்கு நாடுகளில் பல்லவரின் செல்வாக்கு விரிவடையத் துவங்கியது. பேரரசுப் பேராதிக்கத்துக்கு கால்கோள் நாட்டிய சிம்மவிஷ்ணு **பூமிக்கு சிங்கம்** (Avanisimha) என்று அழைக்கப்பட்டார்.

## சிம்மவிஷ்ணுவின் சாதனைகள்

### குகைக் கோயில் கலை

சிம்மவிஷ்ணு வைணவர். இவரது ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில், குறிப்பாகத் தொண்டை மண்டலத்தில் வைணவ சமயம் ஊக்கம் பெற்றது. அதுமட்டுமல்ல. இப்பல்லவ மன்னன் கட்டிடக் கலையில் புதுமையைப் புகுத்த விழைந்தார். இவரது புத்தமைப்புப் புதுமைப்போக்கு கற்பாறைகளைக் குகைக்கோயிலாக மாற்றும் இரசவாத வித்தையைச் செய்தது. போர்க்கலையில் புகழ் பெற்ற சிம்மவிஷ்ணு குகைக்கோயில் சிற்பக் கலையில் தன் முத்திரையைப் பதித்தார். காஞ்சிக்கருகே கடற்கரையில் குன்றைக் குடைந்து குகைக் கோயிலை எழுப்பினார். இக்கோயிலில் இவர் தனது இரு மனைவியரோடு காட்சியளிக்கும்



புடைப்புருவச் சிலை இன்றும் உள்ளது! அச்சிலையின் கீழ் ஸ்ரீசிம்மவிஷ்ணு போதாதிராஜன் என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஆதிவராகர் குடை வரைக் கோயில் சிம்ம விஷ்ணுவால் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. சிம்மவிஷ்ணு குகைக்கோயில் கட்டிடக் கலையில் இவருக்குப்பின் ஆட்சிக்கு வந்த இவரது மகன் மகேந்திரவர்மனுக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். சுருங்கக்கூறின், தமிழ்நாட்டில் முதன் முதலில் செங்கல், சுண்ணாம்பு, மரம், உலோகம் போன்ற அழியக்கூடிய கட்டுமானப் பொருள்களின்றி அழியா கற்கோயிலைக் கட்டும் கலையைத் துவக்கி வைத்த பெருமை சிம்மவிஷ்ணுவையே சேரும்.

### புலவர்களுக்குப் புரவலர்

கலை நாட்டமுடைய சிம்மவிஷ்ணு புலவர்களுக்குப் புரவலராக விளங்கினார். **பாரவி, தண்டின்** போன்ற புகழ்மிக்க சமஸ்கிருதப் புலவர்கள் இவரது அரசவையை அலங்கரித்தனர். பாரவியின் **கிராதார்ஜுனீயம்** என்ற நூல் சிவனுக்கும் அர்ஜுனனுக்குமிடையே நிகழ்ந்த சண்டையைப் பற்றியும், இச்சண்டையின் முடிவில் அர்ஜுனன் ஒப்பற்ற பாசுபத அஸ்திரத்தை அடைந்ததைப் பற்றி வர்ணிக்கும் இந்நூல் அக்காலத்தில் பெரும் புகழ் பெற்றது. அதேபோன்று **காவ்யாதர்ஷா** என்ற சமஸ்கிருத அலங்கார நடைக் கவிதை இலக்கியவாதிகளின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தது. சிம்மவிஷ்ணுவே ஒரு புலவராகவும், இசைக் கலைஞராகவும் இருந்துள்ளார்.

தமிழ் நாட்டின் முதல் பல்லவப் பேரரசரான சிம்மவிஷ்ணு பல பரிமாணங்களைக் கொண்ட ஒரு சகலகலா வல்லவராக பிரகாசித்துள்ளார். அவரது தொலைநோக்கு, போர்த்திறன், கலைத்திறன், புலமை, புலமையைப் போற்றும் தகைமை, புதுமையைப் புகுத்தும் போக்கு, பெருந்தன்மை, அனைவரையும் அரவணைக்கும் மனப்பான்மை, மேலான்மைத் திறன், அரசதந்திரம், அறிவாற்றல் ஆகியவை வியப்புக்குரியவை. சிம்மவிஷ்ணு செயற்கரிய சாதனையாளர். இச்சாதனையின் மூலம் இவர் பல்லவரது அரசியல் கலாச்சாரப் பெருமைக்கும் புகழுக்கும் வழி வகுத்தார்.

## 6.5.2 முதலாம் மகேந்திரவர்மன், கி.பி.600–630

### புள்ளலூர் போர்

சிம்மவிஷ்ணுவின் மகன் முதலாம் மகேந்திரவர்மன் பல்லவப் புலிக்குப் பிறந்தது பூனையாகாமல் புலியாகவே வளர்ந்தது! போர்ப்புலி. தந்தையைப் போன்றே மகனும் நிலவாதிக்கவாதி. சிம்மவிஷ்ணு துவக்கிய பேரரசுப் போர்ப் பாரம்பரியத்தை மகேந்திரவர்மன் புதிய உச்சத்துக்குக் கொண்டு சென்றார். முதலாம் மகேந்திரவர்மனைப் போன்றே ஆந்திராவை ஆட்சி செய்த **இரண்டாம் புலிகேசி** ஆதிக்க ஆசைமிக்கவர். முன்னவர் **காஞ்சியை** மையமாகக் கொண்டு பல்லவப் பேரரசை விரிவுபடுத்த வேண்டும் என்று எண்ணியதைப் போன்றே பின்னவரும் **வாதாபி**யைத் தலைநகராகக் கொண்டு அவரது நிலவாதிக்க ஆசையை நிறைவேற்றிக் கொள்வதில் உறுதியாக இருந்தார். வாதாபியைப் பிடிக்க மகேந்திரவர்மனும், காஞ்சியைக் கைப்பற்ற இரண்டாம் புலிகேசியும் போட்டி போட்டனர். இப்போட்டியின் விளைவே **புள்ளலூர்ப் போர்.**

## காஞ்சி காப்பாற்றப்பட்டது

வடநாட்டு ஹர்ஷவர்த்தனரை வெற்றி கண்ட சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி தொண்டை மண்டலத்தில் தலைதூக்கிய பல்லவ மன்னன் மகேந்திரவர்மனையும் தோற்கடிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தமிழ்நாட்டின் வடமாகாணங்கள் மீது படையெடுத்து வந்து வேங்கியைக் கைப்பற்றிக் கொண்டார்.[9] அங்கிருந்து அவர் காஞ்சிக்கு மேற்கே 15 மைல்களுக்கு அப்பால் இருந்த **புள்ளலூரைச்** சென்றடைந்தார். போரைத் துவக்கிய புலிகேசியை புள்ளலூரில் எதிர்க்கொண்டார் மகேந்திரவர்மன். மகேந்திரவர்மனின் எதிர்த்தாக்குதலை சமாளிக்க முடியாத புலிகேசி பின்வாங்கிச் சென்றார். புள்ளலூர்ப் போர் இருவருக்கும் வெற்றி தோல்வியின்றி முடிந்தது. இப்போரின் விளைவாக காஞ்சி புலிகேசியின் பிடியிலிருந்து காப்பாற்றப்பட்டது.[10] எனினும், புள்ளலூர்ப் போர் பல்லவர்களுக்கும் சாளுக்கியர்களுக்குமிடையேயான தொடர் போராட்டத்தின் துவக்கம் என்று குறிப்பிட்டுள்ளார் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி.[11]

## கங்கவாடிப் போர்

மேற்கே கடம்பர்களும், கிழக்கே பல்லவர்களும் எழுச்சி பெற்றபோது இடைப்பட்ட மைசூர் பகுதியை ஆட்சி செய்தவர்கள் கங்கர்கள். இப்பகுதி **கங்கவாடி** என்று அழைக்கப்பட்டது. இரண்டாம் புலிகேசி கங்க நாட்டு மன்னர் மகளைத் திருமணம் செய்து கொண்டிருந்தமையால் புள்ளலூர்ப் படையெடுப்பின் போது கங்க மன்னன் **துர்விநீதன்** சாளுக்கிய மன்னனுக்கு உதவி செய்தார். எதிரியின் துணைவரைத் தனக்கு எதிரியாகக் கருதிய மகேந்திரவர்மன் துர்விநீதனைத் தண்டிக்கும் பொருட்டு கங்கவாடி மீது படையெடுத்துச் சென்று கங்க மன்னனைத் தோற்கடித்தார். எதிரியின் ஆதரவாளரைத் தண்டிக்கும் நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்டதே **கங்கவாடிப் போர்** ஆகும்!

## சோழ நாட்டுடன் போர்

சிம்ம விஷ்ணு சோழ நாட்டைக் கைப்பற்றித் தொண்டை மண்டலத்துடன் இணைத்திருந்தார். பல்லவர்களின் மேலாதிக்கத்தின்கீழ் இருக்க விரும்பாத சோழர்கள் சுதந்திரமாக ஆட்சி செய்ய விரும்பினர். எனவே, முதலாம் மகேந்திரவர்மன் சோழ நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, சோழர்களை வென்று, சோழ நாட்டை மீண்டும் பல்லவப் பேரரசுடன் இணைத்தார். இதன் விளைவாக விடுதலையை விரும்பிய சோழர்களுக்கும், ஏகாதிபத்தியத்தை விரும்பிய பல்லவர்களுக்குமிடையே தொடர்பகை உருவாயிற்று.

## பட்டப் பெயர்கள்

சேர, சோழ, பாண்டியர்களைப் போன்றே முதலாம் மகேந்திரவர்மனும் புகழ்ப் பிரியராக இருந்தார். தற்புகழ்ச்சி விரும்பிய பல்லவப் பேரரசரும் தன்னை **விசித்திரசித்தன், அரித்தியராஜன், மத்தவிலாசன், சித்திரகாரப் புலி, புருஷோத்தமன், குணபரன்** போன்ற பட்டப் பெயர்களால் அலங்கரித்துக் கொண்டார். இப்பட்டப் பெயர்களைக் கல்வெட்டுக்களிலும் பொறித்துக் கொண்டார். **தற்பெருமை** (Eguism) பேரரசர்களின் பொதுவான பலவீனம் போலும்.



## பல்லவர் பண்பாடு

முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் பண்பாட்டு மாற்றம் ஏற்பட்டது. இது சங்ககாலப் பண்பாட்டிலிருந்து பல வகையிலும் வேறுபட்டதாகும். இம்மாற்றம் மொழி, சமுதாயம், சமயம், கட்டிடம், கலாச்சாரம், கவின் கலைகள் ஆகிய அனைத்துத் துறைகளிலும் பிரதிபலித்தது. இந்த மாற்றம் தனித்தன்மை வாய்ந்தது. இது பல்லவர் காலத்துக்குத் தனி அடையாளத்தை, அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தது. இதைப் **பல்லவர் பண்பாடு** என்று கூறலாம்.

## மொழி

முதலாம் மகேந்திரவர்மன் சமஸ்கிருத மொழிக்கு முதல் முக்கியத்துவம் கொடுத்தார். இவரது பட்டயங்கள் அனைத்தையும் வடமொழியிலேயே பதிவு செய்தார். இம்மன்னரது **மத்தவிலாசப் பிரகசனம், பகவத்தாஜுகியா** என்ற புகழ் பெற்ற நூல்கள் சமஸ்கிருதத்திலேயே எழுதப்பட்டது. இவர் சமஸ்கிருதப் புலவர்களுக்குப் புரவலராக இருந்தார். சமஸ்கிருத இலக்கியம் வெகுவாக ஊக்குவிக்கப்பட்டது. கல்விப் புலமை பெற்றிருந்த மகேந்திரவர்மன் பல சமஸ்கிருதக் கல்லூரிகளை நிறுவினார். ஓவியக்கலை நூலுக்கு தட்சிண சித்திரா என்ற விளக்க நூல் வடமொழியில் தொகுக்கப்பட்டது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்த சமஸ்கிருதப் பண்டிதர்களும் புலவர்களும் காஞ்சியுடன் தொடர்பு கொண்டிருந்தனர். வடமொழி ஆட்சி மொழியாக இருந்தது. இவற்றின் விளைவாகத் தமிழ்நாட்டில் சமஸ்கிருத மொழி என்றுமில்லாத அளவுக்கு செல்வாக்கு பெற்றது.

## சமயம்

முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத் துவக்கத்தில் தொண்டை மண்டலம் சமணர்களின் கோட்டையாக காட்சியளித்தது. அதற்குக் காரணம் அவரே தீவிர சமணராக இருந்ததேயாகும். அவரது சமயக் கொள்கையால் சைவர்கள் சொல்லொணா இன்னல்களுக்குள்ளாயினர். பின்னர் வைணவ நாயன்மார் திருநாவுக்கரசரின் செல்வாக்கால் மகேந்திரவர்மன் சமண மதத்திலிருந்து சைவ சமயத்திற்கு மதம் மாறினார். மதம் மாறிய பல்லவ மன்னர் சமணர்களை அடக்கி ஒடுக்கினார்; கொடுமைகளுக்குள்ளாக்கினார். சமணப் பள்ளிகள் இடிக்கப்பட்டு அந்த இடங்களில் சிவன் கோயில்கள் கட்டப்பட்டன.[12] மகேந்திரவர்மனின் கொடுமைக்கஞ்சி சமணர்கள் தொண்டை மண்டலத்தைவிட்டு பிற இடங்களுக்குப் புலம் பெயர்ந்து செல்ல வேண்டிய நெருக்கடிக்குள்ளாயினர். தொண்டை மண்டலத்தில் சமணர்கள் பெற்றிருந்த இடத்தைச் சைவர்கள் கைப்பற்றிக் கொண்டனர்! சங்ககாலச் சமய சார்பின்மைக்கு பதில் சமயச் சார்புடைமை அரசாங்கத்தின் கொள்கையாக இருந்தது. சுருங்கக்கூறின், முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் **சமயப் பொறையின்மை** கட்டவிழ்த்து விடப்பட்டது

## சமுதாயம்

சமயத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப் போன்றே சமுதாயத்திலும் தலைகீழ் மாற் ஏற்பட்டது. சங்ககாலத்து **சமுதாய சமத்துவம்** கடந்தகால அமைப்பாயிற்று. களப்

காலத்தில் களை எடுக்கப்பட்ட பிரம்மதேயங்கள் மீட்கப்பட்டு மீண்டும் பிராமணர்களுக்கு வழங்கப்பட்டன! பிராமணர்கள் திரும்பவும் சமுதாயத்தில் தலை இடத்தைப் பிடித்துக் கொண்டனர். வருணப் படிமுறை சாதி அமைப்பு இறுக்கமுற்றது. பாணர்கள் புலையர் நிலைக்குத் தாழ்த்தப்பட்டனர். பிணத்தைப் புதைப்போர் சண்டாளர்களாகக் கருதப்பட்டு தீண்டத்தகாதோராயினர். பிராமணர்–சூத்திரர் வேறுபாடு நிலைப்பெற்றது. **நந்தநார்** அப்பழுக்கற்ற சிவபக்தராக இருந்தபோதிலும் அவர் கோயிலுக்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டது. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பல்லவர் காலத்தில் இருந்த பல்வேறு சாதிகளைப் பற்றிக் கூறியுள்ளார். முதலாம் மகேந்திரவர்மன் ஆட்சிக் காலத்தில் சாதிப் பாகுபாடும், வேற்றுமையும் அதிகரித்துவிட்டது.

## கட்டடக்கலை

சிம்மவிஷ்ணுவைப் பின்பற்றிய முதலாம் மகேந்திரவர்மன் கட்டிடக் கலையை மேலும் ஒருபடி முன் கொண்டு சென்றார். இவரது ஆட்சிக்காலத்தில் குகைக்கோயில் மூலம் கோயிற்கலை பெருமை பெற்றது. இவரது காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் சிற்பக்கலைக்கும், ஓவியக்கலைக்கும் புகழ் பெற்றவை.

## சிற்பக்கலை

மகேந்திரவர்மன் காலத்துக் கோயில்கள் சிற்பக் கலைக் கோட்டங்கள். தமிழ் நாட்டில் கற்சிற்பக்கலை நிலைபெறச் செய்த பெருமை இப்பல்லவ மன்னவருக்கு உண்டு. இக்கோயில்களில் எண்ணற்ற சிறிய உருவங்கள் உள்ளன. இவற்றின் தனித்தன்மை கட்டடம் வேறு, சிற்பம் வேறு என்று பிரித்துக்காண முடியாதபடி ஒருங்கிணைந்துள்ளது. குறிப்பாக, இக்கோயில்களில் காணப்படும் தூண்களைக் குறிப்பிடலாம். மகேந்திரவர்மனால் கட்டப்பட்ட குகைக் கோயில்களில் காணப்படும் வாயிற்காவலர் சிற்பங்கள் தனிச்சிறப்புமிக்கவை.

## ஓவியம்

முதலாம் மகேந்திரவர்மன் ஒரு இசைஞானி. அவரது கலை வாழ்க்கை இசையோடு இணைந்திருந்தது. வீணையும் நரம்பும் போன்று மகேந்திரவர்மனும் இசையும் ஒன்றறக் கலந்திருந்தனர். இசையே வாழ்க்கை; வாழ்க்கையே இசை என்று வாழ்ந்தவர். இசை இசைப் படைப்பாளி. **சங்கீரணம்** என்ற தாளத்தைக் கண்டறிந்த பெருமை இவருக்கு உண்டு. **'சங்கீரண் சாதி'** என்பது அவரது புனைப் பெயர்.

மகேந்திரவர்மனின் குடுமியான் மலைக் கல்வெட்டு இசை பற்றியதாகும். இது இவரது இசைப் புலமைக்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். இக்கற்சாசனத்தில் இசைப் பண்புகள், தாளங்கள் பற்றிய அரிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன. இக்கல்வெட்டின் மூலம் எட்டு நரம்புகளும், ஏழு நரம்புகளும் கொண்ட இருவகை யாழ்களைப் பற்றி அறிந்து கொள்ள முடிகிறது. முதலாம் மகேந்திரவர்மன் **பரிவாதினி** என்ற வீணையில் வல்லவர்; வல்லுநர். "அன்று இசை வல்லுநராக இருந்த உருத்திராச்சாரியின் மாணவனாக இருந்து இசையில் சுரம் வகுத்த வான்மீகியாரை ஆதரித்த பெருமையும், சங்கீதரணசதி என்ற



சிறப்புப் பெயரைப் பெற்ற பெருமையும் மகேந்திரனுக்குண்டு". இவர் காலத்தில் இசை வளர்ந்த அளவுக்கு நாட்டியக்கலை வளர்ந்ததாகத் தெரியவில்லை.

## வரலாற்று விந்தை

முதலாம் மகேந்திரவர்மன் சிம்மவிஷ்ணு போட்ட புள்ளியிலிருந்து கோலம் போட்டவர். இவரது பேரரசுப் பெருக்க ஆசையும், நில ஆதிக்கக் கொள்கையும் சாளுக்கியர், கங்கர், சோழர், பாண்டியர், சிங்களவர் பகைமையை வளர்த்தன. இவரது ஆட்சிக் காலத்தில் தமிழ்நாடு சமஸ்கிருதமயமாக்கப்பட்டது. இப்பல்லவ மன்னர் தமிழையும், தமிழ் இலக்கியத்தையும் ஊக்குவிக்காவிட்டாலும் அக்காரியத்தை சைவ நாயன்மார்களும், வைணவ ஆழ்வார்களும் செவ்வையாகச் செய்தார்கள். முதலாம் மகேந்திரவர்மன் போரை விரும்பியதைப் போன்றே அமைதியை நேசித்தார். இவரது ஆதிக்க நடவடிக்கைகளைப் போன்றே ஆக்கப் பணிகளும் பாராட்டுக்குரியவை. தொண்டை மண்டலத்துக்குத் திறமையான நிர்வாகத்தை வகுத்துக் கொடுத்தார். வேளாண்மையை வளர்க்க தடையற்ற நீர்ப்பாசன வசதிகளுக்கு முன்னுரிமை அளித்தார். இவர் உருவாக்கிய **சித்திரமேகத்தடாகமும், மகேந்திரவாடி ஏரியும்** இதற்கான எடுத்துக்காட்டுகளாகும். பல நகரங்கள் வர்த்தக, வாணிக மையங்களாகத் திகழ்ந்தன. இம்மன்னவரின் பெயரைக் கொண்ட மகேந்திரமங்கலம், மகேந்திரப் பள்ளி, மகேந்திரவாடி ஆகியவை இதற்குச் சான்றுகளாகும். காஞ்சி கல்விக் கேந்திரமாகக் காட்சியளித்தது. முதலாம் மகேந்திரவர்மன் தன் வாழ்நாளில் கட்டிடக் கலைஞராகவும், கவிஞராகவும், இசை ஞானியாகவும், இலக்கியப் படைப்பாளியாகவும், புரவலராகவும், சித்திரகாரப்புலியாகவும் இருந்துள்ளார். இப்பலபரிமாணப் பல்லவப் பேரரசன் உண்மையிலேயே ஒரு **வரலாற்று விந்தையாகும்.**

### 6.5.3 முதலாம் நரசிம்மவர்மன், கி.பி.630–668

## பெருமைக்குரிய பரம்பரை

முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பின் பட்டத்துக்கு வந்த அவரது மகன் முதலாம் நரசிம்மவர்மன் தந்தையின் சாம்ராஜ்யக் கனவை நனவாக்கும் முயற்சியை மேற்கொண்டார். அதேபோன்று தந்தையின் கலைப்பணியை மேலும் முன்கொண்டு சென்றார். சிம்மவிஷ்ணு–முதலாம் மகேந்திரவர்மன்–முதலாம் நரசிம்மவர்மன் ஆகிய மூவரும் ஒரே பேரரசுப் பேராதிக்க நேர்கோட்டில் பயணித்தவர்கள். மூவரும் தொண்டை மண்டலத்தை–பல்லவப் பேரரசை–90 ஆண்டுகளுக்கு மேல் தொடர்ந்து ஆட்சி செய்துள்ளனர்! வரலாற்றில் மூன்று தலைமுறையினர்–தாத்தா, தந்தை, பேரன்–தொடர்ந்து திறமையுடன் ஆட்சி செய்வது அதிசயிக்கத்தக்க அத்தியாயமாகும். இவர்களது பங்களிப்புகள் பெருமைக்குரியவை.

## போர்ப்பட்டியல்

## மணிமங்கலப் போர்

முதலாம் மகேந்திரவர்மனைப் போன்றே முதலாம் நரசிம்மவர்மனும் போர்ப்பிரியர். தந்தை போட்ட போர்ப் பாதையில் விரைந்து பயணித்தவர். இவரது ஆட்சிக் காலத்தில்

நடைபெற்ற போர்களில் மணிமங்கலப் போர் வரலாற்று முக்கியத்துவமிக்கது. புள்ளலூர்ப் போரில் வெற்றிபெற முடியாத சாளுக்கிய மன்னர் இரண்டாம் புலிகேசி, அடிபட்ட புலியைப் போன்று, மீண்டும் காஞ்சியைக் கைப்பற்றும் நோக்கத்தோடு பல்லவர் நாட்டின் மீது படையெடுத்தார் (கி.பி.642). காஞ்சிக்கு 20 மைல் கிழக்கேயுள்ள மணிமங்கலத்தில் சாளுக்கியப் படையும், பல்லவப் படையும் நேருக்கு நேர் மோதின. இம்மோதலில் முதலாம் நரசிம்மவர்மனின் தலைமையிலான பல்லவர் படை இரண்டாம் புலிகேசியின் சாளுக்கியப் படையைத் தோற்கடித்தது. மீண்டும் தோல்வியடைந்த இரண்டாம் புலிகேசி வாதாபி நோக்கித் திரும்ப வேண்டியதாயிற்று.

மணிமங்கலப் போரில் தோல்வியுற்றுப் புறமுதுகிட்டுத் திரும்பிய சாளுக்கியப் படையை நரசிம்மவர்மனின் படைத்தளபதி **பரஞ்சோதி** துரத்திச் சென்று சித்தூர் மாவட்டத்தில் இடைமறித்துத் தோற்கடித்தார். அதன்பின் பல்லவர் படை சாளுக்கிய நாட்டுக்குள் நுழைந்து அதன் தலைநகர் **வாதாபி**யைக் கைப்பற்றியது. பல்லவர் படையை எதிர்க்கொண்ட இரண்டாம் புலிகேசி கொல்லப்பட்டார். வாதாபி அழிக்கப்பட்டது; கொள்ளையடிக்கப்பட்டது. கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் காஞ்சிக்கு கொண்டு வரப்பட்டன. நரசிம்மவர்மனின் வெற்றியைக் கொண்டாடும் முகத்தான் வாதாபியில் வெற்றித்தூண் எழுப்பப்பட்டது. பல்லவப் பேரரசன் **வாதாபி கொண்டான், மாமல்லன்** என்ற பட்டப் பெயர்களை சூட்டிக் கொண்டார்.[14]

## இலங்கை படையெடுப்பு

பல்லவ–சாளுக்கியப் போரின் போது இலங்கை மன்னன் **காசிபனின்** மகன் இளவரசன் **மானவர்மன்** பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனுக்கு உடனிருந்து உதவி செய்தார். இலங்கை மன்னன் காசிபன் இறந்தபின் இலங்கையில் ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டத்தின் போது இளவரசன் மானவர்மன் பல்லவ மன்னனின் உதவி நாடி காஞ்சி வந்தார். கடற்படைப் போரில் வல்லவரான மானவர்மன் இரண்டாம் புலிகேசிக்கு எதிராக நடைபெற்ற போரில் பல்லவ மன்னரின் கடற்படைக்குப் பேருதவியாக இருந்தார். அதுமட்டுமல்ல. அவரும் பல்லவப் படைத் தளபதி பரஞ்சோதியும் நரசிம்மவர்மனின் இரு போர்க் கரங்களாக இருந்து செயல்பட்டனர். எனவே, மானவர்மன் இலங்கை மன்னராக வேண்டும் என்ற எண்ணத்தில் மானவர்மனுக்கு உதவ முன்வந்தார் நரசிம்மவர்மன். செய்நன்றி மறவா பல்லவ மன்னன் தனது கடற்படையை இலங்கைக்கு அனுப்பினார். காலத்தே செய்த கடற்படை உதவியால் மானவர்மன் வாரிசுரிமைப் போராட்டத்தில் வெற்றி பெற்று இலங்கை மன்னரானார். நரசிம்மவர்ம பல்லவனின் **இலங்கை வெற்றி** ராமாயணக் கதாநாயகன் ராமனின் வெற்றியுடன் ஒப்பிடப்பட்டது![15]

## பல்லவர்–பாண்டியர் போர்

தமிழ்நாட்டின் வடக்கில் பல்லவரும், தெற்கில் பாண்டியரும் கிட்டத்தட்ட ஒரே காலத்தில் எழுச்சி பெற்றனர். சிம்மவிஷ்ணு, மகேந்திரவர்மன், நரசிம்மவர்மனைப் போன்று பாண்டியர்கள் **கடுங்கோன், மாறவர்மன் அவனிசூளாமணி, சேந்தன், அரிகேசரி மாறவர்மன்**[16] ஆகியோர் பாண்டிய நாட்டின் பலமிக்க மன்னர்களாகத் திகழ்ந்தனர். அவர்களும் தெற்குப் பகுதியில் களப்பிரர்களை வென்று ஆட்சியைக் கைப்பற்றினர். சேர



நாட்டையும் வென்று பாண்டிய மண்டலத்துடன் இணைத்துக் கொண்டனர். தென் தமிழ் நாட்டில் பாண்டியர் பலமிக்க சக்தியாக உருவெடுப்பதைப் பல்லவரும், வட தமிழ்நாட்டில் பல்லவர் பேரரசு விரிவாக்கத்தில் ஈடுபடுவதைப் பாண்டியரும் விரும்பவில்லை. தென்னாடு முழுவதையும் தங்களது மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவர வேண்டும் என்பதில் முனைப்புடன் இருந்த நரசிம்மவர்மன் தனது சமகாலத்து பாண்டிய மன்னன் அரிகேசரி மாறவர்மனை வெற்றிகண்டு பாண்டிய மண்டலத்தைத் தொண்டை மண்டலத்துடன் இணைக்கத் திட்டமிட்டார். இத்திட்டத்தை முறியடிக்க முயன்றதன் விளைவே பல்லவ–பாண்டியப் போர்.

பாண்டியப் பேரரசன் அரிகேசரி மாறவர்மன் சோழருடன் மண உறவு கொண்டிருந்தமையால், முன்னமேயே பல்லவர்களை வெறுத்த சோழர்கள் பாண்டியர் பக்கம் சேர்ந்தனர். சேர நாட்டை வென்றதால் சேரரின் ஆதரவும் அவர்களுக்கு இருந்தது. களப்பிரர்கள் முழுதுமாக முறியடிக்கப்பட்டிருந்தனர். நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசியை ஒழிப்பதில் தீவிரமாக இருந்தார். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பாண்டியன் அரிகேசரி மாறவர்மன் சோழர் மற்றும் சேரருடன் கூட்டு சேர்ந்து பல்லவருக்கு எதிராகப் போர் தொடுத்தார்! பல்லவரின் எல்லைப் படை **சங்கரமங்கை** என்ற இடத்தில் தோற்கடிக்கப்பட்டது.[17] இதையறிந்த நரசிம்மவர்மன் இரண்டாம் புலிகேசிக்கு எதிரான வாதாபிப் படையெடுப்பைத் தளபதி பரஞ்சோதியிடம் ஒப்படைத்துவிட்டு, தெற்கு நோக்கிச் சென்று பாண்டியர் படையைப் புறங்கண்டதாகக் கூறப்படுகிறது.[18] எனினும் பாண்டியர் படை பல்லவர் படையைத் தோற்கடித்ததாகப் பட்டய செப்பேட்டுச் சான்றுகள் பதிவு செய்துள்ளன.[19]

## பல்லவர்–கங்கர் போர்

கங்க குலத்தவர் ஆந்திர **இக்ஷ்வாகு** (Ikshvakus) பரம்பரையைச் சேர்ந்தவர்கள். மைசூரின் பெரும்பகுதி இவர்கள் வசம் இருந்தது. கங்கரும் சாளுக்கியரும் மண உறவு கொண்டவர்கள். இரண்டாம் புலிகேசி இறந்த பின்னர் அவரது மூன்று மகன்களில் ஆதித்தவர்மனுக்கும், விக்கிரமாதித்தனுக்கும் இடையே வாரிசுரிமைப் போராட்டம் எழுந்தது. அப்போது விக்கிரமாதித்தன் கங்க மன்னன் **துர்விநீதன்** ஆதரவைக் கோரினார். அதேபோன்று ஆதித்தவர்மன் பல்லவ மன்னன் முதலாம் நரசிம்மவர்மனின் துணையை நாடினார். ஏனெனில் சாளுக்கிய நாடு பல்லவரின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்தது! எனவே, சாளுக்கிய வாரிசுரிமைப் போராட்டத்தில் பல்லவ மன்னர் பங்கேற்க வேண்டியதாயிற்று. கங்க மன்னன் துர்விநீதன் துணையுடன் களமிறங்கிய சாளுக்கிய இளவரசன் விக்கிரமாதித்தன் வெற்றி பெற்றார். ஆதித்தவர்மனை ஆதரித்த பல்லவர் படை தோல்வியைத் தழுவியது! இத்தோல்வி வாதாபியைத் தலைநகராகக் கொண்ட சாளுக்கிய நாட்டின் மீதிருந்த பல்லவர் ஆதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததோடு, நரசிம்மவர்மனின் புகழுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. இத்தோல்வியே பல்லவப் பேரரசின் சரிவுக்கான விதையை விதைத்தது எனலாம்.

### பட்டப் பெயர்கள்

தந்தை மகேந்திரவர்மனைப் போன்றே மகன் நரசிம்மவர்மனும் போர்ப் பிரியர்; பெயர்ப் பிரியர்! இவர் **மாமல்லர், அனுப்தகாமா, அபுமுகா, குணபரா, சத்தியசந்தா, புருஷோத்தமா, சதுரமல்லா, சேதகாரி, சித்திரகாரப்புலி, சங்கீர்ணசதி, விசித்திரசித்தா** ஆகிய பட்டப் பெயர்களை சூட்டிக் கொண்டார்.

### முதலாம் நரசிம்மவர்மனின் சாதனைகள்

### துறைமுகப்பட்டினம்

தந்தை முதலாம் மகேந்திரவர்மனை முன்மாதிரியாகக் கொண்டு முன்னேறிய முதலாம் நரசிம்மவர்மன் வெளிநாட்டு வாணிகத்தை விரிவுபடுத்தவும், வெளிநாட்டு வர்த்தகக் கப்பல்கள் வசதியாகத் தங்கிச் செல்லவும் திட்டமிட்டார். இதன் விளைவாக **மல்லைத்** துறைமுகத்தைப் புதுப்பித்து, பலப்படுத்தி, விரிவுபடுத்தி **மாமல்லபுரம்** என்ற துறைமுகத்தை உருவாக்கினார். மாமல்லபுரம் உலகப் புகழ் பெற்ற வாணிப நகரமாயிற்று.

### மாமல்லபுரக் கோயில்கள்

முதலாம் நரசிம்மவர்மன் மாமல்லபுரத்தைத் துறைமுகப்பட்டனமாக மாற்றிய தோடன்றி அதை ஒரு **சிற்பக் களஞ்சியமாகவும்** உருமாற்றம் செய்தார். அவர் அங்கு குன்றுகளைக் குடைந்து குகைக்கோயில்களை (Rock-cut Temples) எழுப்பினார். இவையன்றி, மலையைச் செதுக்கியும், கோயில்களை (Cut-out Temples)க் கட்டி சிற்பப் புதுமை செய்தார். அதுமட்டுமல்ல. திறந்தவெளிப் பாறைகளில் புடைப்புச் சிற்பங்களை வடித்துப் புதிய சாதனை படைத்தார்.

முதலாம் நரசிம்மவர்மன் காலத்துக் கோயில்கள் மூவகைப்படும்: 1) குடவரைக் கோயில்கள்; 2) ஒற்றைக்கல் கோயில்கள்; 3) கற்சிற்பக் கோயில்கள். மாமல்லபுரத்தில் காணப்படும் மகிஷாசுர மண்டபம், வராக மண்டபம், திருமூர்த்தி மண்டபம் ஆகியவை குடவரைக் கோயிலுக்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். பஞ்சபாண்டவர் ரதங்களை தர்மராஜர் தேர், பீமசேனர் தேர், அர்ச்சுனன் தேர், திரௌபதி தேர், சகாதேவன் தேர் ஆகியவை ஒற்றைக்கல் கோயில்களாகும். சிற்பக் கோயிலுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு கோவர்த்தன மலையைக் கண்ணன் சுமந்து நிற்கும் காட்சியும், அர்ச்சுனன் தவக் கோலக் காட்சியுமாகும். இச்சிற்பங்கள் பாறைகள் மீது புராணக் கதைகளுக்கு சிற்ப வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவையாவும் முதலாம் நரசிம்மவர்மனின் சிறப்புமிகு சிற்பச் சாதனைகளாகும்.

### சீனப் பயணியின் சிறப்புக் குறிப்புகள்

முதலாம் நரசிம்மவர்மனின் ஆட்சிக் காலத்தில் சீனப் பயணி **யுவான் சுவாங்** (Hiuen Tsang) காஞ்சிக்கு வருகை புரிந்தார் (கி.பி.640). அவரது பயணக் குறிப்புகளில் காஞ்சிபுரம் சிறப்பிடம் பெற்றுள்ளது. சீன யாத்ரீகர் கண்ட காஞ்சி பெரிய நகரமாகவும், ஆறு மைல் சுற்றளவு கொண்ட பகுதியாகவும் காட்சியளித்தது. அந்நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட புத்த மடங்கள் இருந்தன. இவற்றில் ஆயிரத்துக்கு மேற்பட்ட புத்த துறவிகள்



வாழ்ந்தனர். இவையன்றி எண்பதுக்கும் மேற்பட்ட பிற சமயங்களைச் சேர்ந்த கோயில்களும் இருந்தன. திகம்பர சமண சமயம் செல்வாக்கு பெற்றிருந்தது. பாண்டிய நாட்டில் புத்த கோயில்கள் நலிவடைந்த நிலையில் காணப்பட்டன. "காஞ்சி மக்கள் கல்வியை நேசித்தனர். காஞ்சிக்குக் கிழக்கே இருந்த புத்த மடாலயம் நாட்டின் அறிஞர்கள் சந்திக்கும் இடமாக இருந்தது".

## 6.5.4 இரண்டாம் மகேந்திரவர்மன், கி.பி.668–670

முதலாம் நரசிம்மவர்மனுக்குப் பிறகு அரியணையேறிய அவரது மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் தந்தை விட்டுச் சென்ற பேரரசுப் பளுவை சுமக்க வேண்டியதாயிற்று. இச்சுமையோடு சாளுக்கியப் பகையும் சேர்ந்து கொண்டது! தந்தை விதைத்த வினையின் விளைவை மகன் எதிர்கொண்டார். பழி தீர்த்துக் கொள்ள தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசியின் மகன் விக்கிரமாதித்தன் பெரும் படையுடன் வந்து பல்லவ நாட்டின் மீது இடியென விழுந்தார். இப்போரில் இரண்டாம் மகேந்திரவர்மன் உயிரிழந்தார். இரண்டாண்டு காலமே ஆட்சி செய்த இரண்டாம் மகேந்திரவர்மன் காலத்தில் பல்லவப் பேரரசு சரிவுப் பாதையில் பயணிக்கத் துவங்கியது.

## 6.5.5 முதலாம் பரமேஸ்வரவர்மன், கி.பி.670–680

### பல்லவ–சாளுக்கியப் போர்

அகால மரணமடைந்த இரண்டாம் மகேந்திரவர்மனின் மகன் முதலாம் பரமேஸ்வரவர்மன் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தனின் பழிவாங்கும் படையெடுப்பைத் தொடர்ந்து சந்திக்க வேண்டியதாயிற்று. காஞ்சியைக் கைப்பற்றும் வெறியுடன் படையெடுத்து வந்த விக்கிரமாதித்தன் படை **மல்லியூர்** வழியாக முன்னேறி காஞ்சிக்குள் புகுந்தது. காஞ்சி கைப்பற்றப்பட்டது. இப்போரில் பல்லவ மன்னன் தோல்வியுற்றுப் பின்வாங்கினார். வெற்றிகண்ட சாளுக்கியப் படை திருச்சி வரை முன்னேறி உறையூரில் முற்றுகையிட்டது (கி.பி.674).

இதற்கிடையே பின்வாங்கிய முதலாம் பரமேஸ்வரவர்மன் பெரும்படையுடன் வந்து **விளிந்தைப் போரில்** (தும்கூர் மாவட்டம்) விக்கிரமனைத் தோற்கடித்து இழந்த பகுதிகளைத் திரும்பப் பெற்றார். அதோடு நிற்காமல் சாளுக்கிய மன்னருக்கு ஆதரவளித்த கங்க மன்னன் **பூவிக்கிரமனைத்** தண்டிப்பதற்காக கங்க நாட்டின் மீது படையெடுத்துச் சென்றார். ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டமல்லவா? கங்க மன்னனைத் தண்டிக்கச் சென்ற பல்லவ மன்னன் தோல்வியுற்றுத் திரும்பினார்.[20]

பரமேஸ்வரவர்மன் மனச் சோர்வடையாமல் புதிய உத்தியைக் கையாண்டு தமிழ் நாட்டிலிருந்த சாளுக்கியப் படையின் கவனத்தைத் திசைதிருப்புவதற்காக ஒரு பல்லவப் படையை சாளுக்கிய நாட்டுக்கு அனுப்பினார். அப்படை ஏராளமான செல்வத்தைக் கைப்பற்றிக் கொண்டு காஞ்சி திரும்பியது. இதற்கிடையே பரமேஸ்வரவர்மன் திருச்சி மாவட்டத்தில் **பெருவளநல்லூர் போரில்** விக்கிரமாதித்தனைத் தோற்கடித்தார். நெல்லூர்–குண்டூர் வரை இந்த நாடு முழுவதும் பல்லவர் ஆதிக்கத்தின் கீழ் வந்தது.[21]

### பல்லவ–பாண்டிய போர்

நீருபூத்த நெருப்பாக இருந்துவந்த பாண்டியர் பகை முதலாம் பரமேஸ்வரவர்மன் காலத்தில் தீயாகப் பற்றிக் கொண்டது. பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்சடையன் (கி.பி.765–790) கங்கரின் உதவியோடு பல்லவ நாட்டின் மீது படையெடுத்தார். பல்லவப் படையை புதுக்கோட்டை மாவட்டத்தில் **நெல்மணி** என்ற இடத்தில் தோற்கடித்தார்.[22]

பத்தாண்டு காலம் ஆட்சி செய்த முதலாம் பரமேஸ்வரவர்மன் பாரம்பரிய வழக்கப்படி **ஏகமல்லன், உக்ரதத்தன், வித்யாவினிதன்** போன்ற பல பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டார். இவர் சிறந்த சிவபக்தர். இவரிடம் **வீரத்தைவிட தெய்வபக்தி மேலோங்கி இருந்தது.** பல அறப்பணிகளையும், கோயில் திருப்பணிகளையும் செய்தார். மாமல்லபுரக் கலைப்பணிகள் நின்றுவிடாமல் பார்த்துக் கொண்டார்! இருப்பினும் சரிவுப் பாதையில் போய்க்கொண்டிருந்த பல்லவப் பேரரசுத் தேரை பரமேஸ்வரவர்மனால் தடுத்து நிறுத்த முடியவில்லை!!

## 6.5.6 இரண்டாம் நரசிம்மவர்மன், கி.பி.680–720

### அமைதிக் கொள்கை

முதலாம் பரமேஸ்வரவர்மனுக்குப் பிறகு அரியணையேறிய அவரது மகன் **இரண்டாம் நரசிம்மவர்மன் (ராஜசிம்மன்)** 40 ஆண்டு காலம் அமைதியாக ஆட்சி செய்தார்! இவர் இவருக்கு முன்பிருந்த பல்லவப் பேரரசர்கள் பின்பற்றிய போர்க் கொள்கையினின்றும் மாறுபட்டு **அமைதிக் கொள்கை** (Policy of Peace)யைப் பின்பற்றினார். இவர் பழிவாங்கும் போக்கைக் கைவிட்டு பிறநாடுகளுடன் நட்புறவுடன் இருப்பதையே விரும்பினார். பரம்பரைப் பகைவர்களான சாளுக்கியருக்கும், பாண்டியருக்கும் சினமூட்டக்கூடிய செயல்கள் எதையும் செய்யவில்லை! சாளுக்கியரும், பாண்டியரும் பல்லவ நாட்டின் மீது படையெடுக்கவில்லை!! பல்லவப் பேரரசர்கள் பின்பற்றிய விரிவாதிக்கக் கொள்கைக்கு விடைகொடுத்தார் இரண்டாம் நரசிம்மவர்மன். இதற்குப் பதில் பக்திமார்க்கக் கொள்கையைப் பின்பற்றினார். எனவே, இவரது ஆட்சிக்காலம் அமைதிக் காலமாகவே இருந்தது!

### அமைதிக்கால சாதனைகள்

நாட்டில் அமைதி நிலவும் போது கல்வியும், கலையும் ஊக்கமும் ஆக்கமும் பெறும். முதலாம் மகேந்திரவர்மனுக்கும், முதலாம் நரசிம்மவர்மனுக்கும் இருந்த **கலைக்குணம்** இரண்டாம் நரசிம்மவர்மனிடமும் இருந்தது. காஞ்சி கைலாசநாதர் கோயில் இம்மன்னரால் கட்டப்பட்டதாகும். இக்கோயிலைக் கட்டுவதற்கு இவரது மனைவி **ராணி ரங்கபதாகா** உறுதுணையாக இருந்தார்.[23] அதேபோன்று மாமல்லபுர கடற்கரைக் கோயிலும் இவரது ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்டதாகும். இவை இரண்டையும் தவிர இப்பல்லவப் பேரரசர் சில சிற்பப் புதுமைகளைப் புகுத்தினார். இப்புதுமை **'ராஜசிம்மன் பாணி'** என்று சிற்பக் கலைஞர்களால் அழைக்கப்படுகிறது.

நரசிம்மவர்மன் ராஜசிம்மன் ஆட்சிக் காலத்தில் கலை வளர்ச்சியைப் போன்றே கல்வியும் வளர்ச்சியடைந்தது. காஞ்சி **காதிகா** (கடிகை) புதுப்பிக்கப்பட்டு, புத்துயிர்



பெற்றது. காதிகா என்பது சமஸ்கிருத உயர்கல்வி நிறுவனம். இதில் நான்மறைக் கல்வி கற்பிக்கப்பட்டது. இதனால் பிராமணர்கள் பெரிதும் பயன்பெற்றனர். சமஸ்கிருதக் கல்வி ஊக்குவிக்கப்பட்டது.

நரசிம்மவர்மனின் ஆட்சிக்காலத்தில் சமஸ்கிருத இலக்கியம் வளர்ச்சி பெற்றது. இவர் சமஸ்கிருதப் புலவர்களுக்கும், பண்டிதர்களுக்கும் புரவலராக இருந்தார். சமஸ்கிருத இலக்கியப் படைப்பாளியும், சொல்லங்காரத்தலை மேதையுமான **தண்டின்** (Dandin) இவரது அரசவையில் பல ஆண்டுகள் இருந்ததாகக் கூறப்படுகிறது. இவர் எழுதிய **காவியதர்ஷினி** என்ற இலக்கண நூலின் வழிநூலே இன்று தமிழில் உள்ள **தண்டியலங்காரம்** ஆகும்.[24] **பாஷர்** எழுதிய நாடகங்கள் காஞ்சி நாடக மேடையில் நடிப்பதற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கப்பட்டன.[25] நரசிம்மவர்மனின் பட்டப் பெயர்களான **சங்கரபக்தர், வத்யவித்யாதரா, ஆகமப்பிரியா** ஆகியவை அவரது பல பரிமாணத் திறமைகளைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.

ராஜசிம்மன் என்ற இரண்டாம் நரசிம்மவர்மன் சிறந்த சிவபக்தர். இவரது ஆட்சிக் காலத்தில்தான் சைவ, வைணவ சமய மறுமலர்ச்சி ஏற்பட்டது. பக்தி இலக்கியம் தமிழ் நாட்டில் வேர்பிடித்து வளர்ந்தது. சைவ சமய நாயன்மார்களும், வைணவ சமய ஆழ்வார்களும் தமிழ்நாடெங்கும் சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு தங்களது சமயங்களைப் பரப்பினர். பக்தி பரவியதைப் போன்றே சாதி வேறுபாடுகளும் அதிகரித்தன.

பல்லவ நாட்டில் பக்தி பரவியதைப் போன்றே உள்நாட்டு வர்த்தகமும், வெளிநாட்டு வாணிபமும் அதிகரித்தன. குறிப்பாக வெளிநாடுகளுடனான வாணிபத் தொடர்பு ஊக்குவிக்கப்பட்டது. சீனாவுடனான நட்புறவும், நல்லுறவும் புதுபலம் பெற்றன. இந்நல்லுறவின் வெளிப்பாடே நரசிம்மவர்மன் சீனப் பேரரசுக்கு நாகையில் புத்த விகாரம் கட்டிக் கொள்வதற்கு அனுமதி அளித்ததாகும். சீனாவுக்குத் தூதுக்குழு அனுப்பப்பட்டது.[26] இவற்றின் விளைவாக கடல் வாணிபம் செழிப்புற்றது.

### அமைதிக் கொள்கையின் விலை ?

இரண்டாம் நரசிம்மவர்மன் ராஜசிம்மன் பின்பற்றிய அமைதிக் கொள்கையால் கல்வி, கலை, சமயம், இலக்கியம், வாணிபம் வெகுவாக வளர்ந்தன. ஆனால் பல்லவப் பேரரசு பலவீனமாயிற்று! கடலுக்கடியில் மறைந்து கிடக்கும் பனிப்பாறை போன்று சாளுக்கியப் பரம்பரைப் பகையும், பொறாமையும் நரசிம்மவர்மனின் ஆடசிக்கால இறுதியில் நாட்டின் அமைதியைக் கெடுத்தது. நரசிம்மவர்மன் அமைதிக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும் பரம்பரைப் பகைவர்களான சாளுக்கியர் போர்க் கொள்கையைப் புறக்கணிக்கத் தயாராயில்லை! சாளுக்கிய இளவரசர் இரண்டாம் விக்கிரமாதித்தன் பல்லவ நாட்டின் மீது படையெடுத்தார். இப்படையெடுப்பின்போது நரசிம்மவர்மனின் மூத்த மகன் மூன்றாம் மகேந்திரன் கொல்லப்பட்டான்! தந்தையின் அமைதிக் கொள்கைக்கு மகன் பலியானான்!! அமைதிக் கொள்கையைப் பின்பற்றிக் கொண்டே படைபலத்தையும் வலுப்படுத்த வேண்டும் என்ற ராஜதந்திர உத்தியை உதாசீனப்படுத்தியதால் இரண்டாம் நரசிம்மவர்மன் தன் வாரிசை விலையாகக் கொடுக்க நேரிட்டது.

### 6.5.7 இரண்டாம் பரமேஸ்வரவர்மன், கி.பி.720–730

இரண்டாம் நரசிம்மவர்மனுக்குப் பிறகு ஆட்சிப் பொறுப்பேற்ற அவரது இரண்டாவது மகன் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் பத்தாண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தார். வரலாற்றிலிருந்த எந்தப் பாடத்தையும் கற்றுக் கொள்ளாத இவர் தந்தையைப் போன்றே அமைதிக் கொள்கை மூலம் பல்லவப் பேரரசைக் கட்டிக்காக்க முற்பட்டார்! **திருவாடி**யில் சிவன் கோயில் கட்டுவதில் தீவிரமாக இருந்தார்! இவரது இயலாமையைப் பயன்படுத்திக் கொண்ட சாளுக்கிய மன்னர் இரண்டாம் விக்கிரமாதித்தன் கங்க நாட்டு அரசன் துர்விநீதனின் துணையுடன் பல்லவ நாட்டைத் தாக்கினார். இரண்டாம் பரமேஸ்வரவர்மன் தோற்கடிக்கப்பட்டார்; போர்க்களத்திலேயே உயிர் துறந்தார். **பல்லவ நாடு சாளுக்கியரின் மேலாதிக்கத்தின்கீழ் வந்தது!** பல்லவப் பேரரசு மலை, மலை எலியைப் போலாயிற்று!!

#### வம்சாவளி மாற்றம்

போர்க்களத்தில் மாண்ட இரண்டாம் பரமேஸ்வரவர்மனுக்கு வாரிசில்லை. எனவே, பல்லவப் பேரரசைத் தோற்றுவித்த சிம்மவிஷ்ணுவின் தம்பி **பீமவர்மன்** வழிவந்த **இரண்யவர்மனின்** மகன் **இரண்டாம் நந்திவர்மன்** பல்லவ மன்னரானார்![27] இது **இடையுறவு வம்சாவளி** (Collateral Branch)யாகும். இந்த இடையுறவு இடைச்செருகலைப் பிற இளவரசர்கள் எதிர்த்தனர். இவர்களின் எதிர்ப்புக்கிடையே அரசுப் பொறுப்பேற்றார் **இரண்டாம் நந்திவர்மன்.** இவரது வழிவந்தோர் **பிற்காலப் பல்லவர்கள்** என்று அழைக்கப் படுகின்றனர்.

### 6.5.8 இரண்டாம் நந்திவர்மன், கி.பி.730–795

#### வாரிசுரிமைப் போர்

இரண்டாம் நந்திவர்மன் முடிசூட்டிக் கொள்வதற்கு முன் வாரிசுரிமைப் போராட்டத்தை சந்திக்க வேண்டியிருந்தது. இதற்குக் காரணம் இவர் இரண்டாம் பரமேஸ்வரவர்மனின் நேரடி வாரிசில்லாததுதான். பதவிப் பறிப்பாளராகக் கருதப்பட்டார். **பல்லவாடி அரையர், சித்ரமாயா** ஆகியோர் இரண்டாம் நந்திவர்மனை எதிர்த்துப் போராடினர். இப்போராட்டத்தில் பல்லவாடி அரையர் கொல்லப்பட்டார். சித்ரமாயாவுக்கு மக்கள் ஆதரவு இருந்தது. அவரைப் பாண்டிய மன்னன் மாறவர்மன் முதலாம் ராஜசிம்மன் ஆதரித்தார். நந்திவர்மன் பதுங்கியிருந்த நந்திகிராமம் முற்றுகையிடப்பட்டது. பல்லவ தளபதி உதயசந்திரன் உரிய நேரத்தில் நந்திகிராம முற்றுகையிலிருந்து நந்திவர்மனை விடுவித்தார்![28] பின்னர் சித்ரமாயா உதயசந்திரனால் கொல்லப்பட்டார். இரண்டாம் நந்திவர்மன் பல்லவ மன்னராக உறுதிசெய்யப்பட்டார்.

#### பல்லவர்–ராஷ்டிரகூடர் போர்

புதிதாகப் பதவிப் பொறுப்பேற்ற இரண்டாம் நந்திவர்மன் சாளுக்கியரது எதிர்ப்போடு ராஷ்டிரக்கூடரின் எதிர்ப்பையும் எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று. இரண்டாம் நந்திவர்மனின் சமகாலத்து ராஷ்டிரகூட மன்னனான **தண்டிதுர்க்கா** (தண்டிவர்மன்) தனது ஆதிக்கத்தை அண்டை நாட்டுக்கு வெளியேயும் விரிவுபடுத்த



விரும்பினார். எனவே, அவர் பல்லவர் நாட்டின் மீது படையெடுத்து வந்து காஞ்சியைக் கைப்பற்றிக் கொண்டார். இந்த எதிர்பாரா நெருக்கடியிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இரண்டாம் நந்திவர்மன் மணஉறவு ராஜதந்திரத்தை (Matrimonial Diplomacy)க் கையாண்டார்! பல்லவ மன்னன் ராஷ்டிரகூட மன்னனின் மகளான ரேவாவை மணந்து கொண்டார். இதன் மூலம் பல்லவரின் எதிரியாக இருந்த ராஷ்டிரகூடரை உறவினராக்கிக் கொண்டார்! இதன் விளைவாக இரண்டாம் நந்திவர்மனின் செல்வாக்கு உயர்ந்தது.

#### பல்லவ–சாளுக்கியப் போர்

பல்லவ–ராஷ்டிரகூட உறவால் பலம் பெற்ற பல்லவ மன்னனுக்கு எதிராக சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தன் கங்க அரசன் ஸ்ரீபுருஷனுடன் சேர்ந்து பல்லவர் நாட்டின் மீது படையெடுத்தார். இக்கூட்டுப்படை காஞ்சியைக் கைப்பற்றியது (கி.பி.740).[29] இரண்டாம் நந்திவர்மனும் அவரது தளபதி உதயசந்திரனும் ராஷ்டிரகூட நாட்டில் தஞ்சம் புகுந்தனர். பின்னர் ராஷ்டிரகூடர் உதவியுடன் சாளுக்கியரைத் தோற்கடித்து காஞ்சியை மீட்டனர். காஞ்சியிலிருந்து பின்வாங்கிய இரண்டாம் விக்கிரமன் பின்னர் தன் மகன் **கீர்த்திவர்மன்** தலைமையில் ஒரு படையை அனுப்பி பல்லவ நாட்டிலிருந்து தங்க நகைகளையும் யானைகளையும் கைப்பற்றிச் சென்றார். இரண்டாவது நந்திவர்மனால் இத்தண்டிப்புப் படையெடுப்பைத் தடுக்க முடியவில்லை!

#### பல்லவ–கங்கர் போர்

சாளுக்கிய மன்னர் இரண்டாம் விக்கிரமாதித்தன் காஞ்சியைக் கைப்பற்றுவதற்கு உதவி செய்த கங்க நாட்டு மன்னன் ஸ்ரீபுருஷனைத் தண்டிக்கும் பொருட்டு இரண்டாம் நந்திவர்மன் **கங்கவாடி** மீது படையெடுத்தார். அங்கு சேர்த்து வைக்கப்பட்டிருந்த செல்வம் கைப்பற்றப்பட்டது. முதலாம் பரமேஸ்வரவர்மன் இழந்த **உக்கிரோதயம்** என்ற விலை மதிப்பற்ற கழுத்தணி மீட்கப்பட்டது. பல கங்க நாட்டுப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டு, அவை பல்லவப் படையெடுப்புக்கு ஆதரவாக இருந்த குறுநில மன்னர் **ஜெயவர்மனுக்குக்** கொடுக்கப்பட்டன (கி.பி.775). உலர்த் தேங்காய் வழிப் பிள்ளையாருக்கு உடைக்கப்பட்டது. அக்காலத்தில் பிறநாட்டின் மீது படையெடுப்பது அரசாங்க வருவாயை அதிகரிக்கும் உத்தியாகவும் கருதப்பட்டது!

#### பல்லவர்–பாண்டியர் போர்

வடக்கில் சாளுக்கியரும், தெற்கில் பாண்டியரும் இரண்டாம் நந்திவர்மனுக்கு இரட்டைச் சவால்களாக இருந்தனர். சாளுக்கியர் சரிவுப் பாதையில் போய்க் கொண்டிருக்கையில் பாண்டியர் வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்தனர். இரண்டாம் நந்திவர்மன் பாண்டியரது எழுச்சியைத் தடுக்கும் பொருட்டு சேர, கொங்கு, தகடூர் அரசர்களுடன் **ராணுவக்கூட்டு** சேர்ந்து பாண்டிய மன்னன் **நெடுஞ்சடையனை** (வரகுண மகாராஜா) எதிர்த்தார். பல்லவர், பாண்டியர் படைகள் காவிரியின் தென்கரையில் உள்ள **பெண்ணகரத்தில்** சந்தித்தன. **பெண்ணகரப் போரில்** பல்லவர் படை தோற்கடிக்கப்பட்டது. நந்திவர்மனின் நோக்கம் நிறைவேறவில்லை. அவரது பேராசை நிராசையாயிற்று.

பிராமணர்களுக்கு தேவதான கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டன. இப்பல்லவ மன்னனை **'நன்னெறி வளர்த்தான்'** என்று புகழ்ந்து பாடினார் சேக்கிழார்.

## 6.5.11 நிருபதுங்கவர்மன், கி.பி.866–875

### வாரிசுரிமைப் போராட்டம்

மூன்றாம் நந்திவர்மன் இறந்தபின் பல்லவ நாட்டில் வாரிசுரிமைப் போராட்டம் வெடித்தது. அரசியல் நெருக்கடி ஏற்பட்டது. மூன்றாம் நந்திவர்மனின் மகன் நிருபதுங்கன் முதல் மனைவி **சங்காவின்** மகன். பல்லவ மன்னரானார். இவர் நந்திவர்மனின் இரண்டாவது மனைவி **கண்டன் மாறம்பாவையின்** மகன் **அபராஜிதன்.** மாற்றாந்தாயின் மகன் அபராஜிதன் வாரிசுரிமை கோரினார். இப்போராட்டத்தில் இரண்டாம் வரகுண பாண்டியன் நிருபதுங்கனை ஆதரித்தார். இதற்கு மாறாக சோழ மன்னரும், மேற்கு கங்க அரசரும் அபராஜிதனுக்கு ஆதரவளித்தனர். குழம்பிய குட்டையில் பாண்டியரும், சோழரும் மீன்பிடிக்க முயன்றனர்!

### திருபெரும்புயம் போர்

பல்லவருக்கிடையேயான வாரிசுரிமைப் போராட்டம் போராக உருவெடுத்தது. இப்போர் கும்பகோணத்துக்கருகே அரிசில் ஆற்றங்கரையில் **திருபெரும்புயம்** என்ற இடத்தில் நடைபெற்றது. இப்போரில் **நிருபதுங்கன் வெற்றி பெற்றார்.** தோல்வியுற்ற **வரகுண பாண்டியன்** போர்க்களத்திலிருந்து தப்பிச் சென்றார். கங்க மன்னன் **முதலாம் பிரதிவிபதி** கொல்லப்பட்டார். வெற்றிவாகை சூடிய நிருபதுங்கன் அரச பதவியைத் தக்க வைத்துக் கொண்டார். இவரது ஆட்சிக் காலத்தில் வேதங்களையும், சாஸ்திரங்களையும் சொல்லிக் கொடுத்த பள்ளிகளுக்குக் கிராமங்கள் கொடையாக வழங்கப்பட்டன.

## 6.5.12 அபராஜிதன், கி.பி.875–893

நிருபதுங்கன் இறந்தபின் அவரது மகன் அபராஜிதன் சோழர்களின் துணையோடு ஆட்சிப் பொறுப்பேற்றார். பெயரளவுக்குப் பல்லவ மன்னராக இருந்தார். **முதலாம் ஆதித்த சோழன்** மன்னரானபின் சோழ மண்டலத்தைப் பல்லவர் பிடியிலிருந்து விடுவிக்க முடிவு செய்தார். அபராஜிதனின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்டு பல்லவர் நாட்டின் மீது படையெடுத்தார். போர்க்களத்தில் அபராஜிதன் யானை மீது ஏறும் போது வெட்டிக் கொல்லப்பட்டார்.[34] பல்லவர் நாடு சோழ நாட்டின் பகுதியாயிற்று. **தமிழ் நாட்டில் பல்லவர் ஆட்சி முடிவுக்கு வந்தது.**

### மேற்கோள் நூற்பட்டியல்


1. K.A.Nilakanda Sastri, A History of South India, Oxford, 1958, p.97.
2. காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோயிலில் உள்ள ஒரு சிற்பத்தில் காணப்படும் இரண்டாம் நந்திவர்மன் சிலையில் சூடியுள்ள மணிமகுடம் பாரசீக மன்னரின் கிரீடம் போல் உள்ளது என்று கூறப்படுகிறது!
3. R.Sathianathiar, History of India I, Madras, 1952, p.260.

இக்கோட்பாட்டை முன்மொழிந்தவர் டி.சி.சர்க்கார்.

**பாண்டியர் வம்சாவளி**

கடுங்கோன்
↓
மாறவர்மன் அவனி சூளாமணி
↓
சடையவர்மன் செழியன் சேந்தன்
↓
மாறவர்மன் அவனி கேசரி
↓
கோச்சடையன் ரணதீரன்
↓
மாறவர்மன் ராஜசிம்மன் I
↓
பராந்தக நெடுஞ்சடையன்
↓
ராஜசிம்மன் II
↓
வரகுண மகாராஜன்
↓
ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன்
↓
வரகுணவர்மன் II | பராந்தகப் பாண்டியன்
↓ (பராந்தகப் பாண்டியன்)
ராஜசிம்மன் III
↓
வீரபாண்டியன்

பகுதி – VIII : சோழர் காலம்

# 10. சோழப் பேரரசு I, கி.பி.850–985

## விஜயலாயன் வழி வந்தோர்

> ***சோழப் பேரரசின் கீழ் ஆட்சி முறையிலும், இலக்கிய–கலைச் சாதனைகளிலும் தமிழர் நாகரிகம் மிக உயர்ந்த நிலையை எட்டியது.***
>
> ***– கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி***

### 10.1 சோழர் பரம்பரை

பாண்டியர்களைப் போன்றே சோழர்களும் பழம் பாரம்பரியமிக்கவர்கள். சங்க காலச் சோழர்கள் **கிள்ளி, வளவன், செம்பியன்** போன்ற பெயர்களால் அறியப்பட்டார்கள். கிள்ளி என்பதன் வேர்ச்சொல் **கிள்;** அதாவது **கிள்ளுதல்/தோண்டுதல்** என்பதாகும். நிலத்தை உழுது உழைப்போர் சோழர்கள். **வளம்** அல்லது **வளமை** என்ற சொல்லிலிருந்து வந்தது வளவன். சோழர்கள் வளமோடு வாழ்ந்தவர்கள். **செம்பியன்** என்ற சொல் அடைக்கலமடைந்த புறாவுக்காகத் தன் உடலைத் தியாகம் செய்த புராண மன்னன் **சிபி**யின் வழிவந்தோர் என்பதைக் குறிக்கிறது. **உழைத்தல், வளமோடு வாழ்தல், விட்டுக் கொடுத்தல்** அல்லது தியாகம் செய்தல் ஆகியவை பண்டைச் சோழர்களின் பாரம்பரியப் பண்புகளாகக் கருதப்பட்டன.

### 10.2 தெலுங்கு சோழர்கள்

#### 10.2.1 பல கிளைகள்

சங்க காலத்தில் கொடி கட்டிப் பறந்த சோழர்கள் களப்பிரர் காலத்தில் கொடியின்றி, குடியின்றி, பட்டப் பெயர்களின்றி வரலாற்றிலிருந்து மறைந்துவிட்டனர்! மறைந்து போன சோழர்கள் பல்லவர்–பாண்டியர் காலத்தில் தங்களைப் புதுப்பித்துக் கொண்டு உறையூர் பகுதியில் வாழ்ந்தனர். அவர்களுள் பல்லவர்–பாண்டியர் மேலாதிக்கத்துக்கு உட்பட விரும்பாத ஒரு பகுதியினர் ஆந்திர அல்லது தெலுங்கு தேசத்துக்குச் சென்று குடியேறினர். குடியேறிய சோழர்கள் (சோடர்கள்) பல கிளைகளாகப் பிரிந்து ஆந்தி நாட்டின் சில பகுதிகளில் ஆட்சி செய்தனர்! இவர்கள் **வேலநதிச் சோழர்கள், ரேணாண்டுச் சோழர்கள், பொட்டாபி சோழர்கள், கோனிதேனா சோழர்கள், நெல்லூர் தெலுங்கு சோழர்கள்** என்று அழைக்கப்பட்டனர்.[1]

#### 10.2.2 ரேணாண்டு சோழர்கள்

சோழர்கள் தெலுங்கில் **சோடர்கள்** என்று அழைக்கப்பட்டனர். தெலுங்கு சோழர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் **ரேநாண்டு சோழர்கள்.**[2] இச்சோழர்கள் **கடப்பா** பகுதியை ஆட்சி செய்தனர். ரேநாண்டுச் சோழ மன்னர்களில் குறிப்பிடத்தக்கவர் **புண்ணியகுமாரன்.** துவக்கத்தில் சுதந்திரமாகச் செயல்பட்ட இவர்கள் பின்னர் கிழக்கு

சாளுக்கியரது ஆதிக்கத்தின் கீழ் வந்தனர்![3] தெலுங்கு சோழர்கள் தெலுங்கர் வாழ்வியலுக்கும், இலக்கியத்துக்கும் ஆற்றிய தொண்டு நினைவு கூறத்தக்கது.

## 10.3 வரலாற்றுச் சான்றுகள்

### 10.3.1 கல்வெட்டுச் சான்றுகள்

சோழர் காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் உள்ளன. இவை தொகுத்து வெளியிடப்பட்டுள்ளன. பெரும்பான்மையான கல்வெட்டுகள் மன்னர்களும், குறுநில மன்னர்களும், இளவரசர்களும் கொடுத்த கொடைகள் பற்றிய தகவல்களைத் தருகின்றன. கொடையாளர்களின் வீரச் செயல்களும், சாதனைகளும், பட்டப் பெயர்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. பெரும்பான்மையான கல்வெட்டுகள் தமிழிலும், எஞ்சியவை தமிழ் மற்றும் வடமொழியிலும் உள்ளன. இக்கல்வெட்டுகளில் முதலாம் பராந்தகனின் **உத்திரமேரூர்க் கல்வெட்டு**, முதலாம் ராஜராஜனின் **தஞ்சாவூர் கல்வெட்டு**, வீரராஜேந்திரனின் திருமுக்கூடல், கன்னியாகுமரி கல்வெட்டுகள் குறிப்பிடத்தக்கவை.

### 10.3.2 செப்பேட்டுச் சான்றுகள்

கல்வெட்டுச் சான்றுகளைப் போன்றே செப்பேட்டுச் சான்றுகளும் சோழ மன்னர்களைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்துள்ளன. இவாது **திருவாலங்காட்டுச் செப்பேடுகளும், கரந்தைச் செப்பேடுகளும்** குறிப்பிடத்தக்கவை. இதேபோன்று **உத்தமசோழனின் செப்பேடுகள்,** சுந்தர சோழனின் **அன்பின் பட்டயங்கள்,** முதலாம் குலோத்துங்கனின் **வேடன் செப்பேடுகள்** வரலாற்றுச் சிறப்புமிக்கவை. இவற்றோடு சோழர் **நினைவுச் சின்னங்கள்** தரும் தகவல்கள் சோழர் கால பண்பாட்டைப் பற்றி அறிந்து கொள்ள உதவக்கூடியவை.

### 10.3.3 மெய்க்கீர்த்தி

**முதலாம் ராஜராஜன் தான்** முதன் முதலில் மெய்க்கீர்த்தி எழுதும் வழக்கத்தை ஏற்படுத்தியவர். மெய்க்கீர்த்தி **மன்னரின் உலகியல் சாதனைகள்** பற்றியவை. மெய்க்கீர்த்திகள் **கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டன.** இவை மன்னரின் **போர் வெற்றிகளை** முறைப்படுத்திக் கூறுகின்றன. மெய்க்கீர்த்திகள் மன்னனின் குறிப்பிடத்தக்க நிகழ்வுகளை முறைப்படுத்திக் கூறுகின்றன. இவை அக்கால வரலாற்றை அறிந்து கொள்ள வழிகாட்டுபவையாக உள்ளன.

### 10.3.4 இலக்கியச் சான்றுகள்

சோழர் காலத்து அரசியல், சமுதாய, சமய, பண்பாடு பற்றித் தெரிந்து கொள்வதற்குப் போதிய இலக்கியச் சான்றுகள் உள்ளன. இவற்றுள் முக்கியமானவை: சேக்கிழாரின் **பெரிய புராணம்;** ஜெயங்கொண்டாரின் **கலிங்கத்துப்பரணி;** ஒட்டக்கூத்தரின் **மூவருலா;** குலோத்துங்க சோழனின் **பிள்ளைத் தமிழ், தக்காயபரணி;** அமிர்தசாகரரின் **யாப்பெருங்கலக்காரிகை;** புத்தமித்திரரின் **வீரசோழியம், தண்டியலங்காரம்;** பில்கணரின் **விக்கிரமாங்கசரிதம்; சோழ வம்ச சரிதம்; ஸ்ரீரங்கம் கோயிலொழுகு, குருபரம்பரை, திவ்யசூரியசரிதம்** போன்ற வைணவ நூல்கள்; **கொங்கு தேச ராஜாக்கள்; பிரகதீஸ்வர மகாத்மியம்** (தன்டை நூல்). இவற்றோடு இலங்கை மற்றும் சீன இலக்கிய ஆதாரங்கள் ஓரளவு பயனுடையவை. கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியின் 'சோழர்கள்' சிறந்த இரண்டாம் நிலை ஆதார நூலாகும்.



### 10.3.5 நாணயச் சான்றுகள்

சோழர் காலத்தில் வெளியிடப்பட்ட பொன், வெள்ளி மற்றும் செப்புக் காசுகள் நிறைய கிடைத்துள்ளன. இவற்றில் கிடைக்கும் தகவல்கள் அக்கால வர்த்தகம் பற்றி அறிய உதவக்கூடியவை.

## 10.4 தஞ்சாவூர் சோழர்கள்

களப்பிரர் காலத்தில் காணாமல் போன சோழர்கள் பின்னர் பல்லவர்–பாண்டியர் காலத்தில் **உறையூரில்** தலைதூக்கினர். சோழர் குலம் மறைந்ததேயன்றி மடியவில்லை. சிறுசிறு பகுதிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருந்தனர். அதாவது சிறுநிலத் தலைவர்களாகச் செயல்பட்டனர். இவர்கள் பல்லவர்–பாண்டியர் மேலாதிக்கங்களுக்குக் கீழ்ப்பணிந்து அவர்களுக்குப் பகடைக் காய்களாகப் பயன்பட்டனர். அம்மன்னர்களுக்குக் கீழ் பணிந்தும், அவசியமாயின் அவர்களோடு கூட்டு சேர்ந்தும் தங்களது நிலையைத் தக்க வைத்துக் கொண்டனர்.

தஞ்சை சோழர்கள் பிரபல அரச குலங்களோடு மண உறவு வைத்துக் கொண்டு தங்களது செல்வாக்கைப் பெருக்கிக் கொண்டனர். தங்களது பாரம்பரியப் பெருமையையும், அடையாளத்தையும் உறுதிப்படுத்திக் கொண்டனர். பிரதிகூலமான சூழலையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். உறையூர் சோழர்கள் காலம் கனிவதற்காகக் காத்திருந்தனர். ஆறு நூற்றாண்டு காலம் சோழர் குல ஆட்சி இல்லையேயொழிய அவர்களது குடும்பம் குலையவில்லை.[4] "பதுங்கிய புலி பாய்வதற்காகக் காத்திருப்பது போல் ஒதுங்கியிருந்தனர்".[5] பதுங்கியிருந்த புலி உரிய நேரத்தில் பாய்ந்து இழந்த சோழர்குலப் பெருமையை மீட்டது. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மீட்சியின் முதல் மன்னன் **விஜயலாயன்.** விஜயலாயன் வழிவந்தோர் **தஞ்சாவூர் சோழர்கள்** எனப்பட்டனர்.

### 10.4.1 விஜயலாயன், 850–870

ஒன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சோழர்களின் எழுச்சிக்குக் காரணமாக இருந்தவர் **விஜயலாயன்.** காலம் கனிவதற்காகக் காத்துக் கொண்டிருந்த **விஜயலாயன்** பல்லவர்களுக்கும், பாண்டியர்களுக்குமிடையே இருந்த பகைமையைப் பயன்படுத்திக் கொண்டு குறுநில மன்னன் என்ற குகையைவிட்டு வெளியே வந்து சோழர்களை விடுதலை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தார்.

விஜயலாயன் தொலைப் பார்வையுடைய சோழ மன்னன். இவர் சங்க கால சோழன் கரிகாலன் வழி வந்தவர் எனச் செப்பேடுகள் கூறுகின்றன.[6] இச்சோழ உறையூருக்கு அருகில் **பாழையூறையில்** குறுநில மன்னராக இருந்தவர். இ

பாண்டியர்களின் ஆதிக்கத்தின் கீழிருந்த **முத்தரையர்களை** வென்று தன் ஆட்சியை அமைத்து, அந்நிலப் பகுதியையும் விரிவுபடுத்தி உறுதிப்படுத்திக் கொண்டார்.[7] **தஞ்சாவூர் மீட்கப்பட்டது.** விஜயலாயன் தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். இவர் மேலும் பல போர்களில் வெற்றி பெற்றதாகக் கூறப்படுகிறது.[8] எனவே தஞ்சாவூர் சோழர்களின் குலப் பெருமைக்கும் ஆட்சிச் சிறப்புக்கும் அடித்தளம் அமைத்தவர் விஜயலாயன்.

விஜயலாயன் வீரன் மட்டுமின்றி விவேகியுமாவார். மக்களின் மனம் கவர்ந்த மன்னர். முதலில் தலைநகர் தஞ்சையைப் பலப்படுத்தினார். அதன்பின் தலைநகரக் கோயிலின் கோட்டமாக்கினார். தஞ்சையில் **நிசும்ப சூதனிக்கு** (துர்க்கை) ஒரு அழகிய கோயிலைக் கட்டினார். அதன்பின் தஞ்சைக்கு வெளியே சித்தன்னவாசலில் உள்ள பனங்குடி, அகஸ்தீஸ்வரம், வீரலூர், ஸ்ரீரங்கம், சிதம்பரம், உத்திரமேரூர், காஞ்சி ஆகிய இடங்களிலும் ஆலயங்களை எழுப்பினார்.[9]

முதல் தஞ்சை சோழ மன்னரான **விஜயலாயன்** சங்ககால சோழ மரபை மீட்டு, புதுப்பித்து, விரிவுபடுத்தி, பலப்படுத்தி சோழர் வம்சாவளியை நிறைபெறச் செய்தார். பின்னர் சோழர் பேரரசும், விரிவாதிக்கமும் வளர்வதற்கான முன்னோடியாக இருந்தார். அதுமட்டுமல்ல. விஜயலாயன் வழிவந்தோரின் கருத்தும் கவனமும் கோயில்களைக் கட்டுவதில் குறியாக இருப்பதற்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தார். மேலும், விஜயலாயன் காலத்திலிருந்துதான் சோழ மன்னர்கள் **ராஜகேசரி, பரகேசரி** என்ற விருதுப் பெயர்களை மாறிமாறி சூட்டிக் கொண்டனர்! விஜயலாயன் தன்னை **பரகேசரி** என்று அழைத்துக் கொண்டார்!! சுருங்கக்கூறின், விஜயலாயன் சோழப் பேரரசு எழுவதற்கும், சோழர்கள் இருளிலிருந்து வெளிச்சத்துக்கு வருவதற்கும் மூல காரணமாக இருந்தார். தஞ்சையைக் கைப்பற்றியதும், அங்கு துர்க்கையம்மனுக்குக் கோயில் கட்டியதும் சோழப் பேரரசின் எழுச்சிக்கான அடையாளங்களாகும்.

## 10.4.2 முதலாம் ஆதித்தன், 870–907

### திருப்புறம்பியப் போர்

பரகேசரி விஜயலாயனின் மகன் ராஜகேசரி **முதலாம் ஆதித்தன்** தந்தை போட்ட கோட்டை ராஜபாட்டையாக்கினார். தந்தையைப் போன்றே மகனும் விரிவாக்கவாதி (Expansionist). விஜயலாயன் தஞ்சை ஆட்சியை அமைத்தாலுங்கூட சோழர்கள் பல்லவர்களின் மேலாதிக்கத்தின்கீழ் தான் இருந்தனர்! எனவே முதலாம் ஆதித்தன் பல்லவர்களின் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையாக விடுபடத் தீர்மானித்தார். அதற்கான வழி?

சோழ நாட்டைத் தனி நாடாக்க வேண்டும் என்று தீர்மானித்த ஆதித்தன் அதற்கான முதல் கட்டமாக பல்லவர்களுக்கிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டார். பல்லவர் சிம்மாசனத்துக்காக **அபராஜிதனுக்கும், நிருபதுங்கனுக்கு**மிடையே பதவிப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியில் தலையிட்ட ஆதித்தன் பாண்டியரின் பகைவரான அபராஜிதனை ஆதரித்தார்! அவருக்குப் படை உதவி செய்தார்.



பல்லவர்களுக்கிடையேயான பதவிப் போராட்டம் வாரிசுரிமைப் போராக விரிவடைந்தது. கும்பகோணத்துக்கு அருகே **திருப்புறம்பியம்** என்ற இடத்தில் நடைபெற்ற போரில் நிருபதுங்கன் கொல்லப்பட்டார் (கி.பி.880). ஆதித்தன் ஆதரித்த அபராஜிதன் பல்லவ மன்னரானார். பல்லவ மன்னரான அபராஜிதன் தனக்குக் காலத்தே உதவிய ஆதித்தனுக்கு தஞ்சைக்கு அருகாமையிலிருந்த பல்லவர்களுக்குச் சொந்தமான பகுதிகள் அனைத்தையும் ஆதித்தனுக்குப் பரிசாக வழங்கினார்! அப்பரிசைக் கொண்டு ஆதித்தன் தனது செல்வாக்கையும், பலத்தையும் பெருக்கிக் கொண்டார். திருப்புறம்பியப் போரின் விளைவாக அபராஜிதன் பல்லவ மன்னரானார். முதலாம் ஆதித்தன் பெயரளவுக்குப் பல்லவப் பேரரசுக்கு உட்பட்டிருந்தாலும் தஞ்சையின் தன்னிகரற்ற தலைவராகத் திகழ்ந்தார்.

### கொங்கு நாட்டைக் கைப்பற்றல்

திருப்புறம்பியப் போருக்குப் பின்னர் முதலாம் ஆதித்தன் தனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கையை மேற்கொண்டார். அவரது பார்வை கொங்கு நாட்டின் மீது நிலை கொண்டது. இதை மனதில் கொண்டு ஆதித்தன் சேர மன்னன் **தாணு ரவி**யுடன் நெருங்கிய நட்பு கொண்டு அவரது ஆதரவைப் பெற்றார். சேர மன்னனின் ஆதரவோடு ஆதித்தன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்தார். கோவை மற்றும் சேலம் மாவட்டங்களை உள்ளடக்கிய கொங்கு நாட்டைக் கைப்பற்றிக் கொண்டார் ஆதித்தன்! சரிவுப் பாதையில் சென்று கொண்டிருந்த பல்லவ மன்னரால் ஆதித்தனின் ஆக்கிரமிப்பையும், ஆதிக்க விரிவாக்கத்தையும் தடுக்க முடியவில்லை! வீழ்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்த பாண்டியரும் வெறும் பார்வையாளர்களாகவே இருந்தனர்!!

கொங்கு நாட்டைக் கைப்பற்றியதன் விளைவாக ஆதித்தனின் ஆள்நிலப் பகுதி காளகஸ்தியிலிருந்து புதுக்கோட்டை மற்றும் கொங்கு நாடு வரை விரிவடைந்தது. இந்த விரிவாக்கத்தின் மூலம் ஆதித்தன் திருப்புறம்பியப் போரின் பயனை அறுவடை செய்தார்.[11] ஆதித்தன் தன் தந்தை விட்டுச் சென்ற அரசைக் காப்பாற்றியதோடன்றி அதன் எல்லையைப் பல மடங்கு விரிவுபடுத்தினார்.

### தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றல்

கொங்கு நாட்டைக் கைப்பற்றிய முதலாம் ஆதித்தன் அடுத்த கட்டமாகத் தொண்டை மண்டலத்தையும் கைப்பற்றத் திட்டமிட்டார். பல்லவர் பக்கமிருந்த கங்கர்களை அடக்கினார். பலமிழந்திருந்த பாண்டிய நாட்டின் மீது அவ்வப்போது படையெடுத்துச் சென்று அதை மேலும் பலவீனப்படுத்தினார்! இறுதியாக இவர் பல்லவ நாட்டின் மீது படையெடுத்தார். இப்போரில் அபராஜித பல்லவ மன்னன் கொல்லப்பட்டார். அபராஜிதனோடு பல்லவ நாடும் வீழ்ந்தது. பல்லவப் பேரரசு முடிவுக்கு வந்தது. தொண்டை மண்டலம் சோழ மண்டலத்துடன் இணைக்கப்பட்டது. இதன் மூலம் **சோழ நாட்டின் வடக்கெல்லை ராஷ்டிரகூடர் எல்லை வரை விரிவடைந்தது.**[12] ஆதித்தசோழன் ராஷ்டிரகூட இளவரசியை மணந்து கொண்டதன் மூலம் அவர்களது ஆதரவையும் பெற்றார்.

முதலாம் ஆதித்தன் தந்தையைப் போன்றே சிறந்த சிவபக்தர். இவரும் தஞ்சையில் **துர்க்கையம்மனுக்குக்** கோயில் கட்டினார். குடகு முதல் காவிரி கடலோடு கலக்கும் இடம் வரை பல சிவாலயங்கள் எழுப்பப்பட்டன.[13] முதலாம் ஆதித்தன் கொங்கு நாட்டிலிருந்து கவர்ந்து வந்த பொன்னைக் கொண்டுதான் சிதம்பரம் கோயில் மேல் மண்டபத்துக்குப் பொன் வேயப்பட்டது என்று கூறப்படுகிறது! தன் தந்தையின் நினைவுச் சின்னமாகக் கட்டப்பட்டதுதான் கோதண்டராமேஸ்வரம் கோயில். முதலாம் ஆதித்தனுக்கு **தொண்டை நாடு பரவின சோழன், கோதண்டராமன்** என்ற பட்டப் பெயர்களும் உண்டு.

## 10.4.3 முதலாம் பராந்தகன், 907–950

### பரம்பரைப் பகை

முதலாம் ஆதித்தனின் மகன் முதலாம் பராந்தகன். இம்மன்னன் தாத்தா, தந்தை சென்ற வழி சென்று சோழப் பேரரசை மேலும் விரிவுபடுத்துவதில் முனைப்புடன் செயல்பட்டார். இவரது ஆட்சிக் காலத் துவக்கத்திலிருந்தே பரம்பரைப் பகைவர்களான பாண்டியரை வீழ்த்தி பாண்டிய நாட்டை சோழ நாட்டுடன் சேர்க்கத் திட்டமிட்டார். பாண்டியரின் வீழ்ச்சியில் தான் சோழர்களின் எழுச்சி இருப்பதாக எண்ணினார் முதலாம் பராந்தகன்! பல்லவர்கள் அயலவர்கள். ஆனால் பாண்டியர்கள் சோழர்களைப் போன்றே மண்ணின் மைந்தர்கள். தமிழ் நாட்டுக்குச் சொந்தக்காரர்கள். எனினும் சங்க காலம் தொட்டே இவ்விரு குலத்தவரும் தன்னினம் பகைத்துக் கொண்ட பரம்பரை விரோதிகளாகவே இருந்தனர்! தற்கொலைக்கொப்பான போர்களில் தொடர்ந்து ஈடுபட்டனர். ஒருவர் அழிவில் மற்றவரது வாழ்வு இருப்பதாக நினைத்தனர். இறுதியில் இந்த **நச்சு நினைப்பே** இருபெரும் அரச குலங்களின் வீழ்ச்சிக்கும் அழிவுக்கும் காரணமாயிற்று!

### வெள்ளூர் போர்

முதலாம் பராந்தகன் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்தே பாண்டிய நாட்டைக் கைப்பற்றுவதிலேயே குறியாக இருந்தார். அதற்கான ஏற்பாடுகளை முனைப்புடன் மேற்கொண்டார். மதுரை மீது படையெடுத்தார். அப்போது மதுரை நாட்டு மன்னராயிருந்த **ராஜசிம்மன்** இலங்கை அரசன் **ஐந்தாம் காசிப**னின் துணையுடன் சோழர் படையை எதிர்க்கொண்டார். **வெள்ளூர்** என்ற இடத்தில் சோழர் படை பாண்டியர்–இலங்கை கூட்டுப் படையைத் தோற்கடித்தது (கி.பி.915). தோல்வியடைந்த ராஜசிம்மன் இலங்கைக்குத் தப்பிச் சென்றான். அவரோடு அரச சின்னங்களான மணி முடியையும், செங்கோலையும் உடன் கொண்டு சென்றார். அரச சின்னங்களை இலங்கையில் பாதுகாப்பாக வைத்துவிட்டுப் பாண்டிய மன்னன் தனது தாய் வானவன் மாதேவியின் பிறந்த இடமான சேர நாட்டுக்குச் சென்றுவிட்டார்! மதுரை மண்டலம் சோழ நாட்டுடன் சேர்க்கப்பட்டது. இவ்வெற்றியைக் கொண்டாடு முகத்தான் முதலாம் பராந்தகன் **மதுரை கொண்ட கோப்பரகேசவர்மன்** என்ற பட்டப் பெயரைச் சூட்டிக் கொண்டார்.



### இலங்கைப் படையெடுப்பு

மதுரை மண்டலத்தைக் கைப்பற்றிக் கொண்ட முதலாம் பராந்தகன் வெள்ளூர் போரின் போது பாண்டிய மன்னன் ராஜசிம்மனை ஆதரித்த இலங்கை அரசனைத் தண்டிக்கத் தீர்மானித்தார். அதன் விளைவு? இலங்கைப் படையெடுப்பு! இலங்கை மன்னன் தோற்கடிக்கப்பட்டார். எனினும், ராஜசிம்மன் இலங்கையில் ஒப்படைத்துச் சென்ற அரச சின்னங்களை அடைய முடியவில்லை! இலங்கை வெற்றியால் பெருமிதம் கொண்ட முதலாம் பராந்தகன் தன்னை **'மதுரையும் ஈழமும் கொண்ட'** மன்னர் என்று அழைத்துக் கொண்டார்!

### ஆதிக்க விரிவாக்கம்

### திருவல்லம் போர்

ஆதித்த சோழனின் படையெடுப்பு சோழப் பேரரசின் வடக்கு எல்லையை ராஷ்டிரகூடர் நாடுவரை நீட்டித்தது என்பதையும், ராஷ்டிரகூட இளவரசியை மணந்து கொண்டதன் மூலம் இரு அரசகுல உறவை ஏற்படுத்தினார் என்பதையும் பார்த்தோம். முதலாம் பராந்தகனின் ஆட்சிக் காலத்தில் ராஷ்டிரகூட மன்னன் **இரண்டாம் கிருஷ்ணன்** தன் மகள் வயிற்றுப்பேரனை[14] சோழ நாட்டு மன்னனாக்குவதற்காக சூழ்ச்சி செய்தார்! சோழ நாட்டின் மீது படையெடுத்தார். பராந்தகன் கங்கரின் துணையுடன் ராஷ்டிரகூடர் படையைத் **திருவல்லம்** என்ற இடத்தில் தோற்கடித்தார். திருவல்லம் போரில் வெற்றி பெற்ற பராந்தகன் **வீரசோழன்** என்ற விருதுப் பெயர் பெற்றார். திருவல்லம் போருக்குப் பின்னர் இப்போரில் ராஷ்டிரகூட மன்னருக்குத் துணையாக இருந்த **வாணகோவரையர் களையும்,** அவர்களுக்கு ஆதரவளித்த ரேணாட்டை ஆட்சி செய்த **வைதும்பர்களையும்** தோற்கடித்தார்.[15]

### தக்கோலப் போர்

முதலாம் பரந்தாமனால் அவமதிக்கப்பட்ட வானகோவரையரும், வைதும்பரும் ராஷ்டிரகூடருடன் கூட்டு சேர்ந்து சோழ நாட்டின் மீது படையெடுத்தனர். ராஷ்டிரகூட மன்னர் மூன்றாம் கிருஷ்ணாவின் தலைமையிலான இக்கூட்டுப் படை காஞ்சிப் பகுதியைத் தாக்கியது. இப்படையெடுப்பை எதிர்க்கொண்ட முதலாம் பராந்தகனின் மகன் இளவரசன் **ராஜாதித்தன் தக்கோலத்தில்** நடைபெற்ற போரில் கொல்லப்பட்டார். சோழர் படை தோற்றது! இத்தோல்வி பராந்தக சோழனுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. தக்கோலத் தோல்வியும், இளவரசனின் இறப்பும் முதலாம் பராந்தகனின் ஆட்சிக் கால இறுதியில் ஏற்பட்ட இரட்டை நட்டங்களாகும். ஆதிக்கப் பேராசை பெருநட்டத்தில் முடியும் என்பதற்குத் தக்கோலப் போர் சிறந்த எடுத்துக்காட்டாகும். எனினும் முதலாம் பராந்தகன் இறந்த போது சோழப் பேரரசின் எல்லை கன்னியாகுமரியிலிருந்து வடபெண்ணார் (நெல்லூர்) வரை விரிவடைந்திருந்தது.

## 10.4.4 கண்டராதித்தன், 950–956

முதலாம் பராந்தகனுக்கு மூன்று மகன்கள்: 1) மூத்தவன் **ராஜாதித்தன்;** 2) இளையவன் **கண்டராதித்தன்;** 3) **அரிஞ்சயன்.** ராஜாதித்தன் தக்கோலப் போரில் கொல்லப்பட்டதால் அவரது **தம்பி கண்டராதித்தன்** பதவிப் பொறுப்பேற்றார்.[16] முதலாம் பராந்தகன் விட்டுச் சென்ற பேரரசைக் காப்பாற்றும் வீரமோ, திறமையோ, அரசியல் விவேகமோ கண்டராதித்தனிடம் காணப்படவில்லை. ஆட்சித் திறமையற்ற கண்டராதித்தன் ஆன்மீகத்தில் அவரது கவனத்தைத் திருப்பினார்! இச்சோழ மன்னரின் ஆன்மீகப் பயணத்தில் அவரது துணைவியாரும், பட்டத்தரசியுமான **செம்பியன் மாதேவி** தோன்றாத் துணையாக இருந்தார். கண்டராதித்தன் ஆட்சிக் காலத்தில் பல சிவாலயங்கள் கட்டப்பட்டன. இந்த சோழ மன்னர் பல தோத்திரப் பாடல்களைப் பாடியுள்ளார். இவரது 10 பாடல்கள் (ஒரு பதிகம்) **ஒன்பதாம் திருமுறையில்** சேர்க்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. **ஆன்மீக நாட்டமுடையவர் ஆற்றல்மிக்க ஆட்சியாளராக இருக்க இயலாது என்பதற்கு கண்டராதித்தன் நல்ல உதாரணமாகும்.** கண்டராதித்தன் **மகன் உத்தமசோழன்.**

## 10.4.5 அரிஞ்சயன், 956–957

கண்டராதித்தன் இறந்தபின் அவரது தம்பி அரிஞ்சயன் ஆட்சிப் பொறுப்பேற்றார். மன்னரானவுடன் இவர் தொண்டை மண்டலத்தை ராஷ்டிரகூடர்களின் பிடியிலிருந்து விடுவிக்க முடிவு செய்தார். ராஷ்டிரகூட மன்னன் கன்றை தேவருடன் போர் தொடுத்தார். அப்படையெடுப்பின்போது அரிஞ்சயன் **ஆற்றூர்** என்ற இடத்தில் வீர மரணடைந்தார்! இவரது அகால மரணம் அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தியது.

## 10.4.6 இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன்), 956–973

இரண்டாம் பராந்தகன் **அரிஞ்சயனுக்கும்** வைதும்ப இளவரசி **கல்யாணிக்கும்** பிறந்தவர். அரிஞ்சயன் இறந்தபின் அரியணை ஏறினார்.[17] இவர் **சுந்தர சோழன்** என்றும் அழைக்கப்பட்டார். இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தரசோழன் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் அவரது இரண்டாவது மகன் இரண்டாம் ஆதித்தனுக்கு இளவரசர் பட்டம் சூட்டினார்! இதனால் மூத்த மகன் இரண்டாம் ஆதித்த கரிகாலன் மன்னராகும் வாய்ப்பை இழந்தார்! வாய்ப்பை இழந்த இவர் பின்னர் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார்!

### சேவூர் போர்

இரண்டாம் பராந்தகனின் முதல் சாதனை காஞ்சியை ராஷ்டிரகூடரிடமிருந்து மீட்டதுதான். அடுத்து பாண்டிய மன்னன் வீரபாண்டியனை அடிபணியச் செய்வதுதான் என்று தீர்மானித்தார். அதற்குக் காரணம் பாண்டிய மன்னன் சுதந்திரமாகச் செயல்பட்டதேயாகும். எனவே இளவரசன் இரண்டாம் ஆதித்தன் தலைமையில், கொடும்பாளூரில் இருக்கும் வேளாண் பூபதி விக்கிரம கேசரியின் துணையுடன் பாண்டிய நாட்டின் மீது போர் தொடுக்கப்பட்டது! பாண்டிய மன்னன் வீரபாண்டியனுக்குத் துணையாக இலங்கை அரசன் நான்காம் மகிந்தன் இருந்தார். சோழர் படையும் பாண்டியர்



படையும் **சேவூர்** என்ற இடத்தில் போரிட்டன. வீர பாண்டியன் தோற்கடிக்கப்பட்டார். இவ்வெற்றிக்குக் காரணமாக இரண்டாம் ஆதித்தன் **பாண்டியர் முடித்தலை கொண்டநளியவர்** என்று அழைக்கப்பட்டார்.[18] இரண்டாம் ஆதித்தன் தொண்டை மண்டலத்துக்கு அதிபராகி **பார்த்திபேந்திரவர்மன்** என்று பெயர் பெற்றார்!

இரண்டாம் பராந்தகனின் இறுதிக் காலம் இருள் சூழ்ந்து காணப்பட்டது. அவரது மூத்த மகன் **இரண்டாம் ஆதித்த கரிகாலன்** மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார்!![19] இக்கொலையால் மனக்கலக்கமடைந்த இரண்டாம் பராந்தகன் காஞ்சிபுரத்தில் அவரது **பொன்** மாளிகையில் இயற்கை எய்தினார். **பொன்மாளிகை துஞ்சிய தேவன்** ஆனான். அவரது பட்டத்தரசி **வானவன் மாதேவியும்** உடன்கட்டையேறினார்! இன்பியலில் துவக்கிய இரண்டாம் பராந்தகனின் ஆட்சிக்காலம் துன்பியலில் முடிந்தது.

இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன்) சைவ சமயத்தை மேலும் ஒருபடி முன் கொண்டு சென்றார். இவரது ஆட்சிக் காலத்தில் கொடும்பாளூர், திருச்சி, திண்டிவனம், தஞ்சை, வெளிச்சேரி ஆகிய இடங்களில் சிவாலயங்கள் எழுப்பப்பட்டன.

இரண்டாம் பராந்தகனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்தவர்கள் இரண்டு மகன்கள்: 1) **ராஜராஜன்;** 2) **இரண்டாம் ஆதித்த கரிகாலன்;** ஒரு மகள் **குந்தவை.** இரண்டாம் பராந்தகன் (சுந்தரசோழன்) இறந்தபின் வாரிசு பற்றிய பிரச்சனை எழுந்தது. இப்பிரச்சனைக்குத் தீர்வு காணும் பொருட்டு உத்தமசோழன் மன்னராகவும், ராஜராஜன் இளவரசனாகவும் ஒரே சமயத்தில் முடிசூட்டிக் கொள்வதென்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி இரண்டாம் பராந்தகனுக்குப் பிறகு உத்தமசோழன் ஆட்சிப் பொறுப்பேற்றார்.

## 10.4.7 உத்தம சோழன், 973–985

இரண்டாம் பராந்தகனின் (சுந்தர சோழன்) மகன் உத்தம சோழன். தந்தை இறந்தபின் சோழ நாடு குழப்பத்தில் ஆழ்ந்தது. உத்தமசோழன் ஆதித்த கரிகாலனின் கொலையோடு சம்மந்தப்படுத்திப் பேசப்பட்டார்.[20] கண்டராதித்தன் மகன் உத்தம சோழனுக்கும் இரண்டாம் பராந்தகன் (சுந்தரசோழன்) வழிவந்த ராஜராஜன் என்ற அருள்மொழித் தேவருக்குமிடையே வாரிசுரிமைப்போட்டி ஏற்பட்டது. இப்போட்டியை முடிவுக்குக் கொண்டுவர ஒரு உடன்பாடு எட்டப்பட்டது. அந்த உடன்பாட்டின்படி உத்தமசோழன் அரசனாகவும், ராஜராஜன் இளவரசனாகவும் ஒரே நேரத்தில் முடி சூட்டப்பட்டனர்![21]

உத்தம சோழனின் பன்னிரெண்டாண்டு ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்க சாதனைகள் எதுவுமில்லை. எதிரிகள் படையெடுத்து வராமையால் நாட்டில் அமைதி நிலவியது. பல அரசியரை மணந்து கொண்டார்! பல பட்டயங்களை வெளியிட்டார். உத்தமசோழன் தொண்டை மண்டலத்தை ராஷ்டிரகூடர்களிடமிருந்து திரும்பப் பெற்றார். ஆனால் சாளுக்கிய மன்னர் **இரண்டாம் தைவா**வால் தோற்கடிக்கப்பட்டார் (980). உத்தமசோழன் வெளியிட்ட தங்க நாணயங்கள்தான் மிகவும் பழமையானவையாகும்.

### 10.4.8 முத்தரையர்

**முத்தரையர்** என்றால் **மூன்று நிலங்களுக்கு முதல்வர்** என்று ஒரு பொருள் உண்டு. இவர்கள் நிலவுடைமையாளர்கள். முத்தரையரின் தோற்றம் சர்ச்சைக்குரியது. இவர்கள் **சோழர் குலத்தைச் சேர்ந்தவர்கள்** என்றும், **களப்பிரரின் எஞ்சியிருந்தோர்** என்றும் இருவேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன.


சோழர்கள் வெளிச்சத்துக்கு வருவதற்குமுன் முத்தரையர் **தஞ்சையைத் தலைநகரமாகக்** கொண்டு ஆட்சி செய்தனர். தமிழ் நாட்டில் பல்லவர் ஆதிக்கம் நிலைகொண்ட பின்னர் இவர்கள் பல்லவ மேலாதிக்கத்தின்கீழ் ஆட்சி செய்தனர். முத்தரையரின் ஆட்சிப் பகுதி பல்லவர் நாட்டுக்கும் பாண்டியர் நாட்டுக்கும் இடைப்பட்டு இருந்தமையால் இவர்கள் பல்லவர்–பாண்டியர் போர்களில் பல்லவர் பக்கம் பங்கேற்றனர். பாண்டியரை அடக்கவும், சோழரைத் தலைதூக்க விடாமல் செய்வதற்கும் பல்லவர் இவர்களைப் பயன்படுத்திக் கொண்டனர்!


**விஜயலாயன்** முத்தரையரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றித் தனியாட்சி அமைத்தவுடன் இவர்கள் சோழர் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டனர். இவர்களுக்கு சோழர் அரசில் முக்கிய பதவிகள் கொடுக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, ராஜராஜன் ஆட்சியில் **அறையன்** என்பவருக்குப் பொறுப்பான பதவி வழங்கப்பட்டது. இவர்கள் **சோழ–முத்தரையர்** என்றும் அறியப்பட்டனர்.

## 10.5 மதிப்பீடு: விரிவாக்கத்தின் விலை

வரலாற்று நிழலிலிருந்து வெளிவந்த **விஜயலாயன்** பல்லவருக்கும் பாண்டியருக்குமிடையேயான ஆதிக்க மோதலைப் பயன்படுத்திக் கொண்டு தஞ்சையைக் கைப்பற்றி (850) சோழப் பேரரசுக்கான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார். அவருக்கு அடுத்து வந்த **முதலாம் ஆதித்தன்** பல்லவர் ஆதிக்கத்துக்கு முடிவுகட்டி, பாண்டியரைத் தோற்கடித்து, கன்னட நாட்டின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றி, கங்கருடன் மண உறவு கொண்டு பேரரசைப் பலப்படுத்தினார். அவரது மகன் **முதலாம் பராந்தகன்** இலங்கையைக் கைப்பற்றினார். **இரண்டாம் பராந்தகன்** (சுந்தர சோழன்) சோழப் பேரரசின் எல்லையைக் கன்னட நாட்டின் **பத்கல்** வரை விரிவுபடுத்தினார்.

நிஜம் வேறு; நிழல் வேறு. வெளிப்பார்வைக்கு சோழப் பேரரசு பிரமாண்டமாகக் காட்சியளித்தாலும் உள்ளுக்குள் பலவீனப்பட்டது. **முதலாம் ஆதித்தனுக்குப்** பிறகு சோழப் பேரரசு சரிவடையத் தொடங்கியது. இச்சரிவின் அறிகுறி **பராந்தகனின்** ஆட்சிக் காலத்தில் தெளிவாகத் தெரிந்தது. **சோழர்–பாண்டியர் பகையே** இச்சரிவுக்கான மூலகாரணமாகும். திறமைக்கு மீறிய பேரரசு விரிவாக்கம் இச்சரிவைத் துரிதப்படுத்தியது. **கண்டராதித்தனின்** ஆன்மீக நாட்டமும், **அரிஞ்சயன்** போர்க்களத்தில் மாண்டதும், **இரண்டாம் பராந்தகனின்** இறுதிக்கால இழப்பும், **உத்தமசோழனின்** தோல்வியும் சோழப் பேரரசு வீழ்ச்சியடைய வழிவகுத்தன. மலைபோல் காட்சியளித்த சோழப் பேரரசு மலை எலி போலாயிற்று.




# 11. சோழப் பேரரசு II, கி.பி.985–1070

## ராஜராஜன் வழி வந்தோர்

> *வரலாற்று மாமனிதன் ஒருவனின் ஆன்மாவின் ஊக்கத்தால் எழுச்சி பெற்ற துணிச்சல் மிகுந்ததொரு நாட்டின் தோற்றம் வாழையடி வாழையாக இதயத்திடம் இனிய கதைகள் பல பேசும்.*
>
> – இராஜு காளிதாஸ்.

### 11.1 புதிய பரம்பரை

உத்தம சோழனுக்குப் பின் அவரது மகன் மதுராந்தகன் பட்டத்தரசராகவில்லை! மாறாக இரண்டாம் பரந்தாமனுக்கும் (சுந்தர சோழன்) சேர நாட்டு இளவரசி வானவன் மாதேவிக்கும் பிறந்த அருள்மொழிவர்மன் (ராஜராஜன்) சோழ மன்னராக முடிசூட்டப்பட்டார் (கி.பி.985)![1] இந்நிகழ்வு சோழர் வரலாற்றில் புதிய சகாப்தத்தைப் படைத்தது; புதிய திருப்புமுனையை ஏற்படுத்தியது; சோழர் ஆதிக்கம் புதிய பரிணாமங்களுடன் பிரகாசித்தது. விஜயலாயன் முதலாம் சோழப் பேரரசுக்கு வித்திட்டார். அவரது வழிவந்தோர் அப்பேரரசை விரிவுபடுத்தினர். அருள்மொழி வர்மன் என்ற முதலாம் ராஜராஜன் முதலாம் சோழப் பேரரசு என்ற அடித்தளத்தின் மீது இரண்டாம் சோழப் பேரரசு என்ற வியத்தகு மாளிகையை எழுப்பினார். ராஜராஜன் வழிவந்தோர் **'பிற்காலச் சோழர்கள்'** என்று அழைக்கப்படுகின்றனர். விஜயலாய சோழன் மரபைப் பின்பற்றி ராஜராஜன் **ராஜகேசரி ராஜராஜன்** என்று அழைக்கப்பட்டார்! இரண்டாவது சோழப் பேரரசு **மாமன்னர்களின் ஆட்சிக்காலமாகும்.**

### 11.2 சோழ மாமன்னர்கள்

#### 11.2.1 ராஜராஜன், 985–1014

உத்தம சோழன் இறந்தபின் அவரது மகன் மதுராந்தகன் மன்னராகவில்லை! மாறாக இரண்டாம் பராந்தகனுக்கும் (சுந்தரசோழன்) சேர நாட்டு இளவரசி வானவன் மாதேவிக்கும் பிறந்த **அருள்மொழிவர்மன்** அரசுக் கட்டிலேறினார். தந்தையுடனிருந்து ஆட்சியில் பங்கேற்று, அறிவுத் தெளிவும், அரசாங்க விவேகமும், நிர்வாகத் திறமையும், போர் அனுபவமும் பெற்றிருந்த அருள்மொழிவர்மன் **ராஜராஜனாகி** புதிய சகாப்தம் படைத்தார். இவரது ஆட்சிக் காலம் சோழர் வரலாற்றில் **புதிய திருப்புமுனை**யை ஏற்படுத்தியது. சோழப் பேரரசு புதிய பரிமாணங்களுடன் பிரகாசித்தது. ராஜராஜன் **ராஜகேசரி, பெருவுடையார், மகாராஜராஜன்** என்று அழைக்கப்பட்டார். இவர் சோழர்களின் **இரண்டாவது பேரரசைத்** துவக்கினார். ராஜராஜனின் வழி வந்தோர் **பிற்காலச் சோழர்கள்** என்று அறியப்பட்டனர்.

## புகழ் பெற்ற போர்கள்

முற்காலத் தமிழ் மன்னர்கள் **போர்களால் அறியப்பட்டார்கள்.** சங்ககால மன்னர்களும், அவர்களுக்குப் பின் களப்பிரர் காலத்தைத் தாண்டி வந்த பாண்டியர்களும், சோழர்களும் **போர்ப் பாரம்பரியத்தை** முன்கொண்டு சென்றனர். முதல் சோழப் பேரரசுக்கு அடித்தளமிட்ட **விஜயாலயன்** தஞ்சையை மீட்டு, தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு, பல போர்களில் வெற்றி பெற்று சோழர்களின் ஆட்சிக்கு நிலைத் தன்மையைக் கொடுத்தார். **வாயில் வெள்ளிக் கரண்டியுடன் பிறந்த ராஜராஜன்** ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்பு சோழ நாட்டு அரசியலில் தெளிவற்ற நிலை நீடித்தாலும் அவர் ஆட்சிக்கு வந்த போது சோழர் மரபும், நிர்வாகமும், ராணுவமும் நிலையாக இருந்தன. அரசாங்க அமைப்பும்; தரைப்படை, கடற்படை விரிவாக்கத்துக்கான உட்கட்டமைப்பும் இருந்தது. இக்கட்டமைப்பையும், இயற்கை–செயற்கை வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி சோழப் பேரரசை வலிமைமிக்க **ஆதிக்க அரசாக** மாற்றிய பெருமை ராஜராஜனைச் சேரும். ராஜராஜன் **விரிவாக்கவாதி** (Expansionist); **ஏகாதிபத்தியவாதி** (Imperialist). இவர் போர்களைப் பயன்படுத்திப் பேரரசை விரிவுபடுத்திப் பலப்படுத்தினார். ராஜராஜனின் போர்கள் புகழ் பெற்றவை.

## காந்தளூர்சாலைப் போர்

ராஜராஜன் சோழர் அரசுரிமையை மட்டும் வாரிசாகப் பெறவில்லை. சோழர்களின் பாரம்பரியப் பகைவர்களான சேரர்–பாண்டியர்–சிங்களவர் ஆகியோரின் பகைமையையும் வாரிசாகப் பெற்றார்! ராஜராஜன் பதவிக்கு வந்தபின் இவர்களின் எதிர்ப்பை முறியடிப்பதற்கான முயற்சிகளில் முனைப்புடன் ஈடுபட்டார். எட்டாண்டு கால ஏற்பாட்டுக்குப் பின்னர் படையெடுப்புகளுக்குத் தயாரானார்!

ராஜராஜன் முதலில் தனது பார்வையை சேர நாட்டின் மீது திருப்பினார். யானையின் பலம் துதிக்கையில் இருப்பதைப் போன்று சேரரின் பலம் கடற்படையில் இருப்பதை அறிந்த சோழ மன்னன் சேரர்களின் கடற்படை முதுகெலும்பை முறிக்கத் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி, தான் அனுப்பிய தூதுவரை சேர மன்னன் **பாஸ்கர ரவிவர்மன்** அவமதித்து விட்டதாகக் கூறி சேர நாட்டின் மீது படையெடுத்தார்! திருவனந்தபுரத்தின் கடற்கரைப் பகுதியாக இருந்த **காந்தளூர் சாலை**யில் போர் மூண்டது. இப்போரின் போது சேரரின் கடற்படை அழிக்கப்பட்டது. அதோடு ராணுவ பயிற்சிப் பள்ளியும் தரைமட்டமாக்கப்பட்டது. சேர மன்னன் பாஸ்கர ரவிவர்மனும், அவருக்குத் துணைபோன பாண்டிய மன்னன் அமரபுஜங்கனும் தோல்வியைத் தழுவினர். தன் முடியுடன் சேர, பாண்டியர்களது முடிகளையும் சூட்டிக் கொண்டமையால் ராஜராஜன் மும்முடிச் சோழன் என்று அழைக்கப்பட்டார். இப்போர் சேரரின் கடற்படை வலிமையைச் செயலிழக்கச் செய்யவே மேற்கொள்ளப்பட்டது.[2]

சேர மன்னன் கொல்லத்துக்குத் தப்பிச் சென்றதால் கொல்லமும் தாக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட காந்தளூர் மற்றும் கொல்லம் பகுதிகளின் நிர்வாகம் சீரமைக்கப்பட்டது. அங்கிருந்த வேதப் பள்ளிகளுக்கு வேண்டிய உதவிகள் செய்து கொடுக்கப்பட்டன! சேர நாட்டில் **சதயம் திருவிழா**வும் துவக்கப்பட்டது. காந்தளூர் சாலைப் போர் வெற்றி ராஜராஜனின் புகழ் பரவக் காரணமாக இருந்தது. அதுமட்டுமல்ல. அருள்மொழிவர்மனுக்கு ராஜராஜன் என்ற பெயரை சிதம்பரம் கோயில் நிர்வாகிகள் கொடுத்ததாக மரபு வழிச் செய்தி உள்ளது!



## பாண்டியருடன் போர்

காந்தளூர் சாலைப் போரில் பாண்டிய மன்னன் **அமரபுஜங்கன்** சேர மன்னன் **பாஸ்கர ரவிவர்மனுக்குத்** துணையாக இருந்தார். எனவே, பகைவனின் நண்பன் தனக்கு எதிரி எனக் கருதிய ராஜராஜன் பாண்டிய மன்னனுக்குப் பாடம் கற்பிக்கும் பொருட்டு பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார்! இப்போரில் பாண்டிய மன்னன் **அமரபுஜங்கன்** தோற்கடிக்கப்பட்டார். பாண்டிய நாடு சோழ நாட்டுடன் இணைக்கப்பட்டது. இவ்வெற்றியைப் பாராட்டு முகத்தான் ராஜராஜனுக்கு **தென்ன பராக்கிரமன்** என்ற விருதுப் பெயர் சூட்டப்பட்டது. இவ்வெற்றியின் மூலம் பாண்டிய நாட்டின் மீது சோழரது ஆதிக்கம் திரும்பவும் நிலைநாட்டப்பட்டது.[3]

## மலைநாட்டுப் படையெடுப்பு

பாண்டியரை வெற்றி கொண்ட ராஜராஜன் **மலை நாடு** அல்லது குடமலை நாடு (கூர்க்) மீது படையெடுத்தார். இப்படையெடுப்பின் நோக்கம் சேரரும், பாண்டியரும் மீண்டும் தலைதூக்காமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகும். அதேபோன்று கொங்கு நாட்டுக்கு அருகாமையிலிருந்த **நுளம்பாடி** கைப்பற்றப்பட்டது. அதோடு **கங்கவாடி, தடிகைபாடி, தலைக்காடு** ஆகிய மைசூர் பகுதிகளும் கைப்பற்றப்பட்டன. இப்படையெடுப்புகள் எல்லாம் ராஜராஜனின் பட்டத்து இளவரசன் **ராஜேந்திரன்** தலைமையில் மேற்கொள்ளப்பட்டவை என்பது குறிப்பிடத்தக்கது. வெற்றி நாயகன் ராஜேந்திரனுக்கு **மாதண்ட நாயகன்** என்ற பொறுப்புமிக்க பதவியை அளித்துப் பெருமைப்படுத்தினார் தந்தை ராஜராஜன்! தனயனைப் பாராட்டிய தந்தை!!

## இலங்கைப் படையெடுப்பு

சேரர், பாண்டியரைப் போன்றே இலங்கைச் சிங்களவரும் சோழர்களுக்குப் பரம்பரைப் பகைவர்கள்! எப்போதெல்லாம் சோழர்கள் சேரர் மற்றும் பாண்டியர்களுடன் போரிட்டனரோ அப்போதெல்லாம் சிங்களவர் அவர்களை ஆதரித்துள்ளனர். எனவே ராஜராஜன் இலங்கையை வென்று, சோழ நாட்டுடன் இணைத்து சிங்களவர் எதிர்ப்புக்கு நிரந்தரமாக முடிவு கட்டத் தீர்மானித்தார். அதற்கான வாய்ப்பை எதிர்நோக்கியிருந்தார். அவர் எதிர்பார்த்த வாய்ப்பும் வந்தது.

இலங்கை மன்னன் **ஐந்தாம் மகேந்திரனுக்கு** எதிராக அவரது படையினரே கிளர்ச்சி செய்தனர்! இக்கிளர்ச்சியை எதிர்க்கொள்ள முடியாத இலங்கை அரசன் இலங்கையிலிருந்து தப்பி பாண்டிய நாட்டுக்கு வந்தார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்ட ராஜராஜன் இலங்கை மீது படையெடுத்தார். ஆயிரம் ஆண்டுகால இலங்கைத் தலைநகரான **அனுராதபுரம்** கைப்பற்றப்பட்டு, அழிக்கப்பட்டது! அதையடுத்து இலங்கையில் வடக்குப் பகுதியும் வீழ்ந்தது. அப்பகுதிக்கு **மும்முடி சோழ மண்டலம்** என்று பெயரிடப்பட்டது. ராணுவக் காவல் தலைநகராயிருந்த **பொலனருவை** இப்புதிய

மண்டலத்தின் தலைநகரமாக்கப்பட்டது. இந்நகருக்கு **ஜகன்னாத மங்கலம்** என்று பெயரிடப்பட்டது. அங்கு ஒரு சிவன் கோயிலும் கட்டப்பட்டது.[4] இதன் மூலம் இலங்கையின் வடபகுதி சோழ நாட்டுடன் இணைக்கப்பட்டது. இலங்கை வெற்றியின் விளைவாக சேர-பாண்டிய—இலங்கை ராணுவக் கூட்டமைப்பு முற்றிலுமாக முறியடிக்கப்பட்டது.[5]

## சாளுக்கியப் போர்

### மேலைச்சாளுக்கியப் போர்

ராஷ்டிரகூடர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட சாளுக்கியர் **மேலைச் சாளுக்கியர், கீழைச் சாளுக்கியர்** என்று இரு பிரிவினராகப் பிரிந்து ஆட்சி அமைத்து தனித்தனியே செயல்பட்டு வந்தனர். மேலைச் சாளுக்கியர் **கல்யாணி** (மைசூர்)யைத் தலைநகராகக் கொண்டும், கீழைச் சாளுக்கியர் **வெங்கியைத்** தலைநகராகக் கொண்டும் ஆட்சி செய்து வந்தனர்.

**தைலப்பனுக்குப்** பிறகு மேலைச்சாளுக்கிய மன்னரான **சத்தியாசிரயன்** கீழைச் சாளுக்கியரை வென்று தன்னுடைய நாட்டுடன் இணைத்துவிட விரும்பினார். தைலப்பனின் நோக்கம் நிறைவேறினால் ஒன்றுபட்ட சாளுக்கியர் தனக்கு சவாலாக இருப்பார்கள் என்பதை உணர்ந்த ராஜராஜன் மேலைச் சாளுக்கிய மன்னனின் முயற்சியை முளையிலேயே கிள்ளிவிட வேண்டுமென்று முடிவு செய்தார். கீழைச் சாளுக்கியரிடையே ஏற்பட்ட வாரிசுரிமைப் போராட்டத்தை வாய்ப்பாக்கிக் கொண்ட ராஜராஜன் அவர்களது விவகாரத்தில் தலையிட்டு **சக்திவர்மன்** என்பவரை அரசராக்கினார் (கி.பி.999). அதற்கு நன்றிக்கடனாக சத்தியவர்மன் சோழ மன்னரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார்! இந்த ஏற்பாட்டைக் கடுமையாக எதிர்த்தார் மேலைச் சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயன். இந்த எதிர்ப்பே மேலைச்சாளுக்கிய—சோழப் போருக்குக் காரணமாயிற்று.

மேலைச் சாளுக்கியருக்கு எதிராக ராஜேந்திரன் தலைமையில் வலிமையான சோழர் படையை அனுப்பினார் ராஜராஜன். மேலைச் சாளுக்கியர் படை தோற்கடிக்கப் பட்டது (1007). அவர்களுடைய தளபதி **கேசவன்** கைது செய்யப்பட்டார். இப்போரின் விளைவாக மேலைச்சாளுக்கிய நாடு நிர்மூலமாக்கப்பட்டது![6] சத்தியாசிரயனின் மற்றொரு போர் முயற்சியும் முறியடிக்கப்பட்டது. இப்போரின் விளைவாக **துங்கபத்திரை ஆறு** சோழப் பேரரசுக்கும் மேலை சாளுக்கிய நாட்டுக்கும் இடையேயான எல்லையாயிற்று.

### கீழைச்சாளுக்கியப் போர்

கீழைச் சாளுக்கிய நாட்டில் நிலவிய வாரிசுரிமைப் போட்டியில் ராஜராஜன் தலையிட்டு **சக்திவர்மனை** மன்னராக்கிய போதிலும் அங்கு அமைதி நிலவவில்லை! சோழரின் ஆதிக்கத்தை ஏற்றுக்கொண்ட சத்தியவர்மனை மேலைச்சாளுக்கிய மன்னன் சத்தியாசிரயன் மன்னிக்கத் தயாராயில்லை. ராஜராஜனிடம் தோல்வியடைந்த சத்தியாசிரயன் வெங்கி மீது படையெடுத்தார். அப்படையை ராஜேந்திரன் தலைமையிலான சோழர் படை தோற்கடித்தது. அதுமட்டுமல்ல. சக்திவர்மனை அடுத்து பட்டத்துக்கு வந்த **விமலாதித்தனுக்கு** தன் மகள் **குந்தவையை** மணமுடித்து வைத்து ராஜராஜன் கீழைச் சாளுக்கியருடனான உறவைப் பலப்படுத்தினார்! இதன் மூலம்



தஞ்சைக்கும் வெங்கிக்குமிடையேயான தொடர்பு உறுதி செய்யப்பட்டது. அதன்பின் கீழைச் சாளுக்கியர் வெங்கியைத் தலைநகராகக் கொண்டு மூன்று நூற்றாண்டுகள் ஆட்சி செய்தனர்.

### மாலத்தீவுகள் படையெடுப்பு

ராஜராஜனின் படையெடுப்புகள் தென்னிந்தியா தாண்டி மாலத்தீவுகள் வரை சென்றன. **முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம்** என்று அழைக்கப்பட்ட மாலத்தீவுகள் ராஜராஜனால் ஆக்கிரமிக்கப்பட்டன. இப்படையெடுப்புக்குப் பெரிதும் காரணமாக இருந்தது ராஜராஜனின் வலிமைமிக்க கடற்படையாகும். சோழர் கடற்படை ராஜராஜனுக்கு மூன்று மகத்தான வெற்றிகளைப் பெற்றுத் தந்தது: 1) சேரர் கடற்படையை வெற்றி கண்டது; 2) இலங்கையைக் கைப்பற்ற உதவியது; 3) மாலத்தீவுகளை சோழ நாட்டுடன் சேர்த்தது. மாலத்தீவு படையெடுப்பு ராஜராஜனின் இறுதிச் சாதனையாகக் கருதப்படுகிறது.[7] மாலத்தீவு வெற்றிக்குப்பின் ராஜேந்திரன் முறைப்படி **யுவராஜாவாக** முடிசூட்டப்பட்டார் (1012).[8]

## ராஜராஜனின் ஆட்சிக்கால சாதனைகள்

ராஜராஜன் சோழ மன்னர்களுள் மாமன்னராகத் திகழ்ந்தார். இந்தியாவின் முற்கால மாமன்னர்கள் வரிசையில் இடம் பெறத் தகுதியானவர். ஆளுமை ஆற்றலும், ஆட்சித் திறமையுமிக்கவர். இவரது முப்பதாண்டு ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசு புதிய எல்லையைத் தொட்டது; சாதனைகள் பல செய்யப்பட்டன. அவற்றுள் சிறப்பானவை வருமாறு: 1) கல்வெட்டுகளில் **மெய்க்கீர்த்தி** என்னும் வரலாற்று அறிமுகம் செய்யும் வழக்கம் இவர் காலத்தில் இருந்துதான் தொடங்கப்பட்டது. 2) நடுவண் அரசை மையமாகக் கொண்டு சோழ நாடு பல நிர்வாகப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதிகாரக் குவிமைய முடியாட்சி (Centralised Monarchy) உருவாக்கப்பட்டது. 3) ஆட்சிக் காலத்திலேயே வாரிசு இணையாட்சிக்கு (Joint-rule) வழி இளவரசர் (Heir-apparent) பதவியை ஏற்படுத்தி இணையாட்சிக்கு வழி வகுக்கப்பட்டது. 4) கிராம மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தாமல் அவற்றின் நிலவருவாய் கணக்கு மத்திய தணிக்கைக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்தப்பட்டது. 5) சோழ நாடு முழுவதுமுள்ள நிலங்கள் தரவாரியாகப் பிரிக்கப்பட்டு, சரியாக அளக்கப்பட்டு, முறையான நிதி நிர்வாகக் கட்டுக்கோப்புக்குள் கொண்டு வரப்பட்டது.

6) சோழப் பேரரசின் விரிவாக்கத்துக்கும், பாதுகாப்புக்கும், பராமரிப்புக்கும், வெளியுறவுத் தொடர்புகளுக்கும் தேவையான நிலையான ராணுவத்தையும், பலமிக்க கடற்படையும் உருவாக்கப்பட்டன. 7) ராஜராஜன் சிறந்த சிவபக்தராக இருந்தபோதிலும் சமயப் பொறையைக் கடைப்பிடித்தார். அனைத்து சமயங்களும் சமமாக மதிக்கப்பட்டு மரியாதை செய்யப்பட்டது. எடுத்துக்காட்டாக **சுமத்திராவின்** மன்னர் **சைலேந்திரர்** நாகப்பட்டினத்தில் ஒரு புத்த விகாரத்தைக் கட்டிக் கொள்வதற்கு அனுமதித்து உதவியதோடன்றி அது செவ்வனே கட்டி முடிக்கப்படுவதற்குத் தேவையான முழு ஒத்துழைப்பையும் கொடுத்தார். 8) ராஜராஜன் கோயில் கட்டிடக் கலைக்கு முன்மாதிரியாகத் திகழ்ந்தார். இவர் காலத்தில் தஞ்சையில் கட்டப்பட்ட பெருவுடையார்

(பிரகதீஸ்வரர்) ஆலயம் இதற்கான தலைசிறந்த எடுத்துக்காட்டாகும். 9) பல்கலை வல்லவரான இம்மன்னர் சிறந்த கவிஞராக இருந்ததோடு மட்டுமன்றி கலை, இலக்கியப் புலவர்களுக்குப் புரவலராகவும் இருந்தார். 10) ராஜராஜனின் சாதனைகளை நினைவூட்டும் வகையில் இவர் பல பட்டங்களை சூட்டிக் கொண்டார். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை மும்முடிச்சோழன், சோழேந்திர சிம்மன், சிங்களாந்தகன், ஜெயம் கொண்டார், தெலிங்க குலாகலன், ரவிகுல மாணிக்கன், சிவபாத சேகரன் ஆகியவை. 11) ராஜராஜனின் தொலைநோக்கு இவர்கால சோழப் பேரரசு பாறையின் மீது எழுப்பப்பட்டது. அதைக் கட்டிக் காக்க அவர் ஆட்சிக் காலத்திலேயே அவரது மகன் ராஜேந்திரனைத் தயார் செய்தார். அதனால்தான் ராஜராஜன் தென்னிந்தியாவை ஆட்சி செய்தவர்களில் தலைசிறந்தவர் என்று பாராட்டப்படுகிறார்.[9]

## 11.2.2 ராஜேந்திரன், 1014–1044

### சிறப்பும், செல்வாக்கும்

ராஜராஜனின் ஒரே மகன் ராஜேந்திரன். இவரது இயற்பெயர் **மதுராந்தகன்.**[10] ராஜராஜனின் ஆட்சிக் காலத்திலேயே இவர் பட்டத்து இளவரசனாகப் பிரகடனப் படுத்தப்பட்டவுடன் (1012) **ராஜேந்திரன்** என்று அழைக்கப்பட்டார். தாத்தா சுந்தர சோழனை (இரண்டாம் பராந்தகன்)ப் போன்ற அழகும், தந்தை ராஜராஜனைப் போன்ற ஆளுமையும் பெற்ற ராஜேந்திரன் தந்தையுடன் இணைந்தே ஆட்சி நடத்தினார். எனவே இவரது ஆட்சி 1012லிருந்தே துவங்குவதாகக் கொள்வது மரபாக உள்ளது.[11] தந்தையும், மகனும் சோழ நாட்டைக் கிட்டத்தட்ட 60 ஆண்டுகள் தொடர்ந்து ஆட்சி செய்தனர். இக்காலகட்டத்தில் சோழப் பேரரசின் சிறப்பும், செல்வாக்கும் உச்சகட்டத்தை எட்டியது.

### புகழ் பெற்ற போர்கள்

### இலங்கைப் படையெடுப்பு

ராஜேந்திரன் தனது தந்தை ராஜராஜ சோழனிடமிருந்து சோழ நாட்டுடன் பல நாடுகளின் பகையையும் மரபுடைமை (Legacy)யாகப் பெற்றார். இவரது தனியாட்சி துவங்கியபின் தந்தையை முன்மாதிரியாகக் கொண்டு தனது மகன் **முதலாம் ராஜாதிராஜனுக்கு யுவராஜா** (பட்டத்து இளவரசர்) பட்டம் சூட்டினார் (1018). அதிலிருந்து இருவருமே இணைந்து ஆட்சி செய்தனர்! சோழர்–சாளுக்கியர் பகையைப் போன்றே சோழர்–சிங்களவருக்குமிடையேயான விரோதமும் தொடர் கதையைப் போன்று தொடர்ந்தது!

ராஜராஜன் இலங்கையின் வடபகுதியைத் தனது ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வந்த போதிலும், பாண்டிய மன்னன் **ராஜசிம்மன்** இலங்கை மன்னனிடம் ஒப்படைத்த அரச சின்னங்களைக் கைப்பற்ற முடியவில்லை. மேலும் இலங்கை மன்னன் **ஐந்தாம் மகிந்தன்** சோழரிடம் இழந்த பகுதிகளை மீட்பதில் முனைப்பாக இருந்தார். எனவே, இரண்டு காரணங்களுக்காக ராஜேந்திரன் இலங்கை மீது படையெடுத்தார்: 1) இலங்கை முழுவதையும் கைப்பற்றி சோழ நாட்டுடன் இணைப்பது; 2) பாண்டிய மன்னன் ஒப்படைத்த அரச சின்னங்களை அடைவது.



மேற்கண்ட இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றும் பொருட்டு ராஜேந்திரன் மூன்றாவது ஆட்சி ஆண்டில் (1017) இலங்கை மீது படையெடுத்தார். இப்போரில் இலங்கை மன்னன் ஐந்தாம் மகிந்தன் தோற்கடிக்கப்பட்டார். தோற்கடிக்கப்பட்ட இலங்கை அரசன் கைது செய்யப்பட்டு சோழ நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.[12] பாண்டிய மன்னன் ஒப்படைத்திருந்த அரச சின்னங்கள் கைப்பற்றப்பட்டன. இவற்றின் மூலம் ராஜேந்திரனின் இரண்டு நோக்கங்களும் நிறைவேறின. இருப்பினும் சிங்களவர் மகிந்தாவின் மகன் **காசப்பா** சோழர்களுக்கு எதிரான கிளர்ச்சியில் ஈடுபட்டார். அக்கிளர்ச்சி ஒடுக்கப்பட்டது. இலங்கையில் சோழர் ஆதிக்கம் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலம் வரை நீடித்தது!

### பாண்டியருடன் போர்

ராஜராஜனின் பாண்டிய நாட்டுப் படையெடுப்பு முழு வெற்றி பெறவில்லை. சோழர் மீதிருந்த பாண்டியர் பகை வளர்ந்ததேயன்றி குறையவில்லை. சுயமரியாதையும், சுதந்திர உணர்வுமிக்க பாண்டியர் சோழரின் மேலாதிக்கத்தை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இக்கிளர்ச்சியை ஒடுக்கவும், பாண்டிய நாட்டில் சோழர் ஆட்சியை உறுதிப்படுத்தவும் ராஜேந்திரன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தார். பாண்டியர் படை தோற்கடிக்கப் பட்டது. பாண்டிய நாடு மதுரையைத் தலைநகராகக் கொண்ட தனி மண்டலமாக்கப்பட்டு, ராஜேந்திரனின் மகன் இளவரசன் ராஜாதிராஜன் அதன் ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவருக்கு **ஜடவர்மன் சுந்தர சோழ–பாண்டியன்** என்ற பட்டப் பெயரும் வழங்கப்பட்டது.

### சேரருடன் போர்

பாண்டியர்களைப் போன்றே சேரர்களும் சோழர்களின் மேலாதிக்கத்தை ஏற்கவில்லை. எதிர்த்த வண்ணம் இருந்தனர். அவர்களது எதிர்ப்பை முறியடிப்பதற்காக ராஜேந்திரன் சேர நாட்டின் மீது போர் தொடுத்தார். கடுமையான போருக்குப்பின் சேர நாடு பணிந்தது. சேர நாடும் மதுரையிலிருந்த சோழ ஆளுநரின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரப்பட்டது.

### சாளுக்கியப் போர்கள்

### மேலை சாளுக்கியப் போர்

ராஜராஜன் ஆட்சிக் காலத்தில் மேலை சாளுக்கிய மன்னன் **சத்தியாசிரயன்** தோற்கடிக்கப்பட்டு சோழர் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டது. சத்தியாசிரயனுக்குப்பின் ஆட்சிக்கு வந்த **இரண்டாம் ராஜசிம்மன்** (1015) தந்தை இழந்த பகுதிகளை மீட்க முற்பட்டார். எனவே, ராஜேந்திரன் மேலை சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்தார். சோழர் படையும் மேலைச் சாளுக்கியப் படையும் **முசங்கி** என்ற இடத்தில் சந்தித்தன. சோழர் படை வென்றது. மேலை சாளுக்கிய நாட்டில் மீண்டும் சோழர் ஆதிக்கம் உறுதி செய்யப்பட்டது. அதேபோன்று துங்கபத்திரை ஆறு சோழ நாட்டுக்கும் மேலைச் சாளுக்கிய நாட்டுக்கும் எல்லையாக நீடித்தது.[13]

### கீழைச் சாளுக்கியப் போர்

மேலை சாளுக்கிய மன்னன் **இரண்டாம் ராஜசிம்மன்** ராஜேந்திரனி தோற்றாலும் கீழைச்சாளுக்கிய விவகாரத்தில் தலையிடுவதை நிறுத்தவில்லை. கீழை சாளுக்கிய நாட்டில் வாரிசுரிமைப் போராட்டம் நடந்ததை வாய்ப்பாகக் கொண் இரண்டாம் ராஜசிம்மன் குறுக்கிட்டார். வெங்கி வேந்தன் **விமலாதித்தன்** இறந்தபி இரண்டாம் விஜயாதித்தனுக்கும், ராஜராஜ நரேந்திரனுக்குமிடையே வாரிசுரிமைப் போர ஏற்பட்டது. விமலாதித்தன் மகனான ராஜராஜ நரேந்திரன் சோழ நாட்டு **குந்தவைக்கு** பிறந்தவன். குந்தவை ராஜேந்திரனின் சகோதரி. எனவே அவர் தனது தங்கை மகனை ஆதரித்தார். இரண்டாம் ராஜசிம்மன் இரண்டாம் விஜயாதித்யன் பக்கம் இருந்தா இப்போராட்டத்தில் ராஜேந்திரனின் ராணுவ உதவியோடு ராஜராஜ நரேந்திர இரண்டாம் விஜயாதித்தனை தோற்கடித்து கீழைச்சாளுக்கிய நாட்டின் மன்னரானார். இரண்டாம் ராஜசிம்மன் கீழைச் சாளுக்கிய நாட்டைக் கைப்பற்ற மேற்கொண்ட மற்றொ முயற்சியும் முறியடிக்கப்பட்டது (1035). ராஜேந்திரனின் தொடர் போர்களால் இரண்டா ராஜசிம்மனையும் அவரை ஆதரித்த குறுநில மன்னர்களையும் தலைதூக்கவிடாமல் செய் கன்னட நாடு முழுவதையும் தன் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்தார். **முடிகொண் சோழன், ஜெயசிம்ம சாரபன், மன்னை கொண்ட சோழன், இரட்டபாடி கொண் சோழன், நிருபதிவாகரன்** போன்ற விருதுப் பெயர்கள் அவரது வெற்றிகளுக்கான அங்கீகாரங்களாகும். சாளுக்கியப் போர்களின் விளைவாக ராஜேந்திரனிடம் ஏராளமான செல்வம் குவிந்தது.[15]

## கங்கை படையெடுப்பு

### வடநாட்டு வெற்றி

மேற்கு மற்றும் கீழைச் சாளுக்கியர்களை சோழ மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வந்த ராஜேந்திரன் தனது கவனத்தை வடநாட்டின் மீது திருப்பினார். கங்கை பள்ளத்தாக்கு வரை செல்லத் திட்டமிட்டார். ராஜேந்திரன் தலைமையிலான சோழர் படை கோதாவரி வரை சென்று முகாமிட்டது. அதற்குக் காரணம் அவருக்குப் பின்னால் ஏற்பட்ட நெருக்கடியின் காரணமாக தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டதேயாகும். எனவே, அவர் கோதாவரிக் கரையில் தங்கிக் கொண்டு சோழர் படையை அவர் திட்டமிட்டபடி வடக்கு நோக்கி அனுப்பினார்.[16]

ராஜேந்திரன் தளபதியின் தலைமையிலான சோழர் படை கோதாவரியைக் கடந்து பஸ்தார், ஒரிசா வழியாக மேற்கு வங்காளத்தை அடைந்தது. அப்போது வங்காளத்தை ஆட்சி செய்த தர்மபாலரையும், மகபாலரையும் தோற்கடித்து சோழர் ஆதிக்கத்தை நிலைநாட்டினார். அதன்பின் சோழர் படை கங்கை வரை சென்று அங்கு ஆட்சி செய்த மன்னரையும் வென்ற பின்னர் கங்கை ஆற்று நீரை எடுத்துக் கொண்டு வந்து கோதாவரிக் கரையில் முகாமிட்டிருந்த ராஜேந்திரனுடன் சேர்ந்து கொண்டது. அதன்பின் ராஜேந்திரன் தலைமையில் சோழர் படை திருச்சி மாவட்டத்தில் புதிதாக உருவாகிக் கொண்டிருந்த கங்கை கொண்ட சோழபுரம் சென்றடைந்தது.



### விளைவுகளற்ற வெற்றியா ?

கங்கைப் படையெடுப்பின் விளைவுகள் என்ன? கங்கைப் படையெடுப்பை விளைவுகளற்ற வெற்றியென்றோ அல்லது புனிதப் பயணம் என்றோ, கோப்பையில் எழுந்த புயல் என்றோ ஒதுக்கிவிட முடியாது. வடநாட்டில் வெற்றி கொள்ளப்பட்ட பகுதிகள் நடைமுறைக் காரணங்களுக்காக சோழ நாட்டுடன் இணைக்கப்படவில்லை. எனினும் அவை சோழ மன்னனுக்கு திறை செலுத்தும் பகுதிகளாக இருந்தன. வட இந்திய நாடுகள் சோழப் பேரரசின் ஆதிக்க வலிமையை உணர்ந்தன. தமிழர்கள் வங்காளத்தில் குடியேறி சேனா ஆள்நிலப் பகுதி உருவாவதற்கான அடித்தளமிடப்பட்டது. அதேபோன்று மிதிலையில் குடியேறிய தமிழர்கள் அங்கு **கர்னாடகுலம்** தோன்றக் காரணமாக இருந்தனர். தமிழர்கள் வட இந்தியப் பகுதிகளில் குடியேறியதைப் போன்றே வட இந்திய சைவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்து தங்கினர். கங்கையிலிருந்து கொண்டு வரப்பட்ட நீர் ராஜேந்திரன் நிர்மாணித்த புதிய நகரில் **சோழ கங்கை** என்ற குளத்தை வெட்டி அதில் கங்கை நீரைக் கலந்து **கங்கா ஜலமயம் சயத்தம்பம்** என்று பாராட்டி விழா எடுக்கப்பட்டது.[17] கங்கைப் படையெடுப்பு சோழர் வரலாற்றில் பொன்னை முத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவுகூறத்தக்க நிகழ்வாகும்.

## கடாரம் படையெடுப்பு

### போர்ப்படைச் சாதனை

ராஜேந்திரனின் கடாரம் படையெடுப்பு அவரது கடற்படை படையெடுப்புகளில் மிகவும் புகழ் பெற்றதாகும். தென்கிழக்கு ஆசிய நாடுகளின் மீது ராஜேந்திரன் ஆதிக்கம் செலுத்த விரும்பினார். மலேயா தீபகற்பம், சுமத்திரா, ஜாவா மற்றும் அதன் அன்மைத் தீவுகள் ஸ்ரீவிஜயப் பேரரசின்கீழ் இருந்தன. இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையேயான கடல்வழி ஸ்ரீவிஜய மன்னரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. ராஜராஜன் ஆட்சிக் காலத்தில் சோழப் பேரரசுக்கும் ஸ்ரீவிஜயப் பேரரசுக்குமிடையே நல்ல நட்புறவு இருந்தது. தமிழ் நாட்டிலிருந்து சீனாவுக்கு வர்த்தக தூதுக்குழுக்கள் அனுப்பப்பட்டன. ஆனால் ராஜேந்திரன் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சோழப் பேரரசுக்கும் ஸ்ரீவிஜயப் பேரரசுக்குமிடையேயான தொடர்பில் விரிசல் விழுந்தது. அதற்கு முக்கிய காரணங்கள் இரண்டு: 1) ராஜராஜனின் பேரரசு விரிவாக்கம்; 2) சோழ–சீன வர்த்தகப் பெருக்கத்துக்கு ஸ்ரீவிஜயப் பேரரசு குறுக்கே நின்றது. எனவே ராஜேந்திரன் ஸ்ரீவிஜயப் பேரரசின் மீது படையெடுத்தார் (1025). ஸ்ரீவிஜயப் பேரரசுக்குட்பட்ட **கடாரம்** (சுமத்திரா) மற்றும் ஸ்ரீவிஜயப் பேரரசின் தலைநகர் கைப்பற்றப்பட்டது. ஸ்ரீவிஜயப் பேரரசர் சங்ரம விஜயோத்துங்கவர்மன் கைது செய்யப்பட்டார். சுமத்ரா படையெடுப்புகளும், மலேயாவை வெற்றி கொண்டதும் ராஜேந்திரனின் சோழப் பேரரசின் வெளிநாட்டு விரிவாக்கத்துக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. மலேயாவும், சுமத்திராவும் சோழப் பேரரசின் பகுதிகளாயின; சோழர்களால் நிர்வகிக்கப்பட்டன.[18]

## பிற படையெடுப்புகள்

ராஜேந்திர சோழனின் இறுதிக் காலத்தில் அவர் விதைத்த விதைகளின் விளைவுகளை அவரே அறுவடை செய்ய வேண்டியதாயிற்று! சோழர் படையெடுப்புகளால்

பாதிக்கப்பட்ட நாடுகள் தங்களது சுதந்திரத்திற்காகப் போராடத் துவங்கின. இலங்கை சோழர் ஆதிக்கத்தை எதிர்த்தது. அதேபோன்று பாண்டிய நாடும், சேர நாடும் கிளர்ந்தெழுந்தன. மேலைச் சாளுக்கிய மன்னன் முதலாம் சோமேஸ்வரன் சோழர் ஆதிக்கத்திலிருந்து விடுபட முயன்றார். இவற்றையெல்லாம் எதிர்க்கொள்ள வேண்டிய பொறுப்பு ராஜேந்திரனின் வாரிசான ராஜாதிராஜனின் தலையில் விழுந்தது!

### ஆட்சிக்கால சாதனைகள்

ராஜராஜனின் ஆட்சிக் காலச் சாதனைகள் கற்பாறையின் மீது பொறிக்கப்பட்ட எழுத்துக்களைப் போல் நிலைத்து நிற்பவை. கால வெள்ளத்தால் அழிக்கப்பட முடியாதவை. வரலாற்று முக்கியத்துவமிக்கவை. தந்தை ராஜராஜனும், மகன் ராஜேந்திரனும் சோழ நாட்டைத் தொடர்ந்து கிட்டத்தட்ட அறுபது ஆண்டுகள் ஆட்சி செய்தனர். ராஜேந்திரன் அவரது முப்பதாண்டு கால ஆட்சியின் போது தந்தைக்கு இணையாக சாதனைகள் செய்தார்.[19] இவரது சாதனைகளில் குறிப்பிடத்தக்கவை வருமாறு:

1) சோழப் பேரரசின் எல்லையை வெகுவாக விரிவுபடுத்தினார். அவரது வெற்றிகளைக் குறிப்பதற்காகவே முடிகொண்டான், கங்கை கொண்டான், கடாரங்கொண்டான், பண்டித சோழன், வீரராஜேந்திரன், சோழேந்திரசிம்மன் போன்ற விருதுப் பெயர்களை சூட்டிக் கொண்டார்; 2) வடநாட்டு வெற்றிக்குப் பிறகு தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்துக்கு மாற்றினார். இது தந்தைக்கு நிகரான மாற்றுத் தலைநகராகத் திகழ்ந்தது; 3) விவசாய விரிவாக்கத்தில் அக்கறை கொண்ட ராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரத்துக்கருகே **சோழ கங்கம்** என்ற பெரிய ஏரியைக் கட்டினார்;

4) புதிய தலைநகரில் **கங்கைகொண்ட சோழேச்சுரம்** என்ற சிற்பக் கலைக்குப் புகழ் பெற்ற சிவாலயத்தை எழுப்பினார்; 5) வேதக் கல்வியை ஊக்குவிப்பதற்காக வேதக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்தினார்; 6) சைவராக இருந்தும் சமயப்பொறையைக் கடைப் பிடித்தார் கங்கைக் கரையில் வாழ்ந்த சமணர்கள் காஞ்சியில் குடியேறுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொடுத்தார்; 7) சிறந்த சிந்தனையாளர்; தரமான படைப்பாளி. சிவபெருமான் மீது பல பக்திப் பாடல்களை இயற்றியுள்ளார்; 8) தன் பிள்ளைகளுக்கு சிறந்த ஆட்சி பயிற்சி அளித்தார். அவரது மகன்கள் மூவரும் ஒருவர்பின் ஒருவராக ஆட்சிக்கு வந்தனர்; 9) இவரது நிர்வாகம் உதாரகுணத்துக்கு உதாரணமாக விளங்கியது; 10) வெளிநாடுகளுடன் குறிப்பாக சீனாவுடனான வர்த்தகத் தொடர்பு மேம்பட்டது.

## 11.2.3 முதலாம் ராஜாதிராஜன், 1044–1052

### இளவரசர்

ராஜேந்திர சோழனின் மகன் ராஜாதிராஜன் தந்தையின் ஆட்சிக் காலத்தில் இருபத்தைந்து ஆண்டுகள் (1018–1044) பட்டத்து இளவரசராக இருந்து பல படையெடுப்புகளில் பங்கேற்றார்; ஆட்சிப் பயிற்சி பெற்றார். இவர் தந்தையுடன் இணைந்து ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது சோழர்களுக்கும், பாண்டியர்–சேரர்–சிங்களவர்–சாளுக்கியர் ஆகியோருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட படையெடுப்புகள் அனைத்திலும்



பங்கேற்றார். இப்படையெடுப்புகளின் போது பட்டத்து இளவரசர் ராஜாதிராஜன் தனது வீரத்தை வெளிப்படுத்தினாலும் ராஜேந்திரனுக்கு **நிழல் சோழராகவே** இருந்தார்!

### ராஜகேசரி ராஜாதிராஜன்

ராஜேந்திரனுக்குப் பின் ஆட்சிப் பொறுப்பேற்ற ராஜாதிராஜன் எட்டாண்டு காலம் (1044–1052) தந்தை விட்டுச் சென்ற மரபுரிமைப் பிரச்சனைகளை வெற்றிகரமாக எதிர்க்கொண்டார். இலங்கையில் **விக்கிரம பாண்டியன்**[20] தலைமையில் வெடித்த விடுதலைக் கிளர்ச்சியை இரும்புக்கரம் கொண்டு அடக்கினார். இலங்கை சோழர் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. அதேபோன்று மேலைச் சாளுக்கிய மன்னன் **முதலாம் சோமேஸ்வரன்** துவக்கிய விடுதலைக் கிளர்ச்சியும் ஒடுக்கப்பட்டது. தலைநகர் **கல்யாணி** சூறையாடப்பட்டது. **கொப்பம்** போர்க்களத்தில் ராஜாதிராஜன் யானையின் மீது அமர்ந்தவாறே அமரரானார்! யானைமேல் துஞ்சிய சோழன் ஆனார்! அப்போர்க் களத்திலேயே மாண்ட மன்னரின் தம்பி **இரண்டாம் ராஜேந்திரன்** மன்னராக முடிசூட்டிக் கொண்டார்! முடிசூட்டிக் கொண்டபின் இவர் போரைத் தொடர்ந்து நடத்தி **கோல்காப்பூர்** வரை சென்று அங்கு ஒரு வெற்றிக் கம்பத்தை (Pillar of Victory) நாட்டினார்.

ராஜாதிராஜன் சிறந்த வீரர். **உலகளந்த சோழன், ஆகவமல்ல குலாகலன், கலியாணபுரம் கொண்ட சோழன்** ஆகிய பட்டப் பெயர்களைப் பெற்றார். குதிரையைப் பலியிட்டு யாகம் செய்தார். பாண்டிச்சேரியிலிருந்த **திரிபுவனி** என்ற வேதக் கல்லூரியை விரிவுபடுத்தி பலப்படுத்தினார். நிலத்தை அளந்து கணக்கிடும் பழக்கத்தைத் தொடர்ந்தார்.

## 11.2.4 இரண்டாம் ராஜேந்திரன், 1052–1064

### கூடல் சங்கமப் போர்

அண்ணன் முதலாம் ராஜாதிராஜன் இறந்தவுடன் கொப்பம் போர்க்களத்திலேயே முடிசூட்டிக் கொண்ட இரண்டாம் ராஜேந்திரன் பன்னிரெண்டு ஆண்டு காலம் சோழ நாட்டை ஆட்சி செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்வு **கூடல் சங்கமப் போர்** ஆகும். கூடல் சங்கமம் துங்கபத்திராவும் கிருஷ்ணாவும் சேரும் இடம். மேலைச் சாளுக்கியருக்கு எதிராகத் துவக்கப்பட்ட இப்போரில் சாளுக்கிய மன்னன் **முதலாம் சோமேஸ்வரன்** தோற்கடிக்கப்பட்டார். விஜயாதித்யன் மகன் **இரண்டாம் சத்தியவர்மன்** கீழைச்சாளுக்கிய மன்னராக்கப்பட்டார். கூடல் சங்கமப் போரின் விளைவுகள் இரண்டு: 1) மேலைச் சாளுக்கியரின் கிளர்ச்சி முற்றிலுமாக முறியடிக்கப் பட்டது; 2) மேலைச் சாளுக்கியர், கீழைச் சாளுக்கியர் விவகாரத்தில் தலையிடுவது தடுக்கப்பட்டது.

## 11.2.5 வீர ராஜேந்திரன், 1064–1067

இரண்டாம் ராஜேந்திரனுக்குப்பின் அவரது தம்பி **வீர ராஜேந்திரன்** (முதலாம் ராஜேந்திரனின் மூன்றாவது மகன்) சோழ மன்னரானார். இவரது குறுகிய ஆட்சிக் காலத்தில் பல சவால்களை சந்திக்க வேண்டியதாயிற்று. முதலாவதாக, கூடல் சங்கமப் போரில் தோல்விகண்ட **முதலாம் சோமேஸ்வரன்** அதே போர்க்களத்தில் மீண்டும் மோத

வருமாறு சவால் விட்டார்! அந்தச் சவாலை எதிர்க்கொள்ளும் பொருட்டு வீரராஜேந்திரன் தலைமையிலான சோழர் படை அங்கு சென்றது. ஆனால் சவால் விட்ட முதலாம் சோமேஸ்வரன் வாயில்லை![21] எனவே, வீரராஜேந்திரன் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று வெங்கியில் மேலைச் சாளுக்கியப் படையைத் தோற்கடித்து, அங்கு சோழர் மேலாதிக்கத்தை ஏற்படுத்திவிட்டு கங்கை கொண்ட சோழபுரம் திரும்பினார். அதன்பின் **இலங்கை** சென்று அங்கு மீண்டும் வெடித்த விடுதலைக் கிளர்ச்சியை அடக்கினார்.[22] கடாரத்தில் எழுந்த உள்நாட்டுக் கலவரத்தை அடக்க உதவி செய்தார்.

வீரராஜேந்திரனும் விருதுப் பெயர்களைப் புனைந்து கொள்வதில் பெருமிதம் கொண்டார். வீரமே துணையாகக் கொண்ட இவர் **ஆகவமல்ல குலாகனன், வல்லப வல்லபன்** முதலிய பட்டப் பெயர்களைப் பெற்றார்! தாராள மனம் கொண்ட வீரராஜேந்திரன் பல அறக்கொடைகளை அளித்தான். சிதம்பரம் நடராஜர் கோயிலுக்கு விலைமதிப்பற்ற சிவப்பு மாணிக்கக் கல்லை (செம்புக்கல்) (Ruby) நன்கொடையாகக் கொடுத்தார். செங்கல்பட்டு மாவட்ட திருமுக்கூடலில் இருந்த வேத பாடசாலையும், மருத்துவமனையும் இவரால் நன்கு பராமரிக்கப்பட்டன. இவரது ஆட்சிக் காலத்தில்தான் **புத்தமித்திரர் வீரசோழியம்** என்ற இலக்கண நூலைப் படைத்தார்.

### 11.2.6 ஆதிராஜேந்திரன், 1067–1070

ஆதிராஜேந்திரன் அவரது தந்தை வீரராஜேந்திரன் ஆட்சியின் போதே இளவரசர் பட்டம் சூட்டப்பட்டார். வீரராஜேந்திரன் வெற்றிகளுக்கு இவரது பங்களிப்பு பாராட்டுக்குரியது. இவருடைய ஆட்சிக் காலத்தில் சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் இடையேயான சமயச் சண்டை மிகவும் தீவிரமாக நடைபெற்றது. சைவ சமயச் சார்பாளரான ஆதிராஜேந்திரன் இச்சமயச் சச்சரவில் சிக்கிக் கொண்டார். இவர் வைஷ்ணவ ஆச்சாரியரான ராமானுஜரைத் துன்புறுத்தியதாகக் கூறப்படுகிறது.[23] ராமானுஜரைத் தொடர்ந்து கொடுமைப்படுத்தியமையால்தான் இச்சோழ மன்னர் **கிருமிகண்டன்** என்று அழைக்கப்படுவதாகக் கருதப்படுகிறது![24] எது எவ்வாறாயினும் ஆதிராஜேந்திரன் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். இவரது கொலை இன்றுவரை அவிழ்க்கப்படாத வரலாற்று முடிச்சாகவே உள்ளது.

ஆதிராஜேந்திரனின் அகால மரணத்துக்குப்பின் சோழநாடு குழப்பக்காடாயிற்று. இவரது வாரிசு யார் என்பதில் சிக்கல் ஏற்பட்டது. வாரிசுரிமைப் போராட்டத்துக்கான சூழல் உருவாயிற்று. அந்த நெருக்கடியான நேரத்தில் கீழைச் சாளுக்கிய வம்சாவளியைச் சேர்ந்த **முதலாம் குலோத்துங்கன்** சோழ மன்னரானார்! இவர் முதலாம் ராஜேந்திரன் மகன் அம்மங்கா தேவிக்கும், அவருடைய தங்கை குந்தவையின் மகன் கீழைச் சாளுக்கிய மன்னன் ராஜராஜ நரேந்திரனுக்கும் மகனாகப் பிறந்தவர். இவரே இரண்டாம் ராஜேந்திரன் என்று அழைக்கப்பட்ட குலோத்துங்கன். எனவே, ஆதிராஜேந்திரனோடு விஜயாலய வம்சாவளி முடிவுக்கு வந்தது. குலோத்துங்கன் வழிவந்தோர் **சாளுக்கிய சோழர்** என்று அழைக்கப்பட்டனர்.



## 11.3 எழுச்சியும் வீழ்ச்சியும்

ராஜராஜன் ஆட்சிக் காலம் சோழர் வரலாற்றில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. குடிப்பிறப்பு, போர்ப் பங்கேற்பு, ஆட்சி அனுபவம், நிர்வாகத் திறமை, தொலைநோக்கு, வெளிநாட்டுத் தொடர்புகள் ஆகியவை இவரது வரலாற்றுச் சாதனைகளுக்குத் துணைபுரிந்தன. **விஜயலாயன்** வழிவந்த **தஞ்சாவூர் சோழர்கள்** அமைத்துக் கொடுத்த அடித்தளத்தின் மீது ராஜராஜன் உலகோர் வியக்கும் சோழப் பேரரசு மாளிகையை எழுப்பினார். அவரும் அவரது வாரிசு மகன் ராஜேந்திரனும் தமிழ் நாட்டுக்கு வெளியே தக்காணத்திலும், வட இந்தியாவிலும், தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் தங்களது ஆதிக்கக் கொடியை ஏற்றினர். சோழப் பேரரசு அதன் உச்சகட்டத்தை எட்டியது. ராஜேந்திரன் சோழப் பேரரசுக்குப் புதிய பரிமாணங்களைக் கொடுத்தார். இவர்களது ஈடுயிணையற்ற சோழப் பேரரசின் எழுச்சிக்கும், வளர்ச்சிக்கும், சாதனைகளுக்கும் சோழக் கடற்படை கை கொடுத்தது.

ஒரு நாட்டின் வரலாற்றில் சாதனைகளே சவால்களாக உருமாற்றமடைகின்றன! சோழ மாமன்னர்களின் போர் வெற்றிகள் சோழப் பேரரசு வீழ்வதற்கான வித்துக்களையும் தாங்கிக் கொண்டிருந்தன. சோழ மன்னர்களால் தோற்கடிக்கப்பட்டு, அவமதிக்கப்பட்ட பாண்டியர்களும், சேரர்களும், சிங்களவரும், சாளுக்கியரும், ராஷ்டிரகூடர்களும், கங்கர்களும் சோழர்களுக்கு நிரந்தரப் பகைவர்களாயினர். அரசியல் காரணங்களுக்காக சோழ மன்னர்கள் பிற நாட்டினருடன் செய்து கொண்ட திருமணங்கள் வாரிசுரிமைச் சிக்கலையும், பதவிப் போட்டியையும், அரசியல் சூழ்ச்சிகளையும் அதிகரிக்கவே செய்தன. மாமன்னர்கள் விரிவுபடுத்திய பேரரசின் பாரத்தை சுமக்கக்கூடிய வாரிசுகள் இல்லாமல் போனது இரண்டாவது சோழப் பேரரசு வீழ்வதற்கான வழி வகுத்தது. சோழ மன்னர்கள் அரசாட்சியை சமயமயமாக்கியதால் நீண்ட கால விளைவுகள் எதிர்மறையாயின. அரசியலை சமயத்தோடு சேர்த்தால் விளைவுகள் விபரீதமாகும் என்பது வரலாறு கற்பிக்கும் படிப்பினைகளில் ஒன்றாகும்.

ராஜேந்திரனுக்கு அடுத்து வந்த **முதலாம் ராஜாதிராஜன் கொப்பம்** போர்க் களத்தில் உயிர் நீத்தார். போர்க் களத்திலேயே முடிசூட்டிக் கொண்ட **இரண்டாம் இராஜேந்திரன்** தொடர்ந்து மேலைச் சாளுக்கியரின் எதிர்ப்பை எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று. அவருக்குப்பின் அரியணையேறிய **வீரராஜேந்திரனின்** ஆற்றல்களெல்லாம் சாளுக்கியச் சிக்கலைத் தீர்ப்பதில் விரயமாயிற்று. அவரது மகன் **ஆதிராஜேந்திரன்** ஆட்சியின் போது சோழ நாடு கிளர்ச்சிக்காடாயிற்று! மாமன்னர்கள் ராஜராஜனும், ராஜேந்திரனும் எழுப்பிய சோழப் பேரரசு மாளிகை வீழும் நிலையில் குலோத்துங்கன் வந்து சோழப் பேரரசை மீண்டும் எழுச்சி பெறச் செய்தார்!

## மேற்கோள் நூற்பட்டியல்

1. முதலாம் பராந்தகனின் மகன் அரிஞ்சயன் வைதும்ப நாட்டு இளவரசி **கல்யாணி**யை மணந்து கொண்டார். இவர்களுக்குப் பிறந்தவன் இரண்டாம் பராந்தகன் (சுந்தர சோழன்). இரண்டாம் பராந்தகன் சேரநாட்டு இளவரசி **வானவன் மாதேவி**யை மனைவியாக்கிக் கொண்டார். இவர்களுக்குப் பிறந்தவர்கள் **குந்தவை** மற்றும்

19. உலக வரலாற்றில் இவர்களுக்கு இணையாக கிரேக்க நாட்டின் இரண்டாம் பிலிப்பும் அலெக்சாந்தரும்; சந்திரகுப்தனும் அசோகனும்; மகேந்திரவர்மனும், நரசிம்மனும் போன்ற சிலரே காணப்படுகின்றனர்.

இராஜு காளிதாஸ், பக்.178.

20. **வித்தம பாண்டு** என்று அழைக்கப்பட்ட இவர் சிங்களத் தந்தைக்கும், பாண்டியத் தாய்க்கும் பிறந்தவர் என்று குறிப்பிட்டுள்ளார் நீலகண்ட சாஸ்திரி. இப்படையெடுப்பின் போதும் சோழர் படையினர் பல அக்கிரமங்களைச் செய்ததோடன்றி விக்கிரம பாண்டியன் தாயின் மூக்கை அறுத்து அவமதித்தனர்.

R.Sathianathiar, op.cit., p.388.

21. முதலாம் சோமேஸ்வரன் கடுமையான நோயால் தாக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படுகிறது.

22. எனினும் இலங்கையின் தென்பகுதியான **ரோகனா** விடுதலை பெற்றது குறிப்பிடத்தக்கது.

23. ஆதிராஜேந்திரன் ராமானுஜரைக் கொடுமைப்படுத்தியதால் சோழர் குலம் அழிந்து விட்டதாக **திவ்யசூரிய சரிதத்தில்** குறிப்பிடப்பட்டுள்ளது.

24. இவரது கழுத்து கிருமிகளால் பாதிக்கப்பட்டதால் இவருக்கு **கிருமி கண்டன்** என்ற பெயர் வந்ததாம்!

### ராஜராஜன் வம்சாவளி

- ராஜராஜன் I
  - ராஜேந்திரன் I
    - ராஜாதிராஜன் I
    - ராஜேந்திரன் II
      - ராஜமகேந்திரன் (இளவரசராக இருந்தபோது இறந்தார்)
    - வீரராஜேந்திரன்
      - ஆதிராஜேந்திரன்
  - குந்தவை–விமலாதித்தன் (வேங்கி மன்னன்)
    - ராஜராஜ நரேந்திரன் I - கம்மங்காதேவி
      - ராஜேந்திரன் II – மதுராந்தகி (குலோத்துங்கன் I)

# 12. சோழப் பேரரசு III, கி.பி.1070–1280

## குலோத்துங்கன் வழி வந்தோர்

> *தமிழ் நாட்டின் சரித்திரமே அப்படித்தானே? சில்லரை விஷயங்களில் பரஸ்பர பகை கொண்டு மூன்றாம் பேர்வழிக்கு இடம் கொடுப்பார்கள்.*
>
> *– சாண்டியல்கள்.*

### 12.1 குலோத்துங்கன் குலம்

**குலோத்துங்கன்** வித்தியாசமான சோழ வேந்தர். ராஜேந்திர சோழன் மகன் **அம்மங்காதேவிக்கும் குந்தவை** (ராஜேந்திரனின் சகோதரி)யின் மகன் **கீழைச் சாளுக்கிய மன்னன் ராஜராஜ நரேந்திரனுக்கும்** பிறந்த **இரண்டாம் ராஜேந்திரன்** தான் **குலோத்துங்கன்** என்று அழைக்கப்பட்டார். குலோத்துங்கன் என்பது **பட்டப் பெயர்.** எனவே, குலோத்துங்கன் **ராஜராஜ சோழனின் கொள்ளுப் பேரன்.**[1] இவரும் இவரது மரபினரும் குலோத்துங்கன் குலத்தவராவர்.

### 12.2 சாளுக்கிய சோழர்கள்

கீழைச் சாளுக்கிய நாட்டில் பிறந்த குலோத்துங்கன் கங்கை கொண்ட சோழபுரத்தில் வளர்ந்தார்! எனவே அவருக்குச் சோழ குடும்பத்தினருடன், குறிப்பாக சோழ மன்னர்களுடன் நெருக்கமான தொடர்பு இருந்தது. **வீரராஜேந்திரன்** (1064–1067) ஆட்சிக் காலத்தில்[2] நடைபெற்ற **கடாரப் படையெடுப்பின்** பொறுப்பைக் குலோத்துங்கனிடம் ஒப்படைத்தார். கடாரக் கடற்படையின் வெற்றியால் புகழ் பெற்ற குலோத்துங்கன் **சோழப் பேரரசின் தூதுவராக** சீனாவின் அரசவைக்கு அனுப்பப்பட்டார். அதன்பின் கீழைச் சாளுக்கிய நாட்டின் **வெங்கி**யின் குறுநில மன்னரானார். வீரராஜேந்திரன் வாரிசின்றி இறந்ததால் சோழ நாட்டில் வாரிசுரிமைப் போராட்டம் வெடித்தது.[3] அப்போராட்டத்தைத் தனக்கு சாதகமாக்கிக் கொண்ட குலோத்துங்கன் கங்கை கொண்ட சோழபுரம் சென்று சோழ மன்னராக முடிசூட்டிக் கொண்டார்! தமிழ் நாட்டு மக்கள் இந்நிகழ்வை ஆக்கிரமிப்பாகக் கருதவில்லை!! மாறாக, வாரிசின்றி இறந்த வீரராஜேந்திரனின் இயல்பான வாரிசாகவே கருதிக் கொண்டாடினர்! வாரிசுரிமைப் போராட்டத்தால் சோழ நாட்டில் ஏற்பட்ட அரசு வாரிசு நெருக்கடி நீங்கியது. பின்னர் தில்லை வாழ் பிராமணர்கள் சிதம்பரம் கோயிலில் குலோத்துங்கனுக்கு வேதவைதீக சம்பிரதாய முறைப்படி முறையாக முடிசூட்டினர்.[4] கீழைச் சாளுக்கிய நாடு சோழ நாட்டுடன் இணைந்தது. குலோத்துங்கனும் அவரது வழிவந்தோரும் **சாளுக்கிய சோழர்கள்** என்று அறியப்பட்டனர்.

## 12.3 சாளுக்கிய சோழ மன்னர்கள்

### 12.3.1 முதலாம் குலோத்துங்கன், 1070–1120

### குலோத்துங்கனின் குறிக்கோளும் கொள்கையும்

குலோத்துங்கன் தனது மூதாதையர்களான **ராஜராஜன், ராஜேந்திரன்** போன்ற வரலாற்று மாமன்னர். மாபெரும் போர் வீரர்; ஆனால் போர் வெறியரல்லர். போரின் பெருமையையும், அமைதியின் போராற்றலையும் நன்கறிந்தவர். அரசின் அறநெறியும், அரசியல் விவேகமும், நிர்வாகத் திறமையும் ஒருங்கே பெற்றவர். கையில் இருக்கும் ஒரு பறவை கூட்டில் இருக்கும் இரு பறவைகளைவிட சிறந்தது என்ற நடைமுறை உண்மையை உணர்ந்தவர். கிடைத்த வாய்ப்பை செவ்வையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர். சோழ நாட்டின் பலத்தையும் பலவீனத்தையும் நன்கறிந்த குலோத்துங்கன் தன்னைவிட தன்நாட்டு மக்களின் நலனும், சோழ நாட்டின் பாதுகாப்பும் அமைதியும் மேலானது என்று எண்ணிய குலோத்துங்கன் அதற்கேற்ப தனது குறிக்கோளையும், கொள்கையையும் வகுத்துக் கொண்டார். சமரசத்தின் மூலம் மறுசீரமைப்பு (Policy of Reconciliation and Reconstruction) என்பதே குலோத்துங்கனின் குறிக்கோளாகவும் கொள்கையாகவும் இருந்தது.

### குலோத்துங்கன் தீர்வு

### இலங்கை விடுதலை

இலங்கை மன்னர்களும், மக்களும் சோழர் மேலாதிக்கத்தையும், ஆட்சியையும் துவக்கத்திலிருந்தே எதிர்த்து வந்தனர். சோழர் அடக்குமுறைக்கு எதிராகப் போராடினர். வலுவாக எழுந்த விடுதலைப் போராட்டத்தை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கினார் ராஜேந்திர சோழன். விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முடியுமேயன்றி ஒழிக்க முடியாது. ராஜேந்திரனுக்குப் பின்னர் சோழ நாட்டில் ஏற்பட்ட அரசு நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்ட இலங்கை மன்னன் **விஜயபாகு** ஈழத்திலிருந்த சோழப் படையைத் தோற்கடித்து, **பொலன்னருவா**வைக் கைப்பற்றி, இலங்கையைச் சுதந்திர நாடாகப் பிரகடனம் செய்தார்! குலோத்துங்கன் ஆட்சிப் பொறுப்பேற்றபின் இலங்கை விடுதலையை ஏற்றுக் கொண்டார். அதுமட்டுமல்ல. அவரது மகள் **சுத்தமல்லி**யை இலங்கை மன்னன் **வீரபாகு**வுக்கு மணமுடித்து வைத்து இலங்கை–சோழ நாட்டு நல்லுறவை ஏற்படுத்தினார். நெடுங்காலமாக சோழநாட்டு உடலில் குத்திய முள்ளாக இருந்த இருநாட்டு விரோதத்துக்கு முடிவு கட்டப்பட்டது. இந்நிகழ்ச்சி குலோத்துங்கனின் அரசியல் முதிர்ச்சிக்கும், அரச தந்திரத்துக்குமான எடுத்துக்காட்டாகும்.

### மேலைச் சாளுக்கியருடன் மோதல்

முதலாம் குலோத்துங்கன் சோழப் பேரரசரானதன் விளைவாக கீழைச் சாளுக்கிய நாடு சோழ நாட்டுடன் இணைந்தது. ஆனால் மேலைச் சாளுக்கியரின் பகை நீடித்தது. அவர்கள் சோழர்களைத் தங்களது பரம்பரைப் பகைவர்களாகவே கருதினர். எனவே, மேலைச் சாளுக்கிய மன்னன் **ஆறாம் விக்கிரமாதித்தன்** சோழ நாட்டுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.[5] ஆனால் அவரது அண்ணன் **இரண்டாம்**



**சோமேஸ்வரன்** சோழ நாட்டுடன் நட்புறவோடு இருப்பதையே விரும்பினார். எனினும், தனது நிலையில் பிடிவாதமாக இருந்த ஆறாம் விக்கிரமாதித்தன் சோழ நாட்டுக்கு எதிராகப் படை திரட்டினார். எவ்வித சமரசத்துக்கும் தயாராக இல்லை!

குலோத்துங்கன் சோழர்களுடன் இணக்கமாக இருக்க வேண்டும் என்று விரும்பிய இரண்டாம் சோமேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு சமரசத் தீர்வுக்கு முயற்சி செய்தார். ஆறாம் விக்கிரமாதித்தனுக்குத் தெரிந்த மொழியில் பேசினார்! மேலைச் சாளுக்கிய மன்னனுக்குத் தெரிந்த ஒரே மொழி போர்தான்!! எனவே, தெற்கிலிருந்து குலோத்துங்கனும், வடக்கிலிருந்து சோமேஸ்வரனும் மேலைச் சாளுக்கிய நாட்டைத் தாக்கினர்! இக்கூட்டுத் தாக்குதலை எதிர்க்கொள்ள முடியாத விக்கிரமன் தோல்வியைத் தழுவினார். வீழ்ந்த உறவினரைத் தண்டிக்க விரும்பாத குலோத்துங்கன் அவரையே மேலைச் சாளுக்கிய நாட்டை ஆட்சி செய்ய அனுமதித்தார்! இதன் மூலம் மேலைச் சாளுக்கியர்–சோழர் உறவு சீரானது. இது குலோத்துங்கனின் அரசியல் விவேகத்துக்குக் கிடைத்த அடுத்த வெற்றியாகும்.

### பாண்டியர் பிரச்சனை

இலங்கையைப் போன்றே மதுரைப் பாண்டிய மன்னர்களும், மக்களும் சோழரின் **மேலாதிக்கத்தை எதிர்த்தனர்;** தொடர்ந்து போராடினர். ராஜேந்திர சோழன் இறந்தபின் அவர்களது விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்தது. விடுதலை விரும்பிகளான அவர்கள் பாண்டியர் குலத்தைச் சேர்ந்த ஐவர் பாண்டிய நாட்டை ஐந்து பகுதிகளாகப் பிரித்துக் கொண்டு சுயாட்சி செய்தனர்! குலோத்துங்கன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, பாண்டியர் எதிர்ப்பை முறியடித்தார். அதன்பின் பாண்டியர் ஐவரையும் மீண்டும் அவர்களது பகுதிகளை ஆட்சி செய்ய அனுமதிதார். ஐவர் **ஆட்சியைக் கலைக்காமல் சோழர் மேலாதிக்கத்தை ஏற்கச் செய்தார்!** இதன்மூலம் பாண்டியர் சுதந்திரமாக இருக்கவும், பெயரளவில் சோழர் ஆதிக்கத்தை ஏற்கவுமான சமரசத் தீர்வு கண்டார். பாண்டியரின் பரம்பரைப் பகை தணிந்தது. பாண்டியர் பிரச்சனைக்குத் தற்காலிகத் தீர்வு காணப்பட்டது.[6]

### சேரர் சவால்

இலங்கைச் சிங்களவர், மதுரைப் பாண்டியர் போன்று கேரளத்து சேரரும் சோழரின் மேலாதிக்கத்தை எதிர்த்துப் போராடி வந்தனர். நீருபூத்த நெருப்பாக இருந்த இப்போராட்டம் குலோத்துங்கன் மன்னரானவுடன் நெருப்பாக வெளிப்பட்டது. கிளர்ச்சித்தீ வேகமாகப் பரவியது. வேணாட்டு மன்னன் **ராமர்திருவடி**யின் தலைமையில் சேரர் விடுதலைப் படை தயாராயிற்று. இப்படையும், சோழர் படையும் **கோட்டாற்றில்** மோதின. குலோத்துங்கனின் சோழர் படை வெற்றி பெற்றது. ராமர்திருவடி கொல்லத்துக்குத் தப்பிச் சென்றார்! அவர் கொல்லத்தில் கைது செய்யப்பட்டார்.[7] கைது செய்யப்பட்ட ராமர்திருவடி மீண்டும் சேர நாட்டுக்கு மன்னராக இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார் குலோத்துங்கன்.[8] இந்த ஏற்பாடும் குலோத்துங்கனின் சமரசக் கொள்கைக்குக் கிடைத்த மற்றொரு வெற்றியாகும்.

### கலிங்கச் சிக்கல்

குலோத்துங்கனுக்குக் **கலிங்கம்’** புதிதல்ல. ஏனெனில் தென் கலிங்கம் வெங்கி நாட்டின் பகுதியாக இருந்தபோது அங்கு வெடித்த கிளர்ச்சியை அடக்கியவர் குலோத்துங்கன். அதன் விளைவாகத் **தெற்கு கலிங்கம்** வெங்கி நாட்டுடன் இணைக்கப்பட்டது. ஆனால் **வடக்கு கலிங்கம்** சோழர் ஆதிக்கத்துக்குக் கட்டுப்பட மறுத்தது. வடகலிங்க மன்னன் **அனந்தவர்மன்** திறை செலுத்த மறுத்ததே சோழர் படையெடுப்புக்குக் காரணமாயிற்று. அனந்தவர்மன் சோடகங்கன் குலோத்துங்கனின் மகள் **ராஜசுந்தரியின்** மகன்! குலோத்துங்க சோழனின் தூரத்து உறவினர். எனவே, கலிங்கப் பிரச்சனை சிக்கல்மிக்க பாசப் போராட்டமாக உருவெடுத்தது.

கலிங்கச் சிக்கலைத் தீர்க்க குலோத்துங்கன் கலிங்கத்தின் மீது படையெடுத்துச் சென்று வெற்றி பெற்றார். அனந்தவர்மன் தோற்கடிக்கப்பட்டார். எனினும் வட கலிங்கத்தைச் சோழ நாட்டுடன் இணைக்காமல் அதே சமயம் சோழர் ஆதிக்கத்தை வடகலிங்கம் ஏற்றுக் கொள்ளுமாறு செய்தார். இந்த சமரசத் தீர்வின் மூலம் குலோத்துங்கனின் புகழ் வானளாவ உயர்ந்தது![10]

### வெளிநாட்டு உறவு

குலோத்துங்கனின் புகழ் வெளிநாடுகளுக்கும் பரவியது. கிழக்காசிய நாடுகளுடன் அரசியல், பண்பாட்டு, வர்த்தக, அரச தந்திரத் தொடர்புகளை மேம்படுத்துவதில் குலோத்துங்கன் சிறப்பு கவனம் செலுத்தினார். குறிப்பாக சீனாவுக்கு சிறப்புத் தூதுவர் அனுப்பப்பட்டார் (1077). அந்நாட்டுடனான வர்த்தகம் பல மடங்கு பெருகியது. மலாய் தீபகற்பம், ஸ்ரீவிஜயம், கம்பூச்சியா, பர்மா ஆகிய நாடுகளுடனான உறவு சிறப்புற்றது.

### குலோத்துங்கனின் சாதனைகள்

சோழர் வரலாற்றில் குலோத்துங்கனின் ஆட்சிக் காலம் ஒரு **புதிய சகாப்தம்** ஆகும். இப்புதிய காலப் பகுதியில் பல சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. குலோத்துங்கன் சோழப் பேரரசின் நோக்கிலும் போக்கிலும் புதிய மாற்றத்தைப் புகுத்தினார். சோழப் பேரரசுக்குப் புதிய பரிமாணத்தைக் கொடுத்தார். கங்கை கொண்ட சோழபுரம் தலைநகராக நீடித்தது. காஞ்சிபுரம் சிறப்பிடம் பெற்றது. இவரது சமரச மறுசீரமைப்புக் கொள்கை சோழப் பேரரசை நெருக்கடியிலிருந்து காப்பாற்றியதோடன்றி தேவையான பாதுகாப்பையும், அமைதியையும், சட்டம் ஒழுங்கையும் உறுதிப்படுத்தியது. குலோத்துங்கனின் அரை நூற்றாண்டு கால ஆட்சியில் போரழிவுகளைவிட மக்கள் நலப் பெருக்கமே அதிகமாக இருந்தது. அரசாங்க வருவாய் கண்டோர் வியக்கும் கோயில்களைக் கட்டுவதில் விரயமாக்காமல் மக்கள் நலப் பணிகளில் செலவிடப்பட்டது. சுங்க வரிகளை வெகுவாகக் குறைத்து உள்நாட்டு வர்த்தகத்தையும், வெளிநாட்டு வாணிபத்தையும் ஊக்குவித்தார். அதனால் குலோத்துங்கன் **‘சுங்கம் தவிர்த்த சோழன்’** என்று நன்றிப் பெருக்கோடு பாராட்டப்பட்டார். சோழ நாடு முழுவதும் நிலங்கள் அளக்கப்பட்டு, நிலத் தீர்வைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு விவசாய வளர்ச்சி உறுதி செய்யப்பட்டது.[11]



குலோத்துங்கன் **பல்கலை வித்தகர்**. பன்மொழிப் புலவர். இசை நூலொன்றை இயற்றினார். இயல், இசை, நாடகத் தமிழுக்கு ஊக்கம் தந்து இலக்கிய வளர்ச்சிக்கு உதவினார். இவற்றின் வளர்ச்சிக்கு நிலக் கொடைகள் வழங்கப்பட்டன. சைவராக இருந்தும் பிற சமயங்களை மதித்தார். இவர் நாகையிலும், புதுக்கோட்டையிலும் கட்டிய இரண்டு கோயில்களும் சூரியக் கடவுளுக்கு அர்ப்பணிக்கப்பட்டவை. குலோத்துங்கனின் சமயம் சாரா ஆட்சி அவரது காலத்தை மீறிய சாதனையாகும். இதுவே இவரது சாதனைகளுக்கெல்லாம் பெரிய சாதனை. இலங்கையைத் தவிர இவரது பேரரசு நிலையாக இருந்தது. துங்கபத்திரை ஆறு சோழ நாட்டுக்கும் மேற்கு சாளுக்கிய நாட்டுக்கும் இடையேயான எல்லையாக இருந்தது. வெங்கியும், கலிங்கமும் சோழப் பேரரசின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்தன. இம்மன்னரின் பெயரால் கட்டப்பட்ட **குலோத்துங்க சோழபுரமும்** அதன் வீதிகளும் மதுரையை நினைவூட்டுவதாக உள்ளது. குலோத்துங்கனுக்கு மூன்று மனைவியர்: **மதுராந்தகி, தியாகவல்லி, ஏழிசை வல்லபி.** முதல் மனைவிக்குப் பிறந்தோர் ஏழு பிள்ளைகள். நான்காவது மகன் **விக்கிரம சோழன்** குலோத்துங்கனின் வாரிசாக அரியணை ஏறினார். குலோத்துங்கனுக்கும் **பராந்தகன், குலசேகரன், ராஜகேசரி, பாண்டிய குலாந்தகன், திரிபுவன சக்கரவர்த்தி** போன்ற பல பட்டப் பெயர்கள் இருந்தன.

### கடைசி காலம்

பல நாடுகளை வெற்றி கொண்ட குலோத்துங்கனால் வயதை வெற்றி கொள்ள முடியவில்லை! மனம் மலைபோல் இருந்தாலும் உடல் இலைபோலாயிற்று. வீரத்தை வியாதி வென்றது. குலோத்துங்கனின் இறுதி ஆண்டுகள் நெருக்கடிகள் நிறைந்தவை. வெங்கி நாட்டு ஆளுநராக இருந்த அவரது நான்காவது மகன் **விக்கிரம சோழனை** சோழப் பேரரசின் வாரிசாக நியமித்தார் குலோத்துங்கன். வெங்கியிலிருந்து கங்கை கொண்ட சோழபுரம் வந்த விக்கிரம சோழனுக்கு முடிசூட்டுவிழா நடத்தப்பட்டது.

விக்கிரம சோழன் வெங்கியை விட்டுச் சென்றதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட மேலைச் சாளுக்கிய மன்னர் **ஆறாம் விக்கிரமாதித்தன்** வெங்கியைக் கைப்பற்றிக் கொண்டார்! வெங்கி வீழ்ந்தது. **விஷ்ணுவர்த்தன் ஹொய்சாளர் கங்கவாடியையும், தலக்கோட்டையையும்** அபகரித்துக் கொண்டார். சேர, பாண்டிய நாடுகளின் மீதிருந்த சோழர் ஆதிக்கப் பிடி தளர்ந்தது. குலோத்துங்கனின் வாரிசான **விக்கிரம சோழன்** இந்நெருக்கடிகளை எதிர்க்கொள்ள வேண்டியதாயிற்று!

## 12.3.2 விக்கிரம சோழன், 1120–1135

### ஆட்சிப் பயிற்சி

குலோத்துங்கனின் மகன் **விக்கிரம சோழன்** தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே பட்டத்து இளவரசராக முடிசூட்டப்பட்டார் (1118). இரண்டாண்டு காலம் தந்தையுடன் சேர்ந்து ஆட்சி செய்து அனுபவம் பெற்றார். ராஜகேசரி குலோத்துங்கனின் மகன் **பரகேசரி விக்கிரம சோழன்** என்ற பெயரில் தந்தைக்குப் பின் சோழப் பேரரசை ஆட்சி செய்தார்.

### வெங்கி மீட்சி

வெங்கியின் குறுநில மன்னராக இருந்த விக்கிரம சோழன் பட்டத்து இளவரசராக முடிசூட்டிக் கொள்வதற்காக கங்கைகொண்ட சோழபுரத்துக்குச் சென்றபோது மேலைச் சாளுக்கிய மன்னர் **ஆறாம் விக்கிரமாதித்தன்** வெங்கியைக் கைப்பற்றிக் கொண்டதைக் குறிப்பிட்டோம். மேலைச் சாளுக்கிய ஆட்சியை விரும்பாத வெங்கித் தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க விக்கிரமன் தனது மகன் **இரண்டாம் குலோத்துங்கன்** தலைமையில் சோழப் படையை அனுப்பினார். ஆறாம் விக்கிரமாதித்தன் தோற்கடிக்கப் பட்டார். வெங்கி மீட்கப்பட்டு, சோழப் பேரரசின் மேலாதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. வெங்கியில் சோழர் பெருமை நிலைநாட்டப்பட்டது.

### கங்கபாடி மீட்பு

குலோத்துங்கனின் ஆட்சிக்கால இறுதிக் காலத்தில் ஹொய்சாளர்கள் **கங்கபாடி**யைக் கைப்பற்றிக் கொண்டனர். விக்கிரம சோழன் கங்கபாடி மீது படையெடுத்துச் சென்று, ஹொய்சாளர்களைத் தோற்கடித்து, கங்கபாடியை அவர்களது பிடியிலிருந்து மீட்டு, மீண்டும் சோழப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வந்தார். விக்கிரம சோழனின் அரசவைக் கவிஞராகத் திகழ்ந்த **ஒட்டக்கூத்தர்** அவரது புரவலரின் போர்ப் பெருமைகளை **விக்கிரம சோழன் உலா**வில் பதிவு செய்துள்ளார்.

### விக்கிரம சோழனின் சாதனைகள்

விக்கிரம சோழனின் தந்தை குலோத்துங்கன் விட்டுச் சென்ற சோழப் பேரரசைக் கட்டிக் காப்பாற்றியதோடு இழந்த வெங்கியையும், கங்கபாடியையும் மீட்டுக் கொடுத்தார். இவரது போர்க்காலச் சாதனைகளைவிட சமயச் சாதனைகள் மக்கள் மனதைக் கவர்ந்தன! சிதம்பரம் நடராஜர் கோயிலை மேலும் விரிவுபடுத்தி, அதன் பிரதான விமானத்தையும், கூரையையும் தங்கத்தால் வேய்ந்தார். இதற்காக ஓராண்டு வருவாய் முழுவதையும் செலவிட்டார்! இக்கோயிலுக்கருகே ஒரு அரண்மனையையும் கட்டிக் கொண்டு அதில் பெரும் பொழுதைக் கழித்தார். மன்னரின் சுற்றுப் பயணத்தின் போது தங்குவதற்கு **கொட்டாரங்கள்** கட்டப்பட்டன. சிதம்பரம் கோயிலுக்கும், அரண்மனைக்கும் செலவிட்ட வரிப்பணத்தைத் தொலைநோக்கோடு நீர்நிலை நிர்வாகத்துக்குச் செலவிட்டிருந்தால் இவர் காலத்தில் வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தையும், அப்பஞ்சத்தால் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளையும் தவிர்த்திருக்கலாம். விக்கிரம சோழனின் ஆட்சிக் காலம் **தமிழிலக்கியத்தின் வெள்ளிக் காலம்** என்று பாராட்டப்படுகிறது. இச்சோழ மன்னருக்கு **தியாக சமுத்திரம், அசனங்கள்** ஆகிய பட்டப் பெயர்கள் உண்டு.

## 12.3.3 இரண்டாம் குலோத்துங்கன்

### பட்டத்து இளவரசர்

விக்கிரம சோழன் மகன் **இரண்டாம் குலோத்துங்கன்** தந்தையின் ஆட்சிக் கால இறுதியில் **பட்டத்து இளவரசராக** முடிசூட்டப்பட்டார் (1133). இரண்டாண்டுகளுக்குப் பின் இவர் சோழ நாட்டு மன்னராக சிதம்பரம் நடராஜர் கோயிலில் வேதவைதீக முறைப்படி முடிசூட்டப்பட்டார் (1135). இவரது பதினைந்தாண்டு ஆட்சிக்



காலத்தில் இரண்டாம் குலோத்துங்கனின் முன்னுரிமை பேரரசைக் காப்பதிலிருந்து சமய சச்சரவுகளில் பங்கேற்பதாக இருந்தது. முதலாம் குலோத்துங்கன் சமரசக் கொள்கையைக் கடைப்பிடித்ததால் தரைப் படையும், கடற்படையும் பலப்படுத்தப்படவில்லை. விக்கிரம சோழன் இருப்பதைக் கொண்டு நெருக்கடிகளை சமாளித்தார். இரண்டாம் குலோத்துங்கனுக்குப் **பேரரசைக் காப்பதற்கோ, விரிவுபடுத்துவதற்கோ தேவையான ஆர்வமோ, அறிவாற்றலோ, விருப்பமோ இன்மையால்** அவரது நேரத்தை ஆன்மீகத்திலும், சிதம்பரம் அரண்மனையில் பொழுதைக் கழிப்பதிலும் செலவிட்டார். சோழப் பேரரசு சரியத் தொடங்கியது! பேரரசைப் போர்களால் மட்டுமே பாதுகாக்க முடியும். **போர்களற்ற பேரரசு** சொல்முறண் (Oxymorun) ஆகும்.

### சரிவின் அறிகுறி

இரண்டாம் குலோத்துங்கனின் ஆட்சிக் காலத்தில் தென் ஆர்க்காடு **காடவராயர்,** வட ஆர்க்காடு **கமழவராயர்,** தர்மபுரி **அதியமான்கள்**–சோழர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டனர். இவர்களது சுயாட்சி முயற்சி சோழப் பேரரசின் சரிவிற்கான அறிகுறியாகும். இவரது ஆட்சிக் காலம் **அமைதிக் காலம்**[12] என்று கூறப்படுகிறது. ஆனால் இந்த அமைதி புயலுக்கு முந்திய அமைதியைப் போன்றது! இரண்டாம் குலோத்துங்கனின் ஆட்சிக்கால இறுதியில் இவரது மகன் இரண்டாம் ராஜராஜனைப் பட்டத்து இளவரசனாக்கி அரசாட்சியில் பங்கேற்கச் செய்தார் (1146). இச்சோழ மன்னர் ஆட்சிப் பொறுப்பை மகனிடம் விட்டுவிட்டு கங்கை கொண்ட சோழபுரத்தில் வாழ்வதைவிட சிதம்பரம் அரண்மனையிலேயே வாழ்ந்தார். இதன் விளைவாக சோழப் பேரரசின் தரைப் படையும், கடற்படையும் வலுவிழந்தன.

### சமயப் பொறையின்மை

இரண்டாம் குலோத்துங்கன் தீவிர சிவபக்தர். இவரது முடிசூட்டுவிழாவே சிதம்பரம் நடராஜர் கோயிலில் தான் நடைபெற்றது! இக்கோயிலின் புனரமைப்புக்காகப் பெரும் பொருள் செலவிட்டார். கோயிலுக்குப் **பொற்கிரீடம்** வழங்கப்பட்டது. இரண்டாம் குலோத்துங்கனின் தீவிர சிவப்பற்று சமய வெளியாயிற்று! சமயப் பொறையின்மையால் வைணவ சமயத்தை வெறுத்தார்!! சிதம்பரம் கோயிலில் இருந்த **கோவிந்தராஜர் சிலை**யை வங்காள விரிகுடாவில் வீசி எறியச் செய்தார்!!! அதுமட்டுமல்ல. வைணவர்களைக் கொடுமைப்படுத்தினார். எனவே வைணவ இலக்கியம் குறிப்பிடும் **கிருமிகண்டன்** இவராகத்தான் இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.[13]

### இலக்கிய ஆர்வலர்

இரண்டாம் குலோத்துங்கன் இலக்கிய ஆர்வலர். **ஒட்டக்கூத்தர்** இவருடைய அரசவையிலும் தொடர்ந்து இடம் பெற்றார். இவர் இயற்றிய குலோத்துங்கன் சோழன் உலாவில் இவரது புரவலரின் பெருமையை விவரித்துள்ளார். இம்மன்னர் திருமாலைக் கடலில் எறிந்த தகவலையும் பதிவு செய்துள்ளார்! புகழேந்தியும், கம்பரும் இச்சோழ மன்னரின் சமகாலத்தவர்களாகக் கருதப்படுகிறது.

இச்சோழ மன்னரின் பட்டத்தரசி தியாகவல்லி. இவரது மற்றொரு அரசி சேர நாட்டு இளவரசி. இவருக்கு **அநபாய சோழன், திருநின்ற சோழன்** என்ற பெயர்களும் உண்டு. இவரது வாரிசு **இரண்டாம் ராஜராஜன்.**

### 12.3.4 இரண்டாம் ராஜராஜன், 1150–1173

#### பேரரசின் பலவீனம்

இரண்டாம் குலோத்துங்கனின் மகன் **இரண்டாம் ராஜராஜன்** பட்டத்து இளவரசராக இருந்து (1146–1150) அரசாட்சியில் பங்கேற்ற அனுபவத்தோடு ஆட்சிப் பொறுப்பேற்றார். வாரிசுரிமையால் மன்னரான இவருக்கு **சோழப் பேரரசைக் கட்டிக் காக்கக்கூடிய போராற்றலோ அல்லது அமைதியை நிலைநாட்டக்கூடிய அறிவாற்றலோ** இல்லை! வெங்கி நாடு மட்டும் சோழரது கட்டுப்பாட்டின் கீழ் உறுதியாக இருந்தது. இவரது ஆட்சிக் காலத்தில் பேரரசின் பிற பகுதிகளில் மைய அரசின் கட்டுப்பாடு தளர்ந்து போயிற்று. பாண்டிய நாட்டில் எழுந்த வாரிசுரிமைப் போராட்டம் இரண்டாம் ராஜராஜனின் பலவீனத்தை வெளிப்படுத்தியது.

#### பாண்டியர் பிரச்சனை

சோழப் பேரரசின் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பாண்டிய நாடு வாரிசுரிமைப் போட்டியால் நெருக்கடிக்கு உள்ளாயிற்று. **பராக்கிரம பாண்டியனுக்கும், குலசேகரப் பாண்டியனுக்கும்** இடையே இப்போட்டி ஏற்பட்டது. பராக்கிரம பாண்டியன் இலங்கை மன்னன் **முதலாம் பராக்கிரமபாகு**வின் உதவியை நாடினார். இலங்கை அரசன் சிங்களத் தளபதி **கங்காபுரனை** அனுப்பினார். பாண்டிய நாட்டு விவகாரத்தில் இலங்கை தலையிடுவதை விரும்பாத இரண்டாம் ராஜராஜன் குலசேகர பாண்டியனுக்கு ஆதரவாக இப்போராட்டத்தில் குறுக்கிட்டார்! சோழரின் குறுக்கீடு நிலைமையை மேலும் மோசமாக்கிற்று. வாரிசுரிமைப் போராட்டத்தின் இறுதியில் பராக்கிரம பாண்டியன் மகன் **வீரபாண்டியன்** மன்னரானார்! இரண்டாம் ராஜராஜன் ஆதரித்த குலசேகர பாண்டியன் வெற்றி பெறவில்லை! இந்நிகழ்ச்சி சோழ மன்னனின் இயலாமையை வெளிப்படுத்தியது. முதலாம் ஆதித்தன் காலத்திலிருந்து வீரராஜேந்திரன் காலம் வரை சோழர் மேலாதிக்கத்தின் கீழ் இருந்த பாண்டிய நாடு இரண்டாம் ராஜராஜன் காலத்தில் கைநழுவிப் போயிற்று! **சோழப் பேரரசின் பலவீனம் பாண்டியர் மீண்டெழுவதற்கான துவக்கமாயிற்று.**

#### சமய சாதனை

இரண்டாம் ராஜராஜனால் பாண்டியர் பிரச்சனையைத் தீர்க்க முடியாவிட்டாலும் **சமயத் துறையில் சாதனை** செய்ய முடிந்தது. இவரால் கும்பகோணத்துக்கருகே **தாராசுரத்தில்** கட்டப்பட்ட **ஐராவதீஸ்வரர் சிவாலயம்** தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில் மற்றும் கங்கை கொண்ட சோழபுரம் கோயிலுக்கு இணையாகக் கருதப்படுகிறது! இதுவன்றி இம்மன்னர் *தஞ்சை, சிதம்பரம், காஞ்சி, ஸ்ரீரங்கம், திருச்சி, மதுரை* கோயில்களுக்கும் தாராளமாக மானிய உதவிகள் செய்தார். இவர் சேர நாட்டுக் கோயில்களுக்கும் வேண்டிய உதவிகளைக் கொடுத்தார். கோயிலைக் கட்டுவதற்கும்,



கோயில்களைப் பராமரிப்பதற்கும் வாரி வழங்கிய இரண்டாம் ராஜராஜன் சோழ நாட்டின் நீர் நிலைகளைப் பராமரித்து, விவசாய உற்பத்தியை அதிகரிப்பதில் போதிய அக்கறை காட்டாமையால் கொடிய பஞ்சம் ஏற்பட்டு மக்கள் கிளர்ச்சி செய்தனர். தரைப்படையும், கடற்படையும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டன. சோழர் ஆதிக்கத்தின் கீழ் இருந்த பகுதிகள் பிரிந்து செல்வதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தன.

### 12.3.5 இரண்டாம் ராஜாதிராஜன், 1173–1178

#### வாரிசு நெருக்கடி

இரண்டாம் ராஜராஜன் **வாரிசின்றி இறந்ததால்** சோழ நாட்டில் நெருக்கடி ஏற்பட்டது. இறுதியில் விக்கிரம சோழனின் மகள் வயிற்றுப் பேரன் **ராஜாதிராஜன்** இரண்டாம் ராஜாதிராஜன் என்ற பெயரில் சோழ மன்னரானார். எனவே இச்சோழ மன்னன் இரண்டாம் ராஜாதிராஜனின் நேரடி வாரிசல்லர்.

#### பாண்டியர் பிரச்சனை

சோழ நாட்டின் வாரிசுரிமை நெருக்கடி தீர்ந்தாலும் பாண்டிய நாட்டில் ஏற்பட்ட வாரிசுரிமை நெருக்கடி தீரவில்லை! இரண்டாம் ராஜராஜனால் ஆதரிக்கப்பட்டு வாரிசுரிமைப் போட்டியில் தோற்றுப்போன **குலசேகரப் பாண்டியன்** மதுரையைக் கைப்பற்றினார். இலங்கை ராணுவ பலத்துடன் **வீரபாண்டியன்** வலுவான நிலையில் இருந்தார். எனவே, குலசேகர பாண்டியன் இரண்டாம் ராஜாதிராஜனின் ஆதரவைக் கோரினார். **அண்ணன் பல்லவராயரின்** தலைமையிலான சோழர் படை இலங்கைப் படையைத் தோற்கடித்தது.[14] எனினும் வீரபாண்டியனே பாண்டிய மன்னராக நீடித்தார். **பாண்டிய நாடு பெயரளவுக்கு சோழரது மேலாதிக்கத்தின் கீழ் இருந்தது.**

#### இலங்கைப் பிரச்சனை

#### சந்தர்ப்பவாத அரசியல்

பாண்டிய நாட்டில் ஏற்பட்ட பின்னடைவால் ஏமாற்றமடைந்த இலங்கை மன்னன் **பராக்கிரமபாகு** சோழ நாட்டைத் தாக்கும் முயற்சியை மேற்கொண்டார். இதையறிந்த இரண்டாம் ராஜாதிராஜன் இலங்கையைத் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்தினார். எனவே, இலங்கை மன்னன் **தன்நிலையை மாற்றிக் கொண்டு** குலசேகர பாண்டியன் பக்கம் சேர்ந்து கொண்டு சோழருக்கு எதிராகச் செயல்பட்டார். குலசேகர பாண்டியனும் தன்னை ஆதரித்த இரண்டாம் ராஜாதிராஜனைக் கைவிட்டார்! குலசேகர பாண்டியனின் சந்தர்ப்பவாதத்தை அறிந்த இரண்டாம் ராஜாதிராஜனும் தன்நிலையை மாற்றிக் கொண்டு வீரபாண்டியன் பக்கம் சேர்ந்தார்! முதலாம் குலோத்துங்கன் துவக்கிவைத்த சமரசவாதக் கொள்கை இரண்டாம் ராஜாதிராஜன் ஆட்சிக் காலத்தில் **சந்தர்ப்பவாத அரசியலாக** உருமாற்றமடைந்தது!

#### குறுநில மன்னர்கள் பிரச்சனை

இரண்டாவது ராஜராஜன் காலத்திலிருந்தே சுதந்திரமாகச் செயல்படத் துவங்கிய குறுநில மன்னர்கள் இரண்டாம் ராஜாதிராஜன் ஆட்சிக் காலத்தில் கூட்டணி அமைத்து

சுயாட்சி உரிமை கோரத் துவங்கினர். **சம்புவராயர், காடவராயர், மலையமான், நெல்லூர் தெலுங்கு சோடர்கள்** ஆகியோர் தனியாகவும் கூட்டாகவும் வட சோழப் பேரரசில் தனிக்காட்டு ராஜாக்களாகச் செயல்படத் துவங்கினர். வால் நாயை ஆட்டும் நிலை உருவாயிற்று! இதன் விளைவாக சோழப் பேரரசு பலவீனப்பட்டது; பேரரசுப் பகுதிகள் விலகிச் செல்லத் தலைப்பட்டன. இரண்டாம் ராஜாதிராஜன் இவற்றைப் பற்றிக் கவலைப்படாமல் பூந்தோட்டங்கள் அமைப்பதில் ஆர்வம் காட்டினார்!

## 12.3.6 மூன்றாம் குலோத்துங்கன், 1178–1216

### உடனடி நெருக்கடிகள்

இரண்டாம் ராஜாதிராஜன் இறக்குமுன் **மூன்றாம் குலோத்துங்கனைத்** தனது வாரிசாகத் தேர்ந்தெடுத்தார்.[15] குலோத்துங்கன் பல நெருக்கடிகளை எதிர்க்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலையில் இருந்தார். முதலில் **சரிவுப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருந்த சோழப் பேரரசைத் தடுத்து நிறுத்த வேண்டும்.** அடுத்து பேரரசுக்கு **எதிரான நாடுகளை வழிக்குக் கொண்டுவர வேண்டும்.** இவை மூன்றாம் குலோத்துங்கனின் **உடனடி சவால்களாக** இருந்தன. எனவே, சோழப் பேரரசுக்கு எதிரான சவால்களை எதிர்க் கொண்டு, பிரிவினை சக்திகளை ஒடுக்கி, பேரரசின் பழம் பெருமையை மீட்க வேண்டிய பொறுப்பு மூன்றாம் குலோத்துங்கனுக்கு இருந்தது.

### இரட்டைச் சவால்

**மதுரைப் பாண்டியரும், இலங்கை சிங்களவரும்** என்றுமே சோழர் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டதில்லை. அவர்கள் சுதந்திரமாக இருப்பதையே விரும்பினர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் இவ்விரு நாடுகளும் தனியாகவும், கூட்டு சேர்ந்தும் சோழப் பேரரசை எதிர்த்து வந்தன. ஆனால் சோழப் பேரரசர்கள் அவர்களது எதிர்ப்பைத் தேசத் துரோகமாகக் கருதி படை வலிமை கொண்டு அடக்கி ஒடுக்கினர். மூன்றாம் குலோத்துங்கனும் **ஏகாதிபத்திய மனப்பான்மையுடன்** இந்த இரட்டைச் சவாலை எதிர்க்கொள்ளத் தீர்மானித்தார்.

### இலங்கை எதிர்ப்பு

சோழப் பேரரசின் ஆதரவோடு ஆட்சியில் நீடித்த **வீரபாண்டியன்** இலங்கை மன்னன் **பராக்கிரமபாகு**வுடன் சேர்ந்து கொண்டு சோழர் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதற்கான முயற்சியில் முனைப்புடன் ஈடுபட்டார்! வீரபாண்டியனுக்கு எதிராகக் குலசேகரப் பாண்டியனுக்கு உறவினரான **விக்கிரம பாண்டியன்** வாரிசுரிமை கோரினார். இதனால் பாண்டிய நாட்டில் மற்றொரு வாரிசுரிமைப் போராட்டம் வெடிக்கும் நெருக்கடி ஏற்பட்டது. மூன்றாம் குலோத்துங்கன் இந்த நெருக்கடியை வாய்ப்பாகக் கொண்டு, பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, சிங்கள–பாண்டியப் படையைத் தோற்கடித்து, வீரபாண்டியனை நாடு கடத்தி, **விக்கிரம பாண்டியனை** மதுரை சிம்மாசனத்தில் அமர்த்தினார் (1182). பாண்டிய நாடு சோழப் பேரரசின் பேராதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரப்பட்டது.



### பாண்டியர் எதிர்ப்பு

நாடு கடத்தப்பட்ட **வீரபாண்டியன்** சோழ ஆதிக்க எதிர்ப்பாளர்களான இலங்கையையும், வேணாட்டையும் ஒன்று திரட்டி மதுரை அரியணையைக் கைப்பற்றும் முயற்சியில் இறங்கினார். ஆனால் இம்முயற்சியும் **நெட்டூர்ப் போர்க்களத்தில்** முறியடிக்கப்பட்டது. இவ்விரண்டாம் படையெடுப்பு வெற்றியைக் குறிக்க '**மதுரையும் பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய**' குலோத்துங்கன் என்று பாராட்டப்பட்டார். வீரபாண்டியன் இலங்கைக்குத் தப்பிச் சென்றார். மூன்றாம் குலோத்துங்கனுக்கு மதுரையில் வீராபிஷேகம் நடத்தப்பட்டது. இவ்வெற்றிக்குத் துணையாக இருந்தோர் பாராட்டப்பட்டனர்.

### பாண்டியர் தோல்வி

எனினும் மூன்றாம் குலோத்துங்கனின் வெற்றி நெடுங்காலம் நீடிக்கவில்லை! விக்கிரமனுக்குப் பின் பாண்டிய மன்னரான அவரது மகன் **சடையவர்மன் குலசேகர பாண்டியன்** சோழ நாட்டுக்குக் கீழ்ப்படியவும் திறை செலுத்தவும் மறுத்துவிட்டார். எனவே, மூன்றாம் குலோத்துங்கன் மூன்றாவது முறையாகப் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, மதுரையை முற்றுகையிட்டு, அரண்மனையையும் முடிசூட்டு மண்டபத்தையும் இடித்துத் தள்ளி பெருஞ்சேதம் விளைவித்தார்.[16] இவ்வெற்றியின் நினைவாக மூன்றாம் குலோத்துங்கன் **சோழ பாண்டியன்** என்ற பட்டப் பெயரை சூட்டி மகிழ்ந்தார்!

### பாண்டியர் பகை

தோல்வி கண்ட **குலசேகர பாண்டியன்** சோழர் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டதால் மீண்டும் அவரே பாண்டிய மன்னராக நீடித்தார். எனினும் **பாண்டியர் பகை** போகவில்லை! பாண்டியர் சோழ ஆதிக்கத்துக்கெதிராகக் கிளர்ந்தெழ தக்க தருணத்துக்காகக் காத்திருந்தனர்! இதற்கிடையே கொங்கு நாடு ஹொய்சாளர்களின் ஊடுறுவலிலிருந்து காப்பாற்றப்பட்டது. இருப்பினும் **சோழப் பேரரசின் பலவீனத்தைப்** புரிந்து கொண்ட குறுநில மன்னர்கள் சோழர் மேலாதிக்கத்திலிருந்து விடுபடத் துவங்கினர்! "அணையப் போகிற விளக்கு சுடர்விட்டு எரிவது போல் குலோத்துங்கன் காலத்துச் சோழப் பேரரசு விளங்கியது".[17]

### வேதனை சாதனை

மூன்றாம் குலோத்துங்கன் கங்கைகொண்ட சோழபுரத்தைத் தலைநகராகக் கொண்டே ஆட்சி செய்தார். இச்சோழ மன்னரும் தரைப் படையையும், கடற்படையையும் பலப்படுத்துவதற்குப் பதிலாகக் கோயில்களைக் கட்டுவதிலும், கட்டப்பட்ட கோயில்களின் திருப்பணிகளிலும், பராமரிப்பிலும் அதிக அக்கறை காட்டினார். இவரது ஆட்சிக் காலத்தில் **மதுரை, சிதம்பரம், காஞ்சி, திருவாரூர், திருவிடைமருதூர், ராஜராஜபுரம்** கோயில்கள் பெரிதும் பயனடைந்தன. **திருவொற்றியூரில்** ஒரு வியாகரணப் பள்ளி இருந்ததாகக் கூறப்படுகிறது. பாசன வசதிகளும், விவசாயமும் தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டதால் சோழ நாட்டில் மீண்டும் **இருமுறை பஞ்சம்** ஏற்பட்டது (120

1202). இப்பஞ்சகாலங்களில் அரசாங்கத் துறையைவிட தனியார் அமைப்புகளே பஞ்ச நிவாரணப் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டன.[18] மூன்றாம் குலோத்துங்கனின் தனிப்பட்ட திறமைகளே சோழப் பேரரசு வீழ்ச்சியடையாமல் பாதுகாத்தன. மூன்றாம் குலோத்துங்கன்தான் கடைசி சோழ மாமன்னன்.[19] இவரது ஆட்சிக் காலம் சோழரது கட்டிடக்கலை மற்றும் கலை வரலாற்றின் கடைசி சகாப்தமாகும்.[20] **மூன்றாம் குலோத்துங்கனின் வெற்றி வேதனை கலந்த சாதனையாகும்.** சோழப் பேரரசு வீழாமல் பார்த்துக் கொண்டதே இவரது பங்களிப்பாகும்! குலோத்துங்கன் பெருமைபாடிய ஒட்டக்கூத்தர் இம்மன்னனை **'கருவீரமேகம்', 'காட்டாண்மை வீரன்'** என்றெல்லாம் வர்ணித்துள்ளார். மூன்றாம் குலோத்துங்கனுக்கு **தியாக வினோதன்** என்ற விருதுப் பெயரும் உண்டு.

## 12.3.7 மூன்றாம் ராஜராஜன், 1216–1246

### திறமையற்ற வாரிசு

மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு ஆட்சிக்கு வந்த **மூன்றாம் ராஜராஜன்**[21] திறமையான மாமன்னனின் திறமையற்ற வாரிசாவார். சாதாரண ஒரு மன்னனை அசாதாரணமான நெருக்கடிகள் சூழ்ந்திருந்தன. தெற்கிலிருந்து பாண்டியர் மற்றும் சிங்களவரின் எதிர்ப்பு; மேற்கில் வலிமைமிக்க ஹொய்சாளர்களின் எழுச்சி; வெங்கிப் பகுதியில் செல்வாக்கு பெற்ற தெலுங்கு சோழர்கள்; குறுநில மன்னர்களின் உட்புறக் கிளர்ச்சிகள்... இச்சவால்களை எதிர்க்கொள்ளக்கூடிய அறிவாற்றலோ, போராற்றலோ, நிர்வாக அனுபவமோ, ஆளுமைத் திறனோ மூன்றாம் ராஜராஜனுக்கு இல்லை. **வட்டத் துளையில் போட்ட சதுரக்கட்டை** போல் இருந்தார்!

### பாண்டியர் படையெடுப்பு

பாண்டியரிடமிருந்து திறை பெற்று வந்த சோழர்கள் அவர்களுக்குத் திறை செலுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். சோழர்களுக்கும் பாண்டியர்களுக்கும் இடையேயான உடன்பாட்டின்படி மூன்றாம் ராஜராஜன் திறை செலுத்த மறுத்தமையால் **மாறவர்மன் சுந்தரபாண்டியன்** சோழ நாட்டின் மீது படையெடுத்தார். தஞ்சையும், கறந்தையும் கைப்பற்றப்பட்டு, சூறையாடப்பட்டு, தீக்கிரையாக்கப்பட்டன! குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் நோக்கத்தோடு ஹொய்சாள மன்னன் **இரண்டாம் வல்லாளன்**[22] மூன்றாம் ராஜராஜனுக்கு ஆதரவாகக் களமிறங்கினார்! ஒய்சாள–சோழ கூட்டுப் படையை எதிர்க்கொள்ள முடியாத மாறவர்மன் சுந்தரபாண்டியன் பின்வாங்கிச் சென்றார்.

### தண்டனைத் தாக்குதல்

பின்வாங்கிச் சென்ற **மாறவர்மன் சுந்தரபாண்டியன்** சோழ மன்னனிடமிருந்து திறை வசூலிப்பதற்காக **தண்டனைத் தாக்குதலை** (Punitive Expedition) நடத்தினார்! இத்தாக்குதலின் போது மூன்றாம் ராஜராஜன் கங்கை கொண்ட சோழபுரத்திலிருந்து தப்பிச் சென்றார். ஒய்சாள நாடு நோக்கித் தப்பிச் சென்ற சோழ மன்னனை சோழப் பேரரசின் காடவக குறுநில மன்னரான **கோப்பெருஞ்சிங்கன்** அவரது தலைநகர்



**சேந்தமங்கலத்தில்** வழிமறித்து, கைது செய்து, சிறையிலிட்டார்![23] இதை அறிந்த ஒய்சாள மன்னன் **வீரநரசிம்மன்** பெரும் படையுடன் வந்து, காவிரிக் கரையில் மகேந்திரமங்கலத்தில் பாண்டியர் படையைத் தோற்கடித்த பின்னர், கோப்பெருஞ்சிங்கனையும் வென்று, மூன்றாம் ராஜராஜனை சிறையிலிருந்து விடுவித்து அவரை மீண்டும் சோழ சிம்மாசனத்தில் அமர்த்தினார்! அதுமட்டுமல்ல, சோழ மன்னரின் தலைவிதியைத் தீர்மானித்த ஒய்சாள மன்னர் தனது படை வலிமையைக்காட்ட ராமேஸ்வரம் வரை சென்று திரும்பினார்! அதன் பின்னர் தமிழ்நாட்டில் ஒய்சாளரின் செல்வாக்கு கொஞ்சகாலம் நீடித்தது!

### உட்புறக் கிளர்ச்சி

பாண்டியப் படையெடுப்பால் சோழ நாட்டின் உட்புறக் கட்டுக்கோப்பு குலைந்தது. சோழப் பேரரசின் பலவீனத்தைப் புரிந்து கொண்ட குறுநில மன்னர்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். சோழர்களின் எதிரிகளுடன் கூட்டு சேர்ந்தனர். தக்க தருணத்தைத் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்! இச்சந்தர்ப்பவாதக் கூட்டணிக்குத் தலைமை தாங்கினார் காடவர்கோன் **கோப்பெருஞ்சிங்கன்.** உட்புற எதிர்ப்பு சோழப் பேரரசின் வீழ்ச்சியை விரைவுபடுத்தியது. மூன்றாம் ராஜராஜன் இவ்வீழ்ச்சிக்கு சாட்சியாக இருந்தார்!

## 12.3.8 மூன்றாம் ராஜேந்திரன், 1246–1279

### திறமையும் திறமையின்மையும்

மூன்றாம் ராஜராஜன் இறப்பதற்குமுன் அவரது மகன் ராஜேந்திரனைப் பட்டத்து இளவரசராக்கினார். **மூன்றாம் ராஜேந்திரன்** என்ற பெயரோடு சோழ சிம்மாசனத்தில் அமர்ந்த இவர் **திறமையற்ற தந்தைக்குப் பிறந்த திறமைமிக்க மகன்!** இவர் வேகமாக வீழ்ந்து கொண்டிருந்த சோழப் பேரரசைக் காப்பாற்றி, மேலாதிக்கத்தை மீட்டு, சோழர் குலப் பெருமையை நிலைநாட்ட முடிவு செய்தார். ஆனால் அவரது **நினைப்புக்கும் நடைமுறைக்குமிடையே மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசமிருந்தது.** விருப்பம் பந்தயக் குதிரையானால் முடவன்கூட சவாரி செய்யலாமல்லவா? மூன்றாம் ராஜேந்திரனின் முயற்சி நொண்டி மலையேறிய கதையாயிற்று!

### பரஸ்பர பகை

மூன்றாம் ராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் சோழர்–பாண்டியர் பகை உச்சகட்டத்தை எட்டியது. இருதரப்பினரும் **'கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல்'** என்ற பழிக்குப் பழிவாங்கும் பரஸ்பர விரோதக் கொள்கையைக் கடைப்பிடித்தனர். மூன்றாம் ராஜேந்திரன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, மூர்க்கத்தனமாகத் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்தினார். இத்தாக்குதலின் போது இரு பாண்டிய இளவரசர்கள் கொல்லப்பட்டனர்.[24] **வெறுப்பு விதையை விதைத்த மூன்றாம் ராஜேந்திரன் வெறுப்பையே அறுவடை செய்ய வேண்டியதாயிற்று!**

பாண்டியர் வெற்றி

**முதலாம் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன்** மார்க்கத்தரைப் பற்றிக் கவலைப்படாமல் பாண்டிய நாட்டிலிருந்த சோழர் படையை இறக்கமின்றித் தாக்கிப் பின்வாங்கச் செய்தார். அவருக்குப்பின் பாண்டிய மன்னரான **மாறவர்மன் குலசேகர பாண்டியனும்** அவருக்கு வலக்கரமாக இருந்து செயல்பட்ட அவரது மகன் **ஜடாவர்மன் வீரபாண்டியனும்** சோழர் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று, கங்கைகொண்ட சோழபுரத்தைத் தாக்கி, கோட்டையை அழித்து, கோயிலின் வெளிப்புறச் சுவற்றை இடித்துத் தள்ளி பேரழிவை ஏற்படுத்தினர். சோழருக்குத் துணைபோன பல்லவரும் தோற்கடிக்கப் பட்டனர்! **சோழ நாடு பாண்டிய நாட்டுடன் இணைக்கப்பட்டது.** மூன்றாம் ராஜேந்திரன் இப்போரில் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது! தமிழ் நாட்டில் சோழப் பேரரசுக்குப் பதில் பாண்டியப் பேரரசு புதுப்பிக்கப்பட்டு நிலைநாட்டப்பட்டது. "நாலேகால் நூற்றாண்டுக் காலம் தமிழ்நாட்டில் ஈடு இணையற்றுத் திகழ்ந்த சோழப் பேரரசு பேர் சொல்வதற்கு ஆள் இல்லாமல் மறைந்து போயிற்று".[25]

## 12.4 எழுச்சியும் வீழ்ச்சியும்

தமிழ்நாட்டு வரலாற்றில் சோழரின் எழுச்சியும் வீழ்ச்சியும் **எரிமீனை** (Meteor) போன்று எழுந்து, பிரகாசித்து, மறைந்தது. இவர்களது உயர்வும் சரிவும் பல வரலாற்றுப் படிப்பினைகளைக் கொடுக்கின்றன. சோழ நாட்டை முறையே விஜயலாயன், ராஜராஜன், குலோத்துங்கன் வழிவந்தோர் மாபெரும் பேரரசை உருவாக்கி, விரிவுபடுத்தி, பெருமை சேர்த்தனர். ஐநூறு ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தனர். விஜயலாயன், ராஜராஜன், ராஜேந்திரன், குலோத்துங்கன் ஆகிய மாமன்னர்கள் தங்களது தொலைநோக்காலும், அறிவாற்றலாலும், வீரத்தாலும் சவால்களை எதிர்க்கொண்டு வெற்றி பெற்றனர்.

எனினும் விஜயலாயன் உருவாக்கிய சோழப் பேரரசை அவரது வழிவந்த இரண்டாம் பராந்தகன் என்ற சுந்தரசோழன் கட்டிக்காக்க மேற்கொண்ட முயற்சி விழலுக்கிறைத்த நீராயிற்று! ராஜராஜனும், ராஜேந்திரனும் விரிவுபடுத்திய சோழ வல்லரசு ஆதிராஜேந்திரன் ஆட்சிக்காலத்தில் நிலைகுலைந்து போயிற்று! அதேபோன்று குலோத்துங்கன் புதுப்பித்த சோழப் பேரரசு மூன்றாம் ராஜேந்திரன் காலத்தில் முற்றிலும் மூழ்கிப் போயிற்று! ஆக்க ஆற்றல் பெற்ற மன்னர்கள் (Creative Monarchs) வெற்றி பெறுகிறார்கள்; மக்கள் அவர்களைப் பின்பற்றுகின்றனர். ஆனால் திறமையற்ற வாரிசுகளின்கீழ் **உட்பகையும்** (Internal Proleteriat), **புறப்பகையும்** (External Proletariat) புதுப்பலம் பெற்று பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்துவிடுகின்றனர்.

### மேற்கோள் நூற்பட்டியல்


1. இருவழிச் சொந்தக்காரரான (ராஜேந்திரன் மகள்; குந்தவையின் மகன்) குலோத்துங்கனின் குருதியில் 75 விழுக்காடு சோழ இரத்தம் ஓடியதாகக் குறிப்பிட்டுள்ளார் ஆர்.சத்தியநாதய்யர்.

   R.Sathianathiar, A History of India, Vol.I, Madras, 1952, p.390.

பகுதி – VII : பாண்டியர் காலம்

# 9. பாண்டியர் பேரரசு I, கி.பி.575–920

> பாண்டியர் உலக வரலாற்றிலேயே வேறு எந்த அரச மரபுக்குமில்லாத இடைவெளியற்ற நீண்டகால ஆட்சி செலுத்தி வந்தனர்.
>
> – கே.வி.ராமன்

## 9.1 பாண்டியர் பரம்பரை

**பாண்டியர்** என்ற சொல் **பாண்டி** என்ற தமிழ்ச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். **பாண்டி** என்றால் **எருது** என்று பொருள். அதாவது **ஆண்மைக்கும், வீரத்துக்கும்** அடையாளமாக விளங்குவது. இச்சொல் **பழம்பெரும் நாடு** என்ற பொருளிலும் பயன்படுத்தப்படுகிறது. பாண்டிய மரபினர் தென்னிந்திய வரலாற்றில் பழம்பெரும் பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள். சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் என்ற பெருமைக்குரியவர்கள். களப்பிரர் இடைவெளி நீங்கலாக இவர்களுக்குத் தொடர்ச்சியான வரலாறு உண்டு. களப்பிரர் சங்ககாலப் பாண்டியர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தனர். அதேபோன்று தென் தமிழ் நாட்டில் களப்பிரர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்தவர்கள் பாண்டியர்கள்! இம்மாற்றத்தைச் செய்தவர் பாண்டியன் **கடுங்கோன்**.

## 9.2 வரலாற்றுச் சான்றுகள்

### 9.2.1 கல்வெட்டுச் சான்றுகள்

**கல்வெட்டுச் சான்றுகள்** பாண்டியப் பேரரசர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன. ஆனால் ஆயிரக்கணக்கான கல்வெட்டுகள் இருப்பினும் இவற்றுள் பல சிதைவுற்ற நிலையிலேயே உள்ளன! கிடைக்கின்ற **குறைவான கல்வெட்டுத் தகவல்களும்** கோயில்களுக்கும், பிராமணர்களுக்கும் அளிக்கப்பட்ட அறக்கொடைகள் பற்றியனவாக உள்ளன. **சேரமாதேவி கல்வெட்டு** நிலவரி ஆட்சி முறையைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகிறது.[1] வானியல் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள் தெளிவாக இல்லை. இவற்றைக் கொண்டு பாண்டியரின் மரபு வரிசையையோ அல்லது காலக் கணிப்பையோ செய்வது கடினம்.

### 9.2.2 செப்பேட்டுச் சான்றுகள்

களப்பிரர் காலத்துக்குப்பின் ஆட்சிக்கு வந்த பாண்டியர் பற்றி அறிந்து கொள்வதற்கான **பட்டயச் சான்றுகள்** பல உள்ளன. இவற்றுள் **வேள்விக்குடி செப்பேடுகள், தளவாய்புரச் செப்பேடுகள், சிவகாசிச் செப்பேடுகள், திரிபுவனம் செப்பேடுகள்** குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக, **நெடுஞ்சடையன் பராந்தகனின் (கி.பி.765–790) வேள்விக்குடி செப்பேடுகள்,** சங்க காலத்துப் பாண்டியன் **பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி** பற்றியும், **'களப்பிரனெனும் கலியரசன்'** குறித்தும், பாண்டியன் பராந்தகன் களப்பிர அரசனை தோற்கடித்து, வேள்விக்குடியை மீட்டு

**நற்சிங்கன்** என்ற **பிராமணனுக்கு** வேள்வி செய்து நிலக்கொடையாகக் கொடுத்ததைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இவையாவும் அரிய வரலாற்றுத் தகவல்கள் தான்.

எனினும், கி.பி.8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த **சடையவர்மன் பராந்தகன் நெடுஞ்சடையன்** சங்க காலத்தில் வாழ்ந்த பாண்டியன் **பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி** மற்றும் கொற்கைக் கிழான் **நற்கொற்றன்** அல்லது **நற்சிங்கன்** என்ற அந்தணனுக்கு அளித்த **வேள்விக்குடி** என்ற நிலப்பகுதி பற்றிய தகவல்கள் மிகுந்த சர்ச்சைக்குரியனவாக உள்ளன. ஏனெனில் **வேள்விக்குடி** என்ற சொல் சங்க இலக்கியங்களில் இடம் பெறவில்லை. மேலும் வேள்விக்குடி செப்பேடுகள் கொடுக்கும் தகவல்களை ஒப்பிட்டு அறியக்கூடிய வேறுசான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை. எனவே, **"வரலாற்று மூலங்கள், ஆவணங்கள் என்று சொல்லப்படுபவற்றையும், புனிதங்கள் என்று ஆராதிக்காமல், அவற்றின் வாய்ப்பாடுகளை வழிமறித்துப், பன்முக வாசிப்புகளுக்கு உட்படுத்த வேண்டும்; அவ்வாறு உட்படுத்தப்படும் போதுதான் வரலாறு புறவயமான அறிவியல் நிலைக்கு உயரும்".**[2] வேள்விக்குடிப் பட்டயச் சான்றுகளைக் கொண்டு பாண்டிய மன்னர்களை அடையாளம் காணவோ, அவர்களது கால வரையறையை கணக்கிடவோ இயலாது.[3] இருப்பினும் வேள்விக்குடி செப்பேடு **இருண்ட வானில் ஒளிக்கீற்றுபோல** உள்ளது என்பதில் ஐயமில்லை.

### 9.2.3 இலக்கியச் சான்றுகள்

**புராணங்களும், தலபுராணங்களும்** பாண்டியர்களின் பெயர்களைக் குறிப்பிடுவதோடு மட்டுமின்றி அவர்கள் கால **வாழ்வியல்** பற்றி அறிந்து கொள்ளவும் பயன்படுகின்றன. குறிப்பாக **மதுரை தல வரலாறும், பண்பாட்டுச் சின்னங்களும்** சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான பண்பாட்டு வரலாற்றைக் கொண்ட மதுரை நகரின் பெருமையைப் பற்றி அறிந்து கொள்ள உதவுகின்றன.[4]

### உத்தேச காலவரையறை

களப்பிரர்களுக்குப்பின் வந்த பாண்டியர்களைப் பற்றிய புராண, தொல்பொருளியல், கல்வெட்டு, பட்டய, இலக்கியச் **சான்றுகள் மிகவும் குறைவு.** இக்குறைவான ஆதாரங்களைக் கொண்டு பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலங்கள் பற்றி சரியாகக் கணிப்பதில் பல **இடையூறுகளும், இடைவெளிகளும்** உள்ளன. இவர்களின் காலவரையறை பற்றி ஆழமாக ஆய்வு செய்த **கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி, சதாசிவப் பண்டாரத்தார், ஆர்.சத்தியனாதய்யர்** போன்றோர் வெவ்வேறு முடிவுகளுக்கு வருகின்றனர்! இவர்களது மாறுபட்ட காலக் கணிப்புகள் குழப்பத்தை ஏற்படுத்துவதாக உள்ளன. இப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ள பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலங்கள் **உத்தேசமானவையே; சரியானவையல்ல!** இதுபற்றி இக்கால ஆய்வாளர்கள் ஒன்றுகூடி விவாதித்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது இன்றியமையாதது.



## 9.3 பாண்டியப் பேரரசர்கள், 575–920

### 9.3.1 கடுங்கோன், 575–600

சங்க காலத்துக்குப்பின் நாம் சந்திக்கும் முதல் பாண்டிய மன்னன் **கடுங்கோன்.** கடுங்கோன் இவர் **பாண்டிய ஆதிராஜா** என்று குறிப்படப்பட்டுள்ளார்.[5] **'களப்பரனெனுங் கவியரைசன் கைக்கொண்டவன்'** என்று வேள்விக்குடி செப்பேடு செப்புகிறது.[6] கடுங்கோன் களப்பிரரைத் தோற்கடித்து, பாண்டிய நாட்டை மீட்டு, மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி அமைத்தது **வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்வாகும்.** கடுங்கோன் களப்பிரரை வீழ்த்தியதும், பாண்டிய அரசை மீண்டும் அமைத்ததும் அரிய சாதனைகளாகும்.[7] **"வளைந்து கொடுக்காத விரோதிகளுடைய ஒளிமிக்க நகரங்களை அழித்தவர்"** என்று பாராட்டப்பட்டுள்ளார் கடுங்கோன்.[8]

இப்பாண்டிய மன்னர் **சிம்ம விஷ்ணு பல்லவரின் சமகாலத்தவர்.** சிம்ம விஷ்ணு தமிழ் நாட்டின் வடபகுதியில் களப்பிரர் ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்து தொண்டை மண்டலத்தில் பல்லவர் ஆட்சியை ஏற்படுத்தியதைப் போன்று, தமிழ் நாட்டின் தென் பகுதியில் களப்பிரரை வென்று பாண்டிய நாட்டை மீட்டவர் கடுங்கோன். இவர் களப்பிரர்களைக் 'களைகட்டறுத்து' பாண்டிய நாட்டைக் கைப்பற்றிக் காப்பாற்றினார். இவரது களப்பிரர் வெற்றி **பிராமண சமயத்தின் வெற்றி**யாகக் கருதப்படுகிறது.[9] கடுங்கோன் மேலும் பல குறுநில மன்னர்களையும் தோற்கடித்து அவர்களின் ஆட்சிப் பகுதிகளையும் பாண்டிய நாட்டுடன் சேர்த்தார். இதன் மூலம் இப்பாண்டிய மன்னர் **பாண்டியப் பேரரசின் அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தார்.**

### 9.3.2 மாறவர்மன் அவனி சூளாமணி, 600–645

**மாறவர்மன் அவனி சூளாமணி** கடுங்கோனின் மகள். இவர் ஆட்சிக்கு வந்தபின் **மாறவர்மன் சடையவர்மன்** என்ற பட்டப் பெயரைப் பெற்றார். இவர் காலத்தில் கொடுக்கப்பட்ட இப்பட்டப் பெயரைப் பின்வந்த பாண்டிய மன்னர்களும் சூட்டிக் கொண்டனர். இம்மன்னரை **'வாய்மையின் வேந்தன்'** என்று செப்புப் பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. 30 ஆண்டு காலம் ஆட்சி செய்த மாறவர்மன் அவனி சூளாமணி பற்றி வேறு தகவல்கள் கிடைக்கவில்லை!

### 9.3.3 செழியன் சேந்தன், 645–670

மாறவர்மன் அவனி சூளாமணிக்குப் பின் அவருடைய மகன் **சேந்தன செழியன்** அரியணையேறினார். இப்பாண்டிய மன்னர் சேரர்களைத் தோற்கடித்து, சேர நாட்டைப் பாண்டியரது ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்து **வானவன் செங்கோற் சேந்தன்** என்று அழைக்கப்பட்டார்.[10] செழியன் சேந்தன் பாண்டியர் **பேரரசின் எல்லையை விரிவுபடுத்திக்** கொண்டிருக்கும் போது வடக்கிலிருந்து பல்லவப் பேரரசர்கள் பாண்டியர் நாடு நோக்கித் தங்களது பேரரசின் எல்லையை விரிவுபடுத்திக் கொண்டிருந்தனர்! தெற்குத் தமிழ் நாட்டில் செழியன் சேந்தனின் செல்வாக்கு பெருகுவதை பல்லவப் பேரரசர்

நரசிம்மவர்மன் விரும்பவில்லை. இதன் காரணமாகப் **பாண்டியர்–பல்லவர் ஆதிக்கப் போட்டி** வலுவடைந்தது!

செழியன் சேந்தன் நெல்லை மாவட்டத்தில் உள்ள **மலையடிக்குறிச்சியில்** மலையைக் குடைந்து ஒரு குகைக் கோயிலை உருவாக்கியதாகக் கூறப்படுகிறது. இவரது ஆட்சிக் காலத்தில் காஞ்சிக்கு வருகைதந்த சீனப் பயணி **யுவான் சுவாங்** பாண்டிய நாடு பஞ்சத்தின் பிடியில் இருந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்! செழியன் சேந்தன் வீரத்துக்கும், நீதியுணர்வுக்கும் பெயர் பெற்றவர்.

### 9.3.4 அரிகேசரி பராங்குச மாறவர்மன், 670–710

#### கூன் பாண்டியன்

சேந்தன் செழியனின் மகன் **அரிகேசரி பராங்குச மாறவர்மன்** பஞ்சத்துக்கிடையே பதவிக்கு வந்து, பாண்டிய நாட்டைப் பஞ்சத்தின் பிடியிலிருந்து மீட்டு, பேரரசுப் பெருக்கத்தில் அக்கறை கொண்டார். இந்த மன்னரே **கூன் பாண்டியன், சுந்தர பாண்டியன்** என்றும் கருதப்படுகிறது. **பராங்குசன்** என்பது இவரது பட்டப் பெயராகும். இவரை **நின்றசீர் நெடுமாறன்** என்று பெரிய புராணம் பாராட்டுகிறது.

#### சோழருடன் மணவுறவு

சேந்தன் செழியன் ஆட்சிக் காலத்தில் புகைந்து கொண்டிருந்த பாண்டிய–பல்லவப் பகைமைத்தீ அரிகேசரி மாறவர்மன் காலத்தில் பற்றிக் கொண்டது. **நெல்வேலியில்** நடைபெற்ற போரில் பல்லவரைத் தோற்கடித்து **நெல்வேலி வென்ற நெடுமாறன்** என்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்.[11] இப்பாண்டிய மன்னர் பல்லவர்களை மட்டுமன்றி சேரர்களையும், பல குறுநில மன்னர்களையும் வெற்றி கொண்டதாகக் கூறப்படுகிறது. பல்லவர் ஆதிக்கத்தின் கீழ் இருந்த சோழர் மீது படையெடுத்து **உறையூரைக் கைப்பற்றி,** சோழர்களுடன் **மண உறவு கொண்டு,** அவர்களின் துணையுடன் மீண்டும் பல்லவருடன் மோதினார்.

பல்லவப் பேரரசர் முதலாம் நரசிம்மவர்மன் சாளுக்கியருடன் போராடிக் கொண்டிருந்ததைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட அரிகேசரி மாறவர்மன் சோழர் படையின் துணையுடன் பல்லவர் நாட்டின் மீது படையெடுத்தார். **சங்கரமங்கை** என்ற இடத்தில் பல்லவர் படை தோற்கடிக்கப்பட்டது! **சங்கரமங்கைப் போரால்** பாண்டிய மன்னரின் புகழ் பரவியது.

#### சமயப் பொறையின்மை

அரிகேசரி மாறவர்மன் **தீவிர சமணர்.** இவருடைய ஆட்சிக் காலத்தில் தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் சூறாவளிக் காற்றென சுழன்றடித்துக் கொண்டிருந்தது. இவரது சமகாலத்தவர்களான **திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும்** தீவிர சைவ சமயப் பிரச்சாரத்திலும், மதமாற்றத்திலும் முனைப்புடன் ஈடுபட்டிருந்தனர். திருஞானசம்பந்தரின் செல்வாக்கால் சமணராக இருந்த அரிகேசரி மாறவர்மன், சைவ சமயத்துக்கு மாறினார். மதம் மாறிய மாறவர்மன் சமணர்களைத் தண்டிப்பதிலும், துன்புறுத்துவதிலும், உயிருடன்



கழுவேற்றிக் கொள்வதிலும் 'கொலை வெறி'யுடன் ஈடுபட்டார். **சமய வன்முறை** கட்டவிழ்த்து விடப்பட்டது! 8000 சமணர்களைத் தோலுரித்துக் கழுமரத்திலேற்றிக் கொல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது!![12] இக்கொடூரச் செயல் மிகைப்படுத்திக் கூறப்பட்டதாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.[13]

சைவ சமயத்துக்கு மாறிய அரிகேசரி மாறவர்மன் சைவ சமயம் விரைந்து வளர அறப்பணிகள் பல செய்தார். கொடையில் சிறந்த இப்பாண்டிய மன்னர் **இரணிய கர்ப்பம், துலாபாரம்** போன்ற தானங்களைச் செய்தார். வைதீக பிராமணர்களுக்கு கொடைகள் கொடுத்து ஆதரித்து, அவர்களின் வழிகாட்டுதலின் பேரில் வேள்விகளை நடத்தினார். வேதியர்கள் சமுதாய செல்வாக்கு பெற்றனர். பாண்டிய நாட்டிலும் சமய சகிப்புத்தன்மை இல்லாமல் போயிற்று! **சமயப் பொறையின்மை சமய நல்லிணக்கத்தைப் பெரிதும் பாதித்தது.**

### 9.3.5 கோச்சடையன் ரணதீரன், 710–740

அரிகேசரியின் மகன் **கோச்சடையன் ரணதீரன்** ஆட்சிக் காலத்தில் பல வெற்றிகளைப் பெற்றார். இவர் சாளுக்கிய மன்னர் **முதலாம் விக்கிரமாதித்தனாகிய ரணசிங்கனை** வென்றதால் ரணதீரன் என்று அழைக்கப்பட்டார். இப்பாண்டிய மன்னர் சேரர்களையும், சோழர்களையும் அடக்கி ஆண்டதாகக் கூறப்படுகிறது. கோச்சடையன் மங்களூரில் **மராத்தியரைத்** தோற்கடித்தார்![14] **செங்கோடு, பூதாங்கோடு** ஆகிய இடங்களையும் வென்றதாக வேள்விக்குடி செப்பேட்டில் பதியப்பட்டுள்ளது. நெல்லை அம்பாசமுத்திரத்துக்கு அருகேயுள்ள **திருப்புடைமருதூர்** என்ற இடத்தில் **ஆய்** மன்னரையும் வென்றார். கொங்கர்களும் இவரது ஆதிக்கத்துக்கு அடிபணிந்தனர். கொங்கு நாட்டைக் கைப்பற்றியது சிறப்புச் சாதனையாகக் கருதப்படுகிறது. பல வெற்றிகளைப் பெற்ற கோச்சடையன் **வானவன், செம்பியன், சோழன், மதுராந்தகன், கொங்கர் கோமான், செங்கோற்றென்னன்** போன்ற பட்டப் பெயர்களைச் சூட்டிக் கொண்டார்.

### 9.3.6 முதலாம் மாறவர்மன் ராஜசிம்மன், 740–765

#### பாண்டியர்–பல்லவர் பகை

கோச்சடையன் மகன் ராஜசிம்மன் **மாறவர்மன்** என்ற பட்டப் பெயருடன் ஆட்சிப் பொறுப்பேற்றார். இவர் **முதலாம் ராஜசிம்மன்** என்றும் அழைக்கப்பட்டார். இவர் பேரரசு விரிவாக்கவாதி; பாண்டியப் பேரரசின் எல்லையை விரிவுபடுத்துவதில் தீவிர கவனம் செலுத்தினார். பல்லவர் நாட்டில் இரண்டாம் பரமேஸ்வரவர்மன் இறந்தபின் ஏற்பட்ட **வாரிசுரிமைப் போராட்டத்தில் தலையிட்டார். இரண்டாம் நந்திவர்மனுக்கும், சித்திரமாயனுக்குமிடையே** நடைபெற்ற போராட்டத்தில் ராஜசிம்மன் சாளுக்கிய மன்னன் இரண்டாம் விக்கிரமாதித்தனுடன் சேர்ந்து கொண்டு **சித்திரமாயனை ஆதரித்தார்!** இப்போட்டியில் **சித்திரமாயன் கொல்லப்பட்டார்;** நந்திவர்மன் மன்னரானார். எனவே பல்லவர்–பாண்டியர் பகை தொடர்கதையாயிற்று! பல்லவரது வாரிசுரிமைப் போராட்டத்தில் பங்கேற்றதால் பாண்டியருக்கு நிலப்பகுதி கிடைத்ததாகத் தெரிகிறது.[15]

பேரரசுப் பெருக்கத்தில் பேரார்வம் கொண்ட மாறவர்மன் **நெடுவயல், குறுமடை, மன்னிக்குறிச்சி, திருமங்கை, பூவாலூர், கொடும்பாளூர், பெரியலூர்** ஆகிய போர்களில் வெற்றி பெற்று அப்பகுதிகளைப் பேரரசுடன் இணைத்தார். கொங்கரையும், சாளுக்கியரையும் வென்றதாகக் கூறப்படுகிறது. கும்பகோணத்துக்கு அருகே உள்ள **நந்திகிராமக்கோட்டையில்** நந்திவர்ம பல்லவர் உள்ளிருக்கையில் முற்றுகை யிட்டதாகக் கூறப்படுகிறது.[16] மாறவர்மன் ராஜசிம்மன் பண்டிகொடுமுடியைத் தாண்டிச் சென்று ஸ்ரீபுருஷரின் கங்க நாட்டைத் தாக்கினார். பாண்டியர் படையின் தாக்குதலைத் தாக்குப் பிடிக்க முடியாத ஸ்ரீபுருஷர் சாளுக்கிய மன்னன் இரண்டாம் கீர்த்திவர்மனின் ஆதரவைக் கோரினார். கங்கர்–சாளுக்கியப் படை பாண்டியர் படையிடம் தோற்றது (கி.பி.750).

## சாளுக்கியருடன் மணவுறவு

பாண்டியர்–சாளுக்கிய உறவைப் பலப்படுத்திக் கொள்ளும் பொருட்டு பாண்டிய மன்னர் மாறவர்மன் தனது மகன் ஜதிலா பராந்தகனுக்கு சாளுக்கிய இளவரசியை மணமுடித்துக் வைத்தார்! இதன் மூலம் மாறவர்மன் ராஜசிம்மன் தனது பல்லவ விரோதியின் பரம்பரை விரோதியை உறவினராக்கிக் கொண்டார்! இப்பாண்டியர்–சாளுக்கியர் உறவு பாண்டியப் பேரரசு மேலும் பலமடைய உதவியாக இருந்தது.

## வைதீக சமய செல்வாக்கு

முதலாம் மாறவர்மன் ராஜசிம்மன் வேத வைதீக சமயத்தின் செல்வாக்கு தொடர்ந்து அதிகரிக்கக் காரணமாக இருந்தார். வைதீக பிராமணர்களுக்குப் பல **மகாதானங்களைக்** கொடுத்தார். பிராமணப் பெரியோர்கள் பாராட்டப்பட்டனர். பிராமணப் புரோகிதர்களின் வழிகாட்டுதலின்பேரில் **துலாபாரம், இரணியகர்ப்பம், கோசகசரா** போன்ற வேள்விகளை விமரிசையாக நடத்தினார். வேத வல்லுநர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

## 9.3.7 பராந்தகன் நெடுஞ்சடையன், 765–815

## ஏகாதிபத்தியவாதி

ராஜசிம்மனின் மகன் **பராந்தகன் நெடுஞ்சடையன்.** இவருடைய தாய் மைசூர் மாநிலத்தை ஆட்சி செய்த கன்னட மரபைச் சேர்ந்த கங்க மன்னனுடைய மகள் **பூசுந்தரி.** எனவே, தந்தை வழி பாண்டியனாக அரசுக் கட்டில் ஏறியவர் பராந்தகன் நெடுஞ்சடையன். கடுங்கோன் வழிவந்த பாண்டிய மன்னர்களில் மாபெரும் **ஏகாதிபத்தியவாதி** (Imperialist)யாகத் திகழ்ந்தவர் இப்பராந்தகப் பாண்டியன். பிற நாடுகளைத் தன்னாட்சியின் கீழ்க் கொண்டு வருவதில் முனைப்புடன் செயல்பட்டவர். பேரரசு **விரிவாக்கவாதி** (Expansionist). இம்மன்னருக்கு **ஜடிலன், பராந்தகன், வரகுண மகாராஜா, நெடுஞ்சடையன், மாறன் சடையன்** ஆகிய பல பட்டப் பெயர்கள் உண்டு.



## பெண்ணாகடப் போர்

முதலாம் வரகுண பாண்டியன் என்று அழைக்கப்பட்ட நெடுஞ்சடையன் கிட்டத்தட்ட கால் நூற்றாண்டு காலம் பேரரசுப் பெருக்கத்திலேயே குறியாக இருந்தார். பாண்டியர் பேரரசுப் பெருக்கத்துக்குப் பெரும் தடையாக இருந்தவர் நந்திவர்மன். நந்திவர்மப் பல்லவன் **பெண்ணாகடத்தில்** தோற்கடிக்கப்பட்டார். பாண்டிய மன்னரிடம் தோல்வி கண்ட பல்லவ மன்னன் சேர, கொங்கு நாடு மற்றும் தகடூர் அரசர்களுடன் ஈனுமைக் கூட்டணி அமைத்து பாண்டியன் நெடுஞ்சடையனை எதிர்த்தார். இக்கூட்டுப் படையும் பாண்டியரிடம் தோற்றது! எனினும், பாண்டிய நாடு இப்போர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டது. பல்லவர் எதிர்ப்பு முறியடிக்கப்பட்டதால் பராந்தகன் நெடுஞ்சடையனின் புகழ் ஓங்கியது.

## பேரரசு விரிவாக்கம்

பல்லவர் கூட்டுப் படையைப் புறங்கண்ட நெடுஞ்சடையன் பல்லவ மன்னனுடன் கூட்டு சேர்ந்த அரசர்களைத் தனியே தண்டித்தார். தகடூர் அதிகமானை **புகளூரில்** தோற்கடித்தார். கொங்கு நாட்டு அரசனை சிறைப்பிடித்தார். அதியமானின் உறவினன் ஆனைமலை அரசனை ஆரியூர் கோட்டையை முற்றுகையிட்டு வென்றார். முத்தரையரும், வேணாட்டவரும் நெடுஞ்சடையனின் போராதிக்கத்தின்கீழ் கொண்டு வரப்பட்டனர். இவற்றின் விளைவாக, தஞ்சை, திருச்சி, சேலம், கோவை மாவட்டங்களும், திருவாங்கூரின் தென்பகுதியும் பாண்டியர் பேரரசுடன் இணைக்கப்பட்டன.[17]

## வேந்தர் வள்ளல்

பராந்தகன் நெடுஞ்சடையன் மாவீரன் மட்டுமல்ல; சிறந்த கட்டடங்களைக் கட்டியவர். இப்பாண்டிய மன்னர் வைணவரானதால் திருமாலுக்குக் கோயில்கள் கட்டுவதில் கவனத்தைச் செலுத்தினார். கொங்கு நாட்டு காஞ்சிவாய்ப் **பேரூரில்** பிரம்மாண்டமாகக் கட்டப்பட்ட கோயிலும், மதுரைக்கு அருகே உள்ள திருமால் கோயிலும் இவற்றுக்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். நெடுஞ்சடையன் தீவிர வைணவராயினும் சிவாலயங்களும் கட்டப்படுவதை ஊக்குவித்தார். வைணவ, சைவ சமய வேறுபாடின்றி அறப்பணிகளுக்குத் தாராளமாக உதவி செய்தார். மாணிக்கவாசகர் இவரது காலத்தவர் என்று கருதப்படுகிறது. வைதீக வேதியர்களுக்கு நிலக்கொடைகள் அளித்து **அக்கிரகாரங்கள்** அதிகரிக்கக் காரணமாக இருந்தார். பராந்தக நெடுஞ்சடையனை **வேந்தர் வள்ளல்** என்றால் மிகையாகாது.

## வேள்விக்குடி செப்பேடு

பராந்தக நெடுஞ்சடையன் தமிழ்நாட்டு வரலாற்றில் சிறப்பிடம் பெற்றிருப்பதற்கு முக்கியக் காரணம் அவர் வெளியிட்ட **வேள்விக்குடி செப்பேடாகும்.** இப்பாண்டிய மன்னர் ஆட்சிக்கு வந்த மூன்றாம் ஆண்டிலேயே இச்செப்பேட்டைப் படைத்தார்.[18] வரலாற்று முக்கியமிக்க இச்செப்பேடு சங்ககால **பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி** பற்றியும், நற்கொன்றன் என்ற பிராமணருக்கு அப்பாண்டிய மன்னர் வேள்விக்குடியைத் தானமாக வழங்கியது குறித்தும், பின்னர் அந்த நிலம் களப்பிர மன்னன் ஒருவனால்

பறிக்கப்பட்டதாகவும், பறிக்கப்பட்ட அந்நிலத்தைப் பராந்தக நெடுஞ்சடையன் நற்கொற்றன் வழிவந்த நற்சிங்கன் என்ற பிராமணருக்கு மீட்டுக் கொடுத்ததாகவும் பதிவு செய்துள்ளது. இச்செப்பேடு சங்க காலம், களப்பிரர் காலம், பாண்டியர் காலம் ஆகிய மூன்று காலங்களைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளது. வேள்விக்குடி செப்பேடு தொடர்ச்சியாக ஒன்றன்பின் ஒன்றாக வந்த மூன்று ஆட்சிக் காலங்களைப் பற்றியும் கூறுகின்றது.[19] இச்செப்பேடு முற்கால தமிழக வரலாற்றில் காணப்படும் இடைவெளிகளில் ஒன்றை நிறைவு செய்ய உதவுகின்றது. வேள்விக்குடி செப்பேடு பராந்தக நெடுஞ்சடையனின் நிலையான வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பாகும்.

## 9.3.8 ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன், 815–860

### பேரரசுப் பெருக்கம்

**வரகுண பாண்டியன்** என்ற பராந்தகன் நெடுஞ்சடையனின் மகன் ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் தந்தை வழி சென்று பாண்டியப் பேரரசைக் கட்டிக் காப்பதில் கவனம் செலுத்தினார். இவரது ஆட்சிக் காலம் ஏற்ற இறக்கங்களைக் கண்டது. பதவிப் பொறுப்பேற்றவுடன் **ஏக வீரன், சடையன் மாறன், பரசக்கர கோலாகலன், அவனிசேகரன்** ஆகிய பட்டப் பெயர்களால் தன்னை அலங்கரித்துக் கொண்டார்! ஏகவீரன் என்ற பட்டத்துக்கேற்ப கங்கர்களையும், காலிங்கர்களையும், சோழர்களையும், பல்லவர்களையும் தனது பேராதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதில் குறியாக இருந்தார். காவிரிப்படுகை இவரது பேரரசின் பகுதியாயிற்று.[20] இதற்குக் காரணம் பாண்டிய மன்னரின் **குடமுக்கு** (கும்பகோணம்) வெற்றியாகும்.

### இலங்கைப் போர்

பேரரசுப் பெருக்கப் பேராசையால் உந்தப்பட்ட ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் இலங்கை மீது படையெடுத்தார். இலங்கை மன்னன் **முதலாம் சேனா** தோற்கடிக்கப்பட்டார். இலங்கைத் தலைநகர் கைப்பற்றப்பட்டு, சூறையாடப்பட்டு, அதன் செல்வம் கைப்பற்றப்பட்டது. புத்த விகாரங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. பாண்டியரின் மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்ட முதலாம் சேனா மீண்டும் இலங்கை மன்னராக்கப் பட்டார். எனினும் பாண்டியருக்கு எதிரான சிங்களவர் பகையும், பழிவாங்கும் போக்கும் குறையவில்லை![21]

### தெள்ளாற்றுப் போர்

இலங்கையை வெற்றி கொண்ட ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் தனது பரம்பரைப் பகைவரான பல்லவரைப் புறங்காணத் தீர்மானித்தார். அப்போது பல்லவர் நாட்டுப் பேரரசராக இருந்த **மூன்றாம் நந்திவர்மன்** பாண்டியரை வென்று இழந்த பகுதிகளை மீட்க வேண்டும் என்ற முடிவுடன் இருந்தார். பாண்டியப் படையும், பல்லவர் படையும் **தெள்ளாறு** என்ற இடத்தில் சந்தித்தன. தெள்ளாற்றுப் போரில் பாண்டிய மன்னன் தோற்கடிக்கப்பட்டார். தன் வலிமையையும், பகைவனுடைய வலிமையையும், இருவருக்கும் துணையாக இருப்பவர்களின் வலிமையையும் நன்கு ஆராய்ந்து பாராமல் மேற்கொண்ட போருக்கான விலையைப் பாண்டிய மன்னர் கொடுக்க வேண்டியதாயிற்று![22] தெள்ளாற்றுப்



போர் பாண்டியர் வரலாற்றின் திருப்புமுனையாகவும், பாண்டியப் பேரரசின் சரிவின் அறிகுறியாகவும் அமைந்தது. **"முதலாம் பாண்டியர் பேரரசு வீழ்ச்சியடைந்ததற்குத் தெள்ளாற்றுப் போரே முக்கிய காரணமாகும்".**[23]

## 2.3.9 இரண்டாம் வரகுணன், 860–880

### சூழ்நிலைச் சிக்கல்

ஸ்ரீமாற ஸ்ரீவல்லபனின் மகன் **இரண்டாம் வரகுணன்** தன் தந்தை விட்டுச் சென்ற பேரரசுப் பெருஞ்சுமையை சுமந்து கொண்டு ஆட்சிப் பொறுப்பேற்றார். பாண்டிய நாடு சரிவுப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருந்த போது சோழ நாடு வளர்ச்சிப் பாதையில் பயணித்துக் கொண்டிருந்தது. இரண்டாம் வரகுண பாண்டியனுக்குப் பாண்டியப் பேரரசுக்கு ஏற்பட்ட நெருக்கடியை எதிர்க்கொள்வதற்கான வீரமோ, விவேகமோ அல்லது வேகமோ இல்லை. எனவே இவர் தன்னைச் சூழ்ந்து வந்த நெருக்கடி வளையத்துக்குள் சிக்கிக் கொண்டார்.

### ஸ்ரீபுறம்பியப் போர்

### பேராசை பெருநட்டம்

தன் தந்தையின் தோல்வியிலிருந்து எந்தப் பாடத்தையும் கற்றுக் கொள்ளாத இரண்டாம் வரகுணன் தன் வலிமையைப் பெருக்கிக் கொள்ளாமல், தக்க துணைவர்களை சேர்த்துக் கொள்ளாமல் சோழ நாட்டையும், தொண்டை நாட்டையும் பாண்டியர் பேராதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர விரும்பினார்! இச்செயல் ஒருவர் மரத்தின் நுனிக் கொம்பில் ஏறிக்கொண்டு, அதனையும் தாண்டிச் செல்ல முயற்சிப்பதைப் போன்ற நடவடிக்கையாகும்![24]

### போரின் போக்கு

பல்லவர் நாட்டில் நடைபெற்ற வாரிசுரிமைப் போராட்டத்தில் இரண்டாம் வரகுணன் தலையிட்டார்! வீண் வம்பை விலைக்கு வாங்கினார்!! பல்லவப் பேரரசன் **மூன்றாம் நந்திவர்மன்** இறந்தபின் அவரது மைந்தர்கள் **நிருபதுங்கனுக்கும், அபராஜிதனுக்கு**மிடையே வாரிசுரிமைப் போட்டி ஏற்பட்டது. இப்போட்டியில் இரண்டாம் வரகுணன் பல்லவ இளவரசன் **நிருபதுங்கனை** ஆதரித்தார். சோழர்களும், கங்கர்களும் **அபராஜிதன்** பக்கம் இருந்தனர். சோழ இளவரசன் முதலாம் ஆதித்தனும், கங்க அரசன் முதலாம் பிரதிவிபதியும் அபராஜிதனுக்கு ராணுவ உதவி செய்தனர். பல்லவ–சோழ–கங்க கூட்டுப் படைக்கும், நிருபதுங்கனை ஆதரித்த வரகுண பாண்டியனின் படைக்குமிடையே கும்பகோணத்துக்கருகே **ஸ்ரீபுறம்பியம்** என்ற இடத்தில் போர் நடைபெற்றது (கி.பி.880). இப்போரில் இரண்டாம் வரகுண பாண்டியன் படுதோல்வி அடைந்தார்.[25] உயிர் பிழைத்து மதுரை திரும்பினார். போரில் வெற்றி பெற்ற **அபராஜிதன்** பல்லவ மன்னரானார்.

### போரின் விளைவுகள்

ஸ்ரீபுறம்பியப் போரின் விளைவுகள் பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. இப்போருக்குப் பின் தன்னை ஆதரித்த சோழ மன்னன் ஆதித்த

சோழனுக்குத் தன் ஆதிக்கத்தின் கீழ் இருந்த சோழ நாட்டுப் பகுதிகளைத் திருப்பிக் கொடுத்துவிட்டார் அபராஜிதவர்ம பல்லவர். இதனால் சோழ மண்டலம் சோழர் வசமாயிற்று. அதுமட்டுமல்ல. இரண்டாம் வரகுணனின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த சோழ நாட்டுப் பகுதிகளையும் ஆதித்த சோழனிடம் ஒப்படைக்க வேண்டியதாயிற்று. இவற்றின் கூட்டு விளைவாகப் பல்லவரும், பாண்டியரும் பலமிழக்க, சோழர்களின் கை மேலோங்கியது. சுருங்கக்கூறின், ஸ்ரீபுறம்பியப் போர் பாண்டியரது வீழ்ச்சிக்கும் சோழர்களின் எழுச்சிக்கும் வழி வகுத்தது.

## 9.3.10 பராந்தக வீரநாராயணன், 880–900

### குழப்பக்காடு

**பராந்தக வீர நாராயணன்** இரண்டாம் வரகுணனின் இளைய சகோதரர்.[26] இவரது பத்தாண்டு கால ஆட்சியின் போது பதவியைத் தக்க வைத்துக் கொள்வதே இவருக்குப் பெரும் பிரச்சனையாக இருந்தது. வீழ்ச்சிப் பாதையில் விரைந்து சென்று கொண்டிருந்த பாண்டியப் பேரரசுத் தேரை இவரால் நிறுத்த முடியவில்லை. இவர் செய்த சாதனை சேர இளவரசி **வானவன் மாதேவி**யை மணந்து கொண்டதுதான்! இவர்களுக்குப் பிறந்த பிள்ளைதான் **மாறவர்மன் ராஜசிம்மன்.**[27] பராந்தக வீரநாராயணனின் ஆட்சிக்கால இறுதியில் வாரிசுரிமைப் போட்டியால் பாண்டிய நாடு குழப்பக்காடாயிற்று!

பராந்தக வீரநாராயணன் போரில் ஆர்வம் காட்டாமைக்கு இவர் ஒரு தீவிர சமணராயிருந்தது காரணமாக இருக்கலாம். இப்பாண்டிய மன்னன் மறவீரத்தைவிட அறவீரமே சிறந்தது என்று எண்ணி சமணப் பள்ளிகளுக்குப் பேருதவி செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டில் சமணம் தழைத்தோங்கியது.

## 9.3.11 இரண்டாம் ராஜசிம்மன், 900–920

### பேரரசின் வீழ்ச்சி

பராந்தக வீரநாராயணனுக்குப் பின் அரசுப் பொறுப்பேற்ற இரண்டாம் ராஜசிம்மன் சேரநாட்டு வானவன் மாதேவியின் மகன். இவருக்கு **மாறவர்மன்** என்ற பட்டப் பெயரும் உண்டு. அதனால் இவர் **மாறவர்மன் ராஜசிம்மன்** என்று அழைக்கப்பட்டார். இவரது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாட்டுக்கு வடக்கே விரைந்து வளர்ந்து கொண்டிருந்த சோழர்களின் சவாலை சமாளிக்க வேண்டியதாயிற்று. இலங்கைச் சிங்கள மன்னரின் துணை கொண்டு சோழரை முறியடிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டார் ராஜசிம்மன். ஆனால் வலிமைமிக்க முதலாம் பராந்தக சோழனின் எதிர்ப்பை இவரால் எதிர்க்கொள்ள முடியவில்லை. **சோழ மன்னன் பராந்தகனின் தாக்குதலை** சமாளிக்க முடியாத இரண்டாம் ராஜசிம்மன் **வேலூர் போரில்** தோல்வியடைந்து இலங்கையில் தஞ்சமடைந்தார்! இறுதியில் இவருக்குத் தாய் வீடான சேரநாடு அடைக்கலம் அளித்தது!! இத்துடன் தமிழ் நாட்டில் பாண்டியர் ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. பாண்டியப் பேரரசு சோழப் பேரரசுக்குத் திறை செலுத்த வேண்டிய



அளவுக்குத் தள்ளப்பட்டது. பாண்டிய நாடு சோழ நாட்டின் பகுதியாயிற்று! ராஜசிம்மனின் மகன் **வீரபாண்டியன்** பாண்டியப் பேரரசின் வீழ்ச்சிக்கு சாட்சியாக இருந்தார்!

## 9.4 பாண்டியர் வாழ்வியல்

### 9.4.1 அரசியல் நிலை

### வேதியல் மாற்றம்

முற்காலத் தமிழ்நாட்டு வரலாற்றில் சங்ககாலம், களப்பிரர் காலம், பாண்டியர் காலம் ஆகிய மூன்றும் தொடர்ச்சியாக வரும் காலகட்டங்களாகும். சங்ககாலப் பாண்டியப் பரம்பரையினர் களப்பிரர் காலத்தைக் கடந்து வந்த போது அவர்களது வாழ்வியலில்–அரசியல், பொருளாதார, சமூக, சமய, கலாச்சார நிலைகளில்–**வேதியல் மாற்றம்** (Chemical Change) ஏற்பட்டது. குறிப்பாக சமுதாய, சமய நிலைகளில் அடிப்படை மாற்றங்கள் ஏற்பட்டன.

### அரசு பேரரசாயிற்று

சங்ககால பாண்டியர் அரசு பேரரசாக உருமாற்றம் அடைந்தது. இந்த மாற்றத்துக்கு முன்னோடியாக இருந்தவர் களப்பிரரை வெற்றி கொண்டு பாண்டிய நாட்டை அவர்களது பிடியிலிருந்து மீட்ட **கடுங்கோன்.** இம்மன்னருக்குப் பாண்டியப் **பேரரசு பற்றிய தொலைநோக்கு** இருந்தது. இப்பாண்டிய மன்னன் பாண்டியர் மரபு வழி வந்த **செழியன், மாறன், வழுதி** ஆகிய குலப் பெயர்களால் அழைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பாண்டியப் பேரரசர்களின் பெயர்களில் **சமஸ்கிருதச் சொற்கள்** சேர்க்கப்படுவது புதுப்பழக்கமாயிற்று! **ரணதீரன், ராஜசிம்மன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன்** எனக் கூறிக் கொள்வதில் பெருமைப்பட்டனர்! அதுமட்டுமல்ல. முச்சங்கம் வைத்து முத்தமிழ் வளர்த்த சங்கப் பாண்டியர் வழி வந்தோர் **சீவரன், சீமனோகரன், விநய விச்சுதன், மருத்பலன், வீதகன் மஷன், விக்ரம பராசரன், மனுபமன், மர்த்திவீரன், கிரிஸ்தரன், கீதகிந்தரன், கிருபாலயன், கிருதாபதானன், கண்டக நிஷ்டுரன், கார்யதஷிணன், பாபபீரு** போன்ற சிறப்புப் பெயர்களை வைத்துக் கொள்ளத் தயங்கவில்லை![28]

### இராணுவ வல்லாட்சி

முற்காலப் பாண்டிய நாட்டில் **முடியாட்சி முறையே** பின்பற்றப்பட்டது. மன்னனை மையமாக வைத்தே மத்திய, மாநில அரசாங்கங்கள் சுழன்றன. அமைச்சர்களில் முதன்மையாக இருந்தவர் **உத்தம மந்திரி** என்று அழைக்கப்பட்டார். இராணுவம் சார்ந்த, இராணுவம் சாராத அதிகாரங்கள் என்று பிரிக்கப்படவில்லை.[29] அதாவது இராணுவ வல்லாட்சியே நடைபெற்றது.

### உள்ளாட்சி

உள்ளாட்சி நிர்வாகத்தைப் பொறுத்தவரை ஊர் மன்றங்களும், குழுக்களும் கிராம விவகாரங்களைக் கவனித்துக் கொண்டன. இத்தகைய உள்ளாட்சி அமைப்பு முறை பிரம்மதேய கிராமங்களில் செயல்பட்ட **கிராம சபை**களால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

ஒரு சுவையான தகவல் என்னவெனில் **சபை நடவடிக்கைகளைத் தடுக்க முற்பட்டவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.**

## 9.4.2 பொருளாதார நிலை

### முத்துக்குளித்தல்

பாண்டியரின் பொருளாதார நிலை பற்றி அறிந்து கொள்வதற்கான ஆதாரங்கள் மிகவும் குறைவு. பண்டைக்கால பாண்டிய நாட்டில் **முத்துக்குளித்தலும், முத்துக்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி** செய்யப்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டுச் சான்றுகள் பல உள்ளன. இக்காலகட்டத்தில் முத்துக் குளித்தல் பற்றிய வரலாற்றை ஆய்வு செய்த எஸ்.அருணாசலம் பின்வரும் தகவல்களைத் தருகிறார்: கி.பி.400க்கும் 1000க்குமிடையேயான முத்துக்குளித்தல் தொழில் பற்றியும், அதுபற்றிய வர்த்தகத் தொடர்புகள் பற்றித் தெரிந்து கொள்வதற்கான இலக்கியம் எதுவுமில்லை.

### வர்த்தகச் சிறப்பு

63 நாயன்மார்களைப் பற்றிக் கூறும் பெரிய புராணத்தில் இதுபற்றி எந்தத் தகவல்களும் இல்லை. கடவுளைப் புகழ்ந்து பாடுவதைத் தவிர வேறு எதைப் பற்றியும் சைவ வைணவ நாயன்மார்களும், ஆழ்வார்களும் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. சீனப் பயணி யுவான் சுவாங்கும் பாண்டியரது முத்து வர்த்தகத்தைப் பற்றி எதுவும் குறிப்பிட வில்லை. முத்து வர்த்தகத்தின் கேந்திரமாகச் செயல்பட்டு வந்த கொற்கைத் துறைமுகம் புறக்கணிக்கப்பட்டிருந்தது. எனினும், பிற நாடுகளுடனான முத்து வியாபாரம் தொடர்ந்தது என்று நம்பலாம்.[30] பொதுவாக இக்காலகட்டத்தில் மதுரை மண்டலம் **வர்த்தகத்தில் தான் சிறப்புற்றிருந்தது** என்று குறிப்பிட்டுள்ளார் யுவான் சுவாங்.

## 9.4.3 சமுதாய நிலை

### நான்கு வகை சாதிமுறை

சங்ககால சமுதாயத்தில் வீரமும், காதலும் முக்கியமாகக் கருதப்பட்டன. அவை புவியியல் ரீதியான திணை வாழ்க்கை முறையாகும். இத்திணைச் சமுதாய அமைப்பு முறை களப்பிரர் ஆட்சிக் காலத்தில் அடியோடு மாறிப்போயிற்று. தமிழ்ச் சமுதாயம் புத்த, சமண சமயங்களின் ஆதிக்கத்தின் கீழ் வந்தது. களப்பிரர்களுக்குப்பின் வந்த பாண்டியர் காலத்தில் களப்பிரர் அகற்றப்பட்டனர். ஆனால் சமணத்தின் செல்வாக்கு குறையவில்லை. சமய வாழ்வில் சமணத்தின் செல்வாக்கு நீடித்தது. அனால் சமுதாய வாழ்வியலில் **வைதீக வேத வர்ணமுறை** மேலோங்கியது. **நான்குவகை சாதிமுறை** வேரூன்றியது. **உயர்சாதி–தாழ்ந்த சாதி** வேறுபாடுகள் அதிகரித்தன. சங்ககாலப் பார்ப்பணர்கள் பாண்டியர்கால பிராமணர்கள் ஆனார்கள்! இவர்கள் வேதியர்கள் என்று அழைக்கப்பட்டனர். வைதீக சமுதாய மரபுகள் தமிழ்ச்சமுதாய மரபுகளுடன் சங்கமித்தன. **பிரம்மதேய, தேவதான கிராமங்கள்** பல்கிப் பெருகின. இக்கிராமங்கள் பிராமணர்கள் தனியாகவும், கூட்டாகவும் பயன்படுத்திக் கொள்வதற்காகக் கொடுக்கப்பட்டவை. இவை முழுமையான வரிவிலக்குப் பெற்றன. பல சலுகைகளைப் பெற்று தன்னுரிமையுடன் செயல்பட்டன.



### சமுதாயத் தாக்கம்

இவற்றின் சமுதாயத் தாக்கம் கணிசமானது. சடையவர்மன் பராந்தகனின் வேள்விக்குடி செப்பேடு கொற்றைக்கிழான் நற்கொன்றன் என்ற அந்தணனுக்கு வேள்விச் சாலைக்கு முன்பு நின்று பிரம்மதேய நிலத்தை மீட்டுக் கொடுத்ததை உறுதி செய்கிறது. எனவே, பாண்டியர் சமுதாயம் பிராமணர்கள், போர்த்தொழில் புரிவோர், வெள்ளாளர்கள், தாழ்த்தப்பட்டோர் என்று சாதி–வகுப்பு வழி பிரிக்கப்பட்டிருந்தனர். பாண்டிய மன்னர்கள் இச்சமுதாயப் பிரிவினையை பலப்படுத்தினார்களேயன்றி, சாதி வேறுபாடுகளைப் போக்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை.

## 9.4.4 சமய நிலை

### சமணத்தின் செல்வாக்கு

தமிழ் நாட்டில் பக்தி இயக்கம் விரைந்து பரவிக் கொண்டிருந்த வேளையில் பாண்டிய நாடு சமணக் கோட்டையாகக் காட்சியளித்தது! களப்பிரர் காலத்தில் ஆதிக்கம் செலுத்திய சமணம் பாண்டியர் காலத்தில் சூழ்நிலைக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டு செல்வாக்கு குறையாமல் நீடித்தது. சிலை வழிபாட்டை முழுமூச்சுடன் எதிர்த்து வந்த சமண சமயம் உருவச் சிலைகளில் நம்பிக்கை கொள்ளத் துவங்கியது. மதுரையிலும், மதுரையைச் சுற்றிலும் பல சமணப் பள்ளிகள் செயல்பட்டன. இப்பள்ளிகளில் பல பாண்டியர் காலத்தில் துவக்கப்பட்டவையாகும். அதேபோன்று சமணப் **பள்ளிச் சந்தங்களும்** கட்டப்பட்டன. பாண்டியர் குலத்தைச் சேர்ந்த **பராந்தக வீரநாராயணன்** வானவன் மகாதேவியின் பெயரால் **மகாதேவிப் பெரும்பள்ளி** ஒன்றைக் கட்டினார். இம்மன்னரே சமணராக இருந்தமையால் பாண்டிய நாட்டில் சமணம் அரசாங்கப் பாதுகாப்புடன் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. **அச்சணந்தி** என்ற சமணத் துறவி பாண்டிய நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்று சமணத்தைப் பரப்பினார் என்று கூறப்படுகிறது.

### சைவ, வைணவ சமயங்கள்

பாண்டிய நாட்டில் சமண சமயம் செல்வாக்கு பெற்றிருந்தாலும் வைணவ, சைவ சமயங்களும் பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பட்டன. குறிப்பாக, பாண்டிய மன்னர்கள் பராந்தகன் நெடுஞ்சடையன், ஸ்ரீமாற ஸ்ரீவல்லபன் ஆட்சிக் காலங்களில் வைணவ சமயம் சைவ சமயத்தைவிட வளர்ச்சியடைந்தது. அதற்குக் காரணம் இந்த இரண்டு பாண்டிய மன்னர்களும் வைணவர்களாக இருந்தமையேயாகும். ஆழ்வார்கள் அரசாங்க ஆதரவுடன் வைணவத்தைப் பரப்பினர். ஸ்ரீவில்லிபுத்தூர் வைணவ சமயத்தின் கேந்திரமாகத் திகழ்ந்தது. சமண–வைணவ–சைவ சமயங்கள் சச்சரவின்றி செயல்பட்டன. பல்லவ, சோழ நாடுகளில் சமயப் பொறையின்மை கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த நேரத்தில் பாண்டிய நாட்டில் சமய சமத்துவம் நிலவியது.

முதல் பாண்டியப் பேரரசில் சமய சமத்துவம் நிலவிய போதிலும் பக்தி இயக்கத்தின் தாக்கம் இருக்கவே செய்தது. மாணிக்கவாசகர் சிதம்பரத்தில் புத்தர்களை விவாதத்தில் வெற்றி கண்டு சைவ சமயத்துக்கு மதமாற்றம் செய்தார். ஆனால் **கூன்பாண்டியன் என்று** அறியப்பட்ட அரிகேசரி பராங்குச மாறவர்மன் பாண்டியன் எந்த சைவ

நாயன்மாராலும் சமண சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கு மாறியது பாண்டிய நாட்டில் சமணத்தின் செல்வாக்குக் குறையக் காரணமாயிற்று.[31] மதுரை மண்டல மக்கள் சைவ நாயன்மார்களின் பிரச்சாரத்தால் மனமாற்றம் அடைந்தனர். சுருங்கக்கூறின் **"சங்க காலத்தில் நிலவிய மகிழ்ச்சிகரமான சமயச் சூழ்நிலை முற்றிலுமாக மாறிவிட்டது"**.[32]

## 9.4.5 பாண்டியர் பண்பாடு

### பண்பாட்டின் அடையாளங்கள்

**பண்பாடு** (Culture) என்பது அக வளர்ச்சியின் வெளிப்பாடாகும். அன்பு, அருள், வாய்மை, தூய்மை போன்றவை பண்பாட்டின் அடையாளங்களாகும். அதாவது பண்பட்ட மனதைக் குறிப்பது பண்பாடு. அதனால் தான் மக்களின் பழக்கவழக்கங்கள், சமுதாய நெறிகள், சமய நம்பிக்கைகள், கலைகளின் நிலை போன்றவை பொதுவாகப் பண்பாடு என்ற சொல்லால் குறிக்கப்படுகிறது. இந்த அளவுகோலைக் கொண்டு பார்க்கையில் முதலாம் பாண்டியப் பேரரசின்கீழ் மக்களின் கல்வி நிலை, இலக்கியப் படைப்புகள், கவின் கலைகளின் வளர்ச்சி போன்றவை பற்றி அறிந்து கொள்வதற்கான ஆதாரங்கள் மிகக் குறைவாகவே உள்ளன.

### கல்வி நிலை

மக்களின் கல்வி நிலையைப் பொறுத்தவரை **சமணப் பள்ளிகள்** சாதி வேறுபாடின்றி அனைவருக்கும் சமய, ஒழுக்கக் கல்வி அளித்தன. பிரம்மதேய நிலப் பகுதிகளில் **வேதக்கல்வி** பிராமணர்களுக்கு மட்டும் அளிக்கப்பட்டது! ஓரளவு வசதி படைத்தோர் பிள்ளைகள் **திண்ணைப் பள்ளிகளில்** பயின்றனர். எஞ்சியிருந்த தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எக்கல்வியும் கொடுக்கப்படவில்லை. கல்வியின் சிறப்புணர்ந்த தமிழ்ச் சமுதாயத்தில், சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த பாண்டியர் பேரரசில் மிகப் பெரும்பான்மையான மக்கள் **தற்குறிகளாகவே** இருந்தனர்! கல்வியின் பயனைப் பெறாத இவர்கள் சமய நம்பிக்கைகளில் மூழ்கிப்போயினர். **சமஸ்கிருதத்துக்குக் கொடுக்கப்பட்ட மதிப்பும் சிறப்பும் தமிழுக்குக் கொடுக்கப்படவில்லை.** எனவே, முதலாம் பாண்டியப் பேரரசில் தமிழ் இலக்கியம் வளராமல் போனதில் வியப்பில்லை. பாண்டியன் **சடையவர்மன் பராந்தகனின் வேள்விக்குடி செப்பேடு** விதிவிலக்கு. பாண்டியர்கள் **"கருப்பான, இரக்கமற்ற, மூர்க்கத்தனமான, பண்பாட்டைப் பற்றி அக்கறையற்றவர்கள்"** என்று குறிப்பிட்டுள்ளார் யுவான் சுவாங்!

## 9.4.6 கட்டிடக்கலை

கலைகளின் பிறப்பிடமாகவும், இருப்பிடமாகவும் இருப்பவை கோயில்கள். மதுரையில் உள்ள மீனாட்சி–சுந்தரேஸ்வரர் கோயில் உலகப் புகழ் பெற்றது. இக்கோயில் பற்றிய புராணக் கதைகள் பல. அவற்றுள் ஒன்றில் மதுரை மீனாட்சி அம்மன் பார்வதி தேவியின் அவதாரம் என்றும், மதுரை மன்னன் மலையத்துவஜ பாண்டியனுக்குப் பிறந்தவர் எனவும் திருவிளையாடல் புராணம் கூறுகிறது![33] சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பாண்டிய மன்னர்களும், நாயக்க



மன்னர்களும் இக்கோயில் வளரவும், உயரவும் பங்களிப்பு செய்துள்ளனர். இப்பங்களிப்பில் முதல் பாண்டியப் பேரரசைத் தோற்றுவித்த கடுங்கோன் மற்றும் அவர் வழி வந்த பாண்டிய மன்னர்களின் பங்கு கணிசமானது. இதேபோன்று மதுரைக்கு அருகில் உள்ள அழகர்கோயிலுக்கும் இம்மன்னர்கள் உதவியிருக்க வேண்டும்.

## 9.4.7 சிற்பம், ஓவியம், நடனம்

புதுக்கோட்டைக்கு அருகே உள்ள சித்தன்னவாசல் மலையில் உள்ள சமணர் குகைக் கோவில் சமண சிற்பக் கலையின் சிகரமாகக் கருதப்படுகின்றது. இக்கோயிலின் சுவர்களில் சமணத் தீர்த்தங்கரர்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. மதுரையைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்த ஸ்ரீமாற ஸ்ரீவல்லப பாண்டியன் ஆட்சிக் காலத்தில் இக்குகைக் கோயில் சிறந்த சமண மையமாகத் திகழ்ந்தது. இப்பாண்டிய மன்னரின் ஆதரவோடு **இளம் கௌதமன்** என்ற ஆசிரியர் சித்தன்னவாசல் குகைக் கோயிலுக்குத் திருப்பணி செய்து வியத்தகு ஓவியங்களைத் தோற்றுவித்தார் என்று இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இன்றைக்கும் இந்த வண்ண ஓவியங்கள் பாண்டியர் கால **ஓவியக்கலைத்** திறனைப் பறைசாற்றுபவையாக உள்ளன. இந்த ஓவியங்களைக் கொண்டு அக்காலப் பெண்கள் அணிந்த அணிகலன்கள், கூந்தல் அலங்காரம், ஆடைகள், ஒப்பனை போன்ற பலவற்றையும் தெரிந்து கொள்ள முடிகின்றது. இக்குகைக் கோயிலில் **சிற்பம், ஓவியம், நடனம்** ஆகிய முக்கலைகளும் சங்கமிக்கின்றன.

## 9.4.8 சமணச் சிற்பங்கள்

வரகுண மகாராஜா என்று அழைக்கப்பட்ட பராந்தகன் நெடுஞ்சடையன் ஆட்சிக் காலத்தில் திருநெல்வேலி மாவட்டம் கோவில்பட்டிக்கு அருகே அமைந்துள்ள கழுகுமலை வெட்டுவான் கோயில் புகழ் பெற்றுத் திகழ்ந்தது. இங்குள்ள ஒற்றைக் கற்கோயில் பாண்டியர் உருவாக்கிய ஈடு இணையற்ற **கலைக் கருவூலமாகும்.** இக்கோயிலுக்கு அருகாமையில் உள்ள மலைப்பாறையில் பல அரிய சமண சிற்பங்கள் காணப்படுகின்றன. இவையாவும் பராந்தகன் நெடுஞ்சடையன் காலத்தில் உருவாக்கப்பட்டவையாகும். தமிழ் நாட்டிலேயே இங்குதான் சமண சிற்பங்கள் அதிகமாக உள்ளன. இச்சிற்பங்களின் அடியில் வட்டெழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. மகாவீரர், பர்சுவநாதர், நேமிநாதர் போன்ற சமண தீர்த்தங்கரர்களின் அமர்ந்த நிலையிலுள்ள சிற்ப உருவங்கள் மற்றும் யக்ஷர், யக்ஷிகளின் சிற்ப உருவங்களும் காணப்படுகின்றன. தீர்த்தங்கரரின் தலைக்கு மேல் உள்ள முக்குடையும், கொடியும், யக்ஷிகளின் கரங்களில் ஏந்தியுள்ள சாமரங்களும் செம்மையாக செதுக்கப்பட்டுள்ளன. இக்கோயில் வளாகத்தில் பல புகழ் பெற்ற சமணத் துறவிகள் வாழ்ந்துள்ளனர். இறந்தோர் நினைவு சிற்ப உருவங்களும் உள்ளன.

## 9.5 மதிப்பீடு

பாண்டியர் பரம்பரை தமிழ்நாட்டின் மிகவும் தொன்மையான அரச குலங்களில் ஒன்றாகும். களப்பிரர் காலத்துக்குப் பின்னர் பதினோறு பாண்டியப் பேரரசர்கள் 350 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்துள்ளனர். அறை நூற்றாண்டு காலம் ஆட்சி செய்த **பராந்தக நெடுஞ்சடையனின்** ஆட்சிக் காலத்தின் போது பாண்டியப் பேரரசு அதன்

பகுதி – XII

# தமிழ்நாட்டில் நாயக்கர் ஆட்சி–I

# 18. செஞ்சி, வேலூர், தஞ்சை நாயக்கர்கள்

*தஞ்சை நாடு, அதன் பண்பாட்டுப் பெருமை, பேரரசின் பரப்பு, அரசின் தாராளம், மக்களின் உழைப்பு, மண்ணின் வளம் ஆகியவை வாழ்வாங்கு வாழ்ந்த வரலாற்றையுடையவை.*

*– கு.ராஜய்யன்.*

## 18.1 தலைக்கோட்டைப் போருக்குப்பின்

**அரிகரன், புக்கன்** ஆகிய சங்கம சகோதரர்களால் **1336 ஆம் ஆண்டு** விஜய நகரம் தோற்றுவிக்கப்பட்டது. விஜய நகரத்தை **சங்கம, சாளுவ, துளுவ** அரச குலங்களைச் சேர்ந்த மன்னர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் காலத்தில் விஜயநகரம் வளர்ந்து, பேரரசாக விரிவடைந்து, புகழ் பரப்பி, சரிவுற்று, வீழ்ச்சியடைந்தது. துளுவ சதாசிவராயன் ஆட்சிக் காலத்தில் (1542–1570) நடைபெற்ற **தலைக்கோட்டைப் போரு** (1565)க்குப்பின் விஜயநகரம் வீழ்ச்சியடைந்தது. வீழ்ச்சியடைந்த விஜயநகரப் பேரரசை **அரவீடு** அரச குலத்தினர் சுவீகரித்துக்கொண்டு ஆட்சி செய்தனர்.[1] இவர்கள் ஆட்சி செய்தது **நிலையில்லா நிழல் பேரரசு** (Ephemeral Empire) ஆகும். அரவீடு அரசர்கள் காலத்தில் தான் **செஞ்சி, தஞ்சை, மதுரை** நாயக்கர்கள் விஜயநகர மேலாதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து **சுயாட்சி பெற்றனர்.**

## 18.2 செஞ்சி நாயக்கர்கள்

### 18.2.1 வையப்ப நாயக்கர், 1526–1541

#### ராணுவ முக்கியத்துவம்

செஞ்சி தொண்டை மண்டலத்தின் ராணுவ முக்கியத்துவமுடைய காவல் கோட்டமாகத் திகழ்ந்தது. சோழர்களுக்குச் சொந்தமான இந்த இடத்தில் **விஜயரங்க நாயக்கர்** என்பவர் ஒரு கோட்டையைக் கட்டியதாகக் கூறப்படுகிறது.[2] குமாரகம்பணர் காலத்திலிருந்து செஞ்சி தொண்டை மண்டலத்தின் தலைமையகமாக இருந்து வந்தது. **விருப்பண்ண உடையார்** என்பவர் இதன் மகாமண்டலேஸ்வரராக இருந்தார்.

ராணுவ முக்கியத்துவமிக்க செஞ்சி கிருஷ்ணதேவராயரின் கவனத்தைக் கவர்ந்தது! அவரது ஆட்சிக் காலத்தில் தொண்டை மண்டலம் பல குறுநிலப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, அரச குலத்தைச் சேர்ந்தவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் அவர்கள் கிருஷ்ணதேவராயரின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்! ஆத்திரமடைந்த அவர் **வையப்ப நாயக்கர், துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர், விஜயராகவ நாயக்கர், வெங்கடப்ப நாயக்கர்** ஆகிய நால்வரது தலைமையின் கீழ் ஒரு வலிமையான படையைத்



தொண்டை மண்டலத்துக்கு அனுப்பினார்.[3] இப்பெரும்படை வேலூரில் முகாமிட்டது. இதையறிந்த கிளர்ச்சித் தலைவர்கள் கிருஷ்ணதேவராயரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு, கப்பம் செலுத்த ஒப்புக் கொண்டனர். வையப்ப நாயக்கர் இவர்கள் செலுத்த வேண்டிய திறையைத் தீர்மானித்தார்.

#### மூன்று மண்டலங்கள்

அதன்பின் விஜயநகரப் படை வேலூரிலிருந்து செஞ்சி சென்று முகாமிட்டது. அப்போது சோழ மண்டலக் குறுநிலத் தலைவர்கள் செலுத்த வேண்டிய கப்பத்தொகை முடிவு செய்யப்பட்டது. அதுமட்டுமல்ல, தமிழ்நாடு முழுவதும் **மூன்று மண்டலங்களாகப்** பிரிக்கப்பட்டு ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த மூன்று மண்டலங்களாவன: 1) **செஞ்சி மண்டலம்.** இப்பகுதி கொள்ளிடத்திலிருந்து நெல்லூர் வரை இருந்தது; 2) **தஞ்சை மண்டலம்.** நீர்வளமிக்க பகுதி; 3) **மதுரை மண்டலம்.**[4] **சின்ன திப்பைய நாயக்கரின் மகனான வையப்ப நாயக்கர்** செஞ்சி மண்டலத்துக்கு நாயக்கராக நியமிக்கப்பட்டார். எனவே கிருஷ்ணதேவராயரால் நியமிக்கப்பட்ட வையப்ப நாயக்கரே செஞ்சி மண்டலத்தின் முதல் நாயக்கர் ஆவார்.

#### மகா நாயக்கர்

வையப்ப நாயக்கர் செஞ்சியிலேயே தங்கி ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்தார். தன்னை செஞ்சி நாயக்கராக்கிய கிருஷ்ணதேவராயருக்கு நன்றிக்கடன்பட்டு விசுவாசத்தோடு வேலை செய்தார். இவரது ஆட்சிக் காலத்தில் செஞ்சி நாயக்கம் நிலை பெற்றது; புகழ் பெற்றது. வையப்ப நாயக்கர் ஜம்பை சிவன் கோயிலுக்கு மானியம் வழங்கினார் (1530). வட ஆர்க்காடு மாவட்ட **மாதிரிமங்கலத்தில்** பிராமணர்களுக்கு ஒரு அக்கிரகாரத்தை ஏற்படுத்தினார் (1532). வையப்ப நாயக்கரின் கீழ் பணியாற்றிய வேலூர் பொம்மு நாயக்கரை வரியில்லா நிலத்தைத் திருக்கோவிலூர் தாலுக்காவிலிருந்த பள்ளிச்சந்தல் கோயிலுக்குத் தானமாகக் கொடுக்க ஆணையிட்டார். செவ்வப்ப நாயக்கர் என்பவர் வையப்ப நாயக்கர் பெயரில் இரு கிராமங்களைக் கொடையாகக் கொடுத்தார் (1538). வையப்ப நாயக்கர் வலயத்தூர் ஆலயத்துக்கு இரண்டு கிராமங்களை மானியமாக வழங்கினார் (1541). இவர் **மகாநாயக்கர்** என்று புகழ் பெற்றார். வையப்ப நாயக்கர் **கிருஷ்ணதேவராயருக்கும்,** அவருக்குப்பின் வந்த **அச்சுதருக்கும்** நன்றி விசுவாசத்தோடு நடந்து கொண்டார்.

### 18.2.2 துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர், 1541–1554

#### ‘துபாகி’ பட்டப் பெயர்

வையப்ப நாயக்கர் செஞ்சி நாயகத்தைத் தோற்றுவித்து அதன் முதல் நாயக்கராக ஐந்தாண்டு காலம் ஆட்சி செய்தபின் அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான கிருஷ்ணப்ப நாயக்கரை செஞ்சியின் ஆட்சியராக நியமித்தார்.[5] கிருஷ்ணப்ப நாயக்கர் வையப்ப நாயக்கருக்கு அடுத்த நிலை ராணுவத் தலைவராக இருந்தவர். இவர் துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் என்று அழைக்கப்பட்டார். இவரது பெயருக்குப்பின் உள்ள **முற்சேர்க்கை** (Prefix)யான **துபாகி** என்பது பட்டப்பெயர். இவர் **பெத்த கிருஷ்ணப்ப**

**நாயக்கர்** என்றும் அழைக்கப்பட்டார். இவர் விஜயநகர மன்னர் அரவீடு அரிய ராமராயரின் சமகாலத்தவர்.

### பெயர் மாற்றம்

துபாகி கிருஷ்ணப்ப நாயக்கர் கோனேரி செட்டியின் மகனாகக் கருதப்படுகிறார். செட்டி குலத்தைச் சேர்ந்த இவரது பதிமூன்றாண்டு கால ஆட்சியில் செஞ்சி நாயக்கும் பலம் பெற்று விரிவடைந்தது. செஞ்சி அரசு வடதமிழ் நாட்டின் சென்னை, பாண்டிச்சேரி, நெல்லூரின் பெரும்பகுதி, சித்தூர், வேலூர், சந்திரகிரி ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. இதன் தென் எல்லை கொள்ளிடக் கரை வரை சென்றது. இந்த எல்லையே செஞ்சி மண்டலத்தைத் தஞ்சை, மதுரை மண்டலங்களின் எல்லைப் பகுதியாக இருந்தது. கிருஷ்ணப்ப நாயக்கர் செஞ்சிக் கோட்டையை மேலும் பலப்படுத்தி **ஆனந்தகிரி** என்ற பெயரை **ராஜகிரி** என்று மாற்றினார்.

### வாரிசு

கிருஷ்ணப்ப நாயக்கருக்கு **லட்சுமாம்பா, வெங்கலாம்பா** என்று இரண்டு மனைவியர் இருந்தனர். லட்சுமாம்பாவின் மகன் **முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்.** வெங்கலாம்பாவின் பிள்ளைகள் மூவர்: 1) சூரப்ப நாயக்கர்; 2) திவாகரன்; 3) பைரவன். இம்மூவருள் **சூரப்ப நாயக்கர்** துபாகி கிருஷ்ணப்ப நாயக்கரின் வாரிசாக அரியணையேறினார்.

## 18.2.3 சூரப்ப நாயக்கர், 1554–1567

### விசுவாச நாயக்கர்

**சூரப்ப நாயக்கர்** துபாகி கிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது மனைவி வெங்கலாம்பாவுக்குப் பிறந்தவர். முதல் மனைவி லட்சுமாம்பாவுக்குப் பிறந்த **கிருஷ்ணப்பா** இளவயதினராக இருந்தமையால் சூரப்ப நாயக்கர் செஞ்சியின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். இதை விஜயநகரப் பேரரசர் **சதாசிவராயர்** (1542–1570) அங்கீகரித்தார். எனவே சூரப்பர் சதாசிவராயருக்கு நன்றியுணர்வோடு பணியாற்றினார். பின்னர் இவரது மாற்றாந்தாய் மகனான கிருஷ்ணப்ப நாயக்கருடன் இணைந்து செஞ்சியை ஆட்சி செய்தார். இருவரும் சதாசிவராயருக்கு விசுவாசத்துடன் இருந்தனர்.

### அங்கீகாரம்

தலைக்கோட்டைப் போரின் போது (1565) சூரப்ப நாயக்கர் சதாசிவராயருக்குப் படையுதவி செய்தார். அதன் காரணமாக **பவனபுருஷோத்தமன்** சூரப்பருக்கு **கர்நாடக சிம்மாசன பிரதீஷ்டபாணாச்சாரியா** என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினார். இது அவர் தலைக்கோட்டைப் போரின் போது விஜயநகரப் பேரரசுக்குச் செய்த உதவிக்குக் கிடைத்த அங்கீகாரமாகும்.[6] சூரப்ப நாயக்கர் கலாரசிகர்; கலைஞர்களின் புரவலர். இவர் காலத்தில் வாழ்ந்த பிரபல **ரத்னகேட்டா ஸ்ரீனிவாச தீட்சிதரை** ஆதரித்தார். தீட்சிதர் பதினெட்டு நாடகங்களையும், அறுபது பாடல்களையும் படைத்தவர். இவர் எழுதிய **பவனாபுருஷோத்தமா** என்ற நாடகத்தை அவருக்குப் புரவலராக இருந்த சூரப்ப நாயக்கருக்கு அர்ப்பணித்தார்.



## 18.2.4 முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர், 1567–1576

### கொடை கொடுத்தார்

சூரப்பருக்குப்பின் அவரது மாற்றாந்தாய் மகனும் சகோதரனுமான **கிருஷ்ணப்ப நாயக்கர்** ஆட்சிக்கு வந்தார். இவரைப் பற்றிய குறிப்புகள் இரண்டு கல்வெட்டுகளில் (1546, 1575) காணப்படுகின்றன. ஆனால் இவை இவரது ஆட்சிக் காலத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்குப் பயன்படுவதாயில்லை. வட ஆர்க்காட்டில் கிடைத்த மற்றொரு கல்வெட்டும் (1570) சிதைந்த நிலையில் உள்ளது! மிகுந்த முயற்சியோடு இக்கல்வெட்டை ஆராய்ந்தோர் ஒரு தகவலைத் தருகின்றனர். அதாவது முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் **பச்சமகன்** என்பவருக்கு நிலத்தை **உதிரப்பட்டி**யாகக் கொடுத்தார். போரில் பங்கேற்றமைக்காகக் கொடுக்கப்படுவது உதிரப்பட்டி நிலமாகும். தலைக்கோட்டைப் போரில் சிறப்பாகப் பங்கேற்றமைக்காக கிருஷ்ணப்ப நாயக்கர் பஞ்சமகனுக்கு நிலக்கொடை கொடுத்து பெருமை செய்தார் என்று கருதப்படுகிறது.

## 18.2.5 இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர், 1576–1616

### கிளர்ச்சிக்காரர்

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் **வைய்யப்ப கிருஷ்ணப்ப தொண்டம நாயக்கர்** என்று கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகிறார். இதன் மூலம் இவர் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கரின் மகனாகவும், வையப்ப நாயக்கரின் பேரனாகவும் இருக்கலாம் என்று ஊகிக்கப் படுகிறது. இவர் **ஆரவீடு முதலாம் ஸ்ரீரங்கர்** (1586–1614), **இரண்டாவது வெங்கடர்** (1614) ஆகிய விஜயநகர மன்னர்களின் சமகாலத்தவர்.

கிருஷ்ணப்ப நாயக்கர் அரவீடு விஜயநகர மன்னர் வெங்கடரின் மேலாண்மையை ஏற்க மறுத்தார். கப்பம் கட்டாமல் கிளர்ச்சி செய்தார். இக்கிளர்ச்சியை முறியடிக்கும் பொருட்டு வெங்கடர் ஒரு படையை அனுப்பினார். அப்படை கிருஷ்ணப்பரைத் தோற்கடித்து, கைது செய்து, சிறையில் அடைத்தது. பின்னர் தஞ்சை நாயக்கர் **ரகுநாதர்** தலையிட்டு இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கரை சிறையிலிருந்து விடுவித்தார்.

### எதிர்ப்பை எதிர்கொண்டார்

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் தீவிர வைணவர். எண்ணியதை முடிக்கும் மனத்திண்மை பெற்றவர். இவர் சிதம்பரம் கோவிந்தராஜப் பெருமாள் கோயிலைப் புதுப்பிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டார். ஆனால் அதற்கு சிதம்பரம் கோயில் தீட்சிதர்கள் ஆட்சேபம் தெரிவித்தனர்; தீவிரமாக எதிர்த்தனர். இந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாமல் புனரமைப்புப் பணியைத் தொடர்ந்தார் கிருஷ்ணப்ப நாயக்கர். தீட்சிதர்கள் வன்முறையில் இறங்கினர். தற்கொலை செய்து கொள்ளப்போவதாக மிரட்டினர். அவர்களது மிரட்டல்களுக்கு நாயக்கர் செவிசாய்க்கவில்லை. ஒரு பெண் உட்பட சில எதிர்ப்பாளர்கள் தீக்குளிக்க முயன்றனர்! பொறுமையிழந்த கிருஷ்ணப்ப நாயக்கர் துப்பாக்கிச்சூடு நடத்தி நிலைமையை கட்டுக்குள் கொண்டு வந்தார். இத்துப்பாக்கிச் சூட்டில் சிலர் மாண்டனர். கோவிந்தராஜர் ஆலயத் திருப்பணி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டது.[7]

### சமய சுதந்திரம்

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் வெள்ளாற்றின் முகத்துவாரத்தில் **கிருஷ்ணபட்டினம்** என்ற துறைமுகப் பட்டினத்தைத் தோற்றுவித்தார். அதுவே பின்னர் **போர்டோ நோவோ** (Porto Novo) என்று அழைக்கப்பட்டது. இவரது ஆட்சிக் காலத்தில் போர்ச்சுக்கீசிய சமயப் பரப்பாளர்களான **ஜெஸ்யூட்கள்** (Jesuits) சமயப் பணியாற்றி வந்தனர். கிருஷ்ணப்ப நாயக்கர் தீவிரமான வைணவராக இருந்த போதிலும் கிறித்துவ மதப் பிரச்சாரத்தைத் தடை செய்யவில்லை! சமயப் பொறையைக் கடைப்பிடித்தார். வந்தவர்களை ஊக்குவிப்பதற்காக ஒரு தேவாலயத்தையும் கட்டிக் கொத்தார்.

### மக்களின் செல்வாக்கு

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். வேலூர் நாயக்கர் உட்பட பல துணை நாயக்கர்கள் இவருக்கு ஆதரவாகவும் இவரது ஆட்சிக்குக் கட்டுப்பட்டும் இருந்தனர். இதைக் கண்டு பொறாத ஆரவீடு விஜயநகர மன்னர் வெங்கடர் கிருஷ்ணப்ப நாயக்கரைக் கீழ்பணிய வைக்கத் தீர்மானித்தார். அதன்படி ஒரு படையை அனுப்பி செஞ்சி நாயக்கரைப் பணிய வைத்தார் (1607–1608). அதுமட்டுமல்ல. கிருஷ்ணப்ப நாயக்கர் டச்சுக்காரர்கள் கடலூரில் ஒரு தொழிற்கூடத்தைக் கட்டிக் கொள்வதற்காகக் கொடுத்த உத்தரவையும் திரும்பப் பெறச் செய்தார்! விஜயநகர மன்னரின் இச்செயல் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு மிகுந்த ஏமாற்றத்தையும், மனவருத்தத்தையும், டச்சுக்காரர்களுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற முடியாமல் போனதால் அவமரியாதையையும் கொடுத்தது. மன்னருக்கும் நாயக்கருக்கும் இடையேயான இடைவெளி அதிகரித்தது.

### உள்நாட்டுப் போர்

வெங்கடருக்குப் பிறகு **இரண்டாம் ஸ்ரீரங்கர்** விஜயநகர மன்னரானார் (1614–1632). இவர் காலத்தில் **உள்நாட்டுப் போர்** (Civil War) எழுந்தது. செஞ்சி நாயக்கர் இரண்டாம் கிருஷ்ணப்பர் கப்பம் கட்ட மறுத்துவிட்டார். இவரின் ஆளுகைக்குட்பட்ட வேலூர் சங்கர நாயக்கர் ஸ்ரீரங்கருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். இக்கிளர்ச்சியை செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரும், மதுரை முத்து வீரப்ப நாயக்கரும் ஆதரித்தனர். விஜய நகர மன்னர் சார்பாக எச்சம நாயக்கரும் தஞ்சை ரகுநாத நாயக்கரும் இப்போரில் பங்கேற்றனர். இந்த உள்நாட்டுப் போர் மூன்றாண்டுகள் நடைபெற்றது. இறுதியில் **1616 ஆம் ஆண்டு** திருச்சிக்கருகே **தோப்பூரில்** நடைபெற்ற போரில் வேலூர் சங்கர நாயக்கர் தோற்கடிக்கப்பட்டார். பின்னர் சிதம்பரத்துக்கருகே நடைபெற்ற போரிலும் கிளர்ச்சிப்படை தோற்கடிக்கப்பட்டது. இந்த **இரட்டைத் தோல்வி** கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.[8] கிருஷ்ணப்ப நாயக்கர் பின்வாங்கிச் சென்று செஞ்சிக் கோட்டையைத் தக்க வைத்துக் கொண்டார். இறுதியில் கிருஷ்ணப்ப நாயக்கரும் தோற்கடிக்கப்பட்டு, மன்னிக்கப்பட்டு, மீண்டும் செஞ்சி நாயக்கராக நியமிக்கப்பட்டார்! இந்த உள்நாட்டுப் போரில் கிளர்ச்சிக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டாலும், விஜயநகரப் பேரரசின் பலவீனமும் சரிவும் தெளிவாகத் தெரிந்தன. பேரரசின் பலவீனத்தைப்



பயன்படுத்திக் கொண்டு செஞ்சி, தஞ்சை, மதுரை நாயக்கர்கள் போர்க்கொடி உயர்த்தத் தொடங்கினர்.

## 18.2.6 செஞ்சி நாயக்கர்களின் வீழ்ச்சி

### காட்டிக் கொடுத்தார்

பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தானியங்கள் விஜயநகரப் பேரரசுக்கு நிரந்தர சவால்களாக இருந்தன. ஆரவீடு விஜயநகர அரசர்களின் அக்கறையெல்லாம் இவர்களது ஆக்கிரமிப்பிலிருந்து பேரரசைக் காப்பாற்றுவதிலேயே இருந்தது. ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தில் விஜய நகரப் பேரரசுக்கு எதிராக மதுரை திருமலை நாயக்கர் தஞ்சை, செஞ்சி நாயக்கர்களுடன் சேர்ந்து கொண்டு விஜயநகரப் பேரரசுக்கு எதிராகக் கூட்டுச் சதியில் ஈடுபட்டார். ஆனால் இச்சதியை **தஞ்சை விஜயநாயக்கர் விஜயநகரப் பேரரசர் ஸ்ரீரங்கருக்குத் தெரிவித்துவிட்டார்!**

### சுல்தானிடம் சரண்

விஜயநகரப் பேரரசர் **ஸ்ரீரங்கர்** செஞ்சி மீது படையெடுத்துச் சென்று (1645) செஞ்சிப் படையையும், மதுரைப் படையையும் தோற்கடித்தார். வேறுவழியின்றி மதுரை, செஞ்சி நாயக்கர்கள் கோல்கொண்டா, பீஜப்பூர் சுல்தான்களின் உதவியை நாடினர். இதைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட கோல்கொண்டா சுல்தான் கடற்கரை வழியாகப் படையெடுத்துச் சென்று டச்சுக்காரர் வசமிருந்த **புலிக்காட்டையும்**, பிற நாயக்கர்கள் வசமிருந்த பூந்தமல்லி, காஞ்சி, செங்கல்பட்டு ஆகிய பகுதிகளையும் கைப்பற்றிக் கொண்டார் (1646). அதேபோன்று பீஜப்பூர் சுல்தானின் படை வேலூரையும், செஞ்சியையும் கைப்பற்றிக் கொண்டது (1649). இப்பீஜப்பூர் படையெடுப்பு செஞ்சி நாயக்கத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தது.[9]

## 18.2.7 வீழ்ச்சியின் விளைவு

செஞ்சி நாயக்கத்தின் வீழ்ச்சி தமிழ்நாட்டு வரலாற்றில் விபரீத விளைவுகளை ஏற்படுத்தியது. செஞ்சியைக் கைப்பற்றிய பீஜப்பூர் படை செஞ்சிக் கோட்டையில் சேமித்து வைக்கப்பட்ட பொருட்களையும், செல்வத்தையும் கைப்பற்றிக் கொண்டது. பலகோடி ரூபாய் ரொக்கமும் கணக்கிலடங்கா தங்கமும், நகைகளும் கொள்ளையடிக்கப்பட்டன. அதுமட்டுமல்ல. செஞ்சி நாயக்க மக்கள் சொல்லொணாக் கொடுமைகளுக்குள்ளாயினர். மக்கள் கட்டாய மதமாற்றம் செய்யப்பட்டனர். மசூதிகள் கட்டப்பட்டன. அதுமட்டுமல்ல. பீஜப்பூர் படை தெற்கு நோக்கிச் சென்று தஞ்சையையும், மதுரையையும் சூறையாடி பணியச் செய்தது.[10] தமிழ்நாடு பீஜப்பூர், கோல்கொண்டா தயவில் இருந்தது. முகமதியர் ஆதிக்கம் கொடிகட்டிப் பறந்தது. இவற்றின் கூட்டு விளைவாகத் தமிழ்நாட்டில் தெலுங்கர் செல்வாக்கு பலவீனமடைந்தது.[11]

## 18.3 வேலூர் நாயக்கர்கள்

### 18.3.1 சின்ன பொம்ம நாயக்கர்

செஞ்சி நாயக்கர்கள் விஜயநகரப் பேராதிக்கத்துக்கு உட்பட்டிருந்தனர். வேலூர் நாயக்கர்கள் செஞ்சி நாயக்கர்களுக்குக் கட்டுப்பட்டிருந்தனர்; அவர்களது மேற்பார்வையின் கீழ் செயல்பட்டனர். வேலூர் நாயக்கம் தோன்றியது எப்படி? பாலாற்றுக்குக் கீழக்கே, கொள்ளிடத்துக்கு வடக்கே இருந்த பகுதி செஞ்சி நாயக்கத்துக்குச் சொந்தமாக இருந்தது. அது வேலூர், திருவாடிகை, சோல்கா என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இவற்றுள் வேலூர் நாயக்கம் துணை நாயக்கமாகச் சிறப்புற்றது.

வேலூர் நாயக்கத்தின் சிறப்புக்குக் காரணமாக இருந்தவர் **சின்ன பொம்ம நாயக்கர்.** வேலூருக்குக் கிழக்கே ஆரப்பாக்கம், அரியூர், சடுப்பேரி ஆகிய பகுதிகள் இவரது ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. பேரரசர் ஸ்ரீரங்கர் காலத்தில் இவர் செஞ்சி நாயக்கர்களுக்கும் பேரரசருக்கும் பொறுப்பாக இருந்தார். செஞ்சி நாயக்கரின் மேற்பார்வையின்கீழ் செயல்பட்டார். செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரின் அனுமதியோடு இவர் **திப்பசமுத்திரம்** என்ற கிராமத்தை வேலூர் சிவாலயத்துக்குத் தானமாகக் கொடுத்தார் (1576). சின்ன பொம்ம நாயக்கர் **அப்பய்ய தீட்சிதருக்குப்** புரவலராக இருந்து அவருக்கு **களகாபிஷேகம்** செய்து பெருமைப்படுத்தினார்.

### 18.3.2 லிங்கப்ப நாயக்கர்

சின்ன பொம்ம நாயக்கரின் மகன் லிங்கப்பர் செஞ்சி நாயக்கருக்கும், விஜயநகரப் பேரரசுக்கும் கட்டுப்பட்டு இருக்க விரும்பாது கிளர்ச்சி செய்தார். விஜயநகரப் பேரரசரின் விவேகமற்ற செயலால் வேலூர் லிங்கப்ப நாயக்கர் விரோதியாக மாறினார். பெரும் படை திரட்டிப் பேரரசரை எதிர்த்தார். இப்படைக்கும் பேரரசர் படைக்கும் **உத்திரமேரூரில்** போர் நடைபெற்றது. உத்திரமேரூர் போரில் லிங்கப்ப நாயக்கர் தோற்கடிக்கப்பட்டார். வேலூர் கைப்பற்றப்பட்டு பேரரசுடன் இணைக்கப்பட்டது. வேலூர் விஜயநகரப் பேரரசின் மாற்றுத் தலைநகராயிற்று.

## 18.4 தஞ்சை நாயக்கர்கள்

### 18.4.1 தோற்றம்

13 ஆம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் சோழர் பேரரசின் வீழ்ச்சிக்குப்பிறகு தஞ்சாவூர் தாழ்ச்சியுற்றது. அங்கு நிலையான ஆட்சி இல்லை. பாண்டியப் பேரரசின் பிடிக்குள் சிக்கியது சோழ நாடு. அதன்பிறகு மதுரை சுல்தான்களின் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. மதுரை சுல்தானியத்தை வீழ்த்திய விஜயநகர் சோழநாட்டை விஜயநகரப் பேரரசின் பகுதியாக்கிவிட்டது. கிருஷ்ணதேவராயர் காலத்தில் (1509–1530) சோழ நாடு மதுரை நாயக்கத்தின் பகுதியாக இருந்தது. அவரது வாரிசான அச்சுதராயர் காலத்தில் (1530–1542) சோழ நாடு மதுரை நாயக்கத்திலிருந்து பிரிக்கப்பட்டு **தஞ்சை நாயக்க**மாக்கப்பட்டது.



### 18.4.2 செவப்ப நாயக்கர், 1532–1560

#### நெடுங்குன்றம்

தஞ்சை நாயக்கத்தைத் தோற்றுவித்தவர் செவப்ப நாயக்கர். அவரே அதன் முதல் நாயக்கர். திம்மப்ப நாயக்கரின் மகன் செவப்ப நாயக்கர். திம்மப்ப நாயக்கர் வட ஆர்க்காடு **நெடுங்குன்றத்தைத்** தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தவர். அவர் கிருஷ்ண தேவராயரின் வாயில் காப்பாளராகவும், தளவாயாகவும் விசுவாசத்துடன் பணியாற்றியவர். திம்மப்ப நாயக்கருக்கும் **பயாம்பிகைக்**கும் மகனாகப் பிறந்தவர் செவப்ப நாயக்கர்.[12]

#### உழைப்பால் உயர்ந்தவர்

செவப்ப நாயக்கர் கிருஷ்ணதேவராயர், அச்சுதராயர் ஆகிய பேரரசர்களின் கீழ்ப் பணியாற்றியவர். அவர்களின் நம்பிக்கையையும், நன்மதிப்பையும் பெற்றவர். அறிவுத் திறமையாலும், நேர்மையாலும், அயரா உழைப்பாலும் உயர்ந்தவர். அச்சுதராயரின் மைத்துனி **மூர்த்திமாம்பா**வைத் திருமணம் செய்து கொண்டதன் மூலம் அரச குடும்பத்துடன் உறவை ஏற்படுத்திக் கொண்டார். விஜயநகரப் பேரரசர் அச்சுதராயர் அவரது சகலை செவ்வப்பனரை தஞ்சை நாயக்கராக நியமித்தார் (1532).[13] செவப்ப நாயக்கர் தஞ்சை மண்டல நாயக்கரானதன் மூலம் தஞ்சை நாயக்க வம்சாவளியைத் தோற்றுவித்தார். தஞ்சை நாயக்கம் தஞ்சாவூர், தென் ஆர்க்காடு மாவட்டத்தின் பகுதி, திருச்சி ஆகியவற்றை உள்ளடக்கியது.

#### செய்த சேவைகள்

செவப்ப நாயக்கர் சிறந்த நிர்வாகி, அரசியல் விவேகி, பொதுநல நாட்டமுடையவர். இவரது ஆட்சிக் காலத்தில் பல பொதுநலப் பணிகளை மேற்கொண்டார். குறிப்பாக நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்காகத் தஞ்சையில் பெரிய குளம் ஒன்றை வெட்டச் செய்தார். அதற்கு **சிவப்பனேரி** என்று பெயரிடப்பட்டது. இவர் சமய சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்தார். முஸ்லீம் அருட்தொண்டர்களை ஆதரித்து அவர்களுக்குத் தானங்கள் கொடுத்தார். அதேபோன்று செவப்ப நாயக்கர் போர்ச்சுக்கீசியரின் நடவடிக்கைகளை ஊக்குவித்தார். அவர்கள் **நாகையில்** குடியிருப்புகளை அமைத்துக் கொள்ள வேண்டிய உதவிகளைச் செய்தார். நாகைத் துறைமுகத்தைச் செப்பனிட்டார். டச்சுக்காரர்களுடனும் நட்புறவோடு இருந்தார். தஞ்சைக் கோட்டை கட்டப்பட்டது. கோயில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆலயங்களுக்குப் பல கிராமங்கள் தானமாக அளிக்கப்பட்டன. செவப்ப நாயக்கர் இலக்கிய நாட்டமுடையவர். தத்துவ சிந்தனையாளர். பிரபல இலக்கியப்புலமை படைத்த தத்துவர் **மத்வா குரு விஜயின்திர தீர்த்தர்** இவரது அரசவையை அலங்கரித்தார். சுருங்கக்கூறின், செவப்ப நாயக்கர் தஞ்சை நாயக்கத்தைத் தோற்றுவித்து, பலப்படுத்தி, புகழ் பெறச் செய்தார்.

### 18.4.3 அச்சுதப்ப நாயக்கர், 1560–1600

#### விஜயநகர விசுவாசி

செவப்ப நாயக்கரைப் போன்றே அவருக்குப்பின் தஞ்சை நாயக்கரான **அச்சுதப்பரும்** விஜயநகர விசுவாசி. விஜய நகரப் பேரரசர் அச்சுதப்பராயரின் நினைவாக இவருக்கு இப்பெயர் சூட்டப்பட்டது. செவப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்திலேயே இவர் பட்டத்து இளவரசராயிருந்து நிர்வாக அனுபவம் பெற்றார். தலைக்கோட்டைப் போரின் போது (1565) அச்சுதப்பர் விஜயநகரத்துக்குப் படை உதவியும், பொருள் உதவியும் செய்தார். பின்னர் வல்லத்தில் மதுரை–செஞ்சி கிளர்ச்சிக் கூட்டுப் படைக்கும் விஜயநகரப் படைக்கும் போர் மூண்ட போது அச்சுதப்ப நாயக்கர் விஜயநகர் பேரரசருக்குத் துணையாக இருந்தார். இதுவே மதுரை–தஞ்சை நாயக்கர்களுக்கிடையே தீரா விரோதத்திற்கு வித்திட்டது.[14] இலங்கைக்கும் போர்ச்சுக்கீசியருக்குமிடையே நடைபெற்ற போரில் இவர் இலங்கையை ஆதரித்தார். இப்போரில் தோல்வியுற்ற இலங்கை மன்னருக்கு தஞ்சையில் அடைக்கலம் கொடுத்தார்.[15]

#### அறப் பணிகள்

அச்சுதப்ப நாயக்கரின் பிரதம அமைச்சராக இருந்தவர் **கோவிந்த தீட்சிதர்;** சிறந்த அறிவாளி. அறிவுக்கூர்மைமிக்க நிர்வாகி. அச்சுதப்பரிடம் போர்த் திறமையும் சமயப் பற்றும் ஒருங்கே அமைந்திருந்தன. இவரது ஆட்சிக் காலத்தில் கும்பகோணம் மகாமக குளம் தூர்வாரப்பட்டது. பல கோயில்களின் உட்கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன; தானங்கள் தாராளமாக வழங்கப்பட்டன. குறிப்பாக ஸ்ரீரங்கம் கோயில். தந்தையைப் போன்றே இவரும் நீர்ப்பாசனப் பெருக்கத்துக்குச் சிறப்பிடம் கொடுத்தார். அச்சுதப்ப நாயக்கர் திருவாடிக்கருகே காவேரிக்குக் குறுக்கே கட்டிய அணை குறிப்பிடத்தக்கது. பிராமணர்களுக்குப் பல அக்கிரகாரங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன.[16] இவரது மகன் ரகுநாத நாயக்கர் யுவராஜாவாக இருந்து அச்சுதப்பருக்கு உதவியாக இருந்தார். எனினும் அச்சுதப்ப நாயக்கரின் கடைசி காலத்தில் அடிக்கடி போர்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. சந்திரகிரியிலும், வேலூரிலும் இருந்த நாயக்கர்கள் தஞ்சைக்கு வாரிசுரிமை கோரியதால் இக்குழப்பங்கள் ஏற்பட்டன.

### 18.4.4 ரகுநாத நாயக்கர், 1600–1633

#### தோப்பூர் போர்

ரகுநாத நாயக்கர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தந்தை அச்சுதப்ப நாயக்கர் விட்டுச் சென்ற அரச பாரத்தை சுமக்க வேண்டியதாயிற்று. இவர் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டுப் போர் துவங்கிற்று. வேலூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த விஜயநகரப் பேரரசுக்கான வாரிசுரிமைப் போராட்டம் போரில் முடிந்தது. இப்போரில் விஜயநகர விசுவாசியான ரகுநாத நாயக்கர் பங்கேற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இப்போராட்டத்தில் பேரரசின் சார்பாகப் போட்டியிட்ட **எச்சம நாயக்கரை** ஆதரித்தார் தஞ்சை நாயக்கர். எச்சம நாயக்கரை எதிர்த்துப் போட்டியிட்ட **ஜக்கராயரை** மதுரை, செஞ்சி நாயக்கர்கள் ஆதரித்தனர். இவ்விரு தரப்பினருக்குமிடையே **தோப்பூரில்**



நடைபெற்ற போரில் (1616) ரகுநாத நாயக்கரின் உதவியுடன் பேரரசுப் படை வெற்றி பெற்றது.

#### போரின் விளைவு

தோப்பூர் போரின் விளைவாக ரகுநாத நாயக்கருக்குப் பெரிய பயன் ஏதும் கிடைக்கவில்லை.[17] தோப்பூர் போர் விஜயநகரப் பேரரசை மேலும் பலவீனப்படுத்தியதே யன்றி ரகுநாத நாயக்கரின் நிலையை உயர்த்தவில்லை.[18] தஞ்சை நாயக்கருக்கும் மதுரை நாயக்கருக்கும் இடையேயான விரோதமும் குரோதமும் அதிகரித்தனவேயன்றி குறையவில்லை. தமிழ்நாட்டில் இருபெரும் நாயக்கியங்களின் தலைவர்களாயிருந்த நாயக்கர்கள் தெலுங்கர்களாக இருந்தபோதிலும் இவர்களுக்கிடையே கடுமையான பொறாமைப் போட்டி நிலவியது.[19]

#### பல்கலை வல்லவர்

ரகுநாத நாயக்கர் **பல்கலை வல்லவர்.** இவர் சமஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் புலமைமிக்கவர். இவரது அரசவை புலவர்களாலும் இலக்கியப் படைப்பாளிகளாலும் நிறைந்திருந்தது. ரகுநாதர் இசைஞானி. இவர் புதிய ராகங்களையும், தாளங்களையும், மேளங்களையும் உருவாக்கினார். இவரது **சங்கீத சுதா** இசை பற்றிய வடமொழி நூலாகும். இவரது மனைவி பத்ராம்பா சிறந்த கவிஞர்.[20] ரகுநாதரின் இசை மற்றும் இலக்கியப் படைப்புகள் பல. கோவிந்த தீட்சிதரின் மகன் **யஞ்னநாராயணா** அவரது **சாகித்ய ரத்னாகரா** என்ற நூலில் ரகுநாதரின் ஆட்சிச் சிறப்பைப் பற்றி விவரித்துள்ளார். ரகுநாதர் மத்துவ மேதைகளான **சுதின்ரா, ராகவேந்ரா** ஆகியோருக்குப் புரவலர். இவரது **அரண்மனை நூலகமே** பின்னர் சரஸ்வதி மகால் நூலகமாக விரிவுபடுத்தப்பட்டது. ரகுநாதர் திறமைமிக்க வாள் வீச்சாளரும்கூட. குதிரை சவாரியில் வல்லவர். தரங்கம்பாடியில் டேனிஷ் குடியிருப்பு உருவாக உதவியவர் (1620). இதுவே பின்னர் ஆங்கிலேயர் தஞ்சை நாயக்கர்களிடம் வர்த்தக உதவிகோர வழிவகுத்தது. ரகுநாத நாயக்கர் தஞ்சை நாயக்கர்களில் தலைசிறந்தவர் என்பதில் ஐயமில்லை.

### 18.4.5 விஜயராகவ நாயக்கர், 1633–1673

#### மன உறுதியற்றவர்

ரகுநரத நாயக்கரையடுத்து தஞ்சை நாயக்கரான **விஜயராகவ நாயக்கர்** விஜயநகரப் பேரரசுக்கு விசுவாசமாக இருந்து விரோதியானவர். பழிபாபத்துக்கு அஞ்சாதவர்.[21] விஜயநகரப் பேரரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர் தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் பொருட்டு தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்த போது மதுரை, செஞ்சி நாயக்கர்கள் கடுமையாக எதிர்த்தனர். ஆனால் விஜயராகவர் பேரரசரை ஆதரித்தார். அப்போது மதுரையை ஆட்சி செய்த **திருமலை நாயக்கர்** கோல்கொண்டா சுல்தானின் உதவியோடு ஸ்ரீரங்கரைத் தோற்கடித்தார். ஸ்ரீரங்கர் தோல்வியடைந்ததை அறிந்த விஜயராகவ நாயக்கர் மனதை மாற்றிக் கொண்டார்! தோல்வியுற்று அடைக்கலம் கேட்டு வந்த ஸ்ரீரங்கரின் வேண்டுகோளை நிராகரித்துவிட்டார் விஜயராகவர்!! எனவே, ஸ்ரீரங்கர் மைசூரில் அடைக்கலம் கேட்டு செல்லவேண்டியதாயிற்று!!!

## இவரின் இயலாமை

விஜயராகவ நாயக்கரின் இயலாமையைப் பயன்படுத்திக் கொண்ட பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்கள் தஞ்சை மீது படையெடுத்தனர். முதலில் படையெடுத்து வந்த கோல்கொண்டா சுல்தானிடம் சரணடைந்தார் விஜயராக நாயக்கர். அதன்பின் படையெடுத்துவந்த பீஜப்பூர் சுல்தானுக்குப் பயந்து காட்டுக்குள் சென்றுவிட்டார். பீஜப்பூர் படை தஞ்சை, மன்னார்குடி, வல்லம் ஆகிய இடங்களைக் கைப்பற்றியது. சேமித்து வைத்திருந்த செல்வமெல்லாம் சூறையாடப்பட்டது. தொற்று நோய்க்கு அஞ்சிய பீஜப்பூர் படை பின்வாங்கிச் சென்றது.

## பாதுகாப்பு புறக்கணிப்பு

பீஜப்பூர் படை பின்வாங்கிச் சென்றபின் வனவாசத்திலிருந்து திரும்பிய விஜயராகவ நாயக்கர் பூஜை செய்தால் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று நம்பினார்! பெரும் பொருட்செலவில் நவராத்திரி பூஜை நடத்தப்பட்டது. பிராமணர்களின் வழிகாட்டுதலின் பேரில் சமயச் சடங்குகளில் கஜானாவைக் காலி செய்தார்! அரசியல் பிரச்சனைக்கு சமயத்தீர்வு எதுவுமில்லை என்பதை அறியாத விஜயராகவர் பாதுகாப்பைப் புறக்கணித்தார். அதற்கான விலையை விரைவிலேயே கொடுக்க நேரிட்டது.

## தஞ்சையின் வீழ்ச்சி

விஜயநகரப் பேரரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர் தமிழ்நாட்டின் மீது படையெடுத்து வந்த போது மதுரை திருமலை நாயக்கருக்கு எதிராகப் பேரரசரை ஆதரிக்காததை மறக்கவோ, மன்னிக்கவோ தயாராயில்லை. விஜயராகவரைத் தண்டிக்கும் பொருட்டு மதுரை **சொக்கநாத நாயக்கர்** தஞ்சைமீது படையெடுத்தார்.[22] விஜயராகவ நாயக்கர் போர்க்களத்திலேயே கொல்லப்பட்டார்![23] தஞ்சை நாயக்கம் மதுரை நாயக்கத்துடன் இணைக்கப்பட்டது. மதுரை சொக்கநாத நாயக்கரின் சகோதரர் **அழகிரி** தஞ்சை ஆளுநராக நியமிக்கப்பட்டார். தஞ்சை நாயக்கம் முடிவுக்கு வந்தது. அதன்பின் தஞ்சை மராத்தியர் வசமாயிற்று.[24]

## மேற்கோள் நூற்பட்டியல்


1. அரவீடு மன்னர்கள்: அவய ராமராயர்; திருமலா ராயர்; முதலாம் ஸ்ரீரங்கர்; இரண்டாம் வெங்கடர்; இரண்டாம் ஸ்ரீரங்கன்; ராமதேவர்; மூன்றாம் வெங்கடர்; மூன்றாம் ஸ்ரீரங்கர்.
2. K.Rajayyan, History of Tamil Nadu, 1565-1982, Madurai, 1982, pp.22-23.
3. C.S.Srinivasachari, A History of Ganjee and Its Rulers, p.65.
4. K.S.Charitam, History of Senji, p.21.
5. C.S.Srinivasachari, op.cit., p.81.
6. சூரப்பர் விஜயநகரப் பேரரசர்களுக்கு விசுவாசமாக இருந்தமையால்தான் இந்த அங்கீகாரம் கிடைத்ததாகக் கருதுகிறார் சி.எஸ்.சீனிவாசச்சாரி (பக்.90).
7. R.Sathianathier, History of India, Madras, 1952, pp.308-09.
8. Ibid.

# தமிழ்நாட்டில் நாயக்கர் ஆட்சி–II

# 19. மதுரை நாயக்கர்கள்

*மதுரை நாயக்கர்களுள் தலைசிறந்தவர் திருமலை நாயக்கர்.*

*– கே.கே.பிள்ளை.*

## 19.1 தோற்றம்

மதுரையை விஜயநகரம் கைப்பற்றுவதற்குமுன் **பாணத் தலைவர்கள்** ஆட்சி செய்து வந்தனர். அவர்கள் சோழர்களுக்கும், பாண்டியர்களுக்கும் முறையே கட்டுப்பட்டு குறுநில அரசர்களாக ஆட்சி செய்து வந்தனர். 13 ஆம் நூற்றாண்டில் **சுந்தர பாண்டியனுக்கும் குலோத்துங்க சோழனுக்குமிடையே** ஏற்பட்ட போரில் பாணர் தலைவன் பாண்டியருக்குத் துணையாக இருந்தமையால் சோழ நாட்டின் ஒருபகுதியை அவருக்குப் பரிசாக வழங்கினார். 14 ஆம் நூற்றாண்டில் மதுரை விஜயநகர ஆட்சியின்கீழ் வந்தபிறகு மதுரையும் பாணர் பகுதி உட்பட பிற சுற்றுப்பகுதிகளும் விஜயநகரப் பேரரசர் வசம் வந்தன. இப்பகுதிகளை நிர்வகிப்பதற்காக விஜயநகரப் பேரரசர் பல நாயக்கர்களை நியமித்தார். அவர்களுள் மிகவும் முக்கியமான இவர் **நாகம நாயக்கர்,** அவரது மகன் **விசுவநாத நாயக்கர்** ஆவர். விசுவநாத நாயக்கர் வழிவந்தோர் மதுரை நாயக்கர்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.[1]

## 19.2 மதுரை நாயக்கர்கள்

### 19.2.1 நாகம நாயக்கர்

கிருஷ்ணதேவராயர் ஆட்சிக்கால இறுதியில் **மதுரை நாயக்கம்** (Nayakship of Madurai) தோற்றுவிக்கப்பட்டது. இதைத் **தோற்றுவித்தவர்** நாகம **நாயக்கரின் மகன் விசுவநாத நாயக்கர்.** தந்தையும் மகனும் இருவேறு மனப்பான்மையை உடையவர்கள்; இரு துருவங்களைப் போன்றவர்கள். மிகுந்த மக்கள் செல்வாக்குடன் விஜயநகரப் பேரரசைப் பலப்படுத்திப் பெருமையுடன் ஆட்சி செய்த சாளுவ நரசிம்மரின் பிரதான அதிகாரிகளுள் ஒருவராக இருந்தவர் நாகம நாயக்கர். சுயமரியாதையும், சுதந்திர உணர்வுமிக்கவர். அஞ்சா நெஞ்சர். மனத்திண்மை மிக்கவர். இவரை விஜயநகரப் பேரரசர் நரசிம்மர் மதுரை மண்டலேஸ்வரராக நியமித்தார். நாகம நாயக்கர் மதுரை மண்டலத்தை திறமையாகவும், செறுக்கோடும், சுதந்திர உணர்வோடும் ஆட்சி செய்து வந்தார்.

#### கிளர்ச்சிக்காரர்

நாகம நாயக்கரின் ஆட்சியின்போது விஜயநகரப் பேராதிக்கத்துக்கு உட்பட்டிருந்த வீரசேகர சோழருக்கும் சந்திரசேகர பாண்டியருக்குமிடையே ஏற்பட்ட போரின்போது தோல்வியடைந்த பாண்டியர் விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயரிடம் முறையிட்டார். பேரரசர் இத்தகராறைத் தீர்த்துவைக்குமாறு நாகம நாயக்கருக்குக் கட்டளை பிறப்பித்தார். நாகம நாயக்கர் சோழ மன்னர் பாண்டியரிடமிருந்து ஆக்கிரமித்த



பகுதிகளைப் பாண்டியரிடம் ஒப்படைக்காமல் தன் மேலாண்மையின்கீழ் வைத்துக் கொண்டார்! அதுமட்டுமல்ல. விஜயநகர ஆட்சியிலிருந்து விடுபடுவதாகவும் அறிவித்தார் நாகமர்![2] நாகம நாயக்கரின் கீழ்ப்பணியாமை கண்டு கிருஷ்ணதேவராயர் கோபம் கொண்டார். எனவே அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான விசுவநாத நாயக்கரை மதுரைக்கு அனுப்பி கிளர்ச்சிக்காரர் நாகம நாயக்கரை கைது செய்யுமாறு ஆணையிட்டார். பேரரசரின் பரம விசுவாசியான விசுவநாத நாயக்கர் பலமிக்கப் படையுடன் மதுரைக்கு வந்து தந்தை நாகம நாயக்கரைக் கைது செய்து தனது கடமையை நிறைவேற்றினார்![2] இந்த ராஜவிசுவாசத்தைப் பாராட்டி விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர் விசுவநாத நாயக்கரை மதுரை நாயக்கராக நியமித்தார் (1529). தந்தையைக் கைது செய்து மதுரையின் முதல் நாயக்கரானார் விசுவநாத நாயக்கர்.

### 19.2.2 விசுவநாத நாயக்கர், 1529–1563

#### முதல் நாயக்கர்

கிருஷ்ணதேவராயரால் மதுரை நாட்டு நாயக்கராக நியமிக்கப்பட்ட விசுவநாத நாயக்கர் அவருக்குப்பின் வந்த **அச்சுதராயரால்** முறையாக முடிசூட்டப்பட்டார்.[4] முறையாக மதுரையின் முதல் நாயக்க மன்னராகப் பிரகடனப்படுத்தப்பட்ட விசுவநாத நாயக்கர் மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார்.[5] முதலில் தலைநகரை பலப்படுத்தினார். தனது ஆட்சிக்குட்பட்ட பகுதிகளின் நிர்வாகத்தைத் திருத்தி அமைத்தார். விசுவநாத நாயக்கரின் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்கு அவரது நம்பிக்கைக்குரிய வலக்கரத் தளபதியான **அரியநாத முதலியார்** தோன்றாத் துணையாக இருந்தார்; அவரது நிழலாகச் செயல்பட்டார்! அதிகாரத்தைப் பகிர்ந்து கொண்டதாகவும் கூறப்படுகிறது.[6]

#### பாண்டியர் கிளர்ச்சி

விசுவநாதர் மதுரை நாயக்கரானதைப் பாண்டியர் ஏற்றுக் கொள்ளவில்லை. **தென்பாண்டிப் பாண்டியர்** மதுரை நாயக்கர் ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்தனர். இக்கிளர்ச்சியை முளையிலேயே கிள்ளி எறியும் முயற்சியை மேற்கொண்டார் விசுவநாதர். பாண்டியர் கிளர்ச்சியை முறியடிக்க விசுவநாத நாயக்கர் அவரது போர்வாளான அரியநாத முதலியாரை அனுப்பினார். அவர் பாண்டியக் கிளர்ச்சிக்காரர்களைத் தோற்கடித்து அவர்களது கோட்டையையும், அகழியையும் தகர்த்துவிட்டார். விசுவநாத நாயக்கர் பாண்டியர் கோட்டை இருந்த இடத்தில் இரண்டு சுவர்களைக் கொண்ட விரிவான கோட்டையை எழுப்பினார். அதை 72 படைப் பிரிவுகள் பாதுகாத்தன. அதுமட்டுமல்ல. வைகை ஆற்றின் மேற்குப் பகுதியில் வாய்க்கால்களை வெட்டி, அவற்றின் வழியாக வைகை நீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்தினார். இக்கால்வாய்த் திட்டமே பின்னர் பேரணையாகவும், சிற்றணையாகவும் சிறப்புற்றது.

#### நன்றிக்கடன்

விசுவநாத நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் திருவாங்கூர் மன்னர் விஜயநகரப் பேரரசுக்குக் கப்பம் கட்ட மறுத்துவிட்டார்! பேரரசர் அச்சுதராயர் திருவாங்கூர் மன்னரைப்

பணியவைக்கும் பொருட்டு படையெடுத்து வந்து ஸ்ரீரங்கத்தில் முகாமிட்டிருந்தார். அப்போது விசுவநாத நாயக்கர் பேரரசருக்குப் படை உதவியும், பொருள் உதவியும் செய்தார். காலத்தே செய்த விசுவநாதரின் உதவியுடன் **தாமிரபரணி ஆற்றங்கரையில் நடைபெற்ற போரில்** திருவாங்கூர் மன்னர் தோற்கடிக்கப்பட்டார்; திறை செலுத்த சம்மதித்தார். விசுவநாத நாயக்கர் விஜயநகரப் பேரரசர் அச்சுதராயருக்குச் செலுத்திய நன்றிக்கடன் இது.

### மதுரை நாயக்கம்

விசுவநாத நாயக்கர் தோற்றுவித்த மதுரை நாயக்கம் தனித்தன்மையுடையது. இது செஞ்சி, தஞ்சை, நாயக்கங்களிலிருந்து வேறுபட்டது. அதற்குக் **காரணங்கள் மூன்று:** 1) நாயக்கர் ஆட்சிக்குப் பாண்டியர் தொடர்ந்து காட்டிய எதிர்ப்பு; 2) மதுரைக்கு அண்மையில் இருந்த திருவாங்கூர் மன்னரின் பேரரசுக்கு எதிரான போக்கு; 3) பேரரசின் தலைநகருக்கும் மதுரைக்கும் இடைப்பட்ட தூரம். இம்மூன்று சூழ்நிலைகளும் மதுரை நாயக்கம் தனித்தன்மையுடன் உருவாகக் காரணமாக இருந்தன. எனவே, விசுவநாத நாயக்கரின் நிலை பிற நாயக்கர்களின் நிலையைவிட உயர்வாக இருந்தது.[7]

### அரசியல் விவேகி

விசுவநாத நாயக்கர் விஜயநகரப் பேரரசின் விசுவாசி; அரசியல் விவேகி; தெளிவான தீர்க்கதரிசனமுடையவர்; பிறர் திறமையை நன்கு பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர்; புதுமைகளைப் புகுத்தும் நேர்மையான நிர்வாகி; நாயக்கத்தை மையப்படுத்தி மக்கள்நலத் திட்டங்களை வகுக்கத் தெரிந்த மதியூகி; மனித வளத்தை முறையாக நெறிப்படுத்திய மேலாளர். விசுவநாத நாயக்கர் அறிமுகப்படுத்திய **பாளையப்பட்டு முறை** (Poligari System) காலத்தை வென்று நின்றது. இவரது நிலையான நிர்வாகச் சீர்திருத்தமாகக் கருதப்படுகிறது.[8]

## 19.2.3 குமார கிருஷ்ணப்ப நாயக்கர், 1563–1573

விசுவநாத நாயக்கருக்குப்பின் மதுரை அரியணையேறிய அவரது மகன் கிருஷ்ணப்பர் **முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர்** என்று அழைக்கப்படுகிறார். இவருடைய ஆட்சிக்காலத்திலும் **அரியநாத முதலியார்** இவருக்குப் பக்கபலமாக இருந்தார். அரியநாதர் **தலைக்கோட்டைப் போரில்** (1565) பங்கேற்கச் சென்றிருந்தபோது, பாளையக்காரர் கிளர்ச்சி ஏற்பட்டது! நாயக்கர் ஆட்சியை அவருக்குக் கீழிருந்த பாளையக்காரர்களே ஏற்க மறுத்தனர். நாயக்கரைப் போன்றே அவர்களும் சுதந்திரமாகச் செயல்பட விரும்பினர். கிளர்ச்சிக்கொடி ஏற்றினர்!

### பாளையக்காரர் கிளர்ச்சி

தும்பச்சி நாயக்கர் என்ற பாளையக்காரர் பிற பாளையக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு மதுரை நாயக்கருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தார். கிளர்ச்சிக்காரர்கள் **பரமக்குடி**யைக் கைப்பற்றிக் கொண்டனர். கிளர்ச்சி வெள்ளம் தலைக்குமேல் செல்வதற்கு முன் அதைத் தடுக்க முற்பட்டார் கிருஷ்ணப்ப நாயக்கர். தளபதி அரியநாதர் தலைக்கோட்டைப் போரில் பங்கேற்றமையால் அவருக்குப் பதில் **பெத்து கேசவப்ப**



**நாயக்கர்** தலைமையில் ஒரு படையை அனுப்பினார் விஜயநகரப் பேரரசர். ஆனால் கேசவப்ப நாயக்கர் படை கிளர்ச்சிக்காரர்களால் தோற்கடிக்கப்பட்டது; கேசவப்பரும் கொல்லப்பட்டார். எனவே கேசவப்பரின் மகன் **சின்ன கேசவப்பன்** தலைமையில் ஒரு பெரும்படை அனுப்பப்பட்டது. இப்படை பாளையக்காரர் கிளர்ச்சியை முறியடித்தது. தும்பிச்சி நாயக்கர் கொல்லப்பட்டார். கிளர்ச்சிக்காரர்களின் பகுதிகள் கைப்பற்றப்பட்டன.[9]

### இலங்கைப் படையெடுப்பு

விஜயநகரப் பேரரசின் ஆதிக்கம் இலங்கை வரை சென்றிருந்தது. இலங்கை விஜயநகரத்துக்குக் கப்பம் கட்டிக் கொண்டிருந்தது. மதுரை நாயக்கம் ஏற்பட்டபின் இக்கப்பத்தை மதுரை நாயக்கர்கள் வசூலித்து வந்தனர். தும்பிச்சி நாயக்கரின் நண்பரான இலங்கையின் **கண்டி** மன்னர் திறை செலுத்துவதை நிறுத்திவிட்டார். எனவே கிருஷ்ணப்ப நாயக்கர் இலங்கை மீது படையெடுத்துச் சென்று கண்டி மன்னரைத் தோற்கடித்தார். கண்டி கொள்ளையடிக்கப்பட்டது. கண்டி மன்னர் கப்பம் கட்ட சம்மதித்ததால் இந்த **வெற்றிகரமான படையெடுப்பு** விலக்கிக் கொள்ளப்பட்டது.[10]

### கலைப்பணி

கிருஷ்ணப்ப நாயக்கரின் கலைப்பணி குறிப்பிடத்தக்கது. இவரது ஆட்சிக் காலத்தில் பாளையங்கோட்டைக்கருகே **கிருஷ்ணாபுரம்** என்ற நகர் எழுப்பப்பட்டது. அந்நகரில் ஆலயம் ஒன்றும் கட்டப்பட்டது. இத்தகைய ஒரு நகர் கடையத்திலும் உருவாக்கப்பட்டது. இவ்விரண்டில் பாளையங்கோட்டை கிருஷ்ணாபுரத்து திருவேங்கடநாதர் ஆலயம் சிற்பக்கலைக்குப் பெயர் பெற்றது. "இக்கோயிலின் சிற்பங்கள் நாயக்கர் காலத்து கலைக்கு விளக்கமளிக்கின்றன".[11] இம்மன்னர் மதுரை மீனாட்சிக் கோயிலுக்கும் திருப்பணிகள் செய்துள்ளார். ஆலயப் பராமரிப்புக்காக பல சிற்றூர்களை இறையிலியாக வழங்கினார். கிருஷ்ணப்ப நாயக்கரின் விஜயநகர விசுவாசமும், போர் வெற்றிகளும், கலைத் தொண்டும் மக்களிடையே மிகுந்த பாராட்டைப் பெற்றன. மக்களின் மகத்தான மதிப்பைப் பெற்ற மதுரை நாயக்கர்களில் ஒருவர் கிருஷ்ணப்ப நாயக்கர்.

## 19.2.4 வீரப்ப நாயக்கர், 1573–1595

### கூட்டாட்சி

கிருஷ்ணப்ப நாயக்கருக்குப் பிறகு அவரது இரண்டு மகன்களும்–**வீரப்பன், விசுவநாதன்**–கூட்டாக ஆட்சி செய்ததாகக் கூறப்படுகிறது. எனினும் வீரப்ப நாயக்கரே மதுரை மன்னராகவும், அவருக்குத் துணையாக அவரது இளவலும் இருந்தனர். அரியநாத முதலியார் தொடர்ந்து வீரப்ப நாயக்கருக்கு வலக்கரமாகவே விசுவாசத்துடன் நீடித்தார்; பிரதானியாகவும், தளவாயாகவும் செயல்பட்டார்.

### கிளர்ச்சிக்காரரா ?

வீரப்ப நாயக்கரும் விஜயநகர விசுவாசியாகவே இருந்தார். பெனுகொண்டாவைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த முதலாம் ஸ்ரீரங்கருக்கு நன்றியுணர்வோடு இருந்தார். இருப்பினும் வீரப்பநாயக்கர் பேரரசர் முதலாம் ஸ்ரீரங்கருக்கு

எதிராகக் கிளர்ச்சி செய்ததாகவும் (1583), திறைசெலுத்த மறுத்ததாகவும், விஜயநகரப் பேரரசர் தஞ்சை நாயக்கரின் உதவியோடு வீரப்பரை **வல்லத்தில்** தோற்கடித்ததாகவும் கூறப்படுகிறது.[12]

## மதுரை மிஷன்

வீரப்ப நாயக்கரின் ஆட்சிக்கால இறுதியில் **பெர்னாண்டஸ்** பாதிரியார் தலைமையில் புகழ்பெற்ற **மதுரை மிஷன்** (Jesuit Mission) தோற்றுவிக்கப்பட்டது. வீரப்பர் இதைத் தடை செய்யவில்லை. மதுரை மிஷனின் சமயப் பிரச்சாரப் பணி பின்னர் வந்த **ராபர்ட் நொபிலி** (Robert de Nobili, 1606) மகத்தான வெற்றி பெறுவதற்கு வழிவகுத்தார்.

## சமயப்பணி

வீரப்பரின் சமயப்பணி சிறப்பானது. வீரப்பர் தனக்கு முதலாம் ஸ்ரீரங்கரால் அளிக்கப்பட்ட அமரநாயக கிராமத்தை கிருஷ்ணாபுரம் திருவேங்கடநாதர் கோயிலுக்கு அர்ப்பணித்துவிட்டார். இவரது ஆட்சியின் போது சிதம்பரம் நடராஜர் கோயிலில் வெள்ளையம்பலமும், வடக்குக் கோயில் ஆயிரங்கால் மண்டபமும், மதுரை மீனாட்சிக் கோயில் தூண்களும் தங்கக் கலசங்கள் அமைக்கப்பட்டன. தில்லை ஆலயத்தைச் சுற்றி அரண் எழுப்பப்பட்டது. வேதியர் குலத்தவருக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. இவ்ற்றோடு அருப்புக்கோட்டைக்கு அரணும், திருச்சிக்கோட்டை சீரமைப்பும் நடைபெற்றன.

## 19.2.5 இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர், 1595–1601

## கிளர்ச்சி செய்தார்

வீரப்ப நாயக்கரைத் தொடர்ந்து மதுரை மன்னரான **இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர்** விஜயநகரப் பேரரசர் முதலாம் வெங்கடரிடம் இவருக்கு முன்பிருந்த நாயக்கரைவிட அதிக விசுவாசத்துடன் இருந்தார். எனினும் இவரது ஆட்சிக்கால இறுதிக் கட்டத்தில் தமிழ்நாட்டில் பொதுவாக அனைத்து நாயக்கர்களுமே கிளர்ச்சி செய்தனர். இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் விதிவிலக்கல்ல. தஞ்சை அச்சுதப்ப நாயக்கரைப் போன்றே இவரும் திறை செலுத்துவதை நிறுத்திவிட்டார். இவர்களைப் போன்றே செஞ்சி, வேலூர் நாயக்கர்களும் கப்பம் கட்டவில்லை.

## கப்பம் கட்டினார்

இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக் காலத்தில் மதுரை, தஞ்சை, செஞ்சி நாயக்கங்களில் சுற்றுப்பயணம் செய்த **பேராயர் பிமைன்டா** (Father Pimenta) பேரரசர் முதலாம் வெங்கடர் மதுரை நாயக்கருடன் போரில் ஈடுபட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார் (1599). எச்சம நாயக்கர் உத்திரமேரூரை முற்றுகையிட்டார். இக்கிளர்ச்சிகளை அடக்க முதலாம் வெங்கடர் **மத்வா ஆனந்தா** தலைமையில் ஒரு பெரும் படையைத் தமிழ்நாட்டுக்கு அனுப்பினார். அவருடன் அவரது மகன்கள் **வெங்கடநாதரும், தமேர்வா சென்னா** பிறரும் வந்தனர். இப்படை தஞ்சை நாயக்கர் படையை கூடலாத்தூரிலும், காவேரியைக் கடந்து சென்று மதுரை நாயக்கரையும் தோற்கடித்தது. மதுரை நாயக்கர்



கப்பம் கட்ட சம்மதித்தார். பின்னர் செஞ்சி, வேலூர் நாயக்கர்களும் தோற்கடிக்கப்பட்டனர். தமிழ்நாட்டு நாயக்கர்கள் அனைவரும் விஜயநகரப் பேரரசர் முதலாம் வெங்கடரின் மேலாண்மையை ஏற்றுக் கொண்டு திறை செலுத்தினர்! இரண்டாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சிக்கால இறுதியில் அரியநாத முதலியார் இயற்கை எய்தினார் (1601).[13]

## 19.2.6 மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர், 1601–1609

## சேதுபதி நியமனம்

இரண்டாம் கிருஷ்ணப்பரைத் தொடர்ந்து மதுரை மன்னரான அவரது தம்பி **மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர்** ஆட்சிக் காலத்தில்தான் **சேதுபதிகள் தலைமையில்** முறையாக அமைக்கப்பட்டது.[14] இது ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க நிகழ்ச்சியாகும். **'சேதுபதி'** என்றால் **'சேதுவின் காவலன்'** என்று பொருள். அதாவது சேதுபதியின் கடமை ராமேஸ்வரம் போகும் பாதையைக் காப்பதாகும். குறிப்பாக ராமேஸ்வரத்துக்கு வரும் பயணிகளைப் பாதுகாப்பது சேதுபதியின் பொறுப்பாகும். போகலூர் அதிபதி **சடையத்தேவ உடையார்** சேதுபதியாக நியமிக்கப்பட்டார் (1605). இவர்தான் முதல் சேதுபதி. இவர் மறவர் வாழ்ந்த பகுதிக்குத் தலைவரானார். சேது நாட்டின் காவலர். இவர் சேதுபதியாக்கப்பட்டதால் மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கருக்கு மூன்று நன்மைகள் விளைந்தன: 1) ராமநாதபுரம் மாவட்டத்தில் திருடர் தொல்லை தவிர்க்கப்பட்டது; 2) கடற்கரைப் பகுதியில் விரைவாகப் பரவிவந்த போர்ச்சுக்கீசியரது ஆதிக்கம் தடுக்கப் பட்டது; 3) ராமேஸ்வரம் யாத்ரீகர்களுக்குப் பாதுகாப்பு கிடைத்தது.[15] மதுரை மண்டலத்தில் அமைதி நிலவியது.

## ராபர்ட் நொபிலி

ராமநாதபுரத்தில் சடையக்கதேவர் சேதுபதியாக நியமிக்கப்பட்ட அடுத்த ஆண்டு (1606) இத்தாலிய சமயப்பரப்பாளர், கத்தோலிக்கப் பாதிரியார் **ராபர்ட் நோபிலி** (Robert de Nobili) அவரது அரும் பணியைத் துவக்கினார். நொபிலி தமிழ், தெலுங்கு, வடமொழிகளில் புலமை பெற்றவர். தமிழைப் பழுதறப் பயின்று மணிப்பிரவாள நடையில் சரளமாக எழுதினார். தமிழ் உரைநடையின் முன்னோடி. இவர் தமிழில் எழுதிய நூல்கள் பல.[16]

## கல்விச் சிறப்பு

மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆட்சியின் கீழ் இருந்த கல்வி நிலை பற்றி ஜெஸ்யூட் பாதிரியார்களின் கடிதங்களிலிருந்து ஓரளவு அறிந்து கொள்ள முடிகிறது. மதுரையிலிருந்த கல்விக் கூடங்களில் 10,000 மாணவர்கள் கல்வி கற்றார்கள். இவர்கள் அனைவரும் பிராமணர்கள். மாணவர்கள் வகுப்புவாரியாகப் பிரிக்கப்பட்டு கற்பிக்கப் பட்டனர். ஒவ்வொரு வகுப்பிலும் 200லிருந்து 300 மாணவர்கள் வரை இருந்தனர். இப்பள்ளிகளைப் பராமரிப்பதற்கும், ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கவும், ஆசிரியர்களும் மாணவர்களும் உறையுலும், உண்டியும் இலவசமாக வழங்குவதற்கும் தேவையான வசதிகளையும் விஜயநகரப் பேரரசரும், நாயக்கரும் செய்து கொடுத்திருந்தனர்.[17]

### பரதவரின் பாதுகாவலர்

மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கர் கடற்கரைப் பகுதியில் மீன்பிடித் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டிருந்த **பரதவர்களை** வெளிநாட்டவர் செல்வாக்கிலிருந்து மீட்டு தனது கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்தார். கன்னியாகுமரி பகவதி கோயிலுக்கு நிலக்கொடை அளித்தார்.

## 19.2.7 இரண்டாம் வீரப்ப நாயக்கர், 1609–1623

### இரு நிகழ்வுகள்

மூன்றாம் கிருஷ்ணப்ப நாயக்கரின் மகன் **இரண்டாம் வீரப்ப நாயக்கர்** ஆட்சிக் காலத்தில் இரண்டு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வுகள் நடைபெற்றன: முதலாவதாக, விஜயநகரப் பேரரசின் வாரிசுரிமைப் போராட்டத்தில் தலையிட்டது. இரண்டாம் ஸ்ரீரங்கர் 'அரண்மனைப் புரட்சி'யில் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து பேரரசர் வெங்கடரின் மைத்துனர் **ஜக்கராமருக்கும்,** ஸ்ரீரங்கரின் மகன் **ராமதேவருக்கும்** இடையே வாரிசுரிமைப் போராட்டம் நடைபெற்றது. இப்போராட்டத்தில் இரண்டாம் வீரப்ப நாயக்கர் ஜக்கராமரை ஆதரித்தார். ஆனால் இப்போராட்டத்தில் வெற்றி பெற்ற ராமதேவர் பேரரசராக முடிசூட்டிக் கொண்டார். எனவே, புதிய பேரரசர் ராமதேவருக்கும் இரண்டாம் வீரப்ப நாயக்கருக்கும் இடையேயான தொடர்பில் விரிசல் ஏற்பட்டது.

### தலைநகர் மாற்றம்

இரண்டாவதாக, இரண்டாம் வீரப்ப நாயக்கர் தலைநகரை **மதுரையிலிருந்து திருச்சிக்கு மாற்றினார் (1616)!** தலைநகரைத் திருச்சிக்கு ஏன் மாற்ற வேண்டும்? இத்தலைநகர் மாற்றத்துக்குக் காரணம் மதுரை–தஞ்சை நாயக்கர்களுக்கிடையே நடைபெற்ற போராகும். இப்போரை வெற்றிகரமாக முடிப்பதற்கான அரசியல் உத்தியே தலைநகர் மாற்றம். இந்த மாற்றத்துக்குப் பேருதவியாக இருந்தவர் தென்காசிப் பாண்டியர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

### கிறித்துவ பிராமணர்!

இவரது ஆட்சிக் காலத்தில் ராபர்ட் நொபிலி மதுரைக்கு வந்து இந்து சந்நியாசியைப் போன்று காவி உடை அணிந்து, மொட்டையடித்துக் கொண்டு, குடுமி வைத்துக் கொண்டு, பூணூல் அணிந்து, நெற்றியில் சந்தப் பொட்டிட்டு, ஒரு கையில் தண்டத்தையும், மறுகையில் கமண்டலத்தையும் வைத்துக் கொண்டு **கிறித்துவப் பிராமணராகி** சமயப் பிரச்சாரம் செய்தார்.[18] மதுரை நாயக்கர் சமயப்பொறை காத்தார்.

## 19.2.8 திருமலை நாயக்கர், 1623–1659

### மாமன்னர்

**திருமலை நாயக்கர்** மதுரை நாயக்கர்களுடன் பேருவெனத் திகழ்ந்தார். இவர் சிறந்த வீரர், விவேகி, தொலைநோக்குடைய கிளர்ச்சிக்காரர். இவர் முத்துகிருஷ்ணப்ப



நாயக்கரின் இரண்டாவது மகன். முத்து வீரப்ப நாயக்கர் இவரது அண்ணன். அண்ணனுக்குத் துணையாக இருந்து நிர்வாக அனுபவம் பெற்றார். இரண்டாம் வீரப்பர் இறந்தவுடன் மதுரை மன்னரானார்.

### தலைநகர் மாற்றம்

திருமலை மதுரை மன்னரானவுடன் மேற்கொண்ட முதல் காரியம் தலைநகரைத் **திருச்சியிலிருந்து மீண்டும் மதுரைக்கு மாற்றியதேயாகும் (1634).** பதினெட்டு ஆண்டுகளுக்குப்பின் இத்தலைநகர் மாற்றம் ஏற்பட்டது. இத்தலைநகர் மாற்றம் திருமலை நாயக்கரின் தொலைப் நோக்குப் பார்வையோடு தெளிவாக முடிவெடுக்கும திறமைக்கான எடுத்துக்காட்டாகும். இம்முக்கிய முடிவுக்கான காரணங்கள் இரண்டு: 1) மதுரையின் புராதனப் புனிதத்தைப் புதுப்பித்தல்; 2) வடக்கிலிருந்து வந்த நெருக்கடிகள் குறைந்தன.

### திண்டுக்கல் மீட்பு

தமிழ்நாட்டை ஆங்கிலேயர் ஆட்சி செய்த போது நிகழ்ந்த முதல் மைசூர் போரின் போது[19] மைசூர் மன்னன் **சாமராஜ உடையார்** மதுரையைத் தாக்கினார். மைசூர் படை திண்டுக்கல்லை முற்றுகையிட்டது. திருமலை நாயக்கர் **சதுர்வேதிமங்கல கிராமப்பய்யன்** தலைமையில் ஒரு படையை அனுப்பி, மைசூர்ப் படையைத் தோற்கடித்து, **திண்டுக்கல்லை மீட்டார்.** திண்டுக்கல் மைசூர் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றப்பட்டது (1634).

### திருவாங்கூரைப் பணிய வைத்தல்

தவறாது கப்பம் கட்டிவந்த திருவாங்கூர் மன்னன் **உன்னி கேரளவர்மன்** திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் திறை செலுத்த மறுத்துக் கிளர்ச்சியில் ஈடுபட்டார். திருமலை நாயக்கர் ராமப்பய்யனின் தலைமையில் படையை அனுப்பி திருவாங்கூர் மன்னனுக்குத் தக்க பாடம் கற்பித்தார். சரணடைந்த திருவாங்கூர் மன்னன் திறை செலுத்த சம்மதித்தார்.

### ராமநாதபுரப் பிரிவினை

ராமநாதபுரம் சேதுபதிகள் சுயமரியாதை மிக்கவர்கள். ஆனால் தங்களுக்குள் ஒற்றுமையற்றவர்கள்! மண்ணின் மைந்தர்களுக்கேயுரிய இப்பண்பு இவர்களிடமும் இருந்தது!! மூன்றாவது சேதுபதியான **இரண்டாம் சடையக்கத் தேவரும் தம்பி** என்பவரும் வாரிசுரிமைக்காகப் போட்டியிட்டனர். போட்டி, போராட்டமாகி, போராட்டம் போர் என்ற நிலையை எட்டியது. தம்பி திருமலை நாயக்கரின் உதவியை நாடினார். வலிய வந்த இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்திக் கொண்ட திருமலை நாயக்கர் ராயப்பன் தலைமையில் ஒரு படையை அனுப்பினார். சடையத் தேவர் தோற்கடிக்கப்பட்டார். தம்பி சேதுபதியாக்கப்பட்டார் (1637). ராமநாதபுரம் கைப்பற்றப்பட்டது! கைப்பற்றப்பட்ட ராமநாதபுரம் ராமநாதபுரம், சிவகங்கை, திருவாடானை ஆகிய மூன்று தனிப் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது! பிரிக்கப்பட்ட ராமநாதபுரம் ரகுநாதருக்கும், சிவகங்கை தம்பிக்கும், திருவாடானை தக்கதேவருக்கும் கொடுக்கப்பட்டன. ஒன்றாக இருந்த ராமநாதபுரம் மூன்றாகப் பங்கிடப்பட்டது. ஒற்றுமையின்மைக்காக சேதுபதிகள் கொடுத்த விலை இது.